திருக்கோவையார்

ஒளிநெறிக் கட்டுரை

★

கழக வெளியீடு

கழக வெளியீடு: கசா0௪

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார் ஒளிநெறிக் கட்டுரை

*
* *

தணிகைமணி, ராவ்பகதூர்
டாக்டர் வ சு செங்கல்வராய பிள்ளை, எம் ஏ,
(தேவார, திருவாசக ஒளிநெறிகளின் ஆசிரியர்)
எழுதியது

*
* *

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை - 1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1970

வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை
செங்கல்வராய பிள்ளை (1883)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

Ed 1 November 1970

Q23:41x5,2:g
N70

TIRUKKOVAIYAR OLINERIK KATTURAI

Thiruvaranganar Achakam, Madras-1. (-/8)

பதிப்புரை

மூவர் தமிழ், தனித்தமிழின்கண் உறுதிப்பொருள் மூன்றும் முறையான் உணர்த்தப்படுகின்றன. அவை, இன்பமும், பொருளும், அறமுமாம். முதல் மூன்று (சம்பந்தர்) திருமுறைகள் இன்பப் பகுதியாகும். ச, ரு, சு ஆகிய (அப்பர்) மூன்று திருமுறைகளும் பொருட்பகுதி. ஏழாம் (ஆரூரர்) திருமுறை அறத்தின் பகுதி. "இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு" (தொல். பொருள் - களவியல்-க) என்னும் வைப்புமுறை வாழ்க்கை முறையாகும். மக்களது எத்திற முயற்சிக்கும் முதலாக (காரணம்) நிற்பது இன்ப வேட்கையேயாம். இன்ப வேட்கையில்லையாயின் அறிவும் இல்லையாகும்.

"எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்"

—தொல். பொ. பொ. உக

என்னும் தொல்காப்பிய நூற்பாவான் உணரலாம். இம்முறையில் திருவாசகம் தனித்தமிழ் மறை முடிபாகும். இஃது அறத்தின் முடிநிலையாகும். இதனோடிணைந்த "திருச்சிற்றம்பலக் கோவையார்" பெரும்பேறாகும்.

இத் 'திருக்கோவையார் ஒளிநெறிக் கட்டுரை' "தணிகைமணி, ராவ்பகதூர், டாக்டர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை எம் ஏ அவர்கள்" என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நற்றவப் பேறுடைய நல்லாரால் யாக்கப்பட்டதாகும். இவ்வருளாளர் திருமுறைகள் ஏழிற்கும் "ஒளிநெறியும்" "ஒளிநெறிக்கட்டுரைகளும்" எழுதியுள்ளார்கள் அவைகள் கழகவாயிலாக வெளிவந்துள்ளன.

இதுபோல் எட்டாந்திருமுறையாகிய "திருவாசகத்துக்கும்" "ஒளிநெறியும்", "ஒளிநெறிக் கட்டுரையும்" எழுதியுள்ளார்கள். அதுபோல் திருக்கோவையாருக்கும் "ஒளிநெறி" எழுதியுள்ளார்கள். அதுவும் கழகவாயிலாக வெளிவந்துள்ளது. இப்பொழுது இ

கட்டுரை நூல் வெளிவருகின்றது. இத்தெய்வப் பெற்றி வாய்ந்த அருளாளர்க்கு அகவை எண்பத் தேழு ஆகின்றது. இந்நிலையில் அவர்கள் ஓங்கார வடிவமாகக் காட்சியளிக்கின்றனர். இக்காட்சியினை உலகியல் முறையில் கூறுவோமானால் கூனிக்குறுகிக் குந்தியிருக்கும் முற்றவமுனிவர் படிவமெனலாம். இந் நிலையில் அவர்கள் ஆற்றிவரும் தவத்தொண்டின் மிக்க சிவத்தொண்டு சொலற்கரிய இறை பணியாகும்.

திருவாசக ஒளிநெறியும், திருவாசக ஒளிநெறிக் கட்டுரையும் தவத்திரு தணிகைமணி ஐயா அவர்கள் தமது கைப்படவே எழுதிக் கழக வழி அச்சிடப்பெற்று வெளிவந்தன. அதன்பின் அவர்கள் உடல்நலங் குன்றிக் கூனிக் குறுகி விட்டமையாலும், கைந் நடுக்கம் ஏற்பட்டுள்ளமையாலும் திருக்கோவையார் ஒளிநெறியை யும் ஒளிநெறிக் கட்டுரையையும் தமது கைப்பட எழுத முடியாமல் தாம் சொல்லிப் பிறரைக் கொண்டு எழுத வேண்டியதாயிற்று. அதனால் ஒன்றரை ஆண்டுகளில் எழுதி முடிக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட இரண்டு நூல் கட்கும் மூன்று ஆண்டுகள் ஆயிற்று.

அப்படிச் சொல்லி எழுதும்போது சில வேளைகளில் பேச முடியாத நிலை ஏற்படும். சொல்லுவதை எழுது பவர் விளங்கிக் கொள்ளமுடியாமற் கழிந்த நாட்களும் பல உண்டு. அப்படிச் சொல்லி எழுதப்பட்டவற்றைச் சரிபார்த்துத் திருத்தங்கள் செய்வதோடு பொருள் தலைப்புக்களின்கீழ் அகரவரிசைப் படுத்துவர். சொற் கட்கும் தொடர்கட்கும் கொடுக்கப் பெற்றிருக்கும் பாட் டெண்களை மீண்டும் ஒருமுறை சரிபார்ப்பர். அங்ஙன மெல்லாம் சரிபார்த்துத் தமக்கு மனநிறைவு ஏற்பட்ட பின் அச்சுக் கோப்பதற்கு அதனைக் கழகத்துக்கு அனுப்பிவைப்பர். கையெழுத்துப் படியும் அதன்கண் செய்யப்பட்டிருக்கும் திருத்தங்களும் அச்சுக் கோப்பவர் கட்கு நன்கு புரியாதபடி இருப்பதைக் கருதிக் கழக எழுத் தரைக் கொண்டு செவ்வையான மற்றொரு படி எழுதப்

படும். அதனைத் தாம் மீண்டும் ஒருமுறை சரி பார்த்தல் வேண்டுமென்று அருளார்ந்த ஐயா அவர்கள் விரும்பிப் பெற்றுச் சரிபார்த்துச் சில திருத்தங் களைச் செய்து தருவர். அதன்பின் அச்சுக்கோக்கப் படும். அச்சிடுங்கால் பக்க மெய்ப்பினையும் தாம் ஒரு முறை கட்டாயம் பார்க்கவேண்டுமென்று விரும்பிக் கேட்பர். அந்தப்படி அவர்கள் மெய்ப்புக்களெல்லாம் திருத்தித் தந்தபின்னரே அச்சிடப்பெறும். அவர்கள் குடியிருக்கும் வளமனை கழக நிலையத்திலிருந்து ஐந்து கல் தொலைவிலிருக்கின்றது. கூர்ந்த நினைவாற்றல், கண்பார்வைச் சிறப்பு, கடவுட்டுணை இவற்றால் இத் தமிழ் மந்திரத் தொண்டினை இயற்றிவருகின்றனர். இதுவே சிறந்த ஞானத் திருத்தொண்டு.

இந்த முறையில் திருக்கோவையார் ஒளிநெறியும், ஒளிநெறிக் கட்டுரையும் அச்சிடப் பெற்றன. இங்ஙனம் முடிப்பதற்கு முதுமை நிறைந்த தளர்வுற்ற ஆசிரியரவர் கட்கும், கழகத்தார்க்கும் எத்துணை உழைப்பும், காலக் கழிவும், பொருட் செலவும் ஏற்பட்டிருக்கும் என்பதைத் தமிழ் நன்மக்கள் அறிய வேண்டுமென்றே ஈண்டு எடுத் துரைக்க வேண்டியதாயிற்று.

ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவுக்கும் திருப்பால்லாண்டுக்கும் ஒளிநெறியும், ஒளிநெறிக் கட்டுரையும் 5-4-1969இல் தொடங்கிச் சொல்லி எழுதி வருகின்றனர். இவ்வாண்டு இறுதியில் அவ்விரண்டு நூல்களும் எழுதிமுடிக்கப்பெறும் என்கின்றனர். அதன் பின்னர் மேலே குறிப்பிட்ட செயல்களெல்லாம் முறையே நடைபெற்று அவையிரண்டும் அச்சிடப் பெறுதல் வேண்டும். அவற்றுடன் தெய்வத் திருமுறை பன் னிரண்டில் ஒன்பது திருமுறைகட்குத் தாம் ஒருவரே செய்து முடித்த திருவருட் பெரும் பேற்றை அருளார்ந்த ஐயா அவர்கள் பெற்றவர்களாவர். பல பேராசிரியர் களைக் கொண்டு பெரும் பொருட் செலவில் ஒரு பல்கலைக் கழகம் செய்து முடிக்க வேண்டிய இவ்வரும்பெரும்

திருவருட் பணியைத் தாம் ஒருவரே முடித்துத் தமிழுல கிற்கு வழங்கியது திருவருட் செயலே யாகும். பல துறை களில் எத்தனையோ நூல்களைக் கழகம் வெளியிட்டிருப் பினும் திருமுறை ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரை நூல்களை வெளியிடும் பேற்றை அருளிய அம்மையம்பல வாணர் திருவடிகட்கு வணக்கஞ் செய்து வாழ்த்து கின்றோம்.

இவர்களைத் தவிர வேறு எவரைக் கொண்டும் இவ் வருட் பெருந் தொண்டைச் செய்ய முடியாதென்றே இவர்கள் வாழ்நாளை நீட்டித்துப் பணி செய்விக்கின்றான் என்று சொன்னால் அது மிகையாகாது. இவற்றை நன்கு புரிந்து வருகின்றனர். வேறோராற்றால் கூறப்புகின் கடவுளின் அதிட்டானப் பொருளாய் நம் பெரியார் காட்சி யளிக்கின்றனர். அதிட்டானமென்பது கடவுள் முன்னின் றியைந்தியக்க அவ்வுயிர் அருந்தொழில் ஆற்றுவது அறிவின் அடையாளம் ஓங்காரம். அதனும் நம் சிவப் பெருந் தொண்டர் ஓங்கார வடிவமாய் நின்று உழைத்து வருகின்றனர்.

இக் கட்டுரைக்கண் க. "சிவபிராற் பகுதி" முதல் எ. "மணிவாசகர் வரலாற்று நினைவுப் பகுதி" முடிவாக ஏழு பெருந் தலைப்புகளும் ஒவ்வொன்றின் பாலும் பற்பல உட்டலைப்புக்களுங் காணப்படுகின்றன. இந்நூலிறுதிக் கண் 'திருக்கோவையார் உரைநடை' எழுதிச் சேர்த் திருப்பது கற்பவர்க்கு நனி பயன் தரும். இவற்றின் வாயிலாகத் திருக்கோவையாரின் சிறப்பும், இதனைப் பாடும்படி பணித்துத் தன் திருக்கையால் எழுதிக்கொண் டருளிய இறைவன் அருளிப்பாடும் பிறவும் நன்கு புலனாகும்.

இச் சீரிய நூலினைச் செந்தமிழ் அன்பர்களும் செல் வர்களும் வாங்கியும் வாங்குவித்தும், ஓதியும் ஓது வித்தும் நற்பயன் எய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

முகவுரை

அண்மையில் வெளி வந்துள்ள திருக்கோவையார் ஒளி நெறியின் கட்டுரையாகும் இந்நூல். இந்நூலுக்குப் பிற்சேர்க்கை ஆக உள்ளது திருக்கோவையார் உரை நடைப்பகுதி. அது திருக்கோவையார் நூல் முழுமையும் அடங்க , எழுதப்பட்டுள்ளது. அதினின்றும் திருக்கோவையார் ஒரு தலைவன் தலைவி உடைய இனியதொரு வாழ்க்கைக் கதை என்பது விளங்கும். படிக்க இனிப்பு உள்ளதாகும். அதைப் படித்து விட்டால், திருக்கோவையார் முழுதும் படித்ததாகும்.

ஒளி நெறியின் முகவுரையில் கூறியபடி, இறைவன் திருவருளாலும், கழக ஆட்சியாளராகிய திருவாளர் வ. சுப்பையா பிள்ளை அவர்களுடைய அன்பினாலும் இக்கட்டுரை வெளி வருகின்றது. ஆட்சியாளருக்குள்ள தமிழ்ப் பேரன்புக்கு, இந்நூல் வெளியீடு தக்கதொரு சான்றாகும். அவருக்கு என் பெரு நன்றி உரித்தாகும்.

எல்லாம் இறைவன் செயல்.

அன்பன்,
வ. சு. செ.

உள்ளுறை

க. சிவபிராற் பகுதி

கட்டுரைத் தலைப்பின் எண்	பொருள்	ஒளிநெறியில் இத்தலைப்பிற்குரிய தலைப்பின் எண்	பக்க எண்
1.	சிவபிரான் அட்ட வீரம்	1	
	(1) காமனை எரித்தது	1 (1)	1
	(2) காலனை அட்டது	1 (2)	,,
	(3) சலந்தரனைத் தடிந்தது	1 (3)	,,
	(4) தக்கன் வேள்வியைத் தகர்த்தது	1 (4)	2
	(5) பிரமன் சிரத்தை அறுத்தது	1 (5)	,,
	(6) புரம் எரித்தது	1 (6)	,,
	(7) யானையை அட்டதும், அதன் தோலை உரித்ததும், போர்த்ததும்	1 (7)	3
2.	சிவபிரான் அணிவன	(2)	,,
3.	சிவபிரான் (அணிவன) (சடையில், சிரசில் சூடுவன)	(3)	4
4.	சிவபிரான் அபிடேகப் பொருள்	(4)	5
5.	சிவபிரான் அர்த்த நாரீசுரர்	(5)	,,
6.	சிவபிரான் அருள்	(6)	6
7.	சிவபிரான் அரையில் அணிவன	(7)	,,
8.	சிவபிரான் அழகு	(8)	7
9.	சிவபிரான் ஆடை, உடை	(9)	,,
10.	சிவபிரான் இருவருக்கு அரியர்	(10)	,,
11.	சிவபிரான் உறைவிடம்	(11)	,,
12.	சிவபிரான் காதில் அணிவன	(12)	8
13.	சிவபிரான் கையில் ஏந்துவன	(13)	,,
14.	சிவபிரான் கொடி	(14)	9
15.	சிவபிரான் சடை	(15)	,,
16.	சிவபிரான் தன்மை, பெருமை முதலியன:-	(16)	,,

(1)	அச்சந் தீர்ப்பவர்	16 (1)	9
(2)	அமுது	16 (2)	,,
(3)	அரசு (தலைவர்)	16 (3)	10
(4)	அரியவர்	16 (4)	,,
(5)	அருளுதல், கருணை புரிதல்	16 (5)	,,
(6)	அழகர்	16 (6)	,,
(7)	அழிவில்லாதவர்	16 (7)	,,
(8)	அளவில்லாதவர்	16 (8)	,,
(9)	ஆட்கொள்ளுதல்	16 (9)	,,
(10)	இணையில்லாதவர்	16 (10)	,,
(11)	இயல் (தன்மை)	16 (11)	11
(12)	இன்பம் தருபவர்	16 (12)	,,
(13)	இனிப்பவன்	16 (13)	,,
(14)	உலகைத் திருத்துபவர்	16 (14)	,,
(15)	எதற்குக் கீழ் உள்ளார்	16 (15)	,,
(16)	எதற்கு நடுவில் உள்ளார்	16 (16)	,,
(17)	எதற்கு மேல் உள்ளார்	16 (17)	,,
(18)	எல்லாப் பொருளுக்கும் அப்பால் ஆனவர்	16 (18)	,,
(19)	எல்லாம் ஆவர்	16 (19)	,,
(20)	எல்லாராலும் அறியப்பட்டவர்	16 (20)	12
(21)	எளியவர்	16 (21)	,,
(22)	ஒப்பில்லாதவர்	16 (22)	,,
(23)	ஒருவன்	16 (23)	,,
(24)	கீர்த்தி	16 (24)	,,
(25)	சிறப்பு	16 (25)	,,
(26)	சீர்	16 (26)	,,
(27)	சுடர், சோதி, ஒளி	16 (27)	,,
(28)	சொல்லவொண்ணாதவர்	16 (28)	,,
(29)	பகைவரை அழித்தல்	16 (29)	,,
(30)	பற்றுவர்	16 (30)	13
(31)	பாசம் அறுப்பவர்	16 (31)	,,
(32)	பிறப்பறுப்பார்	16 (32)	,,

(33) பிறரால் வணங்கப்படும் தெய்வங்களால் பணியப்படுபவர்	16 (33)	13
(34) பின்னுவார் எவர்க்கும்	16 (34)	,,
(35) புகல்	16 (35)	,,
(36) புணர்ப்போன் (படைப்பவன்)	16 (36)	,,
(37 போற்றத்தக்கவ	16 (37)	14
(38) மருந்து	16 (38)	,,
(39) முத்திதருதல்	16 (39)	,,
(40) முன்பு ஆவார், எவர்க்கும்	16 (40)	,,
(41) மேலானவர்	16 (41)	,,
(42) யார்க்கு அருளார்	16 (42)	,,
(43) வாக்குக்கு எட்டாதவர்	16 (43)	15
(44) வினை தீர்ப்பவர்	16 (44)	,,
சிவபிரான் திருஉருவம்	17	,,
(1) அடி	17 (1)	,,
(2) அரை	17 (2)	,,
(3) ஆகம்	17 (3)	,,
(4) கண்	17 (4)	,,
(5) கண்டம்	17 (5)	16
(6) கரம்	17 (6)	,,
(7) செவி (காது,	17 (7)	,,
(8) சென்னி (தலை)	17 (8)	,,
(9) திருவடி	17 (9)	,,
(10) தோள் (புயம்)	17 (10)	18
(11) நிறம் (வண்ணம்)	17 (11)	,,
(12) நுதல் (நெற்றி)	17 (12)	,,
(13) முடி	17 (13)	,,
(14) மேனி (உருவம்)	17 (14)	,,
1. சிவபிரான் திருநாமம் சிறப்பு	18 (1)	19
2. சிவபிரான் திருநாமம் பொது	18 (A)	,,
சிவபிரான் திருநாமம் விளி	19	20
சிவபிரான் நஞ்சுண்டது	20	,,
சிவபிரான் நடம்	21	,,
(A) சிவபிரான் எரியாடுதல்	21 - A	21

22.	சிவபிரான் படை	22	21
23.	சிவபிரான் பாம்பாட்டியது	23	22
24.	சிவபிரான் மாலை	24	,,
25.	சிவபிரான் வாகனம்	25	22
26.	சிவபிரான் விரும்புவன	26	,,
27.	சிவனும் அக்கினியும்	27	23
28.	,, அசுரரும்	28	,,
29.	,, அடியார்களும்	29	,,
30.	,, ,, தேவர்களும்	30	24
31.	,, அடியார் அல்லாதாரும்	31	,,
32.	,, இந்திரனும்	32	25
33.	,, கடலும்	33	,,
34.	,, காமத்தை வென்றவரும்	34	,,
35.	,, சந்திரனும்	35	26
36.	,, சூரியனும்	36	,,
37.	,, தமிழும்	37	,,
38.	,, தவமும்	38	,,
39.	,, திருநீறும்	39	,,
40.	,, திருமாலும்	40	27
41.	,, தேவர்களும்	41	28
42.	,, தேவியும்	42	29
43.	,, தொண்டும்	43	,,
44.	,, பிரமனும்	44	,,
45.	,, பூமியும்	45	,,
46.	,, பேயும்	46	,,
47.	,, பொய்யரும், கள்ளரும் மெய்யரும்	47	,,
48.	,, மறையும்	48	30
49.	,, முச்சுடரும்	49	,,
50.	,, மேகமும்	50	,,
51.	,, ராவணனும்	51	,,
52.	,, வாத்தியமும்	52	,,
53.	,, வெண்மையும்	53	,,
54.	,, வேத ஆகமமும்	54	31

உ. தில்லை முதலாம் தலப்பகுதி

1. தில்லையும் தில்லை விசேடமும்		32 - பக்
2. பிறதலங்கள்	(2)	34
(1) அம்பர்	2 (1)	,,
(2) அரசம்பலம் (பேரூர்)	2 (2)	,,
(3) இடைமருது (திருவிடைமருதூர்)	2 (3)	,,
(4) ஈங்கோய்மலை	2 (4)	,,
(5) ஏகம்பம் (கச்சி ஏகம்பம்)	2 (5)	,,
(6) கடம்பை (கடம்பூர்)	2 (6)	,,
(7) கயிலை	2 (7)	35
(8) கழுக்குன்றம் (திருக்கழுக்குன்றம்)	2 (8)	,,
(9) காஞ்சி (ஏகம்பம் பார்க்க)	2 (9)	35
(10) காழி (சீகாழி)	2 (10)	,,
(11) குற்றாலம்	2 (11)	,,
(12) கூடல் (மதுரை)	2 (12)	,,
(13) கொடுங்குன்றம் (பிரான் மலை)	2 (13)	,,
(14) சிவநகர்	2 (14)	,,
(15) சுழியல் (திருச்சுழி)	2 (15)	36
(16) பரங்குன்று	2 (16)	,,
(17) பழனம்	2 (17)	,,
(18) பனையூர் (திருப்பனையூர்)	2 (18)	,,
(19) பூவணம் (திருப்பூவணம்)	2 (19)	,,
(20) பெருந்துறை (திருப்பெருந்துறை)	2 (20)	,,
(21) பொதியம் - மலையம்	2 (21)	,,
(22) மூவல்	2 (22)	37
(23) வாஞ்சி - திருவாஞ்சியம்	2 (23)	,,
(24) திருவெண்காடு	2 (24)	,,

ங. அகப்பொருள் பகுதி

1. தலைவன்

1. தலைவன் ஆனவன் தலைவி தோழி இவர்களிடம் கூறுவது	1 (1)	38
தலைவன் இருப்பிடம் ஊர் இல்லம்	1 (2)	,,

6. நற்றாய்

1.	நற்றாய் கொடிக் குறி பார்த்தல்	5 (17)	111
2.	நற்றாயும் சிவனும்		,,
3.	நற்றாயைச் செவிலி விளித்தலும் நற்றாய்க்குக் கூறுதலும்	6 (3)	112
4.	நற்றாயைத் தலைவி குறிப்பது பக்கம் 157	6 (4)	113
5.	நற்றாயைத் தோழி குறிப்பது	6 (5)	114
6.	நற்றாயைத் தோழி குறிக்கும் சொற்கள்	6 (6)	,,

7. தலைவன், தலைவி

1.	தலைவன் பிரிவால் தலைவிக்கு நேர்ந்தவை	7 (1)	,,
2.	தலைவி தலைவனுடைய பிரிவை ஆற்றாது உரைத்தது	7 (2)	,
3.	தலைவனும் தலைவியும்	7 (3)	11
4.	தலைவனும் தலைவியும் தோழியும்	7 (4)	11
5.	தலைவி தலைவன் இவர்களைப் பரத்தையர் குறிப்பது பக்கம் 164	7 (5)	11

8. தலைவியும், தோழியும்

1.	குளித்தல் முதலிய	8 (1)	12

9. பரத்தையர்

1.	பரத்தையர் தலைவி ஏனைய பரத்தையரைக் குறிப்பது பக்கம் 165	9 (1)	,
2.	பரத்தையர் வர்ணனை பக்கம் 165	9 (2)	,
3.	பரத்தையரும் தலைவனும் பக்கம் 166	9 (3)	12
4.	பரத்தையரைக் குறிக்கும் சொற்கள் பக்கம் 166	9 (4)	,,

10. பிற

1.	அலர்: பழிச்சொல் பக்கம் 165	10(1)	12
2.	கட்டுவிச்சியின் வெறியாட்டம் பக்கம் 165	10(2)	

3. [illegible]றியிடம் கூறல் பக்கம் 169	10(3)	126
4. தோழியும் தலைவியும் தலைவனும்	10(4)	,,
5. [illegible]ல் பக்கம் 172	10(5)	127
6. [illegible] பக்கம் 173	10(6)	128
7. பாணனும் விறலியும் பக்கம் 174	10(7)	,,

ச. பிறபொருட் பகுதி

1. அக்கினி	(1)	130
2. அசுரர், அரக்கர்	(3)	,,
3. அடியார்	(4)	131
4. அடியாரும் சிவனும் (சிவனும் அடியாரும் பார்க்க)	(5)	,,
5. அடியார்களும் தேவர்களும் (தேவர்களும் அடியார்களும் பார்க்க)	(6)	,,
6. அடுக்குச் சொற்கள்	(7)	,,
7. அந்தணர், மறையோர்	(8)	,,
8. அமிழ்து	(9)	132
9. அரசர்	10(12)	,,
10. அருள்	(13)	133
11. அன்பு	(14)	,,
12. ஆகாயம்	(106)	,,
13. ஆடை, உடை	(15)	,,
14. ஆதிசேடன்	(16)	,,
15. ஆயுத எழுத்து	(17)	,,
16. ஆவா	(18)	134
17. இசை	(19)	,,
18. இந்திரன்	(20)	,,
19. இரவு	(22)	,,
20. இருவர்	(23)	,,
21. இருள்	(24)	134
22. இலக்குமி	(25)	135
23. இன்பம்	(26)	,,
24. இனச் சொற்கள்	(27)	

88.	நாடு - தேசம்	(93)	175
89.	நாண் - கற்பு	(94,95)	,,
90.	நாயன்மார்	(96)	175
91.	நிலம்	(97)	176
92.	நிறம்	(98)	,,
93.	நிறை	(99)	,,
94.	நீர்நிலை	(100)	,,
95.	நூல்	(101)	177
96.	நெஞ்சு - மனம்	(102)	,,
97.	நெறி	(103)	178
98.	நோய் (பிணி)	(104)	,,
99.	பகல்	(105)	,,
100.	பஞ்ச பூதம்	(106)	179
101.	படை - ஆயுதம்	(107)	,,
102.	பரல்	(108)	181
103.	பலி	(110)	,,
104.	பழக்கவழக்கங்கள்	(111)	,,
105.	பழம் (கனி)	(112)	185
106.	பழமொழி - நீதி வாக்கியம்	(113)	,,
107.	பழி	(114)	186
108.	பளிங்கு	(115)	,,
109.	பனி	(116)	187
110.	பாசம்	(117)	,,
111.	பாட்டு	(119)	,,
112.	கரந்துறை பாடல்கள்	(120)	,,
113.	பார்வதி	(121)	188
114.	பாவம்	(122)	190
115.	பாவிசேடம்	(123)	,,
116.	பாவை	(124)	191
117.	பிரமன்	(126)	,,
118.	பிரமனும் சிவனும்	(127)	,,
119.	பிறவி	(128)	,,
120.	புகழ்	(129)	192
121.	புலவோர், பெரியோர் முதலியோர்		..

122.	புனம்	(130)	192
123.	பூசனை	(131)	193
124.	பேய்	(132)	,,
125.	பேய்த்தேர்	(133)	,,
126.	பொய்	(134)	,,
127.	பொருள் நிதி	(135)	194
128.	பொருள் நலம்	(135)	195
129.	பொழில் - சோலை	(136)	195
130.	பொன், மணி, முத்து முதலிய	(137)	,,
131.	போர்	(138)	197
132.	மக்கள்	(139)	,,
133.	மணம்	(140)	,,
134.	மணல்	(141)	,,
135.	மரம்; செடி	(142)	198
136.	மலர் பொது	(144)	201
137.	மலை (சிறப்பு)	(145)	204
138.	மறை	(146)	207
139.	மனப்பாடத்துக்கு உரிய பாடல்களும், பாடற்பகுதிகளும்	(147)	,,
140.	மாதர்கள்	(148)	209
141.	மாலை	(149)	211
142.	முருகவேள்	(150)	,,
143.	முனிபத்தினி	(151)	212
144.	முனிவர்கள்	(152)	,,
145.	மெய்	(153)	213
146.	மேகம், மின், மழை இடி	(154)	,,
147.	யமன் - காலன்	(157)	214
148.	ராவணன்	(158)	,,
149.	வடமொழி	(160)	,,
150.	வணக்கவகை	(161)	,,
151.	வயல்	(162)	,,
152.	வர்ணனை	(163)	215
153.	வரலாறு	(164)	218
154.	வசை	(165)	218

155. வழி (166) 219
156. வறுமை (167) ,,
157. வாத்தியம் (168) 220
158. வியாபாரம் (169) 221
159. விரதியர், விரதம் (170) ,,
160. விழா (171) ,,
161. விளக்கு (172) 222
162. விறு (173) ,,
163. வினை (174) ,,
164. வினை (தொழில்) (175) ,,
165. வெள்ளம் (176) ,,
166. வேட்டை (177) 223
167. வேள்வி (178) ,,
168. வைதல் சொற்கள் (179) ,,
169. சிவராசிகள் (180) ,,
(1) ஊர்வன ,,
(2) நீர் வாழ்வன 225
(3) பறவை ,,
(4) மக்கள் 230
(5) விலங்குகள் ,,

ரு. இலக்கணப் பகுதி

1. அசைச் சொற்கள் (1) 236
2. அன்மொழித் தொகை (3) ,,
3. ஆகுபெயர் (4) ,,
4. இரட்டிப்பு (5) ,,
5. உடம்படுமெய் (6) ,,
6. எதுகைச் சொற்களும் பேதமும் (8-182) 237
7. ஏகாரம் (9) ,,
8. ஒருமைப் பன்மை, பன்மை ஒருமை மயக்கம் (10) ,,
9. குறை (11) ,,
1. இடைக்குறை ,,
2. கடைக்குறை ,,
3. முதற்குறை 238

10.	கொல், கொலாம்	(13)	238
11.	சாரியை	(16)	,,
12.	தன்மை, முன்னிலைப் பொருளில் வந்தது	(18)	,,
13.	துணைச் சொல்	(20)	,,
14.	தொழிற்பெயர்	(21)	,,
15.	போலிமரு	(23)	,,
16.	முதல்நிலைத் தொழிற்பெயர்	(25)	239
17.	வழுஅமைதி	(26)	,,
18.	விகாரம்	(27)	,,
19.	விகுதி	(28)	,,
20.	விகுதிமேல் விகுதி	(28)	240
21.	வினைத்தொகை	(30)	,,
22.	வேற்றுமை உருபுகள்	(31)	,,
23.	வேற்றுமை உருபு தொக்கது	(32)	241
24.	வேற்றுமை உருபு மயக்கம்	(33)	,,

அணி அலங்காரம்

1.	இல்பொருள் உவமை அணி	(1)	241
2.	உயர்வு நவிற்சி அணி	(2)	,,
3.	உருவக அணி	(3)	242
4.	உவமை அணி	(4)	,,
5.	ஐய அணி	(5)	,,
6.	ஒட்டணி	(6)	243
7.	சிலேடை அணி	(7)	,,
8.	சொற் பின்வருநிலை அணி	(8)	,,
9.	தற்குறிப் பேற்ற அணி	(9)	,,
10.	மயக்க அணி	(10)	244
11.	முரண் அணி	(11)	,,
12.	வேற்றுப் பொருள் வைப்பணி	(12)	,,

அலங்காரம்

1.	பரியாய அலங்காரம்	(5)	245

சு. பேரின்பப் பகுதி 246

7. மணிவாசகர் வரலாற்று நினைவுப் பகுதி 248

திருக்கோவையார் ஒளிநெறிக் கட்டுரை

க. சிவபிராற் பகுதி

1. சிவபிரான் அட்டவீரம் (1)

1. காமனை எரித்தது

கரும்பு வில்லும், பூ அம்பும் உடைய காமன் வெந்து ஒடுங்கிப் பொடியாய் விழத் தன் கண் கொண்டு விழித்தனர் பெருமான்.

காமன் தன் மீது மலர் அம்பு எய்தபோது அதைப் பொருது நெற்றிக் கண்ணை விழித்தார் சிவபெருமான்.

அனங்கன், கருப்புச் சிலையோன், காமர், காமன், பூங் கணைவேள், வேழப்படையோன் எனக் காமன் குறிக்கப் பட்டுள்ளான்.

2. காலனை அட்டது

ஒருவராலும் மாற்றப்படேன் என்று வழிபடுவோனது உயிரை வௌவ வந்த காலனை ஓலமிடும வண்ணம் இல்லைக் கந்தர் அடர்த்தார்.

எல்லாப் பொருளும் அழிய வெகுளுதல் வல்ல அக் காலனை வெகுண்டார் பெருமான், தன்னை அடைந்த அந்தணனை ஏதம் செய்யக் குறித்து அவ்விடத்துப் புகுந்த காலன் வலிகெட ஒரு கழலை வைத்த எழிலை உடையவர் தில்லைப் பெருமான்.

3. சலந்தரனைத் தடிந்தது

அச்சத்தால் வரும் நடுக்கத்தை வெகுண்ட சலந்தரனுடைய ஆகத்தைக் காய்ந்தார் பெருமான்.

4. தக்கன் வேள்வியைத் தகர்த்தது

1. தக்கன் வேள்வியில் எரிந்த முத்தியை அழித்தார் பெருமான்.

2. தக்கன் வேள்வியில் தண்டனை அடைந்தவர்.

மும்மைத் தீயின் (சூரியன், சந்திரன், எரி) சிரம், கண், ஆற்றல் இவைகளை அழித்தார்.

(1) எரி

(2) சூரியன்:—ஒரு சூரியனைப் பல்லை உதிரத்துப் பல்லிலனாகப் பண்ணினார்.

பகன் என்னும் சூரியனுடைய கண்ணைப் பறித்து அவனைக் குருடனாக்கினார்.

(3) சந்திரன் :—அவனுடைய ஆற்றலை அழித்தனர் பெருமான்.

(4) விண்ணோர் :—வேள்விக்கு வந்திருந்த விண்ணோரைத் திசை திசை ஓடும்படி செய்தார்.

5. பிரமன் சிரத்தை அறுத்தது

தேவர்களின் நடுவில் பிரமனுடைய தலையை நகத்தால் கிள்ளி அறுத்தார்.

6. புரம் எரித்தது

(1) இரும்பு மதில், பொன் இஞ்சி, வெள்ளிப் புரிசை, இவை துரும்பாகும்படி எரியூட்டினர் பெருமான். தேவர்கள் அஞ்சிப் பதைக்கும்படி படர்ந்து பரந்துவரும் புரங்களின் வலிகுன்ற எரித்தனர் பிரான். மூன்று மதில்களும் (புரங்களும்) ஓர் அம்பால் எரிந்து ஒருங்கே அழியும்படி செய்தார்.

(2) ஊர் :—மேலே ஒருங்கு பறந்து வரும் வலிமை மிக்க ஊர்கள் முப்புரங்கள் ; குற்றம் பொருந்திய முப்புரங்களும் தேவர்களின் உள்ளம் பதைப்ப விண் இடத்தே பறந்துசெல்வன.

(3) அம்பு :—ஓர் அம்பால் தீ விளைத்து முப்புரத்தை யும் எரித்தனர் பெருமான்.

(4) வில் :—மேரு மலையை வில்லாகக் கொண்டனர் பெருமான்.

(5) திரிபுராதிகள் :—அஞ்சார், அடையார், குறுகலர், கூடார், தெவ்வர், கள்ளார், வட்கார், விண்டார் என விளிக்கப்பட்டுள்ளனர்.

7. யானையை அட்டதும் அதன் தோலைப் போர்த்ததும்

மும்மதங்களை உடையதும் பனைமரம்போல் துதிக்கையை உடையதுமாய் எதிர்த்து வந்த யானையை அதன் வலிதொலைய அடர்த்து, அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார் பெருமான்.

2. சிவபிரான் அணிவன (2)

1. அக்கு, 2. அரைநாண், 3. எலும்பு, 4. கழல, 5. சாந்து, 6. திருநீறு, 7. பாம்பு, 8. மலர், 9. விடம்

[எ - டு.] (1) மணி அக்கு அணியும் அரன்...195.
(2) எழில் நாண் (பாம்பு)...325.
(3) எலும்பால் அணி இறை...197.
(4) நீங்கரும் பொற்கழல்...46.
(5) ஈசன் சாந்து (திருநீறு)...74.
(6) நீறணி அம்பலவன்...118.
(7) 1* பணங்களஞ்சாலும் பருஅரவு ஆர்த்தவன்...235.
2. பாம்பலங்காரப் பரன்...11.
3. † புற்றில வாள் அரவன்...97.

---

* பணங்களஞ்சு-அரவு=ஐந்துதலை அரவு, வாசுகி.

† புற்றில=அரவு பிரான் அணிதலின் புற்றில் இல்லாத பாம்பு.

(8) எருக்கு (74); கொன்றை...258.

(9) விடம் அணியும்...272.

குறிப்பு :—

(1) அக்கு வடம் (அக்கு மணி வடம் - உருத்திராக்க மாலை);

(2) அரைநாண் - பாம்பு.

(4) நீங்கரும் பொற்கமல் - கண்டால் விட்டு நீங்குதற்கு அரிய அழகிய சீ பாதங்கள். (பழைய உரை.)

(6) புதல்வனது பிணிக்குத் தாய் மருந்து உண்டாற் போலத்* தொழுது எழுவார் வினைக்குத்தான் நீறணிந்தார் என்பதைக் குறிக்க 'வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்' என்றார்.

3. சிவபிரான் அணிவன, சடையில் (சிரசில் சூடுவன)(3)

(1) கங்கை

கங்கையஞ் செஞ்சடை...203.

(2) கொக்கு இறகு

† கொக்கின் இறகதணிந்து நின்று ஆடி...3 6.

(3) தலைமாலை

வீதலுற்றார் தலைமாலையன்...309.

---

* புதல்வன் பிணிக்குத்தாய் மருந்துண்ணல்: "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண் மருந்து தாயுண்டாங்கு" (சிதம்பர மும்மணிக் கோவை 1. 14-15): "இளங் குழவிப் பிணிக்கின்றதாய் மருந்து நுகர்வது போல்" (திருவானைக்காப் புராணம். கடவுள், 7)

† கொக்கு—கொக்கு உருவம் கொண்ட குரண்டாசுரன். 'வரலாறு' என்னும் தலைப்பைப் பார்க்க.

(4) திங்கள்

சடைமுடிமேல் தனித்திங்கள் வைத்த...56.

(5) பாம்பு

பொங்கு அரவம் புன்சடை மிடைந்த மின் அனையான்...125.

(6) மேகம்

*புயல் ஓங்கு அலர்சடை ஏற்றவன்...327.

4. சிவபிரான் அபிடேகப் பொருள் (4)

நெருப்பு

அம்பலத்து அனலாடி†...91.

5. சிவபிரான் அர்த்த நாரீசுரர் (5)

ஓர் ஆகம் இரண்டு எழிலாய் ஒளிர்வோன்...194.

‡குழல்வாய் மொழிமங்கை பங்கர்...94.

§தவளத்த நீறணியுந்தடந் தோளண்ணல் தன்னொருபால் அவள் (அத்தனும் மகனுந் தில்லையான்)...112.

தையல் மெய்யிற் பிரியாமை செய்து நின்றோன்...311.

(பிற ஒளி நெறியிற் காண்க.)

---

*புயல் - மேகம்.

†அனலாடி: ஊழி இறுதியில் வடவாமுகாக்கினியே மஞ்சனமாக, ஆடுவார் மகாதேவர் (சிவபிரான்) தக்கயாகப் பரணி ...332.

'அங்கமே பூண்டாய் அனல் ஆடினாய்'—அப்பர்—6-99-2.

‡குழல்வாய் மொழிமங்கை - திருக்குற்றாலத்துத் தேவிபெயர்.

§'சிவனும் தேவியும்' என்னும் தலைப்புப் பார்க்க.

1. அர்த்த நாரீசுரரின் தரிசனத்தின் தன்மை

" மின் தொத்திடு கழல், நூபுரம்,
வெள்ளை செம்பட்டு மின்ன,
ஒன்று ஒத்திட உடையாளொடு ஒன்றும
புலியூரன் என்றே,
நன்றுஒத்து எழிலைத்தொழ, உற்றனம்
என்னதோர் நன்மைதான்
குன்றத்திடைக் கண்டனம் அன்னை
நீ சொன்ன கொள்கையரே"

இப்பாடல் வழியில் எதிர்ப்பட்டவர் தலைவன் தலைவி இவர்தம் இயைபு எடுத்து உரைத்தது.

" சேயிழையோடு செம்மல் போதர
ஆயிழை பங்கன் என்று அயிர்த்தேம் என்றது—246.

அவன் (தலைவன்) காலிலே அணிந்த வீரக்கழலும்? அவள் (தலைவி) காலிலே அணிந்த சிலம்பும், அவனுடுத்த வெள்ளைப்பட்டும், அவளுடுத்த செப்பட்டாடையும், இவை விளங்கி ஒன்றுபடப் பிரகாசிப்ப, எல்லாப் பொருளையும் உடைத்தாகிய உமாதேவி ஒன்றுபட்டுத் தோன்றுகிற பெரும்பற்றப் புலியூரை உடைய சிவபிரான் என்று கருதி நாங்களெல்லாம் மிகவும் அவ்வழகைத் தொழ நினைந்தோம். வந்த நன்மை சொல்லலாவ தொன்றன்று.

6. சிவன் அருள் (6)

அம்பலத்து நின்று ஆடும் பிரான் அருள், அசம்பலத்து நின்று ஆடும் பிரான் அருள். (299) கழியா அருள் வைத்த சிற்றம் பலவன் 261; என, அருள் விளக்கப் பட்டுள்ளது. இவை போன்ற பிற ஒளிநெறியிற் காண்க.

7. சிவபிரான் அரையில் அணிவன (7)

அரவு;

றிப்பு :

இது ஐந்து தலை அரவு - வாசுகி—"பணங்கள் ஊராடும் பரூஉ அரவு ஆர்த்தவன்"—235.

8. சிவன் அழகு (8)

தில்லைச் சிவன் அழகர்.

9. சிவன் ஆடை, உடை (9)

1. புலித்தோல் (வேங்கை அதள்)
2. சிங்கஉரி
3. தோல்
4. வெள்ளைப்பட்டு (246)

வேங்கை அதள் ...96

மடங்கல் அதள் ...75

10. சிவபிரான் இருவர்க்கு அரியர் (10)

ஆவா (பரிதாபம்) ! அயனாலும் திருமாலாலும் அறியப் படாத அளவை உடையவராய், அவர்களால் உணரப் படாதபடி நின்றவர் சிவபிரான். பூமியையும் ஆகாயத்தையும் ஊடுருவிச் சென்றும் திருமாலுக்கும் அயனுக்கும் அறிய முடியாத எல்லையினர் பெருமான். அவ்விருவர் உயர்ந்தும் பணிந்தும் பெருமானை அடைய முடியாத இருளாய் நின்ற பரிசினர் அவர்.

11. சிவபிரான் உறைவிடம் (11)

I. அம்பலம், தில்லை அம்பலம், புலியூர்

அம்பலத்து அரன், தில்லைச் சிற்றம்பலம், வண் தில்லைக்கண்ணோன், புலியூர்.

3. அரசு (தலைவர்)

தில்லைத் திருச்சிற்றம்பலத்து அரசு எல்லார்க்கும் அரசு. அவர் எவர்க்கும் முன்னும் அரசு.

4. அரியவர்

உணர்ந்தாராலும் உணரப் படாத அரியர். எவர்க்கும் அரியர், எனக்கு எளியர் பிறர்க்கு அரியர். யார்க்கும் அறிவதற்கு அரியர். தன்கண் புகுவார்க்குப் பின் போதரவு (மீண்டும் போம் தன்மை) அரியவன்.

5. அருளுதல், கருணைபுரிதல்

விடத்திற்கு அஞ்சிக் கலங்கின தேவர்கள் பணியக் கருணை புரிந்தார் பெருமான். மல உடலை நீக்கித் திருமால் முதலான தேவர்களுக்கு அப்பால் செல்லும் பேற்றைத் தன் அன்பர் ஆயிருைக்குத் தருபவர் பெருமான்.

6. அழகர்

அழகிய முக்கண்ணை உடைய பெருமான் தமது காதில் குழைகள் விளங்கும் எழிலை உடையவர்.

7. அழிவில்லாதவர்

விண்ணும் மண்ணும் மடங்க, மலைகள் மறைய, நீர் வெள்ளம் பரந்து வரும் ஊழிக் காலத்தும் அழியாது நிற்பர் பெருமான்.

8. அளவில்லாதவர்

ஓர் அளவுக்கு அடங்காதவர் பெருமான்.

9. ஆட்கொள்ளுதல்

உள்ளும் உருகி உருவம் சிலிர்ப்பப் பெருமான் ஆட் கொள்ளுவர்.

10. இணையில்லாதவர்

தமக்கு இணையில்லாதவர் இறைவர்.

11. இயல் (தன்மை)

இத்தன்மையர் என்று சொல்ல முடியாதவர் இறைவனார்.

12. இன்பம் தருபவர்

பிறவியால் வரும் துன்ப இன்பம் கெட யாவராலும் [illegible]யாயினோர்க்கு வரையாது பேரின்பத்தைக் [illegible]பவர் பெருமான்.

13. இனிப்பவர்

தன்னை ஒத்த இனிமை உடையவர் பெருமான்.

14. உலகைத் திருத்துதல்

உலகம் முழுவதையும் திருத்துபவர் பெருமான்.

15. எதற்குக் கீழ்உள்ளார்

எல்லாப் பொருள்களுக்கும் கீழாகிய பாதாளத்தின் கீழ் உள்ளார்.

16. எதற்கு நடுவில் உள்ளார்

கடல் சூழ்ந்த மண்ணுக்கு நடுவாய்த் தான் விரும்பும் [illegible]யில் வீற்றிருப்பார் பெருமான்.

17. எதற்குமேல் உள்ளார்

எல்லாப் பொருள்களுக்கும் மேலாகிய விண்ணுக்கு மேலானவர்.

18. எல்லாப் பொருளுக்கும் அப்பாலானவர்

மேலாய பொருளாய் எல்லாப் பொருளுக்கும் அப்பாலானவர் பரனார்.

19. எல்லாம் ஆவர்

எல்லாப் பொருளும் ஆகிய ஒன்றாகிய பராசத்தியை [illegible] ஒப்பில்லாதவர் பெருமான்.

20. எல்லாராலும் அறியப் பட்டவர்

மண்ணிடத்து எல்லா உயிர்களும் அறியும் தில்லையின் மன்னர் பெருமான்

21 எளியர்

தில்லைக்கண் எல்லார்க்கும் எளிதாம் தாளை உடையவர் பெருமான்.

22 - 23. ஒப்பில்லாதவர்

தமக்குத் தாமே ஒப்பு ; வேறு ஒப்பில்லாத ஒருவர் பெருமான்.

24. கீர்த்தி

தக்கன் வேள்வியில் பரந்த புகழை உடையவர் பெருமான்.

25. சிறப்பு

சிறப்பொடு திகழ்வர் சிவனார்.

26. சீர்

வான் உலகு எங்கும் உள்ளவரால் கற்றுச் சொல்லப் பட்ட சீரை உடையவர் பெருமான்.

27. சுடர், சோதி, ஒளி

இருளுக்கு அப்பால் ஆகிய வானிடத்து உண்டாகிய ஒளி அம்பலத்து ஆடும் அரன்.

28. சொல்லவொண்ணாதவர்

சொல்ல முடியாதவர் தில்லையில் உள்ள கூத்தப் பிரான்.

29. பகைவரை அழித்தல்

தன்கண் மிக்க விருப்புறும் அவரை விண்ணோரினும் மிகச் செய்து, பகைவர் மாய விதிர்க்கப்படும் சூலத்தை உடையவர் பெருமான்.

30. பற்றுவாய்

பற்று அற்றவர்கள் பற்றி நின்ற பிரான் பெருமான்.

31. பாசம்அறுப்பவர்

பாசத்தை அறுத்து ஆண்டு கொள்வார் பெருமான்.

32. பிறப்பறுப்பர்

பிறவி பெறாமல் செய்வர் பெருமான்.

பிழைத்தலைப் பொருந்தித் தன்கட் செல்லாது நீங்க அவ்வாறு கெடாதே ஒருவன் அன்பு செய்யுமாயின்; அவன் பிறவி என்கின்ற பாழியை (குகையை) அடைந்து செல்லாத வண்ணம் அருள்வர் அம்பலத்து ஆடுபவர்.

33. பிறரால் வணங்கப்படும் தெய்வங்களால் பணியப்படுபவர்

பிறரால் வழிபடப்படும் தெய்வங்கள் வணங்கும் திருவடியை உடையவர் பெருமான்.

34. பின்னுவார் எவர்க்கும்

உலகம் முழுவதும் மாய்ந்தால் பின்னும் தாம் ஒருவருமே ஆகியுள்ளார் சிற்றம்பலத்தின் கண்ணார்.

[உலகங்கள் உளவாய்ச் செல்லும் காலத்துச் சிற்றம்பலத்தில் தாம் வாழ்வார்.]

பின் தோன்றிய யாக்கையை உடையரெல்லாரும் மூப்பவும் தான் நிலை பெற்ற இளமையை உடையவன் ஆதலின் எல்லார்க்கும் இளையோன்.

35. புகல்

பற்றற்றவர்க்குப் புகலாவார் பெருமான்.

36. புணர்ப்போன்

நிலம், விசும்பு, மலை இவைகளைப் படைப்பார் பெருமான்.

37. போற்றத்தக்கவர்

யாவராலும் புகழ்ந்து போற்றத் தக்கவர் பெருமான்.

38. மருந்து

தேவர்களுக் கெல்லாம் உறுதி பயக்கும் மருந்தும், அமிர்தமும் ஆவர் பெருமான். "எங்கள் அழகு அழிந்தோம்; இந் நஞ்சை உண்பாயாக வேண்டும்" என்று முறையிடுகிற தேவர்களுக்கு மருந்தானவர் பெருமான். நம்முடைய துன்பம் நிறைந்த பிறவிப் பிணிக்கு மருந்தாய், அம்பலத்து அமிர்தாய் இருக்கின்றார் பெருமான். தான் எப்பொழுதும் நினைக்கின்ற மருந்து பெருமான்.

39. முத்தி தருதல்

தமது திருவடிக்கண் உண்டாகிய பற்றுதரும் முத்தியை அடியார் பெறும் வண்ணம் (எல்லாப் பொருளையும் அகப்படுத்தி நிற்கும்) ஆகாயத்தையும் கடந்து நின்ற தான் ஒரு வடிவு கொண்டுள்ளவர் பெருமான். அடியார்க்கு முத்தியை வழங்குபவர் பெருமான்.

40. முன்பு ஆவார் எவர்க்கும்

தேவர்க்கும், எவர்க்கும் முன்னுவர் பெருமான், எல்லார் யாக்கைக்கும் முன்னே தன் இச்சையாற் கொள்ளப் பட்ட திருமேனியை உடையவனாதலின் எல்லார்க்கும் தான் மூப்பான்; உலகத்திற்கு முன் உள்ளோன்.

41. மேலானவர்

எல்லார்க்கும் மேலானவர்.

42. யார்க்கு அருளார்

நெஞ்சில் கள்ளத்தை உடைய வஞ்சகர்க்கு அருள் செய்ய மாட்டார் இறைவர். பொய்யை உடையவர்க்குத் துன்பத்தைச் செய்து (சேயன் ஆவார் பெருமான்.) அவரை விட்டு அகல்வார்."

43. வாக்குக்கு எட்டாதவர்

சொல் அளவைக் கடந்து ஊறும் அமுதத்தை ஒத்து மனத்தைச்சேர்ந்து (என்னை) உய்விக்க நின்றவர் பெருமான்.

44. வினைதீர்ப்பவர்

தம்மை அடுத்தவருடைய தீவினையைத் தீர்ப்பவர் பெருமான். அவர்களுடைய வினைகள் கெடச் செய்வார்.

விரதங்களால் வருத்தாமல் தவத்தொழிலை நீக்கு வுன்பார்க்கு இன்புறு நெறியை அருள்வார் பெருமான்.

தொழுதெழுவார் உடைய வினையினது பெருக்கம் பொடியாகும்படி தன் திருமேனியின்கண் *நீற்றை அணி பவர் பெருமான்.

17. சிவபிரான் திருவுருவம் (17)

1. அடி

திருவடி என்னும் தலைப்பு 9 பார்க்க.

2. அரை

படம் உள்ள பாம்பைச் சிவபிரான் அரை நாணாகக் கொண்டுள்ளார்.

3. ஆகம்

ஒளி விளங்குவது

4. கண்

இமையாத 3 கண்களை உடையவர் சிவபிரான்.

கரும்பைப் படையாகக் கொண்ட காமன் பொடி யாகும்படி கண்ணின் தீயால் எரித்தார்.

சூரியன், சந்திரன், அக்கினி இம் மூவரையும் கண் ணாகக் கொண்டார்.

---

*சிவனும் திருநீறும் பார்க்க.

மூன்றாவது கண் நெற்றியில் தனிக் கண்.

5. கண்டம் : (களம், கழுத்து)

பிரானுடைய கண்டம் மேகம் போன்றது.

பிரானுடைய கண்டத்தில் உருத்திராக்கமணி விளங்கும்.

அவருண்டவிடம் அவர் கழுத்தில் அழகிய நீலமணி போல் விளங்கும்.

பிரானின் கண்டத்தினுடைய நிறம் காவிமலர், குவளை மலர், நீலமணி, மேகம் இவைகளை ஒக்கும்.

வானில் மலரும் பனி முகிலின் மாண்பைக் கொண்டது பிரானின் மிடறு (கழுத்து).

6. கரம் : (கை)

பிரான் மலர்க் கையில் அரவு, மான், மழு மூன்றும் விளங்கும்.

7 செவி : (காது)

அழகிய குழை விளங்கும் காதினர் பிரான்.

8. சென்னி : (தலை)

பெரு நீராம் கங்கை பிரான் சென்னியில் விளங்கும்.

9. திருவடி.

(I) அடி

இருவர் (அரி, அயன்) அறியா அடி. தேவரும் அறியாத அம்பலத்தில் ஆடும் பிரானுடைய அடித் தாமரை.

(II) கழல்

மலர் போன்றது. ஒலிக்கின்ற கழலணியை உடையது; ஆனந்த வெள்ளத்தில் ஆடுவது; இமையோர் இறைஞ்சுவது; அடியார் கூட்டம் வணங்குவது; அழகு விளங்கி

பொன்னையும் வெல்வது ; திருமாலின் திருக்கண்ணை அணியாகக் கொண்டது ; காலனை அழித்தது ; திக்கெல்லாம் விளங்குவது ; தெய்வங்கள் பணிந்து போற்றுவது : தேவர்களும் அசுரர்களும் இறைஞ்சுவது ; தொண்டர்கள் விரும்பிப் பணிவது ; கண்டால் விட்டு நீங்குதற்கு அரியது ; பொன்னங் கழலை உடையது; ஆல் இலையிற் பள்ளி கொள்ளும் மாயோன் நிலத்தைக் கிழித்தும் காணாமையிற் பின் தொண்டு செய்து காண்பதற்கு முயன்ற சுடர்க்கழல் ; அவர் திருவடியில் தேவர்களின் முடித்தொகைகள் எப்போதும் நீங்காது விளங்கும். எல்லாப் பொருளையும் கடந்து நின்றவையாய் விண்ணுளோராலும் காணப்படாத கழல் பெருமான் திருக்கழல் ; பெருமானுடைய கழல் சென்று நின்ற நிலைமை தேவர்களும் அறிய முடியாத வகையது. அங்ஙனம் இருந்தும் அன்பர்க்கு அணியவாய் அவரிட்ட நறுமலரின் நல்ல மணம் வீசுவது ; தொண்டர் கூட்டம் போற்றுவது.

தொண்டு செய்து தன்னை அடைதற்கு ஆகம விதியுடையோர்கள் கன்ம காண்டத்தினின்று ஞான காண்டத்திலே சென்று நினைக்கின்ற திருவடி பிரானுடைய அடி.

நற்பாலை (நல்லவிதியை) உடையவர்கள் சிற்றின்பத்தின் காரணமான புலன்களை விட்டுச் சென்று நினைக்கின்ற திருவடியை உடையவர் பெருமான்

தில்லைப் பெருமானுடைய திருவடிக்கு அன்பு உற்றவர்கள் பெறும் நன்மை எல்லாவற்றையும் கல்வி தரும்.

(III) கால்

(தலைவனுடைய) சிரத்தில் பொருந்தி விளங்குவது பிரானுடைய கால்.

(IV) சேவடி

தன்னுடைய சிவந்த திருவடிக்கே ஆசையப்படும் அன்பைத் தந்து தன்னை (தலைவனை) அடிமை கொண்டார் அம்பலவர்.

(V) தாள்

அரிக்கு (திருமாலுக்கு) அரிதாய்த் தில்லையில் உள்ளவர்க்கு எளிதாய் விளங்குவது பெருமான் திருத்தாள்.

தன்னுடைய (தலைவனுடைய) பிறவி கெட்டு அழியும்படி செய்தது தில்லைக் கூத்தனுடைய திருத்தாள்.

(VI) பாதம்

யானையின் உரியாகிய படாத்தை உடையது அம்பலத்தான் பாதம்.

10. தோள் (புயம் *17-10*)

பெருமானுடைய தோளில் திருநீறு விளங்கும்; எட்டுத் தோள்களை உடையவர் அவர். அவர் தோள் திக்கெலாம் விளங்கும்.

11. நிறம் (வண்ணம் *17-11*)

அவர் நிறம் அந்தி வண்ணத்தது; அழல் (தீ) வண்ணத்தது; பவள நிறத்தது; பொன் போன்றது;

12. நுதல் (நெற்றி *17-12*)

அழகிய கண்ணையுடைய நெற்றியைக் கொண்டவர் பிரான்.

13. முடி (*17-13*)

அவர் சடைமுடியில் ஆறு (கங்கை) விளங்கும். அவர் சடை முடி நீள் முடி. அது மின்னல்போல் விளங்கும். அவர் சடை முடி நெருங்கிய நெடிய சடை முடி.

14. மேனி (உருவம் *17-14*)

பெருமானுடைய ஒளி அழல் (தீ) போல் விளங்குவது. அவர் மேனியில் தேவி ஒருபால் விளங்குவள். பிரமனும், திருமாலும் அறியாத உருவத்தை உடையார் அரன்; அவர் மேனி பவளம்; பொன், 'தீ' செம்மலை, இவற்றை ஒத்து விளங்குவது அவர் மேனியில் தேவியின் கண் ஒசென்று திகழும்.

18. சிவபிரான் திருநாமம்

சிறப்பு (*18*)

அக்கணியும், அரன், அம்பலத்து அமிழ்து, அமரர்க்கு அமரன், அரவன், அரவும் பிறையும் அணியுறக் கொண்டவன், அரன், அழல் வண்ணன், அனலாடி, அனலூர் சடையோன். அன்றே நின்ற தில்லைத் தொல்லோன். (தில்லைக்கண் நின்ற நாள் இந்நாள் என்று உணரல் ஆகாமையின், அன்றே நின்றவென்றார்.) [284. உரை]

ஆனந்த வெள்ளத்து அறைகழலோன், இமையோர் மருந்து, என்பதே இழை கொண்டவன், ஓரளவில்லா ஒருவன், காவியை வெல்லும் மிடற்றோன், கூத்தப்பிரான், கேழ் ஏவரையும் இல்லோன், சிவந்த பொன்மேனி மணி, சிற்றம்பலவர், தயல் (தையல்) வளர்மேனியன், தாவிடையான், திங்களங் கண்ணித் தொல்லோன், திருச்சிற்றம்பலவர், தில்லைச் சிந்தாமணி, தீ மேவிய நிருத்தன், தேவி அம்கண் திகழ் மேனியன், தொன்மால் அயற்கும் காரணன், நிருத்தன், நெற்றித் தனிக்கண் ஒருத்தன், நோக்கம் ஓர் மூன்றுடையோன், பகன் தாமரைக் கண் கெடக்கடந்தோன், படந்தொறும் தீ அரவன், பாம்பன், புயல் ஓங்கு அலர் சடையோன், புரந்தரன் மால் அயன்பால் இருளாயிருக்கும் ஒளி, பொன் செய்த மேனியன், பொற்பந்தி அன்ன சடையவன், மத்தகம் சேர் தனி நோக்கினன், மற்றைத் தேவர்க்கெல்லாம் முன்னோன், மூவர் நின்றேத்த முதலவன், யாழின் மொழி மங்கைபங்கன், வரகுணனும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான், வன்னி வளைத்த வளர் சடையோன், விற்குலாவரை யேந்தி,

குறிப்பு :—பிற நாமங்கள் ஒளிநெறியிற் காணலாம்.

சிவபிரான் திருநாமம் (பொது *18*-A)

அண்டன், ஆனந்த மாக்கடல், இணையிலி, ஒருவன், தம்பிரான், தொல்லோன், நம்பன், பின்னவன், முன்னவன்.

குறிப்பு :—பிற நாமங்கள் ஒளிநெறியிற் காண்க.

19. சிவபிரான் திருநாமம் (விளி 19)

தென்றை.........217

நந்தி.........163

20. சிவபிரான் நஞ்சுண்டது (20)

1. கடலில் வந்த கொடிய நஞ்சை உண்டு அவ் விடத்தை அணியாகக் கொண்டார் பிரானார்.

2. ஏன் உண்டார் என்பது:

தேவர்கள் குழு அஞ்சி "எங்களுடைய மேனி அழகு அழிகின்றது இந்த விடத்தால்" என்று ஓலமிட்டு, "நாங்கள் உய்ய வேண்டி இந்த ஆலத்தை உண்ண வேண்டும்" என்று வேண்டித் தஞ்சம் புகுந்து பணியத் தம் கருணையினால் நஞ்சைப் பெருமான் உட்கொண்டார்.

3. நஞ்சு அமுதாக உண்டது

வந்த கடுவிடத்தை அமுதாகும்படி திருத்திப் பிரான் உண்டனர்.

4. நஞ்சின் வர்ணனை

ஆலம், கடுவிடம், கடல்வாய் படுநஞ்சு, முன்னும் கடு விடம்.

21. சிவன் நடம் (21)

1. நடம்

அக்கும் அரவும் பூண்டு அம்பலத்தில் நடம் ஆடுவார். அவர் ஆனந்தமாக்கடல், அவர் அரசம்பலத்தில் (பேரூரில்) நடம் ஆடுவர், கை கூப்பிக் கும்பிடும் அன்பர்களுடைய எலும்பு உருகும்படி ஆடுவர். மேகம் போல முழவு ஒலிக்கச்

* [தேவர் சென்றிரப்ப நஞ்சை நினைத்தலும் (அது) கைம் மலர்க்கண் வந்திருந்ததாதலின் (முன்னும்) கருதப் படும். கடுவிடம் (வெவ்விடம்) என்றார் (உரை)

சிற்றம்பலத்தில்திருமால் நல்ல மலரிட்டுப்பூசிக்கப்பெருமான் நடத்தாடுவர். விண்ணோர் வணங்க. நாம் புகழ்ந்து போற்றி செய்யப் பெருமான் நடம் ஆடுவர். நாகம் (பதஞ்சலி) தொழப் பெருமான் நடம் ஆடுவர். 'தென்னா', என்று சொல்லித் தொழ நடம் ஆடுவர். மூவர் நின்று ஏத்த முதல்வராம் அவர் ஆடுவர்; அப்போது முப்பத்து மூன்று வகைத் தேவர்களும் பெருமானை ஏத்துவர்.

2. காட்டில் இருளில் நடம் ஆடுவர். 3. பேயுடன் ஆடுவர். 4. கொக்கின் இறகு சூடி ஆடுவர்.

நடமும் தலமும்

தில்லைச் சிற்றம்பலத்தும், அரசம்பலத்தும் (பேரூரிலும்) நடமாடுவர்.

நடத்தின்போது வாத்தியம்

சிற்றம்பலத்தில் பெருமான் நடம் ஆடும்போது முழவு (குடமுழா) என்னும் வாத்தியம மேகம் போல ஒலிக்கும். அப்போது அவ்வொலி கேட்டு மழைக்காலம் (கார் காலம்) எனக் காந்தள் பாந்தள் (பாம்பு) போல அலர் தரும்.

21A சிவபிரான் எரியாடுதல் (21 A)

அனல் ஆடவல்லோன், எரி ஆடி, தீமேவிய நிருத்தன் தீ ஆடி என வருகின்றது.

[பிற ஒளிநெறியில் காண்க.]

22. சிவபிரான் படை (22)

சூலம், மழு, வில், வேல்,— இவை படைகளாகக் கூறப் பட்டுள. இவற்றுள்

(1) சூலம்—இப்படை பகைவர்களை அழிக்க வல்லது. இது சிவபிரான் கையில் உள்ளது.

(2) மழு—இது சிவபிரான் திருக்கையில் உள்ளது. கொல்லும் தொழிலை உடையது.

(3) வில்—சிவபிரானுக்கு மலையே வில்லாகப் பயன் பட்டது.

(4) வேல்—பகை அசுரர்களுடைய மாமிசத்தைக் குத்தி அவர்களைக் கொல்ல வல்லது.

23. சிவபிரான் பாம்பாட்டியது* (23)

பெருமான் ஆடரவை ஆட வைத்தார். 3-81

24- சிவபிரான் மாலை (24)

கொன்றை, பிறைச் சந்திரன், இவை 'கமழ் கொன்றை துன்று அலங்கல்', (24) சுடர்த்திங்களங் கண்ணி, (201) என விளக்கம் தரப்பட்டுள்ளது.

25. சிவபிரான் வாகனம் (25)

விடை :—

சிவபிரான் வாகனம் விடை. இது, இகலிடந்தா விடை, பாயும் விடை, வெள்ளி மலை அன்ன மால் விடை என்று விளக்கப்பட்டுள்ளது.

திருமாலும் விடையாயினர். இது 'கருமால் விடை உடையோன்' என விளக்கப்பட்டுள்ளது...326.

26. சிவபிரான் விரும்புவன (25)

1. தலம்

தில்லைத் திருச்சிற்றம்பலம்.

---

* கரிகால் சோழனுக்கு எதிரியான குறும்ப ராஜன் ஒருவனுக்கு உதவியாக, ஒரு பெரும் பாம்பைக் குடத்தில் விட்டுச் சமணர்கள் சோழனிடம் அனுப்ப, அச் சோழனுக்கு உதவியாகச் சிவபெருமான் அப்பாம்பை எடுத்து ஆட்டி அருளிய ஸ்தலம் திருப்பாசூர்.

'தீயதோர் பாம்பும் ஆட்டுவர்
பாசூர் அடிகளே' —அப்பர் 5-25.

2. பேயுடன் ஆடல்

காட்டில் பேய்த் தொகையுடன் ஆடல்.

3. காமத்தை வென்றவருடைய அன்பு.

27 சிவனும் அக்கினியும் (27)

சிவபிரான் கண்களில் ஒன்று அக்கினி.

28. சிவனும் அசுரரும் (28)

அசுரர்களும் பெருமானுடைய திருவடிகளை வணங்குவர். வணங்காத அசுரர்களை வேல் கொண்டு குத்துவர் பெருமான்.

29. சிவனும் அடியார்களும் (29)

சிவபிரான் அடியார்களுடைய எலும்பிடையே அமிழ்து ஊறச் செய்வார்; அவர்களுக்கு அன்பு நிறைய அருள்வார். பெருமானுடைய திருவருளைப் பெற்றவர் தம் துயர் தீர்வர்; அவருடைய அருள் பெற்றவர்க்கு ஆனந்த வெள்ளம் வற்றாது, நன்மை குன்றாது. அவர்களுக்குக் கருப் பற்று விட்டுவிடும். பிரானுடைய அருள் பெற்றவர் செம்மாந்து இருப்பர். அவருடைய பிறப்பு வேகத்தில் சென்று குறையும். வினை நில்லாது. பிரானைத் தோத்திரம் செய்து உன் அடியம் என்பவரைத் தேவர்களும் தொழும் படி இறைவன் செய்வார். யார் தம்மைத் தொழுது தம் தலையை அவர் திருவடிக்குத் தாழ்த்துகின்றார்களோ அவரை விண்ணோர்களும் சூழ்ந்து வணங்கும்படி செய்வார். தில்லைப் பெருமான் திருவடியில் ஆசை வைத்தவர் நல்ல கல்வியைப் பெறுவர். தில்லைப் பெருமான் திருவடி மலர்களைத் தமது சென்னியில் திகழும்படி செய்பவர்களின் துன்பம் தொலைந்துவிடும். தில்லையை வாழ்த்துபவர்கள் மனம் தெளிவுற்ற நிலையில் இருக்கும். தம்மைத் தொழுது துயில் எழுவாருடைய வினையின் பெருக்கம் பொடியாகும்படி தனது திருமேனியில் திருநீறு *இறைவன் அணிவன.

---

* புதல்வனது பிணிக்குத் தாய் மருந்து உண்டாற் போலத் தொழுது எழுவார் வினைக்குத் தாம் நீறணிவார். (உரை 118)

35. சிவனும் சந்திரனும் (35)

சிவபிரான் கண்களில் ஒன்று சந்திரன்

36 சிவனும் சூரியனும் (36)

சிவபிரான் கண்களில் ஒன்று சூரியன். 'பகன்' என்னும் சூரியனுடைய தாமரை போலும் கண்ணைச் சிவபிரான் பறித்தார். மற்றொரு சூரியனுடைய பல்லைப் பிடுங்கி விட்டார். சிவபிரானுடைய மலையென்று கூசி, சூரியன் நுழையாத தன்மை போலச் சோலை இருள் பூண்டிருந்தது.

37. சிவனும் தமிழும் (37)

பெருமான் உயர் மதில் கூடலில் (மதுரையில்) ஒள்ளிய இனிய தமிழை ஆய்ந்தார்.

38. சிவனும் தவமும் (38)

தவத் தொழிலை நீக்கி அன்பர், விரதங்களினால் வருந்தாமல் இன்புற்ற நிலையை அருளுகிறவர் பிரான்.

39. சிவனும் திருநீறும் (39)

பெருமான் தோளிற் பூசும் திருநீறு வெண்மை நிறமுடையது. அது ஈசன் சாந்து. தில்லையான் பொடி, பால் ஒத்த நீறு; தவளத்த நீறு, திருநீறு, வெண்ணீறு என விளக்கப்பட்டுள்ளது. அவர் அடியார்களுடைய வினைகள் அழியும்படி தாம் திருநீறு பூசுவர். *புதல்வன் பிணிக்குத் தாய் மருந்து உண்டாற் போல தொழுது எழுவார் வினைக்குப் பெருமான் நீறணிவான்.

---

*"பாலுண் குழவி பசுங்குடர் பொறுது என, நோயுண் மருந்து தாய் உண் டாங்கு", (சிதம்பர மும்மணிக்கோவை. 1. 14-15) "இளங் குழவிப் பிணிக்கு ஈன்ற தாய் மருந்து நுகர்வது போல்" (திருவானைக்காப் புராணம், கடவுள், 7.)

40. சிவனும் திருமாலும் (40)

('திருமாலும் சிவனும்' என்னும் தலைப்புப் பார்க்க)

1. திருமாலுக்கு அரியர் சிவபிரான்

ஆட் செய்தல் திருமாலுக்கும் (அல்லது நரசிங்கமாகிய திருமாலுக்கும்) அரிதாய், அவ்வாட் செய்தல் தில்லையில் எல்லார்க்கும் எளிதான திருவடியை உடையவர் சிவபிரான். அவர் திருமாலுக்கு அரியர்; திருமாலால் அறியப் படாத மறையோன் அவர். அவருடைய திருவடியைத் திருமால் கண்டிலர். ஆலிலையில் பள்ளி கொள்ளும் திருமால் பூமியைப் பிளந்து சென்றும் காணமுடியாமையால், பின்னர், தொண்டு செய்த திருவடியையுடையவர் சிவபெருமான். திருவடியைக்காணமுடியாமையால் 'எந்தாய்! என்மீது இரக்கங் கொள்' என்று இரந்தனர் திருமால். பனித் துண்டத்தை (சந்திரனை)த் தமது படர் சடையில் சூடியுள்ள அம்பலவர் உலகத்தைத் தனித்து உண்டவ ராகிய திருமாலால் தொழப் படுவர். அழகிய (நப்) பின்னைப் பிராட்டியின் தோளை மணந்த திருமால் ஏத்து கின்ற திருவடியை யுடையவர் சிவபெருமான். திருமா லுக்கும் பிரமனுக்கும் மூல காரணர் அவர்.

2. திருமால் சிவனைத் தமது கண் மலரிட்டுப் பூசித்துச் சக்கரம் பெற்றது

திருமால் தமது ஆயிரங் கரத்தால் மலர் ஆயிரங் கொண்டு சிவபிரானை வழிபட்டு அவரிடம் ஒளி வீசுகின்ற படையைப் பெற்றனர். அங்ஙனம் ஆயிரம் மலர் கொண்டு பூசித்த போது (ஒரு பூ குறைந்த காரணத்தால்) தமது அழகிய கண்மலரையே பறித்துச் சிவபிரான் திருவடியில் இட்டுப் பூசித்தார் திருமால். 'நந்தீ! எனக்கு வரம் தா' என்று நாரணர் தமது மலர்க்கண்ணை இட்டுப் பூசித்ததற் குப் பெருமான் அவருக்கு எஃகம் (சக்கரம்) தந்து உதவினர். திருமால் நறுமணத்தை உடைய மலரை இட்டுப் பரவுத லைத்தை விரும்பினர் சிவபெருமான்.

3. ' திருமால் சிவனுக்கு விடை ஆயினர்

தில்லைச் சிற்றம்பலவர் திருமாலை விடையாகக் கொண்டவர்.

4. திருமால அறியாவண்ணம் பெருமான் இருளாய் இருப்பவர். சிற்றம்பலத்தில் நல்ல மலரைத் திருமால் இட்டுப் பூசிக்கப் பெருமான் கூத்தாடுவர்.

41. சிவனும் தேவர்களும் (11)

தேவர்களுக் கெல்லாம் மருந்தும் அமிர்தமும் ஆகும முன்னோன் பெருமான். பெருமானுடைய பாதங்களைத் தேவர்கள் பரவுதற்கு இடமாகிய சாரலை உடையது பொதிய மலை. தேவர்கள் ஒருங்கு கூடி ஏத்துகின்ற கூத்தை உடையவர் திரு அம்பலத்தார். தேவர்களுக்குத் தேவர் சிற்றம்பலத்தார். 'ஆலத்தை (விடத்தை) உண்டருளுக' என்று ஓலமிட்ட தேவர்களுக்கு மருந்தாவார் அழகிய அம்பலத்தார். தேவர்கள் வணங்குகின்ற கொன்றை வார் சடையர் அவர் (தம் அன்பர் அல்லது) தேவர்கள் பெறாத திருவடியை உடையவர் அவர். தேவர்கள் அறியாத மறையவர் அவர். அவர்கள் போற்றிப் புகழும் பரமன் அவர். அவர்கள் ஏத்தி நிற்கும் திருப்பனையூரர் அவர். தேவர்களின் சூளாமணி அவர். தேவர்கள் வணங்கத் தில்லைச் சிற்றம்பலத்தில் நடம் பயில்வோர் அவர். தேவர்களுக்கெல்லாம் முன்னவர் அவர். தேவர்களும் அசுரர்களும் வணங்கும திருவடியை உடையவர் அவர். தம்மை விரும்பி வணங்கும் தேவர்களுக்குச் சிறப்புத் தந்து தம்மை வணங்காதவரைச் சூலப்படையால் கழிப்பர் அவர். முப்பத்து மூன்று தேவர்களும் ஏத்துகின்ற தில்லைச் சிவன் அவர். தேவர்களுடைய முடித் தொகைகள் என்றும் நீங்காத திருவடியை உடையவர் தில்லைக் கூத்தர். பொய்த் தேவர்களை வணங்கப் புகாமல் தமது பெருன்னொர் திருவடிக்கே அடியேன் புகழ்ந்து உய்யும்படி விளங்க நின்றவர் தில்லைப் பெருமான்.

42. சிவனும் தேவியும் (42)

சிவபிரான் தமது ஒரு பாகத்தில் விளங்கும் தேவிக்குத் தந்தையாகவும், மகனாகவும் விளங்குகின்றார். சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அவளத்தனும் என்றும், சத்தி தத்துவனின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் மகனும் என்றும் கூறினர்.

(சிவபிரான் அர்த்தநாரீசுரர் என்னும் தலைப்பு பக்கம் 5 பார்க்க.)

43. சிவனும் தொண்டும் (43)

தொண்டர்கள் தொண்டு செய்து காண்பதற்கு முயல்கின்ற சுடர்க் கழலோன் பெருமான்.

44. சிவனும் பிரமனும் (44)

திருமாலுக்கும் பிரமனுக்கும் காரணபூதர் சிவ் பெருமான். பிரமனுக்கு அரியர் சிவபிரான். பெரியோனாகிய பிரமன் ஆகாயத்திற் பறந்தும் அவனுடைய கண்ணுக்கு இருளாய் எட்டாதவராயிருந்தார் சிவபிரான்.

45. சிவனும் பூமியும் (45)

பிரான் பூமிகள் ஏழுமாய் இருக்கின்றார். புவி ஏழையும் உடையவர் அவர். கடல் நஞ்சை உணவாகக் கொண்ட ஒப்பில்லாத அவர் உலகங்களைத் திருந்தச் செய்துள்ளார்.

46. சிவனும் பேயும் (46)

பேய்க் கூட்டம் வரிசையாய் நிற்க அம்பலத்தில் ஆடினர் சிவபெருமான். கவலை கொள்வதற்கு ஏதுவாகிய பேய்க்கூட்டம் கரணம் இட்டுப் பாயும் காட்டின்கண் ஆடுதலை விரும்பிய பெருமான் சிவபிரான்.

47. சிவனும் பொய்யரும் கள்ளரும் மெய்யரும் (47)

கள்ள நெஞ்சினர்க்குப் பெருமான் அருள் புரியார். கள்ளம் புகுந்த நெஞ்சினர் இறைவனைக் காண முடியாது. பொய்யை உடையவர்க்கு அரன் துன்பத்தைச் செய்து

தூர அகல்வர். மெய்யுடையார்க்குச் சிவனது அம்பலம் பேரின்பத்தைச் செய்து அணித்தாகும்.

48. சிவனும் மறையும் (48)

மறை கண்டில்லாதது சிவபெருமானுடைய திருவடி.

49. சிவனும் முச்சுடரும் (49)

சூரியன், சந்திரன், எரி—ஆகிய இம்மூன்றும் சிவ பெருமானுடைய கண்கள்.

50. சிவனும் மேகமும் (50)

சிவபிரானுடைய கண்டத்தின் நிறம்போல் மேகம் விளங்கும்.

51. சிவனும் இராவணனும் (51)

இலங்கையர்கோன் இராவணனைக் கயிலை மலையின்கீழ் விழும்படி சிற்றம்பலத்துப் பெருமான் அடர்த்தனர்; அப் போது அவனுடைய புயங்களும் தலைகளும் நெரிப் புண்டன.

52. சிவனும் வாத்தியமும் (52)

(‘வாத்தியம்’ என்னும் தலைப்புப் பார்க்க)

1. முழவு

இது பெருமான் நடமாடக் காரென (மேகம்) போல ஆர்க்கும்.

2. யாழ்

தில்லைப் பெருமானால் அமைக்கப்பட்டது வெற்றி இயலும் யாழ.

53. சிவனும் வெண்மையும் (53)

1. பெருமான் வெண்ணீறு பூசுவர்.

2. பெருமான் திருச் சடையில் வெள்ளிய இளம் பிறை விளங்கும்.

3. வெள்ளிமலை போன்ற விடை — வாகனம்.

4. வெண்பட்டு ஆடையர்.

54. சிவனும் வேத ஆகமமும் (54)

கூத்தப்பிரான் வேத (சிறந்த நூல்களை) ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளினர்.

உ. தில்லை முதலாம் தலப்பகுதி

தில்லை, அம்பலம், சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம், தில்லைத் திருச்சிற்றம்பலம், புலியூர்—இவை சிதம்பரத்தைக் குறிப்பன வாகும்.

1. தில்லை

1. தில்லை: இதுவே பெரும்பானமையால குறிக்கப் பட்டுள்ளது.

2. அம்பலம்: [1]அணி அம்பலம், எழில் அம்பலம், [2]'அம்பலத்தில் தேவர்தம் குழு ஏத்தும் எம் கூத்தன்', [3]அம்பலத்தில் நடம் செய்யும் பிரான், [4]அம்பலத்தோன் எல்லையில் செல்பவர் நலம் பெறுவர். [5]அம்பலம் பணியாத வரைத் துன்பம் தொடரும். [6]இருவர் உயர்ந்தும், பணிந்தும் உணரப் படாதவன் அம்பலத்துள் உறைபவன், [7]நாகம் (பதஞ்சலி) தொழும்படி நடம் நவில்பவர் பிரானர்.

3. தில்லை அம்பலம்: [1]தில்லை அம்பலத்தைத் தொழாத பாவத்தைச் செய்தவர் நரகத்தில் தங்குவர், [2]மூவர் நின்று ஏத்த, முதல்வர் ஆட, முப்பத்து மும்மைத் தேவர்கள் சென்று ஏத்துவர். தில்லை அம்பலத்தில் [3]மதியின் அயலில் ஆடரவு ஆட வைத்தோன். 'ஒரு திருவடியைக் காட்டிஞய். பிறிதோரடியையும் காட்டிடு' என்று அம்பல முன்றில் மாயவன் வரங் கிடந்தான்.

4. சிற்றம்பலம்—திருச்சிற்றம்பலம்: திருச்சிற்றம்பலத்தில் ஆடுவர் கூத்தப் பிரான் (வெள்ளி மலையர்) சிற்றம்பலத்தை வழுத்துவோர் வான்பெறுவர். சிற்றம்பலம் சேணில் திகழ்கின்ற மதிலை உடையது. இந்திரன், மால், அயன் இவர்கள்பால் இருளாய் இருக்கும் ஒளிகின்ற சிற்றம்பலம். வரகுண பாண்டியன் ஏத்துகின்ற சிற்றம்பலத்தான்.

5. தில்லைச் சிற்றம்பலம்: சேணிற் பொலிகின்ற செம்பொன் மாளிகையையும், தேமாம் பொழிலையும் உடையது தில்லைச் சிற்றம்பலம்.

6. புலியூர் : அணிமணி மாளிகை உடையது அழகுப் புலியூர் ; உடையவர் நடனம் செய்யும் தலம் புலியூர் ; புலியூரை மறக்கும்படியான தீவினை உடையவர் சென்று சென்று பிறப்பர். புலியூர் என்னும் தலம் இறைவனைப் போலப் பிறையணி மாளிகையுடனும், சூலத்துடனும் விளங்கும் நீள்நகர். புலியூரைக் கலந்து பணியாதவர் ஊன் நோய் பெறுவர். தொல் புலியூர், பரன் புலியூர், கடல் சுற்றும் புலியூர், பொலி புலியூர், பொன்னார் அணி மணி மாளிகைத் தென் புலியூர், காவிரி வளைத்த புனல் சூழ் புலியூர், வண் புலியூர், வான் புலியூர், விடையோன் மகிழ் புலியூர் எனப் புலியூர் விளக்கப்பட்டுள்ளது

1. தில்லை விசேடம்

[தில்லையின் பிறபெயர்க் கீழும் பார்க்க]

அகழியும், மதிலும் சூழ்ந்தது அணிதில்லை. தில்லை புயல் தங்கும் கல் மதிலை - சிற்பம் திகழ் மதிலை யுடையது. தில்லை மிகப் பழைய தலம். அத்தலத்தில் இமையோர் வணங்க ஆனந்த நடனம் செய்வர் பெருமான். தில்லையைக் கண்டார்க்கு அமிர்தமாய் விளங்கும் பெருமான் வினை போக்குபவராய் விளங்குவார். கீழ்க் கடலும், மேல் திசைக் கடலும் ஒரு நுகத்தில் கோத்தால் அதன் மத்தியில் தில்லை விளங்கும். தன் பெருமையைச் சொல்லால் கூற முடியாத தலம் அது. கொன்றையணிந்த பெருமான் நாடகமாடும் தலம் தில்லை. தில்லை அம்பலத்தில் சூழ்ந்துள்ள மல்லிகை மலரை வெண் சங்காக வண்டுகள் ஊதும். விண்ணோர் போற்ற நடனம் பயில்வார் பெருமானார். தில்லையில் தாமரைப் பூந்தடம் விளங்கும். தில்லையை வழுத்துநர் போல வாவியில் நீர் தெளிவுற்று விளங்கும், அதை வாழ்த்தாதவர் மனம் எங்கும் இருள் சூழும். பூமியின் மத்திய ஸ்தானத்தில் உள்ளது தில்லை. தில்லையைத் தொழாதவர், கல்லாதவர், வாட்டமுறுவர். தில்லையை வேலேந்திய இளைஞர் இரவில் பறை அடித்துக் காவல்புரிந்தனர்.

அணிதில்லை, இறைதில்லை, எழில் தில்லை, ஒளிர்தில்லை. கடல் தில்லை, கடிமதில்தில்லை, கண்டர் தில்லை, குளிர்தில்லை, கூத்தன் தென்தில்லை, சூழ்பொழில் தில்லை, சேண் தில்லை, தண்தில்லை, தொல்லைத் தில்லை, பரன் தில்லை, பொழில் தில்லை, மதில்தில்லை, மல்லல் தில்லை, மலர்ப்பொழில் தில்லை, வடிவார்வயல் தில்லை, வண்தில்லை, வியன்தில்லை.

தில்லைத் தொல்நகர், தில்லை மணிநகர், தில்லை மாநகர், தில்லைவள நகர்—என்றெல்லாம் தில்லையின் சிறப்புக் கூறப் பட்டுள்ளது. இதன் விரிவை ஒளி நெறியிற் காணலாம்.

2. பிற தலங்கள்

1. அம்பர் : [பேரளம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சுமார் 4 மைல்.]

அம்பரின் தலத்தைச் சூழ்ந்து கடல் ஒலிக்கும். புலியூர்ப் புனிதன் வீற்றிருக்கும் தலம் அம்பர்.

2. அரசம்பலம் : [பேரூர்] இத்தலம் கோயமுத்தூரிலிருந்து 3 மைல், மேலைச் சிதம்பரம் எனப்படும்.

இத் தலத்தில் பிரான் நடனம் செய்வர்.

3. இடைமருது : (திருவிடை மருதூர்) அம்பலத்துப் பெருமான் தங்கும் தலம் இது.

4. ஈங்கோய்மலை : (திரு விங்கநாத மலை என வழங்கும் இத்தலம் திரிசிராப்பள்ளிக்கு மேற்கே உள்ள குழித்தலை ஸ்டேஷனிலிருந்து 2-மைல்).

அம்பலத்து அரன் சிறப்புடன் வீற்றிருக்கும் தலம்.

5. ஏகம்பம் : (கச்சி ஏகம்பம் - காஞ்சிபுரம்)

அம்பலத்தோன் தங்கும் தலம் இது.

6. கடம்பை : (கடம்பூர்) சிதம்பரத்திற்கு 15 மைலில் உள்ள மன்னார்குடிக்கு 8 மைல்)

இத்தலத்தில் குளிர் தடம் உள்ளது.

7. கயிலை: (மலை சிறப்பு என்னும் தலைப்பும் பார்க்க).

அணியார் கயிலை, அம் தண்கயிலை, அருவிக் கயிலை, தண்கயிலை, சங்கரன் தாழ்கயிலை, தில்லைத் தொல்லோன் கயிலை; பூங்கயிலை, பைம்பொற் கயிலை; வடவான் கயிலை; வெண்பூங் கயிலை — என்றெல்லாம் கயிலை விளக்கப் பட்டுள்ளது. பிற ஒளி நெறியிற் காணலாகும்.

8. கழுக்குன்றம்: (திருக்கழுக் குன்றம்) செங்கல் பட்டிலிருந்து 9 மைல்.

இத்தலத்துச் சந்தனச் சோலையில் எண்ணிறந்தவர் (பல மகளிர்) பந்தாடி நின்றார்.

9. காஞ்சி: ஏகம்பம் பார்க்க. ( )

10. காழி: (சீகாழி) இறைவன் உறைகின்ற தலம்.

11. குற்றாலம்: (தென்காசியிலிருந்து $3\frac{1}{2}$ மைல்)

இது கூத்தன் தலம். தேவி குழல்வாய்மொழி மங்கை. இத்தலத்து அசோகந் தழை போல வேறெங்கும் பெறுதல் அரிது.

12. கூடல்: (மதுரை)

தென்கூடல்: இத்தலத்தில் சிற்றம்பலத்துப் பெருமான் ஒண்டீம் தமிழை ஆய்ந்தார். 'உயர் மதிலை' உடையது இத்தலம்.

13. கொடுங்குன்றம்: (மதுரைக்கு வடகிழக்கு 42 மைல் பிரான்மலை எனவழங்கும். காரைக் குடியிலிருந்து 28 மைல்) கொடுங் குன்றின் நீள் குடுமி மேல் உள்ள தேனை விரும்பும் முடவனைப்போல என்பது ஒரு பழமொழி.

14. சிவநகர்: (இது சிவபுரம் போலும். சிவபுரம்— கும்பகோணத்திற்குத் தென் கிழக்கு 3 மைல்.)

இது தில்லைப் பெருமானுடைய தலம்.

15. சுழியல் (திருச்சுழி) இத்தலம் அருப்புக் கோட்டையிலிருந்து 8 மைல். (மதுரையிலிருந்து 38 மைல்.) பெருமை வாய்ந்த* தலம் இது.

16. பரங்குன்று: முதலிய (திருப்பரங்குன்றம்)— மதுரையிலிருந்து 4 மைல்.

(முருகவேளின் 6 படை வீடுகளில் முதற்படை வீடு). அம்பலத்தான் வீற்றிருக்கும் தலம் இது. காந்தள் பூ மலர்ந்து விரியும் தலம்†.

17. பழனம்: (திருப்பழனம்) (திருவையாற்றுக்குக் கிழக்கே-2 மைல்) இது சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் இரண்டாவது ஸ்தலம். இது சிவபிரான் வீற்றிருக்கும் தலம்.

18. பனையூர்: (திருப்பனையூர்) (இத்தலம் திருவாரூரிலிருந்து 7½ மைல்) இது சிவனது தலம்.

19. பூவணம்: திருப்பூவணம் (மதுரைக்குக் கிழக்கு 12 மைல். ரெயில்வே ஸ்டேஷன்). பொன்மாப் புரிசையும் (மதிலும்) பொழிலும் விளங்கும் தலம்.

20 பெருந்துறை: (திருப்பெருந்துறை) உள்ளத்து ஒளியைப் பெருக்கும் பெருமான் வீற்றிருக்கும் தலம்.

21. பொதியம் மலயம் பொதியில் (திருநெல்வேலியில் உள்ள பாபநாசம்), சிவபிரான் திருவடியை விண்ணோர் போற்றுகின்ற தலம் இது. சாரல் பொதியம், தென்னம் பொதியம் என விளங்கும மலைத் தலம் இது. இங்குச் சந்தன மரம் விசேடமாய் உள்ளது.

---

* ரமண பகவான் பிறந்த தலம் இது. ஒளிநெறியிற் காண்க.

† பரங்குன்ற. இத் தலத்தில் யானைகள் அஞ்சும்படி சிங்கம் திரியும் என்ற காரணத்தால் பரங்குன்று என்பது பரமன் குன்றாகிய கயிலையைக் குறிக்கும் பேரும்.

3. மலயம்

பொதியம் மலயம் என வழங்கும். மலயத்தில் தேன் விசேடமாக் உள்ளது.

22. மூவல் : மாயூரம் ஸ்டேஷனுக்கு 2 மைல். இது தேவார வைப்புத் தலம், சிவபிரான் வீற்றிருக்கும் தலம்;

23. வாஞ்சி : (திருவாஞ்சியம்) நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 6 மைல். திருவாரூரிலிருந்து 11 மைல். இது சிவபிரான் வீற்றிருக்கும் தலம்.

24. திருவெண்காடு : சீகாழிக்குத் தென் கிழக்கு 7 மைல். வைத்தீஸ்வரன் கோயிலுக்குக் கிழக்கு 7 மைல். இது சிவபிரான் வீற்றிருந்த தலம்.

௩. அகப்பொருட்பகுதி

1. தலைவன்

1. தலைவன் ஆனவன் தலைவி, தோழி இவர்களிடம் கூறுவது (௩-1)

மடல் ஏறத்துணிந்த தலைவன் அதற்கு இயைவு பட "நீங்கள் அருளாமையால் என் உயிர் அழிகின்றது. இதனை அறிமின்" என்று தனது ஆற்றாமையைத் தலைவி, தோழி இவர்களிடம் கூறினன் - 75.

2. தலைவன் இருப்பிடம், ஊர், இல்லம். (௩-2)

தலைவனுடைய இருப்பிடம், ஊர், இல்லம் எல்லாம் தில்லைத் தொல் நகரே.

3 தலைவன் களிறு. (௩-3)

தலைவனுடைய பெரிய யானை தலைவன் இல்லத்தில் பந்தியிடத்தே வந்து நிற்கும் அல்லது வேறு இடத்தில் தங்காது.

4. தலைவன், தலைவி இருவரிடமும் தோழி கூறுதல். (௩-4)

"ஓம்படுத்துரைத்த தோழி (தலைவி, தலைவன் இருவரையும் நோக்கி) நும் பதியாகிய தில்லை சேர்வீரா என்று வழிப்படுத்துக் கூறினள்.

5. தலைவன் தலைவி, இவர்தம் மகன். (௩-5)

1. அமுது அன்னவன்,

2. உடைமணி கட்டிச் சிறுதேருருட்டி யுவாத்தருமிந் நடை மணி-385.

3. ஊர் மழவிடை (தவழா நின்ற இளைய ஏறு.)-398

4. நம் தோன்றல்.

6. மகனைக் குறிக்கும் சொற்கள்.

குதலையின்வாயான், தோன்றல், நடைமணி, வீரட்கண் மழவு, வான்வள் துறை தரு வாய்மையன் 380. (வாணிட்த் துளவாகிய வளவிய இடங்களைத் தரு மெய்ம்மையை உடையான், கதிபெறுவது புதல்வராலே என் கையால்)

7. தலைவன் தலைவி உவமை (௩-6)

1. தலைவன் கூறும் உவமை

8. தலைவி - அமுது

தான் (தலைவன்) அந்த அமுதின் சுவை.

20. தலைவி - திருமகள். தான் (தலைவன்) திருமால்.

123. தலைவி - கழுநீர் மலர். தான் (தலைவன்) கழுநீர்த் தேனைப் பருகும் அளி (வண்டு)

166. தலைவி - குமுதம். தான் (தலைவன்) குமுதத்தை மலர்த்தும் இளமதி.

2. தோழி கூறும் உவமை

203. தலைவன் - பங்கயத்தடம் (தாமரைக்குளம்) தலைவி - அந்தத் தடத்துச் செங்கயல்.

3. கண்டவர் கூறும் உவமை

246. தலைவன் - புலியூரன் (சிவன்) தலைவி - உடையாள் (பார்வதி)

301. தலைவி - ஆவி. தலைவன் - யாக்கை

4. செவிலி நற்றாயிடம் கூறும் உவமை

௩0௪. தலைவியின் இல்லம் - நற்றாயின் இல்லம்

நற்றாய் - தலைவியின் நற்றாய்; தலைவன் - தலைவியின் கணவன்; தோழி - தலைவிக்குப் பணி செய்பவள்; யான் (செவிலி) - தலைவியின் தாய்க்குப் பணிசெய்பவள்; தலைவியின் இல்லத்து அயலார் - தலைவியின் தாயின் இல்லத்து அயலார்; பிற ஒளிநெறியிற் காண்க.

8. தலைவன் தலைவிக்குச் செய்த உதவியும் அதைப் பற்றி நன்றி பாராட்டலும் (கூ-7)

(1) 'யான் புனலிடை வீழ்ந்து கெடப்புக என்னைப் பிடித்து இழுத்து உயிர்தந்த பெரியோர்க்குச் சிறியேன் சொல்லுவது அறியேன்' என்று இரவுக்குறிக்கு உடம்பட்டாள் தலைவி. (15)

(2) "கடல் நீர் என்னை இழுத்துச் சென்றபோது எனக்குத் தன் கைதந்து கரையில் சேர்த்தார் ஒரு தோன்றல்" எனத் தோழியிடம் கூறித் தலைவி அறத்தொடு நின்றாள். (290)

(3) சிறு கண்களையும், பெரிய துதிக்கையையும், வலிய கொம்புகளையும் கொண்ட யானையை அழித்துத் தம்மை உய்வித்தவர்.

9. தலைவன் தலைவியிடம் கூறுவது (கூ - 8)

1. தலைவன், தலைவியைக் கோலம் செய்து இது நின் தோழி செய்த கோலமே. நீ கலங்காதொழி எனத் தலைவியிடம் கூறினன்.

[இது பகற்குறியில் கூறியது.]

2. 'நீ நீலப் பூக்களைக் கொய்யாது உனது அரிய தோழியொடு ஆயத்திடைச் சென்று துயில் பயில்வாயாக' என்று தலைவியைத் தலைவன் பள்ளியிடத்துச் செலுத்தினன்.

[இது இரவுக்குறியில் கூறியது; பள்ளியிடத்து உய்த்தல்]

3. "இத் துன்ப வழியைக் கடந்து சென்று இப் பொழுதே நாம் இன்பப்பதி (இல்லை) காணப் புகுவோம்.

இனி நமக்கு ஒரு குறைவில்லை" என்று தலைவன் வழிவருத்தந் தீரத் தலைவியிடம் கூறினன்.

(இஃது உடன்போக்கில் தலைவியின் அயர்வு அகற்றல்)

(4) "உன்னைக் கண்டு கண்கள் நம்மால் கொள்ளும் பயன் கொண்டனம். இனிச் சிறிதிருந்து இக் கடுங்கானகம் தண்ணெனும் அளவுஞ் செவி, கடம்பூரிற் பொய்கை போல நிறைய நின்மொழி பருக வருவாயாக" என்று கூறித் தலைவன் தலைவியுடன் விளையாடினான்.

[இஃது உடன் போக்கில் வழிவிளையாடல்]

(5) நகரணிமை கூறித் தலைவன் "பிறை அணிந்து சூலத்தை யுடைத்தாகிய மாளிகை மேற்கொடி நுடங்க மதில் தோன்றுகின்ற அந்தப் பெரிய நகர்தான் நம்முடைய நகர்" என்று (உடன் போக்கில்) தலைவிக்குத் தலைவன நகர் காட்டினான்.

(6) நகரிடைப்புக்கு அங்கே உள்ள செய்குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், மறையவர் மறை சொல்லுமிடம், தெய்வப்பதி இவையெல்லாம் தனித் தனி காட்டித் தலைவன் தனது பதியின் தன்மையைத் தலைவிக்கு விளக்கிக் கூறினன். [இஃது உடன் போக்கில் பதி பரிசுரைத்தல்] 22

10. தலைவன, தலைவியை வியத்தல் (௩-9

ஊர் மழவிடையாய் (தவழ்கின்ற இளைய ஏற்றை யுடையாய்.) 39

11. தலைவன் தன்னைக் குறிப்பது (௩-10)

1. நான் நரகத்தில் அழுந்தாமல் என்னை ஆண்டு கொண்ட செழுந்தேன் போல்வார் உடைய தில்லை.

2. தலைவி குமுதமலர் நான் அதை மலர்த்தும் இளமதி.

3. யான் உய்ய நின்ற சிற்றம்பலவர்.

4. நாயிடத்து உள்ள குணமும் இல்லாத என்னைத் தொண்டு கொண்ட திமேனிச் சிவன்.

12. தலைவன் தீரம், சிறப்பு, செய்கை. (ந — 11)

1. தலைவன் தீரம்

1. கொடிய காற்றுவீச மலைக் குன்றுகள் நடுங்கினும் நடுங்காதவன் நீ. (இது பாங்கன் கூற்று.) 31

2. ஈங்கோய் மலையில் நாம் புனம் காத்தபொழுது நம் மீது பாய்ந்து வந்த மலை போன்ற யானையைத் தொலைத்தவன் (இது தோழி கூற்று.) 113

3. மறவர் கூட்டமாய் வந்தாலும் என் கை வேலுக்கு அவர்கள் போதா. (இது தலைவன் கூற்று) 216

4. அருவரை ஆளி அன்னவன். (இது கண்டவர் கூற்று) 244

5. எதிர்த்து வந்த வேங்கையின் வாயில் தன் கையை விட்டு அது கிடந்து அலற, அதை அடக்கிய திண் திறல் ஆண்டகை. (இது செவிலி கூற்று) 245

6. காட்டில் யானையைக் கிழித்த தலைவர். (இது தலைவியைத் தேடிச் சென்ற செவிலிக்குக் கண்டவர் கூற்று) 247

7. கயிலையில் நம்மீது கோபத்துடன் வந்த மத யானையைக் கடிந்தவர். (இது தோழி கூற்று) 293

8. மத யானையைக் கடிந்தவர். (இது தலைவி கூற்று) 297

2. தலைவன் சிறப்பு

(1) அமிர்தம் குணம் கெடினும், காலத்தினால் மழை பெய்யாது மாறினும், நின்சீலம் மாறாது. (இது பாங்கன் கூற்று) 27.

(2) பல யோனிகளினும் சென்று சென்று பிறந்தாலும் பின்னும் சென்று சேரத்தகுந்த தன்மையுடையவர் தலைவர். (இது தோழி கூற்று) 205

(3) உன்னுடைய கல்வி மிகுதிக்கும், உன் சிறந்த குலத்திற்கும், நீ அனுப்பிய சான்றோருடைய நிறைவினுக்கும், உன்னுடைய தக்க நீதிக்கும் எமர் தலைவியை உனக்கு மணம் செய்விப்பார். (இது தோழி கூற்று) 266.

(4) தலைவர் சொன்ன வார்த்தை நினக்குப் பொய் என்பதே கருத்தாயின், இவ்வுலகத்து மெய் என்பது சிறிதும் இல்லை. (இது தோழி கூற்று) 277.

(5) வெள்ளிமலை அண்ணலின் திரு அருளால் கூடினவர் தலைவர். (இது தோழி கூற்று) 280.

(6) தலைவனுடைய கல்விமீது உள்ள விருப்பத்தை எடுத்துக் கூறியது. (இது தோழி கூற்று) 310.

(7) தலைவன் தக்க வாய்மையன். (இது வாயிலவர் கூற்று) 368

3. தலைவன் செய்கை

1. நான் உங்களுக்கு எல்லாத் தொழிலும் செய்வேன், கடலில் படகைச் செலுத்துவேன், கடலில் புகுந்து மீனைப் படுப்பேன். ஒரு குளிப்பின்கண் பல சங்குகளையும், முத்துக்களையும் எடுப்பேன். சிவன் தில்லைக்கோவில் முற்றத்தில் எல்லாரும் காணச் சங்கவளையல்களை விற்பேன். மற்றுன ஐயன்மார்க்கு வேண்டிய குற்றேவல் செய்வேன் என்று தலைவன் தன் நினைவில் தோன்றியதைக் கூறினன்.

2. இரு வேந்தர்களின் பகையைத் தணிப்பதற்குத் தலைவர் சென்றார். (இது தோழி கூற்று) 314.

3. "பண்டு நீ வரும் வழியில் கொடிய யாளி ஊறு செய்யும் என்பதைக் கருதாமலும், இருளின் மிகுதியை

இடையூறாக "நினையாமலும், கன்றை அகன்ற சுற்றுவைப் போல எம்மாட்டு வந்தீர்...இன்று எனக்கு ஆகாதவர் தெருவில் - தேர்மேல் ஏறிப்போகின்றீர் இஃது அன்றோ எம்மாட்டு நுமது அருள்'' என்று தோழி தலைவன் செயலைக் கூறினள் (382)

13. தலைவன் தேர் (௩-12)

1. தன்னைவிட்டு அகன்ற தலைவனுடைய தேரின் பின் சென்றது தன் நெஞ்சு எனத் தலைவி கூறி வருந்தினள்.

2. தலைவனுடைய மணி நெடுந்தேர் ஊரில் வந்ததுண்டு என்று அறிந்து தலைவியின் நற்றாய் கண் சிவந்து என்னையும் பார்த்தாள் என்று தோழி தலைவன் வரவைத் தலைவியிடம் கூறினள். (இது திருமணத்துக்கு முன்பு)

3. தலைவியின் ஆவி பிரியும் முன்பு தேடிச்சென்ற பெரு நிதியுடன் தலைவனுடைய தேர் வந்து சேர்ந்தது என்று தலைவனுடைய தேர் ஊருக்கு வந்தவுடன் இளைஞர் தலைவனை எதிர்கொண்டனர்,

4. சீர்நகருக்குத் தேர் வந்து சேருமுன்பு, மேகமே! நீ முழங்காதே. நகர்ப்புறம் செல்லாதே! என்று, தலைவன் மேகத்தை நோக்கிக் கூறினன்.

5. வலம்புரிச் சங்கின் வெள்ளிய இனம் ஆர்ப்பத் தலைவனுடைய பெருந்தேர் இன்று வரும் என்று தோழி தலைவிக்கு உரைத்தனள்.

6. தலைவர் தம்மைப் பணிந்தவருடைய திறையையும், பணியாது மாறுபட்டவருடைய அடையாளங்களையும், தமது தேரில் எடுத்துக்கொண்டு விரமுரசு ஆர்ப்ப, ஆலிக்கும் யானை, குதிரை கதிபாயப் படையுடன் வந்து அணுகினர் என்று தோழி தலைவியிடம் கூறினள்.

7. தன்னைவிட்டுத் தலைவன் பிரிந்த பின்பு, பிரிவு ஆற்றாத தலைவி, கடலை நோக்கி, 'கடலே, நீ தலைவனுடைய

பெரிய தேர் சென்ற வழியை உன் திரைகளால் அழிக்காதே, என் உயிர்க்குப் பற்றுக்கோடு இனி அதுவே' என வேண்டினள்.

8. தலைவன் தேர் தன் நிலையில் வந்து நிற்குமேயன்றிப் புறத்தில் தங்காது.

தலைவன் தேர்வர்ணனை

அகன்றூர் தேர், அன்பர் தேர், நெடுந்தேர், பெருந்தேர், மணந்தவர் தேர், மணி நெடுந்தேர், வண்தேர், வியன் தேர்—என விளக்கப்பட்டுள—ஒளி நெறியிலும் காண்க.

தலைவன் தேர் (௩ - 12)

நிதியொடு அன்பர் தேர் வந்து தோன்றிற்று என்று தோழி தலைவிக்குத் தேர் வரவு கூறினவுடன் தலைவனை வேல் இளையர் எதிர்கொண்டனர் 350.

14. தலைவன் தோழிக்கு உரைத்தது (௩-13)

1. வினையிடத்தும், பாசறையிலும் தலைவியை மறவாமையைத் தலைவன் தோழிக்குக் கூறினன்.

2. முனிவரும் அரசரும் நினைக்கப்படுவன (மறுமை இன்பமும் இம்மை இன்பமும் இவையிரண்டும்) போன்ஞர் முடியும் என்று நான் சொல்லும் அளவில் கண்கள் நீர் வர வாடினள். இது என்ன என்று நீரைத் தெளித்துத் தலையளிசெய்ய, நீர் வருவேன் என்று சொன்ன நாள் இந்நாளோ என்று தலைவி தொழுதாள். எனத் தலைவன் தோழிக்கு உரைத்தான்—332

15. தலைவன் தோழியிடம் கூறுதல் [௩-14]

1. யான் தந்த தழையை அப்பொழுது நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் நான் அதிக வேதனைப் பட்டேன்—90

2. நான் உங்கள் ஊருக்கு விருந்ினன் ஆக வருவேன்—148

3. இந்தக் குன்றிடத்தில் உங்கள் இடம் அரம்பையர் இருக்கும் இடமோ அல்லது யானையின் எலும்பால் கட்டப் பட்ட குடிசையோ, கூறுங்கள்—251

4. காடு, மலை கடந்து சென்று நான் பொன் பொருளைக்கொண்டு வரும்வரை தலைவியை வாடாமலிருக்கச் சொல்லு—268

5. நான் தலைவியின் நுதலையும் தோளையும் தைவந்து ஒன்று சொல்ல முயன்றால் இஃதென் கருதிச் செய்கின்றார் என்று மயங்குவாள் தலைவி; இன்சொல் பேசுவேனாயின் அதற்கும் உள்ளம் நடுங்குவாள். இனி வெளிப்படப் பிரிவுணர்த்திப் பொருண்முடித்துக் கடிதின் வருவலென்று தெளிவிப்பேனாயின் மனமகிழ்ந்து அதனைத் தேருள். ஆதலால் செப்பும் வகை இல்லை. ஆதலால் தலைவிக்கு எவ்வாறு சொல்லி ஏகுவன் என்று தலைவிக்குச் சொல்லாது தலைவன் பிரிகின்றான்—270

6. கல்வியால் வரும் நலம் மேரு மலைபோல அளவு கடந்தது—308

7. தனக்கு நான் செய்த தலையளியை இவ்வாறு பிறர்க்குந் தலைவன் செய்வான் என உட்கொண்டு பொருமி அழுது புலந்து வருந்தினள். இஃதன்றோ இவள் புலக்கின்றவாறு!—366

16. தலைவன் நெஞ்சோடு கிளத்தல் (கூ - 15)

1. பொன்னை ஈட்டுவான் ஒட்டந்தரு நெஞ்சமே! நீ விரைகின்றது, தலைவியின் நுண்ணிய இடைக்கோ, பொருட்கோ? இக்கானகத்துப் போவதும் மீள்வதும் செய்யாது நிற்கின்றது எதற்காக? என்று தலைவியை நினைந்து தலைவன் தன் நெஞ்சொடு நொந்து கூறினன்—342.

2. நெஞ்சொடு நொந்த தலைவன் "பேயிடத்துஞ் செய்வது அரிதாம் பிரிவை இவளிடத்தே ஆக்குவித்து இவ்விடத்துப் போந்த நினது சிக்கனவு (இரக்கமின்மை) அஞ்சத்தக்கது" "என்று தலைவன் பின்னும் நெஞ்சொடு புலந்து கூறினன்—348.

3. நெஞ்சொடு புலந்து கூறிப் பின்னும் பொருள்மேற் செல்லாநின்ற உள்ளத்தொடு தலைவியை நினைந்து "இப் பொன்னை விட்டு வேறு பொன் தேடியோ எம்மை வாழச் செய்வது? இதற்கு யாம் உடம்படேம்" என்று தலைவன் பொருள் வலித்த நெஞ்சொடு மறுத்துக் கூறினன்—344.

4. மாலைக் காலத்து ஏறுவரவு கண்டு, "இச் சிறந்த செக்கர் மாலை அவள் (தலைவி) பொறுக்கும் அளவன்று" என இரங்கித் தலைவன் வாடி உரைத்தான்—346.

5. இக் கார்காலத்து, தலைவி தன்னை நினைந்து ஆற்றுளாங்கொல்லோ எனப் பருவம் கண்டு தலைவன் இரங்கினன்—347.

6. "தலைவியின் துன்பத்தை நீக்குவதற்குக் கடவுட்குப் பூசனை செய்யும் நீணகரத்திற்கு என்னின் முற்படேல்" என்று தலைவன் முகிலொடு கூறினன்—348.

7. "தலைவியைப் பிரிந்து பொருள் தேட யான் பட்ட துன்பம் எல்லாம் இவளுடன் (தலைவியுடன்) அணையா முன்னம் மாய்ந்தது." என்று தலைவன் உண்மகிழ்ந்து உரைத்தான்—351.

8. "இத்துணைக் காலத்திற் கழிந்து தலைவன் வாயில் நின்று புகுதா நின்றான். மனைக்கடன் பூண்டலான் இனிப் புலந்து அடங்காதார் ஒருவரும் இல்லை" எனத் தலைவியின் வாயிலவர் கூறினர்.—362.

17. தலைவன் நெஞ்சோடு கிளத்தல் (ரு - 17)
(தொடர்ச்சி)

1. தலைவியைக் கண்ட தலைவன், 'நான் பார்த்த இவள் உருவளர் காமன் தன் வென்றிக் கொடி போன்று ஒளிர்கின்றாள்" என வியப்புற்றான்.

2. "இவளது இருப்பிடம் போதோ விசும்போ" எனத் தலைவன் தனக்குள் நினைந்து நின்றான்.

3. இவளது கண் இமைத்தலாலும் அடி பூமியைத் தோய்தலாலும், இவள் சூடியுள்ள மலர் வாடுதலாலும் இவள் அணங்கு (தெய்வமகள்) அல்லள் என்று தனக்குள் தெளிந்தான்.

4. தலைவி மக்களுள் ஒருத்தி என நயந்து நின்றான்.

6. தலைவியைத் தனக்குத் தந்த தெய்வத்தை நினைத்துத் தலைவன் வியந்து மகிழ்ந்தான்.

7. தெய்வத்தை மகிழ்ந்த தலைவன் இஃது எனக்குத் தெய்வப்புணர்ச்சி என நெஞ்சொடு சொல்லி அவளொடு புணரத் துணிந்தான்.

8. தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் புணர்ச்சி இன்பத்தின் இயல்பை அமுது இவள், யான் சுவை எனத் தன்னுள் கூறினன்.

9. தலைவி உள்ள இடத்தைச் சென்று எய்துவான் என நினைந்து தலைவன் சென்றான்.

10. வறும் புனத்திடை வருந்தி நின்ற தலைவன் தலைவி இருந்த பதிபுகல் அரிது எனத் தன் நெஞ்சொடு உசாவி வருந்தி நின்றான்.

11. கொடுங்குன்றத்தின் உச்சியில் உள்ள தேனை விரும்பும் முடவனைப் போல, நெஞ்சே! நீ தலைவியிடம் வைத்த அன்புக்கு ஆற்றாமல் அவதிப் படுகின்றாய்.

12. தலைவியை அடைய, தோழி அருவிலை உரைக்கக் கேட்ட தலைவன் விசும்பு உற்ற திங்களுக்கு அழுகின்ற குழந்தைபோல அவ்வருமையைக் கேட்டு நெஞ்சு அழிந்தான்.

13. தன்னொடு தலைவி தனித்து வரத் துணிந்ததைக் கேட்ட தலைவன் இயல் நெருப்பு வீசும் காட்டுவழியில் வர வேண்டுமே என்று நினைந்து நெஞ்சு வாடினன்.

318. வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைவன் பெடைக் குருகைச் சேவல் குளிரினின்றும் பாதுகாத்தலைப் பார்த்துத் தனது போதரவு தலைவிக்கும் என்னும்" என்று அவள் வடிவை நினைந்து வருந்தினான்.

321. பின்பனி நினைந்து இப்பனி தனிமையை உடைய தலைவிக்குத் துயரம் தரும் என்று நினைத்துத் தலைவன் வருந்தினான்.

341. பொருள் வயின் பிரிந்த தலைவன் தலைவியின் உருவெளித் தோற்றம் கண்டு வாடி நின்றான்.

342. பொருள் வேண்டிச் சென்ற தலைவன் மீள மாட்டாது நீ ஏதுக்குப் போக முயல்கின்றாய் எனத் தன் நெஞ்சொடு நொந்து கூறினன்.

343. பொருள் வேண்டிப் பிரிந்த தலைவன் தன் நெஞ்சின் துணிவை நினைந்து அந் நெஞ்சொடு புலந்து கூறினன்.

344. தலைவியை விட்டுப் பிரிந்த தலைவன் இப் பொன்னை விட்டு வேறு பொன் தேடியோ வாழ்வது எனக் கருதி மேற்செல்ல உடம்படாது பொருள் வலித்த நெஞ்சொடு மறுத்துக் கூறினன்.

346. பொருள் பெற்று மீளும் தலைவன், மாலைக் காலத்து ஏறு வரவு கண்டு இரங்கி உரைத்தனன்.

351. பொருளுடன் புகுந்த தலைவன் தலைவியின் பள்ளியிடத்தனாய், "இம்மானைப் பிரிந்து பொருள் தேடிய துன்பமெல்லாம் இப்பூ அணைமேல் இவளை அணைந்ததனால் மாய்ந்தது" என நினைத்தான்.

379. பரத்தையை விரும்பிச் சென்ற தலைவன் தலைப் பள்ளம் புகும் புனல் போன்று தன் அகத்தே வரும் பான்மையை நினைத்து வியந்தான்.

380. பரத்தையை விட்டுத் திரும்பி வந்த தலைவன் தலைவியின் இல்லத்தின் வாயில் பெறாது வாடி மகன் திறம்

நினைத்து நான் எவ்வாறு தலைவியை நண்ணுவது எனக் கவற்சியுற்றான்.

394. தலைவியின் ஊடல் நீட ‘அன்று அம்மலையிடத்துத் தன் இனிய நோக்கத்தைத் தந்தருளி என்னைத் தன் வசமாக்கிய நம் பெண் அமுதம் இது அன்று, இது நம்மை வருத்துவதொரு மாயமாம்’ எனத் தன் நெஞ்சுக்குச் சொல்லித் தலைவன் வாடினன்.

16. தலைவன் படை (கூ - 16)

வேல் : வீரர் கூட்டமும், யானையின் நிரையும் அனைத்தும் திரண்டு வரினும் தன் கையில் வடிக்கப்பட்டு அழகு விளங்கா நின்ற வேலின் (எஃகின்) வாய்க்கு இரை போதாது என்று தலைவிக்குத் தலைவன் உரைத்தான்.

தனது வேல் கொண்டு ஒரு வேங்கையைப் பணியும்படி செய்தான் தலைவன்.

வேல் : உலைமலி வேற்படை, எழில் வேல், செவ்வேல், தழல்திகழ் வேல்.

17. தலைவன் வர்ணனை (கூ - 17)

1. அடி

அடியாகிய பெரிய மலர்களை உடைய அண்ணல்.

2. அணிகலன்

செழும்பூண்

3. ஆடை

வெள்ளைப்பட்டு

4. கண்

அசும்புற்ற கண் (நீர் அருக் கண்).

5. கண்டம்

அழகிய கழுத்து.

6. கை

வேற் கை.

7. தோள்

கொந்தார் தடந்தோள்.

செழுமென் தண்டின மேவு திண்தோள்.

பொற்றோளிணை

8. மார்பு

செழும்பூண் மலைமலி மார்பு

பூவார் அகலம்.

9. மாலை

தேனக்க தார்

பூங்குவளைப் பொலிமாலை.

10. முடி

அம்பலத்தாடி குரைகழற் கீழ்த் தூளி நிரைத்த சுடர் முடி (யோய்) (151)

தில்லை முன்னோன் கழற்கே கோட்டந்தரு நங்குருமுடி (வெற்பன்) (156)

[தில்லை முன்னோனுடைய திருவடி ஒன்றற்குமே வணங்குதலைச் செய்யும் முடியை உடையவன்]

11. வாய்

செவ்வாய்.

12. பொது

அருவரை ஆளியன்னான் (கண்டவர் கூற்று)

செவ்வேல் எம் தனி வள்ளல்,

சேயே என மன்னு தீம் புனல் ஊரன்.

தலைவன் வர்ணனைப் பாட்டு

காரணி கற்பகங், கற்றவர் நற்றுணை, பாணர் ஒக்கல்
சீரணி சிந்தாமணி, அணிதில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன், தக்கோர் தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்று யாவர்க்கும்
ஊதியமே...(400)

1. கார்

வேண்டாமைக் கொடுத்தலின் (கார்) மேகத்தை ஒப்பான், 400 உரை

வரையாது கொடுத்தலால் மேகத்துக்கு ஒப்பாவான், 400 பழைய உரை

2. கற்பகம்:

வேண்டக் கொடுத்தலின் கற்பகத்தை ஒப்பான், 400 உரை

(கற்பகம் - தெய்வ விருட்சம்)

3. கற்றவர் நற்றுணை

நுண்ணிய கல்வியறிவிற் கற்றவர்க்கு நல்ல உசாத் துணை 400 உரை

நூல் அறிவால் நல்ல துணையாயிருப்பவன்
400 பழைய உரை

4. பாணர் ஒக்கல்

இசை உணர்வானும் கெழுதகைமையானும் பாணர்க்கு அவர் சுற்றத்தோடு ஒப்பாவான். 400 உரை

இசையாலும் கெழுதகைமையானும் பாணர்க்கு இனமுறையாக இருப்பவன். 400 பழைய உரை

5. சிந்தாமணி

நினைத்தது கொடுத்தலிற் சீரையுடைய நல்ல சிந்தாமணிக்கு ஒப்பாவான், 400 உரை

6. தில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன்

தில்லைச் சிவனது திருவடிக்குத் தாராகி அவனால் அணியப்படுங் கொன்றைப் பூவின் தன்மையை உடையான்.
400 உரை

புலியூர் அடிகளுக்கு மாலையாகிய கொன்றையை ஒப்பான். 400 பழைய உரை

7. தக்கோர் தம் சங்கநிதி

சான்றோர் தமக்குத் தொலையாத நிதியாயிருத்தலிற் சங்க நிதியோடு ஒப்பான். 400 உரை

8. விதி

நட்டார்க்கும் பகைவர்க்குந் தப்பாது பயன் கொடுத்தலின் விதியோடு ஒப்பான். 400 உரை

9. சேர் ஊருணி உற்றவர்க்கு

சுற்றத்தார்க்கு அவர் வேண்டிய செய்யவிருத்தலின் பணித்தாகிய ஊருணியோடு ஒப்பான். 400 உரை

தன்னை வந்து சேர்வார்க்கெல்லாம் ஊர்க்கு அண்ணிய குணியோடு ஒப்பான். 400 பழைய உரை

10. யாவர்க்கும் ஊதியம்

அதனால் வரைவின்றி இவன் (தலைவன்) எலலோர்க்கும் பெறும் பயன் (ஆவான்). 400 உரை

குறிப்பு: ஊடல் தீர்ந்து கூடியவழித் தலைவிக்கு உண்ணின்ற சிவப்பு ஒரு காரணத்தால் சிறிது புலப்பட, ஊரன் யாவர்க்கும் ஊதியமாகலின் அன்பானன்றி அருளால் பரத்தையர்க்கும் தலையளி செய்யுமன்றே: நின்மேல் அன்பில்லாமையால் பிரிகின்றான் அலன்; அதனால் நீ புலக்கற் பாலை அல்லை என்று குறிப்பினால் தோழி சிவப்பு ஆற்றுவித்தது.

18. தலைவனிடம் தோழி கூறுதல் (௬ - 18)

107. திருக்கழுக் குன்றத்தில் சந்தனச் சோலையில் எண்ணிறந்தவர் பந்தாடுகின்றார்கள். அவர்களுள் நீ யாரை விரும்புகின்றாய்?

115. செம்மலே! நீ தந்த தழையை அரைத்துப் பூசிக் கொள்ளவில்லையே ஒழிய மற்று அவள் அதைச் செய்யாதன இல்லை.

127. எங்களுடைய ஊர்க்கு வந்து மதுவும் கிழங்கும் அருந்தி இன்று இரவு குன்றத்தவர் குரவைக் கூத்து ஆடுவதைக் கண்டு போவாயாக.

178. சிவன் புதல்வனும் முருகன் போல நீ வந்து நின்றால் உன்னை மலரிட்டு வாழ்த்தி வந்தித்தல் அன்றி வேறு ஒன்றும் சிந்திப்பதற்கு இல்லை.

252. எங்கள் சிறுவர் கவண் வீசத் தேன் இழும் என்று ஒழுகும் இடம் எங்கள் சிறுகுடில்; இந்த இடம் எங்கள் தந்தைக்குச் சொந்தமானது. எங்கள் உறவினர் குறவர். பெற்றவள் கொடிச்சி. இந்த மலையிலுள்ள புனத்தைக் காப்பது எங்கள் தொழில்.

255. நீ இரவினில் வரவேண்டாம்; உன்னைக் கை தொழுது இரந்தேன் - இவள் (தலைவியின்) பொருட்டு ஆளி நிறைந்து ஆனைகளை உணவாகத் தேடும் இரவில் நீ வந்து போவது தலைவிக்குக் கவலையூட்டுவதாய் இருக்கின்றது.

260. நீ பகலில் வந்தால் பலர் பழிப்பதற்கு இடமாகும்.

382. திருமணத்திற்கு முன்பு தலைவியின் பொருட்டுக் கன்றை அகன்ற பசுப்போல இரவில் ஆளியை அஞ்சாது இருட்டில் வந்த நீர் இப்போது தேர் மீது ஏறி எங்கள் கண் எதிரே எங்களுக்கு ஆகாதவருடைய (பரத்தையருடைய) நெடுவீதியிற் செல்கின்றீர்.

2. தலைவனைப் பற்றித் தோழி கூறுதல்

205. எத்தனை சிறப்பெடுத்தாலும் அவரையே (தலைவனையே) அடையத் தகும் தன்மையார் அவள்.

19. தலைவனும் சிவனும் (கூ - 19)

(1) அமுதும் தன் ஆவியும் ஆயவன் தில்லைச் சிற்றம்பலவன்.

(2) தேவர்களால் அறியப்படா மறையவராம் அம்பலத்தானுடைய திருவடித் தூளி நிறைந்த முடியை உடையவன். (3) நரகத்தில் தான் அழுந்தா வகை தன்னை ஆண்டு கொண்டவர் தில்லைப் பெருமானார். (4) யான் இறுமாப்பு அடையும்படி தனக்கு இன்பத்தை தந்தவர் பெருமான். (5) ஈசனிடத்தில் தான் வைத்துள்ள அன்புபோல் அகன்றும், அவர் வாங்கிய தனது பாசத்தைப் போலக் கறுத்தும், அவர் இருப்பிடமாம் தில்லை போல ஒளி வீசியும், அவரது தோளில் பூசும் திருநீறு போல வெளுத்தும், அவரது திருவடியைப் போற்றித் தாங்கள் பேசும் பேச்சுப்போல நீட்சியுடையது தலைவியின் பெரிய கண்கள் என்றும் தலைவன் தலைவியின் கண்ணை வர்ணித்தான்.

(6) தம்மை நினையாதாரைப் புழுக்களாகச் செய்து அவருடைய பிறப்பை அழியும்படி செய்தவர் பெருமான். (7) ஆயத்தினின்றும் நீக்கித் தலைவியைத் தனக்குத் தந்த தெய்வத்தைத் அன்றி வேறு ஒருவரை வியவேன், நய வேன். (8) சிவனது திருவடிக்கு அணியப்பட்ட கொன்றை மாலை போன்றவன் தலைவன். (9) சுற்றத்தாருடைய பலம் இன்மையைக் காட்டித் தனது திருவடியை தனக்குத் தந்துள்ளவர் பெருமான். அவருடைய திருவடி தன் முடிக்கு மலர் போலும். பெருமான் சிற்றம்பலத்திலும் தன் சிந்தையுள்ளும் உறைகின்றார் (10) பெருமானுடைய சிற்றம்பலத்தைச் சிந்தை செய்பவருடைய வளம் பொலி கின்றவன் தலைவன். (11) நாயின் இடத்தில் உள்ள குணமும் இல்லாத தன்னைத் தொண்டு கொண்டவர் பெருமான். அவருடைய திருவடி மலர் தனக்கு ஆபரண மாம். அதுவோ, இதுவோ வழி என்று மயங்கிப் பொது வாக நின்ற நிலைமையை நீக்கித் தன்னை ஆண்டவர் புலியூர் அரன் தன்னை ஒரு பொருளாக ஆண்டவன் இந்திரன், மால், அயன், இவர்களுக்கு இருளாயிருப்பவன் :—பிற ழுனிநெறியிற் காண்க.

20. தலைவனும் பரத்தையரும் (௩ - 20)

பரத்தையரும் தலைவனும் (௩ - 2) பார்க்க.

* செவ்வணி

1. தலைவனுக்குத் தலைவியின் பூப்பு உணர்தற் குறி யாகத் தோழி அணிந்து கொள்ளும் செங்கோலம் (சிவப்பு ஆடையும், சிவப்பு மலரும் அணிந்துசெல்வது)

2. தலைவியிடத்தும் நின்றும் செவ்வணி செல்லக் கண்டு, "நம்மூரற்கு உலகியல் ஆறு உரைப்பான் வேண்டிச்

---

* பரத்தையர் மனைக்கண் செவ்வணி அணிந்து செல் கின்ற போதை இக்குறி அறிவிக்கச் செல்கின்ற இது நமக்கு மிகவும் எளிவாவு உடைத்து என்று இல்லோர் புகன்றது.—359.

செம்மலரும், செம்பட்டும், செஞ்சாந்தும் நமது திருவை யுடைய மனையின்கண் வந்து தோன்றின எனச் செவ்வணி கண்ட பரத்தை வாயிலவர் தம்முள் கூறினர். 361

புனல் வரவு

3. தலைவியுடன் மனைவயின் தங்கி இன்புற்ற தலைவ னுடைய தோள்களைப் பரத்தையர் பொருந்தி மகிழப் புதுப் புனல் வந்து பரந்தது; இனிப் புனலாட்டினால் இவன் (தலைவன்) பரத்தையரை மகிழ்வித்துத் தன் காதலியை வெகுள்விக்கும்போலும் எனக் கண்டவர் சொல்லினர். 369

4. புனல் வரவு கேட்ட தலைவன் புனலாட்டு விழ விற்குப் பரத்தையர் சேரிக்கட் செல்லா நிற்ப, "இவனைப் புணர்தற்கு முற்காலத்தே தவம் செய்தீர்கள். தேர் வந்து தோன்றிற்று" என்று தேர்வரவு கண்டு பரத்தையர் மகிழ்ந்து கூறினர்.

5. வான் அரமங்கையர் என்று சொல்லும் வண்ணம் மற்றொருத்தி வந்து இவனைத் (தலைவனை) திரித்துக் கொள்ளக் கொடுத்துப் பின் வருந்தாது, முன்னுறக் காப் போம் என ஏனைய பரத்தையர் கூறினர். 371

6. ஏனைய பரத்தையர் மாட்டு இவன் அருள் செல் லாமல் விலக்கேனாயின் என் மாட்டு இவனைத் (தலைவனை) தந்து அழா நின்ற இவன் மனைக்கிழத்தி ஆகிய அப்பூங் கொடி (தலைவி) ஆகின்றேன் என்று பரத்தைத் தலைவி தன்னை வியந்து கூறினள்.

7. பரத்தையர் தலைவி தன்னை வியந்து கூறினாள் என்று கேட்ட தலைவி "எங்கைச்சியார் தமக்கும் ஒரு தங்கைச்சியார் தோன்றின பொழுதே தன் இறுமாப்பு ஒழியும் (என்னெங்கைக்கு)" என்று பரத்தையை நோக்கித் தலைவி நகைத்துக் கூறினள். 373

8. தலைவனைப் பரத்தையர் வசம் புனலாட விட்டுச் சூடுவாரின்றிச் செப்பின்கண் இட்டடைத்துத் தமியே

வைகும் பூப்போல்வாள், (தலைவி) இஃது அவனுக்கு (தலைவனுக்குத்) தகாத பழியாமெனக் கருதி நாணி அதனை மறைத்திருந்தமை கண்ட தோழி 'இவளது கற்பும் நலனும்' நல்ல பகுதியை உடையனவாயிருந்தன என அவள் (தலைவியின்) நலத்தை மிகுத்துக் கூறினள். 374

9. "தமியோமை அறியாது, விறலியும் பாணனும் நம் வேந்தற்குத் (தலைவனுக்குத்) துயிலெழு மங்கலம் பாட வந்து நின்றார்" எனத் தோழி பாணன் வரவைத் தலைவியிடம் கூறினள். 375

10. பாணன் வரவுரைத்த தோழி இவள் (தலைவி) வருந்த அயலாரிடத்து நல்குதலால் (தலைவன்) இன்று தக்கிருந்திலன் என்று தலைவனை இயற்பழித்துக் கூறினள். 376

11. "தன்பெடை அன்னமானது வருந்தத் தகுதி அழிந்து சேவலன்னமானது சலஞ்சலத்தின் பெடையின் (மேல்) சங்கினுடைய பெடையின் மேல் கிடந்து உறங்குகின்ற வயலூரன் (தலைவன்) இவள் (தலைவி) பேதுறும் படியாக வரம்பு கடந்தான்" என்று உழையர் அவனை (தலைவனை) இயற்பழித்துக் கூறினர். 377

21. தலைவனும் பாங்கனும் (... 1 - 21)

1. பாங்கனைக் குறித்தல்

பாங்கனை யான் அன்ன பண்பனை 19
[என்னை ஒக்கும் இயல்புடையானை]

2. தலைவனும் பாங்கனும்

1. நின்னுடைய தோள்கள் மெலிந்து நீ யிவ்வாறு இதற்குக் காரணம் தீந்தமிழின் துறைவாய் நுழைதலானோ அன்றி ஏழிசைச் சூழலில் புகுதலானோ எனப் பாங்கன் தலைவனை வினவினன்.

2. உன்து நல் ஒழுக்கத்தை நீ நினையாது நடத்தல் என்னுடைய தீவினையே என்று பாங்கன் தலைவனிடம் கூறினன்.

3. நீ குறித்த மாதினிடம் கயிலை மலையோ? தாமரைப் பூவோ? வானோ? இடம் யாது என்று பாங்கன் தலைவனை வினவினன்.

3. பாங்கன் தலைவனை வியத்தல்

1. திருமகளினும் அழகுள்ள இவளைப் பார்த்து அங்கிருந்து இங்கு வந்து இவ்வளவு தூரம் என்னிடம் பேசின அண்ணலே திண்மையுடையவர்.

4. பாங்கன் தலைவனைக் குறிக்கும் சொற்கள்

இறைவா, சிலம்பா, வெற்பா, அண்ணல், சுடரிலை வேல் வள்ளல்.

22. தலைவனைச் சுரத்திடைக் கண்டவர் அவனிடம் கூறுதல் (ரு. 1 - 22)

1. இனிச் செல்ல வேண்டிய வழியில் நன்மக்கள் இல்லை. நீ தனியை. இவள் வாடினாள். பொழுதுஞ் சென்றது. ஈண்டுத் தங்கிப் போவாயாக என்று அங்கிருந்தோர் வழி விலக்கிக் கூறினர்.

2. இவளொடு (தலைவியொடு) நீ இக் குன்றத்தைக் கடந்து செல்வாயாயின் உம் ஊர் தெரியும்.

23. தலைவனைச் செவிலி குறிப்பது (ரு. 1 - 23)

1. அக்கள்வன், பகட்டுரவோன், அயலன், அரியேறு அன்னவன், ஆண்டகை, உரவோன், ஏந்தல், ஏறு அன்னவன், கட்டணிவார் சடையோன் தில்லை போலிதன் காதலன், செழுமென் தண்டின மேவு திண் தோளவன், பெருந்தகை, மன், மாலா அரியேறு அன்னவன், விடலை.

2. தலைவியின் மேல் வைத்த காதலான், அவள் இடை இறும் என அசிய பூண்பூட்டி அணியான். அவன்

அஞ்சு நோகும் என்று அஞ்சி மலர் அன்றி மிதிப்பக் கொடான். வண்டு உறுத்தும் என்று அஞ்சி அவள் கூந்தலில் மலரை வையான். இதுமட்டுமா பொறை (பாரம்) என்று அஞ்சி அவள் நெற்றியில் பொட்டையும் இடான். 303

3. வேங்கையின் வாயில் கைம் மடுத்து அது கிடந்து அலற வேல் கொண்டு வென்ற ஆண்டகை. 245

24. தலைவனைத் தலைவி குறிக்கும் சொற்களும், சொற்றொடர்களும் (ந. 1 - 24)

அன்பர், ஈர்ந்துறைவர், ஊரர், ஊரன், ஏர் கழலவன் ஒரு தோன்றல், கலந்தார், கள்வன், காதலர், கொற்றவர், சேர்ப்பர், தில்லை ஊரன், துறைவர், பல்வரை நாடன், புரவலர், பொருப்பர், மன்னர், வள்ளல், விள்ளா அருள் பெரியர், வேற்படை ஊரன்.

(பிற ஒளிநெறியிற் காண்க.)

25. தலைவனைத் தலைவி குறித்தலும் அவனைப் பற்றிப் பேசுதலும் (ந. 1 - 25)

1. அயில் படைக் கொற்றவர்

2. யானை வேட்டஞ் செய்யும் வழியில் அன்னை ஆக்கித் தந்தவர்.

3. எனது ஆவி கொண்டு ஏகி என் நெஞ்சில் தம்மை இருத்தின காவலர்,

4. உலைமலி வேற்படை ஊரன்

5. ஊரனிற் கள்வன் இல்.

6. எம் காவல் தழீஇயவர்

7. எம் வள்ளல்

8. கடக்களி யானை கடிந்தவர்

9. கயிலை மலைக்கண் புனத்தில் அன்று மாந்தழை ஏந்தி வந்த அவர் இன்று கனவில் என் நெஞ்சில் உள்ளார். விலக்கினும் நீங்கார். கனவு உண்டேல் அவர் என்பயோ தரத்தை விட்டுப் பிரிதலுண்டோ 378

10. சுனைப் புனலில் நான்வீழ்ந்த அன்று என்னைப் பிடித்து எடுத்துக் காத்தவர் அவர்.

11. நின் காதலிமார் நின்னை வெகுள்வர். என் காலைத் தொடாதே. என் கையை விடு, என்னைத் தொடா வேண்டாம். 390

12. ஒரு பந்தார் விரலியை (பரத்தையை) புனலாட்டு வித்து என் மனையின்கண் இவர் (தலைவர்) வந்து நிற்கின்றது எனக்குப் பொறுத்தல் அரிது. 391

13. தில்லை பேரியல் ஊரர்.

14. தில்லை வாழ்த்தும் வள்ளல்.

15. வேந்தர்க்கு உற்றுழித் தலைவன் பிரியத் தலைவி இப்பெரிய முகில் பாசறைக் கண்ணே சென்று தோன்றுமாயின் நம்மை நினைந்து ஆற்ருராயின் அவ் வினை முடிக்க மாட்டார் என்று அதற்கு வருந்துகின்றேன் என்று கார் மிசை வைத்துத் தனது வருத்தத்தைத் தோழிக்கு எடுத்துக் கூறினள். 317

26. தலைவனைத் தலைவி விளித்தல் (கூ. 1 - 26)

சிவன் செய்த சீர் அருளார் தில்லை ஊர 358

நல்லூர 392

விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுக்குடியீர் 393

27. தலைவனைத் தலைவி வைதல் (கூ. 1 - 27)

வேற்படை உடைய ஊரனைப் போலக் கள்வர் இல்லை 397

28 தலைவனைத் தோழியும் பிறரும் குறிப்பது (க. 1 - 23)

அண்ணல் அணி கற்பகம், அம்பலத்தான் சேய் கண்ணையான், அயில் வேல் உரவோன் *அரசன், அளிய அண்ணல் இவ்ஐயர், ஈர்ந்தழையன், உடல் மன் பொருந்தல் பொருந்து மனத்தவர், ஊரன், ஊருணி உற்றவர்க்கு, †எங்கள் நாகம் (யானை) எம் காவலர், எரிசேர் தளிரன்ன மேனியன், கலைக் களிற்றண்ணல், கற்றவர் நற்றுணை, கராப்பயில் பூம்புனல் ஊரன், கூத்தன் தாள் முடிக்கலராக்கு மொய் பூந்துறைவன், சேரணி, சிந்தாமணி, தில்லை ஊரன், தில்லைச் சிலம்படிக்குத் தாரணி கொன்றையன், துறைவன் தோன்றல், தென் மன்னர், பாவி பூங்கணைவேள், பெரியவர், பொருப்பன் யாவர்க்கும் ஊதியம், யானை கடிந்தார், வயலூரன் விடலை, வெற்றி வேந்தன், வேற்கை — பிற ஒளி நெறியிற் காண்க.

29. தலைவனைத் தோழி விளித்தல் (க. 1 - 29)

1. அம்பலத்து ஆடி குரைகழற் கீழ்த் தூளி நரைத்த கடர் முடியோய்.

2. எனது உயிரே அன்னள் அரும்பெறல் ஆவி அன்னாய்.

3. ஏந்தல்.

4. கயிலை பயில் சிலம்பா.

5. கல்நாட.

---

* அரசன் என்றது ஈண்டு உவமை வாசகம்

(பழைய உரைக் குறிப்பு)

†நாகம்-யானை அன்புமீதூரத் தலைவனை என் ஆனை என்று தோழி குறிக்கின்றாள்.

"என் ஆனை இறந்த இன்னமும் நான் இவ்வுயிர் கொண்டு இருக்கின்றேனே" — வில்லிபாரதம் 13ஆம் நாள் போர்.

6. தடவரைத்தண் சிலம்பா.

7. துறைவ.

8. பெரும.

9. மன்ன.

10. வைவந்த வேலவர் சூழவரத் தேர்வரும் வள்ளல். 212

— பிற ஒளிநெறியில் காண்க

30. தலைவனை நற்றாய் குறிப்பது. (சூ. 1 - 30)

ஊரன், மன்னன், வைம்மலர் வாட்படையூரன் 233

31. தலைவனைப் பரத்தையர் குறிப்பது (சூ. 1 - 31)

நம் பொற்பர் புனலூரன்.

32. தலைவன் வழியில் கண்டவர்களும் பிறரும் குறிப்பது (சூ. 1 - 32)

ஆடவன் விடலை வெங்கடத்து அக்கடமாக் கிளவனுஞ் செய்த கிழவோன்

ச. அகப்பொருட்பகுதி

2. பாங்கன்

பாங்கனும் தலைவனும் (உ - 1)

'தலைவனும் பாங்கனும்' என்னும் தலைப்பு (க - 21) பார்க்க.

3. தலைவி

1. தலைவி தலைவனை வைதல் (ங. III - 1)

தலைவனைத் தலைவி வைதல் (க - 27) பார்க்க.

2. தலைவி தன்னைக் குறிப்பதும் கூறுவதும் (ங - 2)

அரும் பாவியன்; சிறியேன்; தமியேன்; இல்லை வாழ்த்துநர் போல் தூயன்; வினையேன்;

(பிற ஒளிநெறியிற் காண்க)

தலைவியைப் பிறர் குறிப்பது

அம்சொல்; இளர்கெண்டை அன்ன நீள் செய்த கண்ணுள்; பணைத்தோளி.

3. தலைவி நற்றாயை நொந்து உரைத்தது (ங. III - 3)

பனியிடைக் கிடந்து வாடித்துயர்வாயாக என்று என்னைப் பெற்றவளை நோவதல்லது யான் யாரை நோவேன் என்று முன்பனிக்கு அஞ்சி ஆற்றாது அழிந்து பெற்ற தாயைத் தலைவி நொந்து உரைத்தாள்.

4. தலைவி நெஞ்சோடு கிளத்தல் (ங. III - 4)

[எவ்வெச் சமயங்களில் என்பது]

1. தலைவன் மடல் ஏறத் துணிந்தான் எனத் தோழி சொல்லத் தலைவி ஆற்றாதவளாகித் 'தலைவனைக் காண

வேண்டி என் மனநோய் என்னால் அறிய முடிய வில்லை. "மனமே! என் வருத்தத்தை நீயே தலைவருக்கு அறிவிப் பாயாக" என்று தலைவி தன் நெஞ்சொடு கூறினள்.

2. தலைவன் அலர் எழுந்தது என்று ஒருவழித் தணந்தபோது "கதிரவன் மறைந்தான், இம் மாலைக் காலத்து வரும் துன்பத்தைக் காக்கும் அவர் சேயரா யிருந்தார். தன்கட் புகுவார்க்குப் பின் போதரவு அறியேன்; எல்லாரும் ஏத்தத் தகுதலை உடையவன்; பயிலும் தில்லையில் பொழில்களில் உளவாகிய தம் சேக்கைகளை அன்னங்கள் அடைந்தன" (188) எனப் பொழுது போனது கண்டு தலைவி தன்னுள் வருந்தினள்.

3. கற்பு நாணினும் சிறந்தது ஆதலின் தலைவி தலைவனுடன் செல்லத் துணிந்தது

(உடன் போக்கு); (நாண் இழந்து வருந்தினது)

தன்னொடும் வளர்ந்த திருவுடைய நாணை பொருப் பர்மேல் வைத்த விருப்பம் இடையே புகுந்து தள்ள நிலை குலைந்து கற்பாகிய கடியகாற்று அலைத்துப் பிடுங்கி புறத்து எறித்தது. இனி மகளிர் எழு பிறப்பின் கண்ணும் குடியிற் பிறவாது ஒழிக என எண்ணித் தலைவனுடன் சேண் நெறி செல்லத் துணிந்தனள் தலைவி. —208.

4. தலைவன் தன்னிடம் சொல்லாது அகல தலைவி வருந்தினள்

(வரை பொருட் பிரிந்து அகலல்)

"குற்றமற்ற நெறியில் செல்கின்ற இந்த நீதி நம்மைக் கெடுக்கும் என்று நீ கருதில், நெஞ்சமே! இனி இன்புற்று வாழும் வகை வேறு யாது உளது?" என்று வருத்தத்துடன் தளர்ந்தனள் தலைவி.—272.

5. தலைவன் வரை பொருட் பிரிந்தமை கூறக் கேட்ட தலைவி, "அன்று அவரை விடாது என்னை விட்டு அவரது தேர்ப்பின் சென்ற நெஞ்சம் இன்றும் அவ்வாறு

செய்யாது என்னை வருத்துகின்றது" எனத் தன் நெஞ்சொடு வருந்தினள்.—273.

6. வெறி ஆட்டில் கூடுவது அறியாது தலைவி கவலையுற்றது

வெறி ஆட்டின் பின்னும் நிறவேறுபாடு ஒழியாதாயின் அயலார் கூறுவன என்னும்! இவ்விளர்ப்பு ஒழியுமாயின் துயரமுற்றும் அத்தலைவனுக்கு நாம் என்னாதும்; இருவாற்றானும் உயிர் வாழ்தல் அரிது என்று தலைவி வருந்தினள்.—287.

7. வெறி ஆட்டை விலக்கத் தலைவி நினைத்தல்

'இருவாற்றானும் நமக்கு உயிர் வாழும் நெறியில்லை ஆதலால் தலைவர் பொருட்டு உற்ற நோயைப பிறர் சிதைக்க விடுவதைவிட நாண் துறந்தும் வெறி விலக்குவிப்பன்' எனத் தலைவி தோழியைக் கொண்டு வெறி விலக்குவிக்க நினைத்தாள்.—288.

8. மணமுரசு கேட்ட தலைவி 'இம்முரசம் எவற்கோ அறிகின்றிலேன' என்று தன்னுள் கலக்கமுற்றனள்.
—297.

9. திருமணம் ஆன பின்பு தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தபோது கூதிர்காலம் வரவு கண்ட தலைவி, "துணையில்லாதாரைத் தேடும புயலினங்கள் நமக்கே அன்றித் தம்மை யடைந்தார்க்கு உதவி செய்யச் சென்றார்க்கும் சென்று பொருந்துமோ? பொருந்துமாயின், நம்மை நினைந்து ஆறுராய, அவ்வினை முடிக்க மாட்டார்" எனக் கவலையுற்றாள்.—319.

10. திருமணம் ஆன பின்பு தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தபோது, இளவேனில் முன்னுவது கண்டு "இக் குயில்கள் மாம்பொழிலைச் சுற்றும் வந்து பற்றின. இனி உயிர் வாழுமாறு ஒன்றும் கண்டிலேன்" என்று தலைவி இன்னல் எய்தினள்.—323.

11. பொருள் தரப் பிரியும் தலைவன் எனத் தோழி கூறத் தலைவி வருந்தியது

(பொருள் வயிற் பிரிவு)

"இத் தோழியாகிய கொடியவள், அன்பர் பிரிவர் எனக் குவளைப்பூ எறிதற்கு வாளுறை கழித்தாற் போலக் கூறினாள்; இதற்கு யான் கூறுவதுண்டோ?" எனத் தன்னுள் புலம்பினள் தலைவி.—334.

12. தன்னிடம் உணர்த்தாது தலைவர் பொருள் வேண்டிப் பிரிந்தார் என்று தலைவி வாடியது

'இவர் பிரியார் என யான் அவர் பிரிவு இகழ்ந்திருந்தேன். முன்னின்று பிரிவுணர்த்தின் இவள் உயிர் தரியாள் என்று அவர் உணர்த்துதலை இகழ்ந்து போனார்; அத் தன்மையவாகிய இரண்டிகழ்ச்சியும் என்னை இத் தன்மைத்தாக அழிவியா நின்றன' எனத் தலைவி இகழ்ச்சி நினைந்து மனம் அழிந்தனள்.—340.

13. தலைவன் தன்னைவிட்டுப் பரத்தையர்மாட்டுப் பிரிந்த கொள்கையை நினைத்துத் தலைவி வாடினது

எழிலை உடைய தனது நலத்தைத் தலைவன் கவர்ந்து கொள்ள, வேறு துணையின்றித் தனது மெல்லணையே தமக்குத் துணையாக ஆருயிர் தேயும் மகளிர் யான் அல்லாது பிறர் யாரோ? என்று தலைவி நினைத்து வாடினள்.—354.

14. உலகியல் ஆகிய செவ்வணியைத் தலைவன் அறியச் செலவிடுவதாக நினைத்த தகுதி உடைய தலைவி வருந்தியது

பரத்தையர் சேரியினின்றும் ஒருத்தி நம் தலைவனை நமக்குத்தர நாம் அவரை எய்தி அணையும்படி ஆயிற்று நம் பெண்தன்மை எனத் தலைவி வருந்தினள்.—360.

5. தலைவி பரத்தையரைக் குறிப்பது (ரு - 5)

1. ஆங்கொருத்தி.
2. இளையார்.

3. பரத்தைத் தலைவி தன்னைத் தானே வியந்து கூறினளென்று கேட்ட தலைவி எங்கைச்சியார் தமக்கு ஒரு தங்கைச்சியார் தோன்றின பொழுதே தம் இருமாப்பு ஒழியத் தம்முடைய முலைகளினது இருமாப்பும் ஒழியப் புகாநின்றது. இதனை அறியாது தம்மைத் தாம் வியக்கின்றது என்னோ எனப் பரத்தையை நோக்கித் தலைவி நகைத்துக் கூறினள்.—373.

4. எங்கை.

5. என் எங்கை.

6. ஓர் பந்தார் விரலி.

7. தில்லை நகர் வாய் வேல் தாள் திகழ் கண் இளையார்.—390.

8. தில்லை நல்லார்.

9. புலியூர் அன்ன காரிகை —
பிற ஒளிநெறியிற் காண்க.

6. தலைவன் பிரிந்த நிலையில் (திருமணத்திற்கு முன்பு) தலைவி புன்னையொடு புலந்து அன்னமோ டாய்தல் (௩. III - 6)

தலைவன் ஒருவழித் தணந்தபோது தலைவி புன்னை யொடு புலந்து "அன்னமே! புன்னை தலைவரைப்பற்றி ஒன்றும் சொல்லுகின்றதில்லை. அகன்றவர் அகன்றே யொழிவரோ? நீயாயினும் சொல்க" என அன்னமோ டாய்ந்து வாடிக் கேட்டாள்.

7. தலைவி வர்ணனை (௩. III - 7)

அம்பலம்போல ஒளியை உடையவள் தலைவி; கமலத்த வளை (இலக்குமியை) தனது அவயவங்களின் அழகால் பயங்கரமாக ஆண்டவள். கயிலைமலைத் தேன் போன்றவள். அம்பலத்து இறைவன் வீற்றிருக்கும் இடைமருது, ஏகம்பம், வாஞ்சியம் போன்றவள். அழகிய மதிலையும்,

பொழிலையும் கொண்ட திருப்பூவணம் போன்றவள்; காழி அன்னவள், தில்லை அனனவள், தென்கூடல் அன்னவள், மூவல் அன்னவள், வெண்காடு அன்னவள், சிற்றம்பலம் அன்னவள், வடிவு வளரும் காமனுடைய வெற்றிக் கொடி போல விளங்குபவள். வில்போல் வளைந்த நுதலை உடைய தலைவிக்கு ஏழு உலகமும் விலையாக மாட்டாது. சித்திரம் போன்ற பொறகொழுந்து.

அமுது போன்ற சொற்களை உடையவள். தில்லை போன்று, வார்த்தையால் குயிலை ஒத்து, கொவ்வைக்கனி போன்ற வாயிலே மதுரமாகிய முத்தை நிரைத்துக், கூரிதாகிய அழகிய வேலினைக் கமலத்தின் மேலே கிடத்தி, அன்னம் போல் நடக்கிற சாயலால் மயிலை ஒப்பாள். பெரிய சிலைகளும், சிவந்த கொவ்வைக் கனியும், வெள்ளிய முத்துக்களும் ஒரு திங்களின்கண் வாய்ப்ப வண்டுகள் தங்கும் கொடி போன்றவள். யாழ் கற்ற மென் மொழியாள், (மென் மொழியை யாழ் இவளிடம் கற்றது. யாழ் போன்ற மென் மொழியாள்.) மயில் போலப் புடை பெயர்ந்து, இளைய கொடி போல நுடங்கி மெல்லிய மான் போல விழித்துக் குயில்போலப் பேசுபவள்.

8. தலைவி வருந்தல் (கடலொடு) (கூ. III - 8)

1. இரவெல்லாம் என்னைப் போல நீயும் துன்பமுற்றுக் கலங்கித் தெளிகின்றிலை; இவ்விடத்து நின்னையு மகன்று சென்றருளரோ எனத் தான் உறுதுயரம் கடலொடு கூறி வருந்தினள்.

2. அம்பர் என்னும் தலத்தைச் சுற்றி முழங்கும் கடலே! தலைவர் தாம் மீண்டு வரும் பரிசு உனக்குக் கூறினரோ? எனத் தலைவி தலைவனுடைய வரவு பற்றிக் கேட்டு நின்றாள். "என் வளை கொண்டு போன தலைவருடைய திறத்தைப்பற்றி நான் கேட்க நீ கூறாது ஒழிகின்றதேன்?" என்று பின்னும் அக்கடலோடு புலந்து கூறினள் தலைவி.

3. உலகெல்லாம் துயில்கின்ற இந்நிலையில் நான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச் சென்று அவர்க்கு (தலைவருக்கு)ச் சொல்லாது தான் தன் சேவலைப் பொருந்திக் கவற்சியின்றித் துயிலாநின்றது என அன்னத்தோடு அழிந்து கூறினள்

4. அன்னத்தொடு வரவு கேட்ட தலைவி அதுவும் வாய் திறவாமையின், 'இனி யவர் வருகின்றார் அல்லர்; எம் உயிர்க்குப் பற்றுக்கோடு இனி இதுவே; இதனை நீ அழியாது ஒழிவாய்' என அவன் சென்ற தேர்வழி நோக்கிக் கடலோடு கூறினாள்.

5. இரவுக் குறியில் தலைவன் வாராதது கண்டு தலைவி வருந்திச் சந்திரனை நோக்கி, 'இப்புன்னையிடத்து என்னைக் கவர்ந்த கள்வர் (தலைவர்) வரக் கண்டிலையோ? துணையில்லாத எனக்கு ஒரு சொல் அருளாய்' என்று தன் வருத்தத்தைக் கூறித் தலைவி வருந்தினள்.

6. தோழி தலைவியின் நிலைமையைத் தலைவன் வரவு உணர்ந்து சிறைப்புறமாகச் சந்திரனை நோக்கி "வளை கிற்கின்றன இல்லை, நெஞ்சு நெகிழ்ந்து உருகுகின்றது. கண்கள் துயில் இன்றிக் கலுழாநிற்கின்றன. இவை யெல்லாம் நீயே காண்பாய். இதனைச் சென்று தலைவர்க்குச் சொல்வாயாக" என்று தோழி கூறி வேண்டினள்.

(சிறைப்புறமாக)

9. தலைவிக்குக் காப்பு அணிந்து, பொன் அணிதல் (௩. III-9)

பழைத்து மொழியான் மகட்பேசல் கூறின தோழி.

"முரசொடு பணில முழங்கத் தலைவிக்குக் காப்பணிந்து பொன்னணியப் புகுதாநின்றார். இனி நின் கருத்து என்னை?" என அயலவர் பொன் அணிதலைப் பற்றித் தலைவருக்கு உரைத்தனள்—196.

10. தலைவியிடம் தோழி கூறுதல் (சூ. III - 10)

1. ஒருவர் வந்து யாதும் சொல்லார். யாது செய்யத் தக்கது என்று தெரியவில்லை எனத் தோழி தலைவியின் குறிப்பு அறிய வேண்டிக் கூறினள்.—82.

2. ஒரு பெரியோன் தன் குறை இன்னதென்று சொல்லாமல் இருக்கின்றான். இது என்ன மாயங் கொல்லோ? இப்புனத்தை விட்டுப் பிரியான் என்று தோழி தலைவியிடம் கூறினள்.—83.

3. ஓர் ஆண் நண்டு பெண் நண்டுக்கு நாவல் பழங் கொடுப்பதைப் பார்த்துப் பேய் கண்டாற் போலத் தலைவன் நின்றான், நீ அக் காட்சியைக் கண்டால் வாழ்வது அரிது.
—84.

4. யானையைக் கடிந்து நம்மைக் காத்தவர் கையி லுள்ள தழை துவளாமல் நாம் தலைவனுடைய குறையை முடிக்க வேண்டும்.—112.

5. தழையை ஏற்றால் நமக்குப் பழிவரும்: ஏற்கா விட்டால் தலைவர் மடல் ஏறுவார். ஆதலால் தழையை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று தோழி வகுத்துக் கூறினள்.—113.

6. நாமும் போய் மயிலாடல் காண்போம் என்று கூறிக் குறியிடத்துச் செல்வாள் ஆயினள் தோழி.—118.

7. யாம் புனத்தின்கட் போய் விளையாடுவோம் போதுவாயாக எனத் தோழி தலைவியை ஆயத்தோடு கொண்டு செல்லுதல்.—117.

8. 'இங்கே நின்று பூக் கொய்வாயாக' என்று தலைவியைக் குறியிடத்து உய்த்துத் தோழி தான் நீங்கா நின்றாள்.
—119.

9. நின் குழற்குப் பூக்கொண்டு வந்தேன். நீ விரல் வருந்த மொட்டுகளைப் பறிக்க வேண்டா என்று' தோழி தலைவியிடம் கூறினாள்.—125.

10. 'கொய்து வந்த மலரைத் தலைவியின் குழலுக்கு அணிந்து இனி நீ செல்வாயாக' எனத் தோழி தலைவியைக் கொண்டு ஆடிடம் சென்றனள்.—126.

11. இவ் வேங்கை அரும்பிய ஞான்றே அரும்பறக் கொய்தேமாயின் இன்று நம்மைக் கெடுப்பான் வேண்டி இத் தினை கெட முயலுமாறு இல்லையென்று தோழி வேங்கையொடு வெறுத்துக் கூறியது.—141.

12. தலைவன் ஆற்றான் என்று கொண்டு இரவினில் குறையை இசைவித்து இரவுக்குறி ஏற்பித்தது.—155.

13. தோழி, தலைவிக்கு, தலைவன் இரவு வரவு கூறினள்.—156.

14. ஊசலை யானை அழித்துவிட்டது என்று தோழி தலைவிக்குக் கூறித் தாயின் துயிலை அறிந்தது.—161.

15. பொழுது விடியுமட்டும் அன்னம் துயிலவில்லை என்று குறிப்பாகத் தோழி தலைவி தூங்காமையைத் தலைவன் கேட்கச் சிறைப்புறத்து உரைத்தனள்.—172.

16. அரும் சுரத்திற்குத் தலைவன் போகைக்குக் காரணம் இன்னதென்று தோழி தலைவிக்குக் கூறித் தலைவனுடைய போக்கை அறிவித்தனள்.—207.

17. நீயாகிலுஞ் சென்று கூறு என்பது குறிப்பால் தோன்றத் தலைவன் வரைவு உடம்படாமையைத் தோழி தலைவிக்குக் கூறினள்.—263.

18. நம்மவர் கேட்ட நிதியைத் தேடிக் கொண்டு வந்து உன்னை வரைந்து கொள்ளத் தலைவன் காட்டுக்குச் சென்றான் என்று தோழி தலைவனுடைய பிரிவைத் தலைவிக்குக் கூறினள் —271.

19. தலைவி வருந்துதலைக் கண்ட தோழி "தலைவர் விரைய வருவர். நீ கவலையுறாதே" என்று தலைவிக்குக் கூறினள்.—274.

20. தலைவியின் வருத்தம் கண்ட தோழி, "இவ் வேறுபாடு வந்தவாறு என்னோ? என்று அயலவர் ஐயுறு கிற்பர். ஆதலால் நீ ஆற்றவேண்டும்" என்று கூறித் தலைவியை வற்புறுத்தினள்.—275.

21. 'நம்மவர் தினைக்கதிர் காரணமாகக் கடவுளைப் பரவ; அக்கடவுளின் ஆணையால் காலம் அன்றியும் கார் நீரைச் சொரிய, அதனை அறியாமல் காலம் என்று காந்தள் மலர்ந்தது, நீ அதனைக் கண்டு காலம் என்று கனவு கண்டாய், கலங்க வேண்டா,' எனத் தோழி காலம் மறைத்துத் தலைவியை ஆற்றுவித்தாள்.—(279.

22. ஒரு தூது வரத் தோழி கண்டு தலைவிக்கு உரைத்தது.—280.

23. தோழி தலைவிக்கு மகிழ்வோடு தேர் வரவு எடுத்துக் கூறினள்.—295.

24. வரைவு தோன்ற மகிழ்வுறுக, இனி மணமுரசு திகழும், முருகியம் நீங்கும் என்று தோழி தலைவிக்கு உரைத்தனள்.—299.

25. சிவன் திருவடிக்கே அன்பு உற்றோருடைய நன்மை யைக் கல்வி தரும் என்று கருதி, கல்வி காரணமாகத் தலைவர் பிரியாநின்றார் என்று தோழி தலைவிக்குக் கூறினள்.—309.

26. தலைவன் காவற்குப் பிரியக் கருதியதைத் தோழி தலைவிக்கு அறிவித்தாள்.—312.

27. இருவேந்தர் பகை தணிப்பத் தலைவன் தூது செல்லுதலை (சந்து செய்தல்) தோழி தலைவியிடம் கூறினள்.—314.

28. "தலைவர் உன்னை விட்டுப் பிரியார். அவர் போக்குப் பொய்; அஞ்சல்" என்று கூறித் தலைவியின் வருத்தத்தைத் தோழி தணிவித்தாள்.—315.

29. வேந்தற்கு உற்றுழி தலைவனுடைய பிரிவைப் பற்றித் தோழி தலைவிக்குக் கூறினள்.—316.

30. கார் வரும் எனக் கலங்கின தலைவிக்குத் தலைவனுடைய தேர்வரும் என்று பருவம் காட்டித் தோழி தெளிவித்தாள்.—323.

31. கார்காலம் வந்ததென்று கலங்கின தலைவிக்குச் சிவன் நடமாட முழவம் முழங்கிற்று, இது கார்ப்பருவம் அன்று என்று தோழி தலைவிக்குக் கூறினள்.—324.

32. தலைவியின் கலக்கம் தீரத் தோழி தலைவனுடைய தேர்வரவு கூறினள்.

(பகைத்த மன்னரைப் பொருந்த வைத்த பின்னர்)
—326.

33. தன்னைப் பணிந்தோர் திறையும் பகைத்தவர் சின்னமுங் கொண்டு வந்த தலைவனுடைய வரவைத் தலைவிக்குத் தோழி கூறினள்.—330.

34. பொருள் தேடத் தலைவன் நினைக்கின்றான் என்று தோழி தலைவிக்குக் கூறினள்.—333.

35. "தலைவன் நினைவு பொருள் மேல் இருந்தது. ஆதலால் பொருள் வயிற் பிரிவர். நாம் சொல்லுவது ஒன்று உண்டோ?" என்று தோழி தலைவிக்குக் கூறினள்.
—337.

36. "உன் எதிரில் பிரிந்தால், நீ வாடுவை என்று உன்னிடம் சொல்லாமல் தலைவன் பொருள் கொண்டு வரப் போயினன்" என்று தோழி தலைவிக்குக் கூறினள்.—338.

37. "அருக்கனது தேர் வருதல் யாண்டையது? இவள் ஆற்றுதல் யாண்டையது?" என அவள் (தலைவியின்) இரவுறு துயரத்திற்குத் தோழி இரக்கமுற்றுக் கூறினள்.—339.

38. "தேடப்பட்ட பொருளோடே தலைவனுடைய தேர் வந்து சேர்ந்தது. வரக்கடவதனை வெல்லுமாறு

இல்லையே போலும்" என்று தோழி தலைவிக்குத் தேர் வரவு கூறினள்.—349.

39. நெஞ்சு உடைந்து புறத்தே வெளிப்படாமல் தலைவி பொறுத்தமை கண்ட தோழி தலைவியின் பெரும் பொறையைக் கண்டு உவந்து உரைத்தனள்.—353.

40. தலைவனைப் பரத்தையர் வசம் புனல் ஆடவிட்டு, சூடுவார் இன்றி செப்பில் அடைத்துவைத்த பூப்போல்வாள் தலைவி; "இது தலைவனுக்குத் தகாத பழியாம் எனக் கருதி, நாணி, அதை மறைத்து இருந்தமை கண்ட தோழி, "இவளது கற்பும் நலனும் நல்லபகுதியை உடையனவாய் இருந்தன" என்று தலைவியின் நலத்தை மிகுத்துக் கூறினள்.
—374.

41. "தலைவனை இங்கு இல்லாது நாம் தனியாக இருப்பதை அறியாமல் விறலியும் பாணனும் நம் தலைவனுக்குத் துயில்எழுமங்கலம் பாட வந்து நின்றார்," எனத் தோழி பாணன் வரவைத் தலைவிக்குக் கூறினள்.—375.

42. அன்று நம் புனத்தின்கண் வந்து யானை கடிந்தவர் இன்று நம் வாயிற்கண் வந்து வாயில் பெறாது வாய் திறவாது நிற்கின்றனர். இதற்கு யாம் என்ன செய்வது என்று தோழி தலைவியை வாயில் வேண்டினள்.—383.

43 'நம்முடைய தோன்றலை (பிள்ளையை)த் தனக்குத் துணையாகக் கொண்டு வந்து தோன்றுதலால், உன் கவலையை ஒழித்து நம் தலைவனுக்குக் குற்றேவல் செய்வாயாக' என்று கூறித் தோழி தலைவியின் ஊடலைத் தணிவித்தாள்.—389.

44. பரத்தையைக் கண்டமை கூறி, புலந்து வேறுபட்ட தலைவிக்குத் தலைவன் கார், கற்பகம், கற்றவர் நற்றுணை, பாணர் ஒக்கல், சீரணி சிந்தாமணி, தில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன், தக்கோர் தம் சங்கநிதி, விதி, ஊருணி உற்றவர்க்கு என இத்தன்மையனாய் யாவர்க்கும் ஊதியமாகலின், அன்பானன்றி, அருளால் பரத்தை

யார்க்கும் தலையளி செய்ய வேண்டுமன்றே; புறப் பெண்டிரைப் போல யாம் அவனோடு புலக்கற்பாலேம் அல்லேம்; அவன்வரும் பொழுது எதிர்தொழுதும் போம்பொழுது புறந்தொழுதும் புதல்வனைப் பயந்திருக்கை அன்றோ நமக்குக் கடனாவது, எனத் தோழி தலைமகனது ஊதியம் எடுத்து உரைத்து அவளை (தலைவியை) ஊடல் தீர்த்து அவனோடு பொருந்தப் பண்ணினள்.

11. தலைவியின் அணிகலன்களும் ஆடையும்

1. அணிகலன் : ஆரம் (முத்துவடம்) ... *59*; குழை *15*; சிலம்பு - *228*; தொடி (பொற்றொடி) - *277*; நூபுரம் - *246*; கதிர்மாமணி - (நீலமணி) *38* புரைசந்த மேகலை ... *299*; வடம் *120*; பல்வளை - *4*.

2. ஆடை : செம்பட்டு - *246* ; பிற ஒளிநெறியிற் காணலாகும்.

12. தலைவியின் அவயவ வர்ணனை

1. அடி : அடிபூ, அனிச்சம் திகழும் அம்சீறடி, சிலம்படி, பொன்அடி, அனிச்சப்பூப் போலும் சீறடி, தவிசில் மிதிக்கினும் பதைத்துக் கொப்புள் கொள்ளும் சீறடி, செம்பஞ்சியின் மிதிக்கினும் பதைக்கும் மலரடி, அவனது அடி ஒத்தது, வினையினேன் பெற்றமானின் கால்மலர்.

2. அல்குல் : அரவம் புரையும் அல்குல், கலைக்கீழ் அகல் அல்குல், பொன்னிற அல்குல், பைதயங்கும் அரவம் புரையும் அல்குல், புணருந்தோறும் பெரும் போகம் புரியும் அல்குல்.

3. அழகு : பேரழகு

4. இடை : முலையைச் சுமந்து தேயும் இடை, கொடி இடை, சிற்றிடை, சிறுகால் மருங்குல், (கால் = இடம்); சுருங்கு•மருங்குல், தளர் மருங்குல், துடி, இடை, தேம்பல் இடை, நடுங்குமின், நுண் இடை, நூல் ஒத்த நேரிடை,

நடுங்காதவனை நடுங்க நுடங்கும் நடு, புற்றரவு இடை, பொய்போலிடை, மின் தங்கு இடை, மின்னும் பணியும் புரை மருங்குல், வஞ்சி அஞ்சும் இடை, வள்ளி மருங்குல்.

5 இயல்: பூங்கொடி, வல்லி மெல்லியல்,

6. உருவம்: தாமரை போலும் முகம், காவிமலர் போலும் கண்கள், குமிழம் பூப் போலும் மூக்கு, கோங்கு போலும் முலை, காந்தள் போலும் கரங்கள், அன்னம் போலும் நடை இவை தமைக் கொண்டு, தெய்வமணங் கமழும் மாலை ஒரு கொடி போல் நுடங்கிக் காமனுடைய வெற்றிக் கொடி போன்று செங்கனி போன்ற, வாயும், பூண் அணிந்த முலையும், கொண்டு தோன்றும் ஓர் கொடி.

7. கண்: அயிற்கண், அரிக்கண், இரும்கண், இணை மலர்க்கண், கயற்கண், கருங்கண், காவியங்கண், குவளைக் கண், கெண்டையங்கண், தடங்கண், நெடுங்கண், படைக் கண், புனறூர்கண், மலர்க்கண், மா இயன்றன்ன மென் நோக்கு, மாழை மென்நோக்கு, மான்விழி, வடிக்கண், வாட் கண், வாம்பிணை, வேற்கண் எனவும்,

சிவபிரான் திருக்கரத்திலுள்ள மானைக் கண்டவுடன் பிணைவுக்கு வரு மென் நோக்கம் எனவும். தலைவியின் கண் ணுக்கு அஞ்சி அம்பு ஆவத்தில் புகும் எனவும். கமல மலர் மீது (முகத்தின் மேல்) கயல் உள்ளது. (கண் இருக்கின் றது) எனவும், காவியங்கண் (குளிர்ந்தகண்) கழுநீரின் செல் வியையும், கோபத்தால் சிவப்பு நிறத்தைக் கொண்ட கண் செந்தாமரை போன்றது எனவும், சிறியமான் கண் போல் விழி, செவி வரைக்கும் நீண்ட விழி, மாவடு போலும் விழி வித்தகம் சேர் மெல் என் நோக்கம், வேல் போன்ற கண், - எனவும், கண் வர்ணிக்கப்பட்டுள்ளது. இதன் விரிவு ஒளி நெறியிற் காணலாம்.

கண் வர்ணனை.

1. அகலம்: ஈசன் பால் (தான்) தலைவன வைத் அன்ன அன்பு எவ்வளவு அகன்றதோ அவ்வளவு அகற்சி உடையது தலைவியின் கண்.

2. கருமை: பெருமானால் தன்னிடமிருந்து (தலைவனிடம்) நீக்கப்பட்ட பாசம் எவ்வளவு கரியதோ அவ்வளவு கருமை உள்ளது தலைவியின் கண்.

3. ஒளி: பெருமானுடைய தில்லை எவ்வளவு ஒளி பொருந்தியதோ அவ்வளவு ஒளியைக் கொண்டது தலைவியின் கண்.

4. வெண்மை: பெருமான் தோளில் பூசியுள்ள திருநீறு எவ்வளவு வெண்மை கொண்டதோ அவ்வளவு வெண்மை கொண்டது தலைவியின் கண்.

5. நீளம்: பெருமானுடைய திருவடியின் பெருமையை நாங்கள் (அடியார்கள்) பேசப்புகும் வார்த்தைகள் எவ்வளவு நீட்சி உள்ளதோ அவ்வளவு நீட்சி உள்ளது தலைவியின் பெருங்கண்கள்.

6. *செம்மை: பெருமான் தோளில் பூசத் திருநீறு என்ற அதனால் சிவப்பும் சொல்வதாயிற்று. என்னனில் பெருமான் தோள் செந்நிறமுடையதாதலின்.

*கண்ணுக்கு இயல்பு

7. கண் வர்ணனை

(1) கோபக்கண்: தழல், வேல், நெருப்பு வீசும் வேல் போன்று செங்கழுநீர் போல் சிவந்துள்ளது.

(2) சாந்தக்கண்: கோபமாக இருந்தகண் விருந்து வந்தது என்று தெரிந்தவுடன் செந்நிறம் மாறி கருங்குவளை போன்ற குளிர்ச்சியைப் பெற்றது.

8. கரம்: செந்நிறத்தது, மெல்லிய காந்தள் மலர் போன்றது.

9. குழல்: குழல் நீண்டது கருமணலின் நிறத்தது; இருள் நிறத்தது, வண்டு மொய்க்கும் வாசனை மலர்களைக்

---

*கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின், வெண்மை, கருமை, செம்மை, அகலம், நீளம், ஒளி, என விளம்புவர் புலவர்.

சூடியது; பலபளப் புடையது, குராமலரைச் சூடியது; கோங்க மலர், வேங்கை மலர், இவையுடன் தேன் உள்ள பாதிரிப் பூவையும் கலந்து தலைவிக்குச் சூட்டுவதாகத் தலைவன் நினையா நின்றான். குழல் கொன்றைப் பழத்தை ஒத்தது. சுருண்டுள்ளது, தாழ்ந்து தாங்குவது, பலவிதப் பூக்களை அணிந்துள்ளது. புலியூரை அண்மி வணங்காத மனம்போல் இருளைக் கொண்டது; மணம் வீசுவது, நன் மணத்தையும் நெய்ப்பையு முடையது.

10. **கொங்கை :** பூசப்படுவன ஆகிய சந்தனம்' குங்குமம் நெருங்கி, அமிர்தத்தை உள்ளடக்கி நெய்த்த திறமுடைய சுணங்கான பொற்பொடி சிதறியுள்ளன. கொங்கைகள்; அம்பலவரிடத்தில் உள்ள பக்தி பெருகினர் போலப் பருத்துள்ளது கொங்கை, ஆரம் இலங்குவது, இணைந்துள்ளது, தளர்தல் இல்லாதது, கோங்க அரும்பு போன்றது, இனிமை உள்ள கரும்பும், அமிர்தமும் செழுந்தேனும் உள்ளடக்கியது, செப்பையும் கோங்கரும்பையும் வென்று தன்னையும் (தலைவனையும்) ஆட்கொண்டது (தலைவியின் கொங்கை), அணிகளுடன் விளங்குவது, இடை நெருங்கும்படி பெருக்கின்றது கொங்கை.

11. **சாயல் :** இளங்கொடி, சீர்ங்கொடி, கார்மயில், பூங்கொடி போன்றது சாயல்.

12. **செவி :** நூல்களைக் கற்க அன்பர் விரும்பினர் என்று தோழி சொல்ல, அச்செய்தி தலைவியின் செவியில் வேல் பாய்ந்தது போலச் சென்று எய்தியது.

13. **தோள் :** ஒலி செயகின்ற மூங்கில்கள் தலைவியின் தோளுக்குத் தோற்று நல்ல முத்துக்களை உகுக்கின்றன. (சிந்துகின்றன), பெரிது வளர்ந்த வேயினை (மூங்கிலை) ஒத்தது தோள்.

14. **நடை :** அன்னநடை, மயில் போன்ற நடை கூறப்பட்டுள.

15. நுதல் : ஒள்ளியது, சிறியது பொட்டு அணிக் கால் இடை தாங்காது என்று பொட்டு அணிவதில்லை. ஒண்ணுதல், சிறுநுதல், திருநுதல், நன்னுதல், மதிநுதல், வாணுதல், வில்குலாநுதல் — கூறப்பட்டுள.

16. பல் : முத்துப் போன்று பவளம் போன்ற வாயில் உள்ளது. கூரியது, ஒளி பொருந்திய வெண் முத்துப் போன்றது.

17. புருவம் : வில் போல் வளைந்துள்ளது.

18. முகம் : ஒளிமுகம், திருவளர் தாமரைபோன்றது, திங்கள் போன்றது, முகம் ஆகிய மடுவில் பைந்தாளை உடைய குவளைப் பூக்கள் மலர்ந்துள்ளன:

19. மூக்கு : நல்ல நிறமுள்ள குமிழ்பூப் போன்றது.

20. மேனி : ஈசனுடைய அம்பலம் போன்றது.

21. மொழி : குதலைச்சின் மழலை, கிள்ளை அன்ன மொழி, யாழேர் மொழி, குயில் மொழி, குழல் மொழி, நத்தைக் கிளவி, தூமொழி, தேமொழி, தேனமர் சொல்லி, பண்ணீர் மொழி, பண்ணுமையா மொழி, பணி மொழி, மென்மொழி, — கூறப்பட்டுள்ளன. பிற ஒளி நெறியிற் காணலாம்.

22. வாய் : கனித் தொண்டை வாய், கனிவாய், கனிபவளம், கொவ்வைச் செவ்வாய், கோபம் (இந்திர கோபம்) செங்கனி, செவ்வாய், தீங்கனி, மணி வாய், வாய் பவளம், — கூறப்பட்டுள.

வாய் ஊறல் :— கதிர் கொள் முத்தம், கிலவி, கிறைமது (தேன்) கிறைந்தது.

23. விரல் : மெல்லியது, காந்தள் பூப் போன்றது.

24. அவயவம் : (பொது) கமலத்தில் வீற்றிருக்கும் இலக்குமியின் அவயவங்களை, பயங்கரமாக ஆண்டுள்ளது தலைவியின் அவயங்கள்.

25 பருவம் : குணம், குற்றம் இன்னதெனக் கொள்ள அறியாத பருவம்.

26. மனம் : வன் மனம்.

13, 14. தலைவியின் இருப்பிடம் ஊர் வீடு இடம் யார்க்கு உரியது. உற்றார், உறவினர் முதலிய விவரங்கள் (கு. III – 13, 14)

தலைவி இருந்த இடம் அவள் தந்தைக்குச் சொந்தமானது; அவள் உற்றார் குறவர். அவளைப் பெற்றாளும் கொடிச்சி; பொதிகை மலையில் ஒரு சிற்றில் அவளது இல்லம்; சிற்றம்பலவனுடைய கயிலை மலையில் அவளுடைய சிற்றில் உள்ளது; தேன் உந்து மாமலையில் சீறூர் அவளுடைய ஊர். அந்த ஊருக்குப் போகும் வழி விசும்பினுக்கு ஏணி போட்டது போல் ஏறற்கு அரிதான சிறுவழி. அவளுடைய ஊரார் பொதியமலைச் சந்தனத்தை அணிவர். வேங்கை மரநிழலில் விளையாடுவர்.

தலைவியின் தந்தை முதலியோர் (ஐயன் மார்) மிக்க மூர்க்கர், (கடியர்) மலை நாட்டினர், மிக்க வீரம் உள்ளவர் யானையின் மீது அம்பு எய்வார்களாயின் எய்யும்கணை யானை முகத்தை உருவி மண்ணின்கட் புகும். அவர்களுடைய சிறுவர்கள் கவண் எறிந்தால் பெருந்தேன் இழும் என்று கழிவுற்றுச் சிறு குடிலிற் பாயும்.

நிழல்

ஊர், ஊரிலுள்ளவர், விளையாடும் மெல்லிய மர நிழல் எத்தன்மையது? இராப்பொழுதில் அவர் விளையாடுவது எந்த நல்ல மர நிழலில்? என அவரவர் ஊரைப் பற்றித் தோழியும் தலைவனும் ஒருவர்க்கொருவர் வினவிகிறகின்றனர்.

விரை

உன் ஊரிடத்தார் பூசும் வாசனைப் பொருள் எது என்று தலை மகனைத் தோழி வினவினள். அதற்குத்

தலைமகன் நின்னோரிடத்தே நும்மவர் எந்தச் சாந்தை அணிவார் என வினவினன். தோழி 'நாங்கள் பொதியின் மலையிற் பொலியும் சந்தனச் சாந்தை அணிவோம்' எனக் கூறினாள்.

15. தலைவியின் ஊடலும், தலைவனும் (௩. III- 15) தலைவன் பரத்தையரிடம் சென்றமை அறிந்த தலைவியின் பொறுமை

1. தலைவி நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாமற் பொறுத்தமை கண்ட தோழி, "தான் இவ்வாறாகவும் கலங்காது நின்ற பெரும் பொறை யாட்டியை யான் இன்று எவ்வாறு புகழ்வேன்" எனத் தலைவியை வியந்து கூறினள்.

2. தனது பொறுமையை வியந்து கூறிய தோழிக்குத் தமது நலங் கவரக் கொடுத்து வேறு துணை இன்மையின் "தமது அணையையே தமக்குத் துணையாகக் கொண்டு கிடந்து என்னைப்போல் உயிர் தேய்வார் இனி யாவரோ" எனக் கூறித் தலைவி வாடினள்.

3. தலைவன் கொடுமையை அங்ஙனம் தோழியிடம் கூறி வாடிய தலைவி, "கனவிடை வந்து தலைவன் மார்பு தரத் தான் அதனை நனவென்று நினைத்து, புலந்து தலைவனோடு புணராது இருந்தமையைக் கூறிக் கனவு இழந்தமையைத் தெரிவித்து வருந்தினள்.

4. கனவு இழந்தமையைக் கூறி வருந்திய தலைவி, "நீயாயினும் கலந்தவர்க்குப் பொய்ம் முகங்காட்டிக் காத்தல் பொருத்தம் அன்று என்றிலையே" என விளக்கொடு வெறுத்துக் கூறினள்.

5. இங்ஙனம் விளக்கொடு வருந்திய தலைவி தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்து வாயிலில் நிற்கக் கண்டு அனையர் ஆடவர், பூ அனையர் மகளிர் ஆதலால் தலைவனை ஏற்றுக் கொள்" என்று வாயிலவர் கூறத் தலைவனுடைய மாலையும் தோளும் அவனை வேண்டுநர்

கொள்ள அமையும். நான் தலைவனைப் பரத்தையர்க்கு உருவரையாகக் கொடுத்தேன். எனத் தலைவி வாயில் மறுத்துக் கூறினள்.

6. அங்ஙனம் வாயில் மறுத்த தலைவி, ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத் தானாகிய தலைவனோடு, "நின்னை நோவதென்னோ? நின் காதலியார் நினக்குப் புதிதாகச் செய்த அப்புல்லுதலை யாஞ் செய்ய மாட்டோம். அதனால் எம் கலையை விடுவாயாக" என்று கூறிப் பள்ளியிடத்து ஊடினள்.

7. ஒருத்தி நமக்குத் தர நாம் அவனை எய்தும்படி ஆயிற்று. நம்முடைய பெண் தன்மை என; அயலறிவுரைத்துத் தலைவி அழுக்கமுற்றுக் கூறினள்.

8. பரத்தையிற் பிரிந்த தலைவன் செவ்வணி கண்டு வந்தானென்று சொல்லும் அளவில் தலைவி கண்கள் சிவந்தன. அப்புலவி நோக்கத்து எதிர் காதலன் நோக்க அச்சிவப்பு ஆறி முகம் மலர்ந்தமையை அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூறினர்.

9. "கங்குற் பொழுதானும், அந்திப் பிறையானும் ஆற்றாளாய்ப் புகுதரா நின்றான் தலைவன்; இனி நீ புலக்கற்பாலை அல்லை" எனத் தலைவிக்கு உழையர் கூறினர். 364

10. தலைமகன் பூப்பு நிகழ்ந்த கிழத்தியைப் புலவி தீர்த்து இன்புறப் பண்ணி எய்தலுற்று மகிழ்ந்தமையை அவ்விடத்துள்ளவர் எடுத்துக் கூறினர்.

11. புலவி தீர்ந்து இன்புறப் புணரப்பட்ட தலைமகள் இவ்வாறு அருளும் அருள் பிறர்க்கும் ஆம் என உட்கொண்டு பொருமி அழுது பின்னும் அவனோடு கலவி கருதிப் புலந்தனள். 366

12. புலவி தீர்ந்து தானும் அவனுமாய்ப் பள்ளியிடத்தாளாகிய தலைவி இப்பள்ளி பலரைப் பொருதென்று இழிய இப்பொழுது இவளிவ்வாறு இழிதற்குக்

கருதிய குறிப்பு என்னை கொல்லோ என்று உழையர் கூறினர். 367

13. செவ்வணி விடுக்கப் பூப்பியற் செவ்விகெடாமல் மெலிவறிந்து இவளது பொலிவோடு வந்தமையான் இவன் மெய்யே தக்க வாய்மையனெனத் தலைவனை வாயிலவர் போற்றினர். 368

14. தலைவி வருந்த அயலாரிடத்து நல்குதலால் மாண்புடைய வள்ளல் இன்று தக்கிருந்திலன் எனத் தோழி தலைவனை இயற்பழித்துக் கூறினள். 376

15. தன் பெடை அன்னமானது வருந்தத் தகுதி அழிந்து சேவலன்னம் சங்கினுடைய பெடைமேல் உறங்கு வது போல வரம்பு கடந்தான் ஊரன் என்று உழையவர் உரைத்தனர். 377.

16. வயலூரன் வரம்பிலன் என்று உழையர் இயற் பழிக்கத் தலைவி உழையர் கேட்ப அன்று புனத்து மார்தழை ஏந்தி வந்தார்; அவர் என் நெஞ்சில் நின்றும் விலக்கினும் நீங்கார் என்று தலைவனைப் பாராட்டினள். 378

17 யான் தன்னை நினையாது வேறொன்றன் மேல் உள்ளத்தைச் செலுத்தும் போதும் அவள் என் உள்ளத் துப் புகுகின்றாள். யான் அவளை நினையுந்தோறும் பள்ளத் துப் புகும் புனல் போல நீங்காது என் மனத்தள் ஆகின் றாள் என்று தலைவன் தலைவியை நினைத்து வியந்து கூறினன். 379

18. வாயில் பெறாத் தலைவன் தலைவியை எவ்வாறு கண்ணுவது என்று மகன் திறம் நினையா நின்றான். 380

19. பின்னர் வாயில் பெறாது நின்ற தலைவன் என் வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாமென வாயில் வேண்டித் தோழியிடம் கூறினன். 381

20. "பண்டு நீர் வரும் வழியிடை" வரும் ஏதமும் இருளும் எண்ணாது, குன்றை அகன்ற சாற்றுவை ஒத்த

எம்மாட்டு வந்தீர். இன்று பரத்தையர் தெருவே அன்று ஊர்ந்து வந்த தேர்மேல் ஏறிப் போகின்றீர். இதுவோ எம்மாட்டு நுமதருளும்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள். 382

21. இங்ஙனம் வாயில் பெறாது தலைவன் நிற்க, வாயில் வேண்டித் தோழி, தலைவியிடம் "அன்று நம்புனத்தில் யானை கடிந்த விருந்தினர் வாயில் வேண்டி வாய் திறவாது நிற்கின்றார்." என்று தலைவியிடம் கூறி வாயில் வேண்டினள். 383

22. தோழி வாயில் வேண்டத் தலைவியின் நோக்கங் கண்டு தலைவன் வந்தான் என்று சொல்லும் அளவில் தலைவி கோபித்துக் கனன்று நோக்கிக் கண்கள் சிவக்கக் கண்ட மனையவர் மகிழ்ந்தனர். 384

23. மகனை நமக்குத் தந்த பின்னர் நம் காதலர் இன்று நம் கடையைக் கண்டார். இதுவன்றோ நம்மாட்டு அவரருள் எனத் தோழிக்குத் தலைவி வாயில் மறுத்துக் கூறினள். 385

24. தோழியிடம் வாயில் மறுத்த தலைவி "உன்னிடத்து அவர் (தலைவர்) அருள் பெரியர்" என்று நீ சொல்ல வேண்டுமோ ? என வாயில் வேண்டிய பாணனோடு ஆத்திரின்னி புலையா என்று வெகுண்டு கூறினள். 386.

25. "நீ வெகுளப் படுவதன்று, நினக்குப் பல்லாண்டு செல்வதாக; யான் வேண்டிய இடத்துப் போக நின்னடியை வலங்கொள்ளா நின்றேன்" என வாயில் பெறுமையிற் பாணன் புலந்து கூறினன். 387.

26. வாயில் பெறாது பாணன் நீங்க, யாவர்க்கும் வாயினேராது வெகுண்டு உரைத்தலால் தழல் போலச் சிவந்த தலைவியின் கண்கள் விருந்தொடு தலைவன் வந்தான் என்று சொன்னவுடன் கருங்குவளை போலச் செவ்வி பரந்து குளிர்ந்தன என்று இல்லோர் தம்முள் கூறினர்—388.

27. விருந்தேற்றுக் கொண்ட தலைவியிடம் "நம்முடைய தோன்றலை (மகனை)த் தனக்குத் துணையாகக் கொண்டு வந்து தோன்றுதலான் நினதுளத்துக் கவற்சியை யொழிந்து இனி நம் அரசற்குக் குற்றேவல் செய்வாயாக', எனத் தோழி தலைவியின் ஊடலைத் தணிவித்தாள்—389.

28. நின் காதலிமார் (பரத்தையர்) நின்னை வெகுள்வர். அது கிடக்க, யாம் மேனி முழுதுஞ் சிறுவனுலுண்டாக்கப்பட்ட பால் புலப்படுந்தன்மையை உடையேம். அதன்மேல் யாமும் நீ செய்கின்ற இக்கள்ளத்தை விரும்பேம். அதனால் எங்காலைத் தொடா தொழி; எங் கையை விடுவாயாக; எனத் தலைவன் தன்னை அணைந்த வழி தலைவி ஊடினள், 390.

29 புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல். ஒருத்தியைப் புனலாட்டு வித்து என் மனையின்கண் இவர் வந்து நிற்கின்ற இது எனக்குப் பொறுத்தல் அரிது எனக் கூறித் தலைவி புலந்தனள். 391.

30. 'எம்முடைய சிறிய இல்லின்கண் வந்து அன்று நீர் (தலைவர்) செய்த தலையளி எங்கட்கு அன்று வேண்டுதுமாயினும் இன்று உமது திருவருள் எங்கட்கு நீர் வந்த இத்துணையும் அமையும். வேறு நீர் தலையளி செய்ய வேண்டுவதில்லை; எனக் கலவி கருதித் தலைவி தலைவனேடு புலந்து கூறினள்.—392

31. விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுமிய குடியிலுள்ளீர்! எம் போல்வாரிடத்து இவ்வாறு புணர்தல் விரும்புதல் நுமக்கு விழுமிய அல்லவென மிகுத்துரைத்துத் தலைவி ஊடினள். 393.

32 அன்று பொதியின் மலையிடத்தில் தன் மலர்க் கண்ணினது இனிய நோக்கத்தைத் தந்தருளி என்னைத் தன் வயமாக்கிய பெண்ணமுதம் அதுவன்று; இது நம்மை வருத்துவதோர் மாயமாம் எனத் தன்னெஞ்சிற்குச் சொல்லி ஊடல் நீடிய காலை தலைவன் வாடினன். 394;

33. அன்று அரிதிரண்டு யானை வேட்டஞ் செய்யும் வழியில் தமது இயல்பான அன்பை நமக்குத் தந்தவர்க்கு இன்று நாம் உடம்படாது நிற்கும் இந்நிலைமை என்னும் என்று ஊடல் ஒழிந்து தலைவனுடன் புணர்ச்சிக்குத் தலைவி உடம்பட்டாள். 395

34. புதல்வனை எடுத்து அணைத்து அது வாயிலாகக் கொண்டு தலைவன் உள்ளே வர, அப்புதல்வனை வாங்கி அணைத்து அவன் வாயில் தம்பலம் தம்மெய்யிற் படுதலால் எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டு வந்தோ நீ எம்மைக் கொண்டாடுவது! இதனை நினக்குத் தந்தவாறு சொல்லுவாயாக எனப் புதல்வன் மேல் வைத்துத் தலைவி புலவி தீர்ந்தனள்.—396.

35. புலவி தீர்த்தபின் புணர்ந்த தலைவனைத் தலைவி தங்கையின் (பரத்தையின்) மார்பு என்று கருதி மறைக்கத் தலைவன் அவ்வுறைதயை (தன் நெஞ்சில் உள்ளவர்க்கு நோகும் என்று கருதித்) தன் தலையால் ஏற்றான். தலைவி புலந்து அழுதாள். 397

36. கொடிய வழியிற் சென்று ஒரு சிறிய ஊரில் மான் தோல் பள்ளியில் தூங்கிய துயிலுக்கு மாறு கண்டலம் என்று முன் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறித் தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்த்தான். 398

37. "நம் புதல்வன் விளையாடக் கண்ட அவள் (பரத்தை) அவனை நின் மகன் என்று ஐயுற்றுத் தழுவக் கண்டு நீ ஐயுற வேண்டாம். அவன் உன் மகனே. உறவு மெய் உறவே. இவ்வில்லம் உன் இல்லமே. நீ உள்ளே வருவாயாக," என்று நான் கூற அவள் (பரத்தை) நாணிச் சென்றாள். "நான் அவளை அறியேனாக, நீ மாயங் கூற வேண்டுவதில்லை" எனத் தான் பரத்தையைக் கண்டமை கூறித் தலைவி தலைவனிடம் பின்னும் புலந்தனள். 399

38. தலைவன் யாவர்க்கும் ஊதியம் ஆவான். வேண்டக் கொடுத்தலின் கற்பகம் போல்வான். கற்றோர்க்கு

நல்ல துணையாவான். இசையை உணர்ந்த பாணர்க்குச் சுற்றம் போல்வான். வினைத்தனைக் கொடுத்தலின் சிந்தாமணிக்கு ஒப்பாவான். தில்லைச் சிவன் திருவடிக்குக் கொன்றை மாலையை நிகர்ப்பான்; சான்றோர்க்குச் சங்க நிதி போல்வான். யாவர்க்கும் பயன் கொடுத்தலின் விதியொடு ஒப்பாவான். தன்னை வந்து சேர்ந்தார்க்கு ஊருணி போல்வான். அதனால் நீ அவனோடு புலத்தல் கூடாது. அவன் வரும்பொழுது எதிர்தொழுதும், போம்பொழுது புறந்தொழுதும் புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக் கடனாவதெனக் கூறித் தலைவனுடைய ஊதியத்தை எடுத்து உரைத்து அவளுடைய (தலைவியினுடைய) ஊடலைத் தீர்த்து அவனோடு பொருந்தப் பண்ணினாள் தோழி. 400

16. தலைவியின் ஐயன்மார் முதலியோர் (௩. III - 16)

உமர், எந்தை, எம் ஐயர், எம் மலையர்

என் ஐயர் சால்வும் மூர்க்கர்

எமர்

கல்வரை நாடர்

தமர், நமர்.

1. ஐயன்மார் செய்கையும் வீரமும் : தேசம் எலாம் கொடுத்தாலும் நமர் உன்னைக் (தலைவியை) கொடுக்க மாட்டார். அவர்கள் யானை முகத்தின்மீது விடும் அம்பு ஊடுருவி மண் குளிக்கும்.

2. சிறுவர்களின் செய்கை : சிறுவர் விடும் கவண் கல்லால் தேன் இறாலினின்றும் தேன் ஒழுகிச் சிறு குடிலில் பாய்ந்தும்.

3. தலைவியின் ஐயன்மாருக்குத் தலைவன் அஞ்சுவதாகக் கூறி உள்ளான்.

17. தலைவியின் காம மிக்க கழிபடர் கிளவி (௩. III - 17)

தலைவி தனது வேட்கை மிகவாற் கேளாதனவற்றைக் கேட்பனவாக (பூம்பொழில்காள், புள்ளினங்காள்) என

விளித்து நீங்கள் "ஏதுற்று அழிகின்றாய் என்று என்னை வினவுகின்றிலீர்" இதுவோ உங்கள் அன்பு, என்று அவற்றோடு புலந்து கூறினள். [இது தலைவனைக் காண விரும்பிய தலைவி (இரவுக்குறியது) வருந்திக் கூறியது.]

18. தலைவியின் கோபக் கண்கள் சாந்தக் கண்ணாய் மாறின சமயங்கள் (கூ. III - 18)

1. பரத்தையிற் பிரிந்த தலைவன் வந்தான் என்று சொல்லும் அளவில் தலைவியின் கண்கள் சிவந்தன. அவளுடைய நோக்கத்து எதிர் தலைவன் நோக்க, அச்சிவப்பு ஆறி முகம் மலரக் கண்கள் சாந்தம் அடைந்தன. 363

2. பரத்தையிற் பிரிந்த தலைவன் வந்தானென்று சொல்லக் கேட்டுத் தழல் போலச் சிவந்த தலைவியின் கண்கள் விருந்தொடு வந்தான் என்று தெரிந்தவுடன் கருங்குவளை போலக் குளிர்ந்தன.

19. தலைவியின் கோலம் (கூ. III - 19)

(தலைவன் தலைவியை அலங்கரித்தல்)

வண்டுகள் விடாது தங்கும் கூந்தலில் இட்டதாலும், அணிந்த அணிகலன்களும், அணிந்துள்ள மாலையும், இவையெல்லாம நின் தோழி செய்துள்ள கோலங்கள் போலவே உள்ளன. யான் பிறிதொரு கோலம் செய்தேன் என்று கலங்க வேண்டா, தெளிவாயாக என்று தலைவன் கூறினான்.

20. தலைவியின் சிறப்பையும் அவளைப்பற்றியும் தோழி தலைவனிடம் கூறல்

1. எல்லா உலகமும் நல்கினும் எமர் அவளுடைய சிறிய இடைக்கு விலையாகச் செப்பலொட்டார். இனிப் பெரிய முலைக்கு நீ விலை கூறுவதென்னோ எனத் தோழி விலை அருமை கூறியது. (இஃது அருவிலை உரைத்தல் என்னும் துறை.) 197

2. தலைவி கருதியது இன்னதென்று தெரியாதெனத் தோழி தலைவியின் வருத்தத்தைத் தலைவனுக்குக் கூறியது. களவு அறிந்து தலைவியைக் கொண்டு நீங்கெனக் குறித்துரைத்தது. 199

3. என்னைப் புல்லிக்கொண்டு தன்னுடைய பூவையையும், பந்தையும், பாவையையுங், கிளியையும் இன்றெனக்குத் தந்தாள். அது நின்னோடுடன் போதலைக் கருதிப் போலும் எனத் தோழி தலைமகனுக்குத் தலைவியின் குறிப்பை உரைத்தாள். 200

4. போக்கருமை கூறிய தலைவனுக்கு, நின்னோடு போகப் பெறின் அவளுக்கு (தலைவிக்கு) வெஞ்சுரமுந் தண்சுரமாம். நீ அருமை கூறாது அவளைக் கொண்டு போவெனத் தோழி தலைவியின் ஆதரம் கூறினள். 203

5. ஆதரங் கூறிய தோழி நீ (தலைவன்) உடன் கொண்டு போகாயாகில் அவள் (தலைவி) தடந் துறந்த கயல் போல இறந்துபடும் என்று கூறினள். 203

6. நின்னோடு போதும் இடத்துக் கற்சுரம் அவளது சிற்றடிக்கு நற்றளிராம் எனத் தோழி தலைவனுக்குத் தலைவியின் துணிவை எடுத்துக் கூறினள். 209

7. உன்னுடைய கல்வி, குலம், நீதி இவற்றைக் கருதித் தலைவியை உனக்குக் கொடுப்பது அல்லாமல், விலை கூறுவராயின் அவளுக்கு (தலைவிக்கு) எழு உலகும் விலை போதாது எனத் தோழி முலைவிலை கூறினள். 266

8. காதலர் கானகத்தை உடைய சுரத்தைப் போய்ப் பொருள் தேட நினைகின்றார் என்று யான் (தோழி) சொல்லும் அளவில் (தலைவியின்) அவளது முலையுங் கண்ணும், பொன்னும் முத்தும், தந்தன இனி நீ சேட் சென்று தேடும் பொருள் யாதோ என்று தோழி தலைவனுக்கு அவளது பிரிவாற்றுமை கூறினள். 335

21. தலைவியின் திருமணம் (கூ. III - 21)

1. தலைவன், தலைவியைத் தேடிச் சென்ற செவிலி "இக்காலின் மனையின் கண்ணே யாங்கள் மணஞ் செய்ய அவ்விருவரையும் இன்னும் பெறுமாறு உண்டோ என, ஆராய்ந்து சொல்லுங்கள்" என்று வேதியரிடம் சோதிடம் கேட்டனள்.—236.

2. மணமுரசு கேட்டு மனையிலுள்ளார் இஃது இவனை நோக்கி ஒலிக்கின்றது. மணமுரசு எனவுட்கொண்டு யாம் பூரண பொற்குடம் தோரண முதலாயினவற்றான் மனையை அலங்கரிப்போம் என மகிழ்வொடு கூறினள்.—296.

3. யானையின் பிடர் அழித்தார் (தலைவனின்) முரசு முழங்குகின்றது. வெறி ஆட்டுக் காரணமாக ஒலித்த முருகியம் நீங்கியது. இனி ஒரு குறையும் இல்லை; எனத் தலைவிக்குத் தோழி மணமுரசு கூறினள்.—299.

4. தலைவன் தலைவிக்குக் கொடுத்த தழை வாடாது இருக்கக் கண்டு அத்தழையே பற்றுக் கோடாக ஆற்றியிருந்தாள் தலைவி எனத் தோழி தன்னுள்ளே மகிழ்ந்து கூறினள். 300.

22. தலைவியின் தொழிலும், செய்கையும் விளையாட்டுப் பொருள்களும் (கூ. III - 22)

*1. **தொழில் :** கிளியை ஓட்டிப் பைம்புனத்தைக் காத்தல்; கயிலை மலையின் உச்சியில் உள்ள சுனை நீரில் குடைந்து ஆடுதல்; மலையை நோக்கிக் கூவி எதிரொலி கேட்டல்.*

2. விளையாட்டுப் பொருள்கள். (கூ. III - 26)

பாவை, பூவை, பைங்கிளி, பொற்பந்து.

23. தலைவியின் நாண் (கூ - 23)

1. தலைவனது ஆற்றாமை மிகுதி கூறக் கேட்டுத் தன் கண்மணி போன்று ஒரு ஞான்றும் தன்னை விட்டு நீங்காத

நாண் அழலைச் சேர்ந்த மெழுகு போலத் தன்னை விட்டு நீங்கத் தலைவி வருந்திக் கூறியது.—44

தலைவி பெருநாணினள்; தன்னோடு வளர்ந்த, "பொற்பார் இருநாண் தலைவர்மீது தான் வைத்த விருப்பம் என்னும் பெருங்காற்று வீசப் பறித்து எறியப்பட்டது. மகளிர் இனி எழு பிறப்பின் கண்ணும் குடியிற் பிறவாது ஒழிக; என்று நாண் இழந்து வருந்தினள் தலைவி. (இது தலைவனுடன் சென்னெறி செல்லத் தலைவி துணிந்த போது கூறியது.)—208.

தலைவி நாணத்துடன் தன் கண்ணைக் கையால் மூடிய பொழுது தலைவன் அவளை நோக்கி "பொன்னே! நீ உன் கூரிய கண்களைக் கையாற் புதைத்து என்னை வாழச் செய்தாய். என் உள்ளம் துளங்காமை வேண்டின் நின்னைச் சுற்று முழுவதும் புதைப்பாயாக" என்று கூறித் தலைவன் தலைவியின் மேனியே கூற்றெனக் கூறினன்.—43.

தலைவி பெருநாணினள். ஆதலின் கண் புதைத்து ஒரு கொடியின் ஒதுங்கி வருந்தா நிற்ப, தலைவன் சென்று, அவளுடைய வருத்தத்தைத் தணிப்பான் போன்று. முலையோடு முனிந்து "பணை முலைகாள்! பித்தை உடையிர்! இன்னும் நீர் பெருக்கின்றது எதற்கு?" என்று அவளுடைய இடையைத் தாங்கி அணைத்து நின்றான்.—121.

24. தலைவியின் பிரிவு ஆற்றாது அவள் வளர்த்த கிளி நற்றாயிடம் வருந்தியது (௩. III - 24)

என் அன்னை போயினள்; யாண்டையள்; என்னைப் பருந்து அடும்; என்று தலைவியின் பிரிவு ஆற்றாது அவள் வளர்த்த கிளி வருந்துவது என் நெஞ்சை அறுக்கின்றது என நற்றாய் கூறி வருந்தினள்.

25. தலைவியின் மலர்மாலை (௩. III - 25)

[தலைவியின் கூந்தலில் ஒண் மாலை சூழ்ந்துள்ளது]

27. தலைவியும் சிவனும். [ந - 27]

தலைவியின் ஆவி அன்னார் கயிலாயத்தில் பயிலுவர். (37)-

அம்பலத்து வணங்காத அறிவில்லாதவரை (தீய மக்களை) பொருத சிறியவள் தலைவி; உள்ளும் உருகி உரோமம் சிலிர்ப்ப, இறைவனால் ஆட்கொள்ளப் பட்ட ஒரு கூட்டத்தைத் தனக்குத் (தலைவிக்கு) தந்து புலியூரில் (தில்லையில்) நடனம் செய்பவர் இறைவர், தன்னுடைய இரண்டு திருவடிக்கு இரண்டு கரங்களைத் தந்துள்ளார் பெருமான்; என்னுடைய வாயிலும் மனத்திலும் பிரியாத இறைவர் அவர்.

28. தலைவியும், செவிலியும். [ந - 28]

I. செவிலி தலைவியைக் குறிப்பது

1. தலைவி எங்குப் போயினள் என்று செவிலி தோழியைக் கேட்டனள். 224.

2. தலைவி அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி அஃது அறமாயினும் இவள் பருவத்திற்குத் தகாது. இனி அவளுக்கு அவனை (தலைவனை) வழிபடுவதல்லது பிறிதில்லை எனத் தலைவியின் கற்புநிலைக்குச் செவிலி இரங்கினள். 226.

3. தலைவி தன்னிடம் செய்த வலக்காரங்கள் எல்லாம் தாம் காட்டுக்குப் போவதாகக் குறித்ததை நான் அறிகிலேன் என்று கூறிச் செவிலி கவலைப்பட்டாள். 227.

4. தன்னைத் தழுவிக்கொண்டு கிடக்கிற என் கை உறக்கத்தால் சிறிது நழுவுமாகினும் நெஞ்சழியும் 'பேதை இன்று என்னைக் கவலைக்கு ஆளாக்கினள் என்று தலைவனுடன் தலைவி போனதை ஆற்றாது செவிலி நற்றாய்க்குக் கூறினள். 229.

5. செவிலி நற்றாயின் கவலையைக் கண்டு தான் போய்த் தலைவியைத் தேடி வருவேன் என்று கூறினாள். 234

6. தலைவியைத் தேடிச்சென்ற செவிலி தலைவியின் அடிசுவடு கண்டு அறிந்தாள். 237

7. பேதைப் பருவம் கழிந்தது முன்பு என்னைப் பிரிந்தால் ஊதைக்காற்று சுழலும் கொடி போல்வாள், இப்பொழுது சுரத்தின்கண் அயலானொருவனுடன் போந்தாள். அவளை நீ கண்டனையோ என வேட்ட மாதரைச் செவிலி கேட்டாள். 239.

8. சிவபெருமானுடைய கரத்திலுள்ள மான் போல ஒரு மான் (தலைவி) மயில் போல எதிரே வந்ததைக் கண்டீரோ எனச் செவிலி வேதியரை வினவினாள்.—243.

9. தலைவியின் மெலிவு கண்டு இவள் சேயினது ஆட்சியிற் பட்டனள் போலும் என்று செவிலி கூறினாள். 282.

10. செவிலி தலைவியின் நோய் இன்னதென்று சொல்லும் எனக் கட்டுவித்திக்கு உரைத்தாள். 283.

11. "இளையாள் இவளை என் சொல்லிப் பரவுதும் ஈரெயிறு முளையா அளவின் முதுக் குறைந்தாள்" எனத் தலைவியின் கற்பினின் வழாமையைச் செவிலி நற்றாய்க்குக் கூறினாள்.—294.

29. தலைவியும் தோழிகளும் (ஆயமும்)

சந்தனச் சோலையில் பந்தாடுகின்றார். கணக்கில்லாதவர். 107

அங்கை கூப்பிச் சோதி வரிப்பந்தடிப்பார்.

ஆவி அன்னார், கொடிச்சியர், தொல்லாயம், நுண் மருங்குல், கல்லார், பொழில் வாய் எழிலாயம், வண்டல் ஆயம் எனத் தலைவியின் ஆயம் விளக்கப்பட்டுள்ளது.

விளையாடிக் கொண்டிருக்கும்போது, ஒருவர் வந்து நும் வண்டல் மனைக்கு யான் விருந்து என்று வந்து நின்றான். அப்பொழுது காற்று கரைமேல் வீசக் கடல் என்னை அடித்துக் கொண்டு போகக் கடலில் நான் அழுந்தாமல் காத்தான் அந்தோன்றல் என்று தலைவி தோழிக்குக் கூறி அறத்தொடு நின்றாள்.

30. தலைவியும் நற்றாயும் (கூ - 30)

தலைவியை நற்றாய் குறிப்பது

1. எம் கார் மயில்; கொடியோர்ள், நற்றேன் மொழி; இல்லை அன்ன மணங்கொளகுசாயல்; பேதை; காந்தளைப் பாந்தள் என்றெண்ணிக் கண் புதைத்துப் பதைக்கும் எம் கார் மயில்; முதுக்குறை பெற்றி மிக்கு நற்றேன் மொழி அழற்கான் நடந்தாள்; யாழியள் மென் மொழி வன்மனப் பேதை.

2. தலைவி, தலைவனுக்குக் குற்றேவல் சரிவரச் செய்வாளோ என்று நற்றாய் கவலையுற்றாள்.

3. தலைவி பிரிந்ததை எண்ணித் தத்தையை (கிளியை) நோக்கித் தாய் புலம்பினள்; "அம்பலவனை வணங்காதாரைப்போலக் கொடியாள் மலை நெறியில் எவ்வண்ணம் சென்றாள், ஆண்டு எவ்வண்ணம் தங்கும்" என்று நற்றாய் சொல்லி மயங்கினள்.

4. தலைவியின் பொருட்டுப் படுசுரம் தணிக்கென (சூடு குறைக்க வேண்டுமென்று) சூரியனை நற்றாய் வேண்டினள்.

5. தலைவி ஓர் ஏதிலன்பின் சென்றாள்; எனச் செவிலி கூறக் கேட்டு நற்றாய் வாடினள். தோழியை விட்டு என்னை நீக்கி, இவ்வூரில் உள்ளார். அலர் தூற்ற எடுத்துக் கலங்க, எங்களைச் சேராதார் முன்னே அம்பலத்தைப் பணியாதவர் போல அரிய சுரத்தே சென்றாள். இனி எங்ஙனம் ஆற்றுவேன் எனத் தாய் புலம்பினள்.

31. தலைவியும் விருந்தும் (௩-31)

தலைவன்மீது கோபித்து இருந்த தலைவி - தலைவன் விருந்தொடு வந்தான் எனத் தெரிந்ததும் கோப நிலைமாறி சாந்தநிலை எய்தினள்.

32, 33. தலைவியைக் குறிக்கும் சொற்கள் (௩-32, 33)

(தலைவன் முதலியோர் குறிப்பன)

அணங்கு; அமிழ்து, இடைமருது; ஏகம்பம்; வாரணியாம், அன்ன பொன்; இளமான்; எம்பிள்ளை; கயல் வந்த கண்ணி; கலைமலி காரிகை; காழி அன்னாள்; கிள்ளை; குயில் மன்னு சொல்லி; குராப்பயில் கூழை இவள்; கொடிச்சி; சிற்றம்பலம் அனையாள்; தொண்டைச் செவ்வாய் நவ்வி; பிள்ளை; புலியூர் அன்ன பொன்: பெண் அமிழ்தம்; மடப் பாவை; மயில்; மெல்லியல்; யாழ்கற்ற மென்மொழிக்கன்னி; வாமேகலை; விற்படு வாணுதலாள்; இவை போல்வன பிற ஒளிநெறியிற் காண்க.

34. தலைவியைச் செவிலி குறிக்கும் சொற்களும் சொற்றொடர்களும் (௩. III - 34)

1. அணங்கு, 2. அம்சொல், 3. அம்மனை,
4. எங்குட்டன், 5. எம்மனை, 6. ஒளி இழை.
7. அம்பலவர்க்கு உற்ற பக்தியர் போலப் பனைத்து இறுமாந்த பயோதரத்து ஓர் பித்தி.
8. கட்டணிவார் சடையோன் தில்லைபோலி.
9. கயிலைப் பயில் செல்வி.
10. சடையோன் காமான் என ஒரு மான்.
11. சடையோன் தில்லை போலி.
12. வகிர் மலர்க் கண்ணி.
13. தில்லைச் சிற்றம்பலம் அனையாள்.
14. பூவணம் அன்ன பொன்.
15. மாண் இழை.

16. வடுத்தான் வகிர் மலர்க் கண்ணி.

பிற ஒளி நெறியிற் காண்க.

தலைவியைச் செவிலி வர்ணிப்பது (ரூ. III-34)

1. அருவினையேன் பெற்ற அம்மனை.

2. சடையோன் கரமான் எனவொரு மான் மயில் போல், எதிரே வருமே சுரமே.

3. அனிச்சப் பூவை மிதிக்கிற் பதைத்து அடி பொங்கும் நங்கை எரியும் தீமேல் வேல் போல உள்ள பரற் கானிற் றனது அடிவைத்து நடக்க முடியுமா?

[இஃது உடன் போக்கில் தலைவியின் மெல் அடியைச் செவிலி நினைத்துக் கவலையுற்றது.]

4. குற்றம் இலாச் சிறியவள் நின்றது இவ்விடம். (இஃது உடன்போக்கில் தலைவியைத் தேடி வந்த செவிலி தன்னுள் கூறியது).

5. புலியூரனைய என் பாவை.

6. பேதையாகிய பருவங் கழிந்தது சுரம்போந்த பின்; அறியாப் பருவத்தளாய் முன்றிலின்கண் என்னைச் சிறிது நீங்கில் தமியளாய் நடுங்குதலான் ஊதையாற் சுழலும் வல்லியை ஒப்பாள்.

இது வேட்டமாதரிடம் செவிலி தலைவியை வர்ணித்தது. இல்லை ஒப்பாள். 239

7. அம்பலவர்மீது மிக்க பக்தியை யுடையாரைப் போலப் பெருத்து இறுமாந்த முலைகளையுடையாள் ஒரு பேதை. 242

8. மயில் போலப் பெயர்ந்து, இளைய கொடி போல துடங்கி, மெல்லிய மான் போல விழித்து, குயில் போலச் சொல்லும் எமது பிள்ளை எங்குற்றாள். [இது செவிலி தோழியிடம் கேட்டது.] 234

9. யான் எடுத்து வளர்த்த படை போலுங் கண்ணினை உடையாளுடைய சிறிய அடிச்சுவடாம் உங்குளவை. 237.

[இது தலைவியின் அடிச்சுவடு கண்டு செவிலி தன்னுள் கூறினது.]

10. தவிசின் மேன் மிதிப்பினும் பதைத்து அடி கொப்புள் கொள்ளும். அத்தன்மைய வாகிய காலாகிய மலர்கள் இன்று வேலை ஒத்த வெய்ய பாலுடைய காட்டின்கண் ஒரு விடலை பின் போதற்குத் தகுங் காலை ஒத்தன.

[இது தலைவியின் அடிச்சுவடு கண்டு செவிலி வர்ணித்து வருந்தியது.]

36. தலைவியைத் தலைவன் சந்தித்த இடம் (௩ III - 35)

கயிலையில் மரச் செறிவில் (பொழிலில்) தலைவியைத் தலைவன் சந்தித்தான்.

சந்தித்த இடத்திற்கு அயலில் கயிலை; தேன் பொழி கின்ற சாரலில் தலைவியின் சீறூர் உள்ளது.

பாங்கன் தலைவன் வாடி இருப்பதைக் கண்டு உன்னை இவ்வாறு வாடும்படி வைத்தவளின் இடம் மலையா, மலரா, விசும்பா என்க் கேட்டான்.

37. தலைவியைத் தலைவன் வியத்தலும் தன் அன்பை வெளிப்படுத்தலும் (௩ III - 36)

என் குல தெய்வமே! என் மன் உயிரே; மென் தோள் கரும்பு; உன் கொங்கைகள் என்னை ஆட்கொண்டன;

காரிகையே! உன் பண் போன்ற மொழியை நான் ஆரப் பருக வருக; இந்தக் காடு கடம்பை என்னும் தலத்தில் உள்ள குளிர்ந்த பொய்கை போலத் தண் என்று இருக்கும்.

தலைவியின் தோளைப் புணருந் தொறும் பெரும் போகம் புதிதாய் வளர்கின்றது.

தலைவி குமுத மலர் போன்றவள். நான் அதை மலர்த்தும் வானத்து இளமதி.

எனது உயிர் அணங்காய் - என் சிந்தையதாய்ப் பெரிய மாயத்ததாகி இங்கே வந்து நிற்கின்றது.

இந்த மலை படப்பாம்புப் பள்ளி, நான் பள்ளியில் படுத்துள்ள நெடுமால், என நினைந்தோ, என் நெஞ்சத் தாமரையை (இலக்குமியாகிய நீ) நீ இடம் கொண்டாய்.— (பிற ஒளிநெறியிற் காண்க.)

38. தலைவியைத் தலைவன் விளித்தல். [ரூ III - 37]

அணங்கே, ஆரமிர்தே, ஊர்மழவிடையாய், சிலைக் கீழ் கணை அன்ன கண்ணீர்; சிற்றம்பலம் அனையாய், இருத்திய சீறடி, தில்லை அன்னாய், தோளா மணியே, பிணையே, பொன்னே, மடமான் விழி மயிலே, மலயத்து இருங் குன்ற வாணர் இளங்கொடியே, வடிவார் திருவே,— பிற ஒளிநெறியிற் காண்க......

39. தலைவியைத் தோழி குறிப்பது. [ரூ III - 38]

அம்பு அஞ்சி ஆவம்புக மிக நீண்டு அரிசிந்து கண்ணாள்; அம்பலம் வணங்காக் கலரைப் பொருந் திறியாள்; அம்பலவன் மலையில் தோகை, எனது உயிரே அன்னாள்; கயிலை மயில்; கோவை வந்து ஆண்ட செவ்வாய்க் கருங்கண்ணி; சிறுமி; சுருங்கும் மருங்குல், பெரும் பொறையாட்டி; திருப்பனையூர் அனையாள்; பண்ணீர் மொழி இவள்; பை தயங்கும் அரவம் புரையும் அல்குற் பைந்தொடி மங்கை; மலர்ப் பாவை.—

(பிற ஒளிநெறியிற் காண்க)

40. தலைவியைத் தோழி விளிப்பது. [ரூ III - 39]

அணங்கே; அயிற்கண் நல்லாய். அலர் வேற்கண்ணி அறவியல் கூழை நல்லாய்; ஆய் மறியே; கயல் வளர்வாட்

ண்ணி; கயிலை மயில் அனையாய்; கருங்குழல் வெண்நகைச் செவ்வாய்த் திருநுதலே; கார் மயிலே குறப்பாவை; கூத்தப் பிரான் வாயிற் சிறந்த மதிநுதலே; "கொம்பர் அன்னாய்; திருப்பூவணம் அன்ன பொன்னே; தில்லை அன்னாய்; தூவி அந்தோகை அன்னாய்; தேனமர் சொல்லி; புலியூர் அனையாய்; பூப்பால் நலம் ஒளிரும் புரிதாழ் குழற் பூங் கொடியே; முரி புருவ வடிக்கலர் வேற்கண்ணி; வெயிற் சிறந்த மென்தோளி —

(பிற ஒளிநெறியிற் காண்க)

41. தலைவியைப் பரத்தையர் தலைவி குறிப்பது [௩ III - 40]

புனலூரனைப் பிரியும் புனல் ஊர்கண் அப்பூங் கொடி 372

42. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல் [௩ - 41 - 1]

1. தேர்வரவு தோழி சொன்ன அந்நிலையில், "மனையை அலங்கரிப்போம்" என மணமுரசு கேட்ட மனையி லுள்ளவர் மகிழ்ச்சியொடு கூறினர். 296

2. மணமுரசு கேட்ட தலைவி ஐயுற்றுக் கலங்கல்.

முழங்குகின்ற இம்முரசு எவருக்கோ அறிகின்றிலேன் என்று தலைவி ஐயமுற்றுக் கூறினள்.—297.

3. நிதி வரவு கூறுதல்

"யானை கடிந்தார் நமது கடை முன் ஒரு குறைவில்லாத நிதியைக் கொண்டு வந்துள்ளார். இதை நீ காண்க" என்று தோழி தலைவியிடம் நிதி வரவு கூறினள். 298.

4. மணமுரசு கூறல்

"நம் இல்லின்கட் புகுந்து நின்று யானை கடிந்தார். முரசு முழங்குகின்றது. இனி ஒரு குறையும் இல்லை"

என்று வலைரவு தோன்றத் தலைவிக்குத் தோழி உரைத்தல்.—299.

தோழிக்குத் தலைவி கூறுவது. [கூ IV - 1]

பருவம் அன்று எனக் கூறிய தோழிக்குத் தோன்றி யின் மலரைக் காட்டி இது பருவம்தான் என்று தலைவி மறுத்துக் கூறினள்.—325.

2. தோழி சிறைப்புறம் கூறல். (கூ IV - 2)

1. அயலவர் நாளைப் பொன் புனைய வருகின்றார் இவினையேன் சொல்லுவதென்னே.

(இது சிறைப்புறம் தோழி அயலுரை உரைத்து வரைவு கடாயது.—137.)

2. கிளிகள் தினைத்தாளை விடாது நின்றன. நாம் போனால் நம் காதலர் இங்கு வந்து நம்மைத் தேடுவர். எனச் சிறைப்புறமாகப் பேயோடாகினும் பிரிவருமை கூறித் தோழி வரைவு கடாயினள்.—144.

3. அன்னம் புலரும் அளவும் துயிலாது வருந்திற்று என்று தலைவிக்குக் கூறுவாள் போன்று அல்ல குறிப் பாடு, தோழி தலைவனுக்குச் சிறைப்புறத்து அன்னத் தின் மேல் வைத்து உரைத்தாள்.—172.

4. கடலே! உள்ளிடத்துண்டான அமுதத்தினையும், மதியையும், சீதேவியையும் பிறர் பறித்துக் கொள்ள நீ முனபு அழிந்தாய். பின்னும் உன்னுடைய ஆரவாரம் அடங்குவதில்லை. பிறரை வருத்துவது பழியென ஆய்வ தில்லை. என்று தலைவியின் துயரைத் தோழி கடலிடை வைத்துத் தலைவன் சிறைப்புறம் வந்து நிற்ப அறிவித் தனள்.

5. தலைவன் ஒருவழித் தணந்து வந்தமை சிறைப் புறமாக உணர்ந்த தோழி "வளைகள் நிற்கவில்லை. நெஞ்சம் உருகி நின்றது. கண்கள் துயிலின்றிக் கழிந்தன"

என்று தலைவியின் நிலையைத் தலைவனுக்குச் சொல்லுவா ளாக என்று மதியோடு கூறினள்.

6. அரையிரவின்கண் ஒரு தேர் வந்தது என உட் கொண்டு அன்னை சிறிதே கண்ணும் சிவந்து என்னையும் பார்த்தாள் என்று தோழி தலைவிக்குக் கூறுவாள் போன்று சிறைப்புறமாகத் தலைவனுக்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறினள்.—256.

7. காவற்பறை கேட்குந் தோறும் இவள் (தலைவி) கண் துயிலாமைக்குக் காரணம் என்ன? என அவ்விடத் துள்ளவர் கூறினர். இதுவும் சிறைப்புறமாக வரைவு கடா தலைப் பயக்கும்.—258.

8. யாம் அவனை (தலைவனை) எதிர்ப்படலாம் என்று இன்புற்று வளர்த்த தினைத்திரள் இப்புனத்தின்கண் இப் போது இல்லை. இனி நாம் தலைவனை எதிர்ப்படுவது எப்படி என்று சிறைப்புறமாகத் தலைவனுக்கு இரக்கமுற்று வரைவு கடாயினாள்.—142.

3. தோழி செவிலியிடம் (தலைவியைப் பற்றிக்) கூறுதல். (௬ IV - 3)

1. ஒருவன் கையில் இருந்த மாலையைத் தன் பாவைக்கு வேண்டும் என்று தலைவி ஆயத்துடன் விளை யாடி இருந்தபோது கேட்டாள். அவன் அது கொடுத்துப் போயினான் என்று தோழி செவிலியிடம் கூறி அறத்தொடு நின்றாள்.

2. உடம்பும் உயிரும் போல ஒருவரை ஒருவர் இன்றி யமையாமையால் இவள் (தலைவியின்) கருத்தைக் கடவார் (தலைவர்). கமலங் கலந்த தேனும் சந்தன மரமும்போல இயைந்து இவள் (தலைவியின்) கற்புவழி நிற்றலையுடைய ராய் இவள் வழியே நின்று ஒழுகா நின்றார்; எனத் தலைவன் வழி ஒழுகி நின்றமையை (தலைவி மணம் செய்த பின்னர்) மணமனை காணவந்த செவிலிக்குத் தோழி கூறினள்.

4. தோழி செவிலியை விளித்தல் (கூ IV - 4)

அன்னே !

5. தோழி தலைவிக்குக் கூறியது (கூ IV - 5)

தலைவியிடம் தோழி கூறுதல் என்னும் தலைப்பு. கூ - 10 இல் பார்க்க.

6. தோழி தலைவிக்குத் தேர் வரவு கூறல் (கூ IV - 6)

பொருள் வயிற் பிரிந்த தலைவன் முகிலொடு வந்து புக "இம் முகில் இவளது (தலைவியின்) ஆவியை வெல்லு மாறில்லை. ஏனெனில் அன்பர் தேர் கதுமென வந்து பொருந்தியது" என்று தோழி தலைவிக்குத் தேர்வரவு கூறினள்—349.

7. தோழி (தலைவி, தலைவனிடம்) கூறுவது (கூ IV - 7)

தலைவன் தலைவி இருவரிடமும் தோழி கூறுதல்—பார்க்க. பக்கம் 38 (உ-க - 4)

8. தோழி நெஞ்சோடு கிளத்தல் (கூ IV - 8)

1. காகத்து இரு கண்ணிற்கு ஒன்றே மணி என்பது போல இவ் இருவருக்கும் (தலைவன், தலைவி - இவ்விரு வருக்கும்) உயிர் ஒன்றே. எனத் தோழி தன்னுள் வியந்து கொண்டாள்—71.

[இது தலைவன் தலைவி இவர்களுடைய கூட்டம் உண்மையை உணர்ந்த தோழி தன்னுள் கூறியது.]

2. செவிலி கட்டு வைப்பியா நிற்ப, "எங்குடியினைக் குற்றப் படுத்த அல்லவோ இக்கட்டு வித்தி நிற்கப் புகு கின்றாள்," என்று தோழி தன்னுள் கலக்கமுற்று நின்றாள்—284.

3. சிலம்பன் தந்த பெறுதற்கரிய தழைகளைத் திரு மணம் ஆகும் வரையிலும் வாடாமல் வைத்து ஆற்றி

பிருந்தாள் தலைவி என்று தோழி தன்னுள்ளேயே மகிழ்ந்தாள்—300.

4. •தலைவன் ஓதற்கு அகல்வன் எனக் கேட்ட தலைவியின் கலக்கத்தைக் கண்ட தோழி தான் சொல்லிய சொல் இவள் (தலைவியின்) செவியின்கண் காய்ந்த வேல் போலச் சென்று எய்திற்று என்று தன்னுள்ளே கூறினள்—310.

5. தலைவன் பொருள்வயிற் பிரிந்த பிரிவு கேட்ட தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி அவளுடைய இரவுறு துயரத்திற்கு இரங்கி, "அருக்கனது தேர் வருதல் எப்போது? இவள் ஆறுதல் எப்போது?" என்று கூறினள்—339.

6. பரத்தையிடம் பிரிந்த தலைவனை நினைந்து நெஞ்சு உடைந்தும் தலைவி பொறுத்திருந்தமையைக் கண்ட தோழி தலைவியின் பொறுமை கண்டு அவளை உவந்து கூறினள் —353.

[நாயகன் வாயில் வேண்ட நாயகி நெஞ்சு நெகிழ்ந்தமை கண்ட தோழி எம் போல்வார் அன்றோ இவையிற்றுக்கு வெருள்வார்கள். இவள் பெருமனைக் கிழத்தியாகையால் தலைவன் செய்த கொடுமை கண்டு நினையாது நெஞ்சு நெகிழ்ந்து வாயில் நேர்ந்தாள்.]

9. தோழியிடம் தலைவி கூறுதல் (௯ IV - 9)

1. பேய் கண்டாற் போல நின்றான் எனத் தலைவன் நிலைமை கேட்ட தலைவி பெருநாணினள் ஆதலின் இதனை அறியாதாளைப் போல மறுமொழி கொடாது, 'வங்கம் மலி கலி நீர் இல்லை வானவன் நேர் வருமே எனப் பிறிதொன்று உரைத்தனள்—85.

2. சிங்கம் யானை வேட்டை செய்கின்ற இருட்டில் எம் வள்ளலை (தலைவரை) வா என்று சொல்லத் தகுமோ? என ஏதம் கூறி இரவில் தலைவன் வருதலை வேண்டாம் என்று தலைவி கூறினள்—157.

3. ஏதம் கூறித் தலைவன் வரவை மறுத்த தலைவி, அவன் ஆற்றாதுஙகிய நிலைமை கேட்டு, யான் புனலிடை வீழ்ந்து கெடப்புக, என்னுயிர் தந்த பெரியோர்க்குச் சிறியேன் சொல்லுவது அறியேன் எனத் தலைவன் இரவில் வருவதற்கு உடம்பட்டாள்—158.

4. தலைவன் துணிவொடு சுரம் போதலைக் கேட்ட தலைவி, இந் நீரில்லாத வெய்ய சுரத்தே இப்பொழுது இவர் நம்மை உடன் கொண்டு போகைக்குக் காரணம் என்னோ? எனத் தோழியை வினவினள்—206.

5. 'இக் கல்லதரின்கண் நீர் வந்தவாறு என்னோ என்று வினவுவாரைப் பெற்றேமாயின் இத்தன்மை உடைத்தாகிய மிக்க இருளின்கண் யாம் அவருழைச் சேறல் அரிது என்று; சென்றேமாயினும் அவ்வாறு சொல்வாரில்லை' எனத் தலைவி செலவு நினைந்து கூறினள்—264.

(இது தலைவற்குச் சிறைப்புறக் கிளவி)

6. யான் தலைவர் கூறியதின் மெய்ம்மை கண்டும் என் நெஞ்சு என் வசம் நிற்கவில்லை. உயிர் பொறுத்தற்கு அரியதாய் இருக்கின்றது என்று தலைவி தோழியிடம் தேறாது புலம்பினள்—278.

7. வெறி விலக்குவிக்க நினையாநின்ற தலைவி, மேலறத்தொடு நிற்பாளாக, 'அயலார் ஏசுக, ஊர் நகுக; அதுவேயும் அன்றி யாயும் வெகுள்வளாக; அதன்மேல் நீயும் என்னை முனிவாயாக; நீ தேறாயாகில் சூளுற்றுத் தருவேன்; யான் சொல்லுகின்ற விதனைக் கேட்பாயாக', எனத் தோழிக்குக் கூறினள்—289.

8. யான் முன்பொரு நாள் கடற்கரையிடத்தே வண்டல் செய்து விளையாடாநின்றேனாக, அந்நிலைமைக்கட் கீழ் காற்று மிகுதலாற் கடல் ஏறிவர யான் உன்னை (தோழியை) விளித்தேன். நீ ஒரு சிறிது அப்புறம் போயிருந்தபடியால் அங்கு வந்த ஒரு தோன்றல் என்னைத் தன்கை தந்து கரையில் சேர்த்துவிட்டுத் தன் சேரிக்குப்

போய்விட்டான். இனி நினக்கடுப்பது செய்வாயாக, எனத் தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றாள்—290.

9. உன்னை விட்டுப் பிரியேன் என்று சொன்ன தலைவர் தாமே பிரிவாராயின் இதற்கு நாம் என் செய்வது? என்று தலைவரின் வாய் மொழி தோழியிடம் கூறித் தலைவி வருந்தினள்—311.

10. இக் கார் (மேகம்) சென்று அப்பாசறைக் கண் தோன்றுமாயின் எம்மை நினைத்தாற்றாராய், அவ்வினை முடிக்கமாட்டார் என்று வருந்துகின்றேன்! எனப் பிரிவாற்றாமையைக் கார்மிசை வைத்துத் தலைவி தோழியிடம் கூறி வருந்தினள்—317.

11. தாம் முன்பு என்னிடம் சொன்ன அருள் தரும் இன்சொற்கள் அத்தனையும் மறந்து தலைவர் எனக்குப் பொருள்தரச் சுரம் சென்றார் என்று கூறிய பிரிவுள்ளிப் பாலை நிலத்தணைய தலைவனை மருத நிலத்தணைக்கித் தலைவி புலந்து கூறினள்—336.

12. கனவிடை வந்து அவர் (தலைவர்) மார்புதரத் தான் அதனை நனவென்று மயங்கிப் புலந்து அவனோடு புணராது இகழ்ந்தமையைத் தலைவி தோழிக்குச் சொன்னாள்—355.

13. உடைமணி கட்டிய நடைமணியை (புதல்வனை) நமக்குத் தந்த பின்னர் நம் காதலர் (தலைவர்) நம்முடைய ஆயத்தார் முன்பு இன்று நம் கடையை (வீட்டுவாயிலை)க் கண்டார். இதுவன்றோ நம் மாட்டு அவர் அருள்! எனத் தோழிக்குத் தலைவி வாயில் மறுத்துக் கூறினள்—385.

10. தோழியும் சிவனும் (௲ IV - 10)

1. தனது திருவடியைக் காட்டி நின்று ஆண்டு கொண்டு அவ்வடியை என் (தோழியின்) முடிக்கு மாமலர் ஆக்கும் முன்னோன். 2. அமிழ்தாய் என்றும் என் வினை கெடச் செய்தவன். 3. தேவர்கள் ஏத்தும் என் கூத்தன்.

4. என்னிடத்திலின்றும் துதி பெற்றுக் கொண்டவன். 5. நான் எப்பொழுதும் தியானிக்கின்ற மருந்து. 6. பிரமனுக்கும், மாலுக்கும் அரியோன்.

7. என்னைப் பிடித்து ஆண்டு எல்லை கடந்த இன்பத்தைத் தந்தவன். என் கடைக் கண்ணாலும் நான் பிறரை ஏத்தாத வகை இரங்கித் தமது கடைக்கண் வைத்தவர் தில்லைச் சங்கரன்.

8. தமது திருவடியை எனது தலைமீது வைத்து எரியாடும் பிரான்.

9. என்னைத் தமது தொண்டினின்றும் நீங்காத வண்ணம் அருள் செய்தவர் சிற்றம்பலவர்.

10. தமது திருவடிக்கே ஆய்தந்த அன்பு தந்து ஆட்கொண்டவர் அம்பலவர்.

11. விண்ணோர் வணங்க நாம் ஆதரிக்க நடம் பயில்வார் திருச்சிற்றம்பலத்தார்.

12. முதற்கண் மலையை வில்லாக வளைத்துப் பின்னர் என்னை ஆண்டு கொண்டார்.

13. என் பாசத்தளையை அறுத்துப் பல பிறவித் தொகை நீங்கும் வண்ணம் என்னை ஆண்டு கொண்டார்.

14. நான் மறந்தும் பொய்யான தேவர்களை வணங்காமல் தமது திருவடிக்கே அடியேனை உய்யும் வண்ணம் புகும்படி செய்தார் தில்லை நின்ற பெருமான்.

11. தோழியும், நற்றாயும் (க IV - 11)

தலைவன் குறியிடைச் சென்று நிற்ப, அக் குறிப்பறிந்து "அரையிரவின் கண் ஒரு தேர் வந்தது என்று தெரிந்து அன்னை (நற்றாய்) சிறிதே கண்ணும் சிவந்து என்னையும் பார்த்தாள்" என்று தோழி தலைவிக்குக் கூறுவாள் போன்று சிறைப்புறமாகத் தலைவனுக்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறினள்.—256.

12. தோழியைக் குறிப்பன (௯ IV - 12)

1. அரும் பெறல் தோழி, அளி சென்ற பூங்குழல் தோழி, விரை ஏர்ங்குழல் பேதை.

2. தோழி தன்னைக் குறிப்பது :

1. அடியேன். 2. மறந்து மற்றப் பொய்வானவரில் புகாது தன் பொற்கழற்கே அடியேன் உய்வான் புக ஒளிர் தில்லை நின்றோன். 3. வினையேன்.

13. தோழியைச் செவிலி விளித்தல் (௯ IV - 13)

1. அயில்லெனப் பெருங் கண்ணாய் பல் பூங்குழலாய்.

2. தோழியைச் செவிலி வினவுதல் :

என் பிள்ளை (தலைவி) எங்குற்றது? நீ கவலைப்படுகின்றாய் இதற்குக் காரணம் என்ன என்று வினவிச் செவிலி தலைவியைத் தேடினள்.

14. தோழியைத் தலைவன் குறிப்பது. (௯ IV - 14)

அரும் பெறல் தோழி, தில்லை நன்னாட்டுப் பொலிபவர், நீ அனைய பொன் (நீ என்பது).

15. தோழியைத் தலைவன் விளிப்பது (௯ IV - 15)

அல்லியங் கோதை நல்லாய், ஏந்திழையே, திருச்சிற்றம்பல மனையாய், தில்லை நன்னாட்டுப் பொலிபவரே, தில்லை யொப்பாய், தேமொழியே, நல்லாய், மலர் வாட்கண் நல்லாய், மின் தங்கு இடை, வெள்வளையே.

16. தோழியைத் தலைவி விளித்தல் (௯ IV - 16)

1. கார்மயிலே, சுடர்க் குழையே, நலம்பாய் பாவாய், மணிவாணகையாய்.

2. குறித்தல்.

கொடியவள், உகிராற் களையக் கூடியதற்கு எறிவாள் குறித்தவள்.

17. தோழி வர்ணனை (௪ - 17)

1. அணிகலம்: ஆரம், மேகலை, குழை, தொடி, வளை.

2. அல்குல்: கலைக்கீழ் அகல் அல்குல் பாரம், பொன்னிற அல்குல்.

3. இடை: சிற்றிடை, துடியிடை, நுண்இடை, மின் தங்கு இடை.

4. எழில்: பேர் எழில்.

5. கண்: அயில் எனப் பெருங் கண்ணாய், கண் மலராங்காமன் கணை, சிலைக்கீழ்க்கணை அன்ன கண், மலர் வாட்கண்.

6. குழல்: கருங்குழல், சுரிகுழல், பல் பூங்குழல், மொய் குழல்.

7. கொங்கை: ஆரங் கண்ணார்ந் திலங்கு முலை.

8. தலை: மாத்தலை.

9. பல்: மணி வாணகை, வெண்ணகை.

10. மாலை: அல்லியங் கோதை.

11. மொழி: குழற்றலைச் சொல்லி, தேமொழி.

12. வாய்: செவ்வாய், மணிவாய்.

ரு. செவிலி (5)

செவிலி (தலைவன் தலைவியை) நாடத் துணிந்தது (க V - 1)

1. தலைவனுடன் சென்ற தலைவியைச் செவிலி நாடத் துணிந்தாள்.—234.

2. "நான்மறை உத்தமரே! நாங்கள் தலைவன் தலைவியை மணம் செய்யப் பெறுமாறு உண்டோ" என்று செவிலி அவர்களிடம் சோதிடம் கேட்டாள்.

3. "இது மாணிழை சிறடி; அது அக் கள்வன் (தலைவன்) அடி" என்று செவிலி அவர் தம் சுவடு கண்டு அறிந்தாள்.—237.

4. தலைவனின் அடிச்சுவடு கண்டு "இக் கான் மலர் துளைபொருரு விடலையினனே போதற்குத் தருங்காலாய் அவ்வாறு ஒத்தது" என்று தலைவியின் சுவடு கண்டு செவிலி இரங்கினள்.—238.

5. அயலான் ஒருவனோடு தலைவி எனைப் பிரிந்தாள். அவளை நீ கண்டனையோ என்று வேட்ட மாதரைச் செவிலி கேட்டாள்.—239.

6. வெய்ய சுரத்தே மாதர் சென்றால், இது நினக்குந் தகுதி அன்று என்று கூறிற்றில்லை. நீ வாழ்வாயாக; எனச் செவிலி புறவொடு புலந்து கூறினள்.—240.

7. "என்னுடைய பாவை (தலைவி) உன் முன்னே காட்டைக் கடப்பக் கண்டு நின்றும் நீ இன்னவாறு போனாள் என்று எனக்கு வாயும் திறக்கவில்லை. நீயும் நின் பாவையும் நின்று நிலவும் குரவே" என்று செவிலி குரவொடு வாடி உரைத்தாள்.—241.

8. ஒரு பேதை (தலைவி) தன்பின் வர ஒரு பெருந் தகை (தலைவன்) முன்னே வருமோ? உரைமின் என்று செவிலி எதிரில் வந்த விரதியரை வினவினள்.—242.

9. மான் போன்ற ஒருத்தி (தலைவி) ஓர் ஏந்தலோடு நும் எதிரே வரக் கண்டிரோ எனச் செவிலி வேதியரை வினவினாள்.—243.

10. புணர்ந்து உடன் வருவோரை "நும் போல் இருவர் செல்வதைக் கண்டிரோ. அவர்கள் தாம் மீண்டார் என நினைத்தேன்" எனச் செவ்லி கேட்க "ஆளி அன்னானைக் கண்டேன். பின்னர் அன்னை (செவிலி) சொல்லியது என்ன? அன்னைக்கு அதைச் சொல்லுக." என்று தன்

னுடன் வந்தவளிடம் (எதிரில் வந்தவர்) கூறினர். (இது பிறன் மனை நோக்காத பேராண்மை).—244.

11. தலைவியைத் தேடிச் சென்ற செவிலி "தலைவி நின்ற இடம் இது. ஆங்கு வேங்கை அலற வேல் கொண்டு அவ் வேங்கை அலறும்படி வென்ற இடம் அது" என்று வியந்து கூறினள்.—*245.*

12. "காதலியோடு ஒரு வடிவாய் விளையாடும் புலியூரன் என்றே கருதி நாங்கள் அவ் எழிலைத் தொழ நினைந்தோம். அத்தன்மை சொல்லலாவதொன்றன்று" என எதிர் வருவார் அவர் இயல்பை எடுத்துக் கூறினர்.—*246.*

13. இவை பெடுத்துரைத்தவர் "அவ் விருவரும் (தலைவன், தலைவியும்) தில்லையின் எல்லை சென்றனைவர்; இனி நீ சொல்ல வேண்டாம். மீள்வதே காரியம்" என்று செவிலியிடம் கூறினர்.—*247.*

14. சந்தனமும், முத்தும், சங்கும், தாம் பிறந்த இடங்கட்கு யாதும் பயன்படா ; தம்மை விரும்பி அணிவாரிடத்தே சென்று பயன் தரும். அதுபோல, மகளிரும் தாம் பிறந்த இடத்துப் பயன் படார். நீ கவலை வேண்டா" என்று உலகியல்பு கூறினர்.—*248.*

15. உலகு இயல்பு கூறினவர் "இவர் அவளை (தலைவியை) வளர்த்த செவிலித்தாய் போலும்" என்று தம்முள் கூறிச் செவிலியை மீட்டுக் கொண்டு போயினர்.
—*249.*

1. செவிலி தன்னைக் குறிப்பது (கூ V - 2)

1. அருவினையேன், முன் செய்வினையேன்.

2. செவிலியைக் கண்டோர் (உடன் போக்கில்) குறிப்பது.

அன்னை, ஆண்டில் எடுத்தவராம் இவர் தாம்.

3. சேவிலியும், சிவனும் (௩ V - 3)

௧௰ நெஞ்சகத்தே பேர்ந்தறியாதவன்.

௬. நற்றாய் (6)

1. நற்றாய் கொடிக்குறி பார்த்தல் (௫-17)

(காகத்தை நயந்து வேண்டியது)

"தலைவன் தலைவி அவ்விருவரையும் இப்பொழுதே வரும் வண்ணம் நீ கரைந்தால், நினக்கு இடும் உணங்கலை, அஞ்சாது இருந்து உண்ணலாம்; அதுவன்றித் தெய்வத்திற்கு வைத்த நிணத்தை யுடைய பலியையும் நினக்கே வரைந்து வைப்பேன்; அவ்வாறு கரைவாயாக" என நற்றாய் கொடிக்குறி பார்த்தாள். "குணங்கள் அஞ்சாற் பொலியும் நல சேட்டைக் குலக் கொடியே" என்று காக்கையை நயந்து புகழ்ந்து கேட்டனள்.

காக்கையின் குணம் ஐந்து :—

" காலை எழுந்திருத்தல், காணாமலேபுணர்தல்,
மாலைகுளித்து மனை புகுதல்—சாலவே
உற்றாரோ டுண்ணல், உறவாடல் இவ் ஐந்தும்
கற்றாயோ காக்கைக் குணம். (தனிப்பாடல்)

சேட்டை — மூதேவி

கொடி — காக்கை

மூதேவியின் கொடி காக்கை.

2. நற்றாயும் சிவனும்

1. தன்னை அடைந்த அந்தணனை ஏதம் செய்யப் புகுந்த காலனுடைய வலி கெட ஒரு திருவடியை வைத்த எழிலை உடைய தில்லைக்கணின்ற எல்லாப் பொருட்கும் மேலானவன் புகுந்து அணியனாய் என்னிடத்து நின்றவன்.

2. பிறவி பெற்றமற் செய்தவன்.

3. நற்றாயைச் செவிலி வினாவுதலும் நற்றாய்க்குக் கூறுதலும் (சூ - 3)

வினாதல்

வேயின தோளி.

1. கூறுதல்:—நீ கவன்று மெலிய வேண்டா, நான் அவள் (தலைவி) புக்கவிடம் புக்குத் தேடி வருவேன் என்று செவிலி நற்றாய்க்கு உரைத்தனள்.—234.

2. இளையளாகிய இவளை (தலைவியை) என் சொல்லிப் புகழுவோம். முன்னெழும் இரண்டு எயிறு முளையாத இளமைப் பருவத்தே அறிவு முதிர்ந்தாள் எனத் தலைவியின் கற்பை வியந்து நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள் செவிலி.—294.

3. தில்லை நகரில் யான் கண்ட தில்லையின் இல்லம் நமது இல்லத்தோடு ஒக்கும், அவள் (தலைவி) நின்னோடு ஒக்கும். அவன் (தலைவன்) கொழுநனோடு ஒப்பான். அவளுக்கு (தலைவிக்கு) பணி செய்பவள் என்னோடு ஒப்பாவள். அவள் இல்லின் அயலார் நம் இல்லின் அயலாரொடு ஒப்பாவார் என்று தலைவியின் மணமனைச் சென்று மகிழ்ந்த செவிலி நற்றாய்க்குத் தலைவியின் வாழ்க்கை நலம் கூறினாள்.—302.

4. தலைவியின் இடை இறும் என்று அஞ்சி அவள் நெற்றியில் பொட்டணியான். பூவும் அணியான். மலர் அனறி மிதிப்பக் கொடான். வண்டு உறுத்தும் என்று அஞ்சி அவள் தலையில் மலர் வையான். இவ்வாறு அவனுக்கு அவள் மேல் அவ்வளவு காதல் என்று தலைவனுக்குத் தலைவியின் மேல் உள்ள காதலைச் செவிலி நற்றாய்க்குக் கூறினாள்.—303.

5. அவள் அவனை ஒழிய வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதாளாதலான். அவன் தன்னை வணங்காத பகைவரைச் சென்று இட்டித் திறை கொள்ளச்

மை ற கொண்டு வந்து அவனது இல்லத்து அல்லது ஆண்டுத் தங்கியறியான் என்று கூறி நற்றாய்க்குத் தலைவியின் கற்பைச் செவிலி அறிவித்தாள்.—304.

6. "அவள் அவனை ஒழிய வணங்காமையின் அவன் ஊரும் களிறும் வினைவயிற் சென்றால் அவ்வினை முடித்து வந்து தன் பந்தியிடத்தல்லது ஆண்டுத் தங்காது ஆதலால் அவளது கற்பு அந்திக் காலத்து வட மீனையும் (அருந்ததியையும்) வெல்லும்," என அவளது கற்புப் பயந்தமை நற்றாய்க்குச் செவிலி கூறினள்.

குறிப்பு:—தான் (தலைவி) இருந்த தேசத்தில் அரசனுக்கு வெற்றியுண்டாம். ஆதலால் தன் கணவனுக்கு (படிகடந்து) செல்லவேண்டா என்பது கருத்து.—305.

7. "வேந்தற்கு உற்றுழிப் பிரியினும் அவன் ஊரும் தேரும் வினை முடித்துத் தன் நிலையில் அல்லது புறத்துத் தங்காது. அவளும் அவனை யொழிய மற்றொரு தெய்வமும் மனத்தானும் நினைந்தறியாள். இஃது இவர் காதல்" என அவ்விருவர் காதலும் மருவுதலைச் செவிலி தலைவிக்குக் கூறினாள்.—306.

(இஃது இருவர் அன்பும் பொருந்தின படியைச் சொன்னது.)

8. இருவர் காதலும் மருவுதல் கூறின செவிலி, "இவ்விருவருடைய காதலும் களிப்பும், இன்ப வெள்ளத்திடை ஓர் உயிர் இரண்டு உடம்பைக் கொண்டு திளைத்தலோடு ஒக்கும்." என்று நற்றாய்க்குத் தலைவன் தலைவியின் கலவியின் இன்பம் கூறினள்.—307.

4. *நற்றாயைத் தலைவி குறிப்பது (VI - 4) பக்கம்-157.

விழ்பனியிடைக் கிடந்து வாடித்துயர்வாயாக வென்று என்னைப் பெற்றவளை நோவதல்லது யான் யாரை நோவே

தாயர் ஐவர் :—1. பாராட்டுந்தாய், 2. ஊட்டுந்தாய், 3. முலைத்தாய், 4. கைத்தாய், 5. செவிலித்தாய்.
செவிலித்தாய்—வளர்ப்புத்தாய்; ஈன்றதாய்—(நற்றாய்).

ளென *முன்பனிக் காற்ருது நற்ருயொடு நொந்து தலைவி கூறினள். 320

5. நற்ருயைத் தோழி குறிப்பது (VI - 5)

எம் அன்னை.

6. நற்ருயைத் தோழி குறிக்கும் சொற்கள் (VI - 6)

அன்னை, யாய்.

எ. தலைவன், தலைவி

1. தலைவன் பிரிவால் தலைவிக்கு நேர்ந்தவை (VII - 1)

1. அஞ்சன மெழுதின் எழுதுகின்ற காலம் அத்துணையுங் காதலர் தோன்ருமையான் அவ்வஞ்சனத்தை ஒழிவது அறிவாள். ஆதலால் அஞ்சனம் எழுதுவ தில்லை. (இது தலைவன் பொருள் வயிற் பிரியும்போது நிகழ்ந்தது) 334.

2. மேகலை தன் நிலையினின்றும் போகா நின்றது; வளைகள் கழன்று வீழா நின்றன. உயிர் செல்வதற்கு முன்னே அன்பர் தேர்வந்து தோன்றிற்று. (இதுவும் தலைவன் பொருள்வயிற் பிரிவுறு போது நிகழ்ந்தது.)

3. தலைவன் பொருள் தேடப் பிரிய நினைக்கின்றனர் என்று சொன்னவுடன் முலைகள் பொன்னைத் தந்தன. கண்கள் முத்தம் தந்தன. 335.

4. தலைவியின் வளைகளைத் தம்மோடு கொண்டு போயினர். (இது தலைவன் ஒருவழித் தணந்தபோது நிகழ்ந்தது.)

2. தலைவி தலைவனுடைய பிரிவை ஆற்ருது உரைத்தது (VII - 2)

1. நீத்து அகன்ற வள்ளலின் உள்ளத்தை நெகிழ்த்து இவ்விடத்தே தரவில்லையோ எனக் கூடல்

* முன்பனி—மார்கழி, தை மாதங்கள்.

தெய்வத்தை வாழ்த்தித் தலைவி கூடல் இழைத்து வருந்தினள். 186.

[இது தலைவன் ஒருவழித் தணந்தபோது தலைவி கூடல் இழைத்தது.]

2. கூடல் இழைத்து வருந்திய தலைவி. "துறைவர் போக்கும் அவர் சூளுறவும் என்னை வருத்துகின்றன. அதன் மேல் நீயும் (சூரியனும்) ஏகா நின்றாய். யான் உய்யும் வழி என்னோ என்று கூறித் தலைவி புலம்பினள். 187.

[இதுவும் தலைவன் ஒருவழித் தணந்தபோது நடந்த நிகழ்ச்சி.]

3. சுடரொடு புலம்பிய தலைவி, "கதிரவன் மறைந்தான் காப்பவர் சேயர்." மீனுண்ட அன்னங்களும் போய்த் தஞ்சேக்கையை அடைந்தன என்று கூறிப் பொழுது போனது கண்டு கவலை உற்றாள். 188.

[இதுவும் தலைவன் ஒருவழித் தணந்தபோது நடந்த நிகழ்ச்சி.]

4. பொழுது போனது கண்டு மயங்கிய தலைவி என் உள்நோய் அறியாது கழி இடத்து உணவு தேடுகின்றன வண்டானங்கள் (நீர்க் கோழிகள்) என்ன பாவம் இது 189.

[இதுவும் தலைவன் ஒருவழித் தணந்தபோது நடந்தது]

5. பறவையொடு வருந்துகின்ற "தலைவி" இவள் வருந்தாமல் விரைய வர வேண்டுமென்று ஞாயிற்றை நோக்கி வனசங்கள் (பங்கயங்கள்—தாமரை மலர்கள்) தம் கை குவியா நின்றன. ஆதலால் என் மாட்டு அன்புடையன போலும்!" எனப் பங்கயத்தோடு பரிவுற்றுக் கூறினள். 190

6. உலகெல்லாம் துயில்கின்ற இந்நிலைமையில் யான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தை அவர்க்குச் (தலைவர்க்கு) சென்று சொல்லாது தான் தன் சேவலைப் பொருந்திக் கவலையின்றித் துயில்கின்றது", என அன்னத்தொடு அழிந்து தலைவி கூறினாள். 191.

தலைவனும் தலைவியும் (VII - 3.)

1. கண்ணிற்கு மை எழுதும்போது தலைவன் தோன்றவில்லை என்று தலைவி கண்ணிற்கு மை எழுதுவதை விட்டு விட்டாள்.

2. காக்கையின் இரண்டு கண்ணிற்கும் ஒரே மணி கலந்தது போல, இருவர் (தலைவன், தலைவி) ஆகத்துள் ஒரே உயிர் கண்டோம்; இருவருக்கும் இன்ப துன்பங்கள் ஒன்றாய் வரும். 71.

3. தலைவி கழுநீர் மலர், தலைவன் அம்மலரில் உள்ள தேனைப் பருகும் வண்டு. 123.

4. தலைவன் தலைவி உடைய காதலுங் களிப்பும், இன்ப வெள்ளத்திடை அழுந்தப் புகுகின்றதோர் உயிர் ஓர் உடம்பால் துய்த்தல் ஆராமையால் இரண்டு உடம்பைக் கொண்டு அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்து திளைத்ததனோடு ஒக்கும். அதுவன்றி அவ்வின்ப வெள்ளம் ஒருகாலத்தும் வற்றுவதும் முற்றுவதும் செய்யாது. 307.

[இது நற்றாய்க்குச் செவிலி கூறியது.]

5. தலைவியைத் தேடிச் சென்ற தலைவன் முன்னொரு நான்று அவளைக் கண்ட பொழிலை அணைந்து, அப் பொழிலிடைக் காம்பிணை, மாமயில், கதிர்மாமணி, வாம்பிணை, வல்லி யொல்குதல் ஆகிய உறுப்புக்களைக் கண்டு இப் பொழில் என் சிந்தனைக்கு அவள் (தலைவி) போலவே தோன்றுகின்றது என்று கூறி இன்புற்று நின்றான். 38.

(காம்பு) வேய் இணைந்து நிற்றலால் தோள்களை ஒத்தும், களிப்பை உடைய மயில்களால் சாயலை ஒத்தும், ஒளியுடைத்தாகிய நீலமணிகளால் கூந்தலை ஒத்தும், இள

மான் நோக்கத்தால் விழியை ஒத்தும் (இருத்தலானும்) கொடி போன்று இடை நுடங்கலானும், இவள் (தலைவி) வாழ்கின்ற புனமும் இவளே என்ற எண்ணத்தை காளை (தலைவன்) மனத்துக்குத் தந்து இன்பத்தைத் தருகின்றது என்று தலைவன் (தலைவியைக் கூறித் தனக்குள் மகிழ்ந்தான்.) 38.

6. காயமும் ஆவியும் போன்றனர் தலைவனும் தலைவியும், 207.

7. பல யோனிகளில் சென்று சென்று பிறக்க நேரினும் பின்னும் சென்று சேரத்தகுந் தன்மையை உடையவர் தலைவர் என்று தோழி தலைவிக்குக் கூறினள். 205.

8. தலைவி எஞ்ஞான்றும் கணவன் ஆகிய தெய்வத்தை அன்றி, வேறொரு தெய்வத்தைப் பணிந்தறியாள். தலைவனும் எடுத்த காரியத்தை முடித்து இவளிடத்தே (தலைவியிடத்தே) அன்றி வேறொரு இடத்தே தங்கி அறியான் என்று இருவர் காதலையும் செவிலி நற்றாய்க்கு உரைத்தாள். 304.

9. உடம்பும் உயிரும் போல ஒருவரை ஒருவர் இன்றியமையாமை இவள் (தலைவி) கருத்தைக் கடவார். (தலைவன்) கமலங் கலந்த தேனும் சந்தனமரமும் போல இயைந்து இவள் வழியே நின்று ஒழுகாநின்றார் தலைவர் எனத் தோழி செவிலிக்கு உரைத்தது. 301.

10, தலைவியின் இடை இறும் என்று கருதி அவள் நெற்றியில் பொட்டு இடமாட்டான்; அணி கலன்களைப் பூட்டி அணியான். அவள் அடி நோகும் என்று அஞ்சி மலரினன்றி மிதிப்ப விடான். வண்டு மொய்த்து உறுத்தல் அவள் கூந்தலில் மலரவையான் என்று தலைவனுக்குத் தலைவியின்மீது உள்ள காதல் மிகுதியைச் செவிலி நற்றாய்க்குக் கூறினள். 303.

11. தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரியினும் அவன் ஊரும் தேரும் வினை முடித்துத் தன் நிலையில்

அல்லது புறத்துத் தங்காது. அவளும் அவனை ஒழிய மற்றோர் தெய்வமும் மனத்தாலும் நினைந்தறியாள். இது செவிலி நற்றாய்க்குக் கூறியது. 306.

12. தலைவனையும் தலைவியையும் வழி இடை கண்டவர் கழலும் நூபுரமும், வெண்பட்டும், செம்பட்டும், மின்னுவதால் மாதொரு பாகர் போல இவர்கள் தோன்றியமையால் அவர்களை நாங்கள் தொழுதற்கு உரியர் என நினைத்தோம் என்று செவிலியிடம் கூறியது. 246.

தலைவனும், தலைவியும், தோழியும் (VII - 4)

1. எனக்கும் தோழிக்கும் உயிரும் ஒன்று, உளமும் ஒன்று. 18.

2. தலைவர் என்னை விட்டுச் செல்வாரோ என்று இத்தோழியாகிய கொடியவள் கூறுகின்றாள். இவள் சொல்லுவது நகம் பட்டுப் படாமல் இருந்த போதிலும் பின்னப்படும் குவளைப்பூ எறிதற்கு வாளுறை கழித்தாற் போல உள்ளது என்று சொல்லித் தலைவி ஆற்றாது புலம்பினள். 334.

3. தலைவன் மேல் இருந்த ஆசையினால் இதுவரை தினை வித்திக் காத்தோம். தினை கொய்த பின் நீ வினையை வித்திக் காக்கின்றதாக முடிந்தது எனத் தினையொடு வெறுத்துத் தளர்வுற்றுத் தோழி உரைத்தனள்.

4. வந்த விருந்தினரோடு பேசாமல் இருத்தலை விட்டால் உங்கள் மணிவாசகத்தில் சலக்கென்று முத்துக்கள் விழுமோ என்று (தேமொழியவர் வாய் மொழி பெறாது தலைவன் கட்டுரைத்தான்). (57)

5. உங்கள் அல்குலுக்கு ஆகுமோ. ஆம் மணி நிறப் பூந்தழையே என வினவினன். (58)

6. மைவார் கருங்கண்ணி! இந்தச் சிறுபிறைக்குக் கை கூப்பித் தொழுவாயாக! என்று தோழி தலைவனிடம் கூறினாள். பிறையைத் தொழுக என்றபடி. (67)

தலைவி தலைவன் இவர்களைப் பரத்தையர் குறிப்பது (VII - 5) பக்கம் 164.

புனலூரனைப் பிரியும் புனல் ஊர்கண் அப்பூங்கொடி 372.

பூங்கொடி - 372.

7. இரவில் பெடைக்கு உருகித் தன் சிறகால் அணைதப் பனிக் குளிரில் இருந்து பாதுகாக்கின்ற சேவலைக் கண்ட தலைவன் "எனது போதரவு அவளுக்கு (தலைவிக்கு) என்னுங் கொல்லோ" என்று அவளது வடிவை நினைந்து வானை நோக்கித் தலைவன் வருந்தினான். 318.

8. 'விழா நின்ற பனியில் எல்லாரும் நெருப்புத் திரளை மேவி நிற்பத் துணையில்லாதாரைத் தேடும் புயலினம் நமக்கே அன்றித் தம்மை அடைந்தார்க்கு உதவி செய்யச் சென்றார்க்கும் (தலைவருக்கும்) சென்று பொருந்துமோ? பொருந்துமாயின் நம்மை நினைந்து ஆற்றாராய், அவ்வினை முடிக்க மாட்டார்" எனத் தலைவி *கூதிர் கண்டு தலைவனைப் பற்றிக் கவலை உற்றாள். —319.

1. முன்பனிக்கு ஆற்றாத தலைவி "புள்ளும் தம் பெடையைச் சிறகான் ஒடுக்கிப் பிள்ளைகளைத் தழுவித் துயில்கின்ற இந்த இருளில் விழா நின்ற பனியில் வாடித் துன்புறுக என்று என்னைப் பெற்றவளை நோவதல்லது வேறு யாரை நோவேன்" என்று †முன்பனிக்கு ஆற்றாது தன்னைப் பெற்றவளை நொந்து உரைத்தாள். 320.

4. ††இப் பின்பனி எங்கும் பரந்து துவலைகளைப் பரப்புவது அவள் பொறுக்கும் அளவன்று அவளைச் சொல்லுகின்றதேன்? எனக்கும் ஆற்றுதல் அரிது என்பது

*கூதிர்—ஐப்பசி—கார்த்திகை மாதங்கள். இது சரற்காலம் எனவும் படும்.

†முன்பனி—மார்கழி, தை, மாதங்கள்.

††பின்பனி—மாசி, பங்குனி மாதங்கள்

போதாமிக்க தனிமையுடையார்க்கு இப்பனி வான் சரத்தைத் தருமாயின், 'அதனொடு ஒக்கும்' எனத் தலைவன் தலைவியின் துயரத்தை நினைத்து இரங்கினன். 321.

5. குயில்கள் மாம் பொழிலைச் சுற்றும் வந்து பற்றின. இனி உயிர் வாழுமாறு ஒன்றுங் கண்டிலேன் எனத் தலைவி *இளவேனில் கண்டு துன்பமுற்றது. இது இளவேனில் முன்னுவது கண்டு தலைவி இன்னல் எய்தியது. 322

தலைவன், தலைவி, தோழி

1. வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைவன் (வினை முற்றிய பின்னர்) "கயலையும் வில்லையுங் கொண்டு கோபமுங் காட்டி ஒரு திருமுகம் வந்துள்ளது. இனிக் கடிது போதும்" எனத் தேர்ப்பாகன் கேட்ப உரைத்தான்).

(சிலேடை) வகையான், ஒரு முகம் கயல் போன்ற கண்ணையும், வில் போன்ற புருவத்தையும், இந்திர கோபத்தைப் போல் வாயையும் காட்டுகின்றது என உட்பொருள் தோன்றும். 327

2. புருக்கள் தந்துணையோடு துயின்று முன்றிற்கண் விளையாடுவ கண்டு இது நமக்கரிதாயிற்றென்று என்னிலைமை நினைந்தாற்றகில்லாளாவள். "நீ விரையத் தேரைச் செலுத்துவாயாக" எனத் தலைவியின் நிலைமையை நினைந்து தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறினன் 328

3. பிரிதலால் அழகு அழிந்து துன்புறுகின்ற தலைவியின் நகருக்கு இத்தேர் சென்று சேருவதற்கு முன், முகிலே! நீ வழங்கேல், முழங்கேல், என்று தலைவன் முகிலொடு கூறினன். 329.

4. பிரியார் என யான் அவர் பிரிவு இகழ்ந்திருந்தேன். முன்னின்று பிரிவுணர்த்தின் இவ்வுயிர் தரியாது என்று அவர் உணர்த்துதலை இகழ்ந்து போனார். இந் இரண்டு நிகழ்ச்சியும் என்னை அழிக்கின்றன, என்

*இளவேனில்—சித்திரை, வைகாசி மாதங்கள்.

முகச்சி நினைந்து சொல்லாது பிரிந்தார் தலைவர் என்று தலைவி வாடினள். 340

5. பிரிந்தமை உட்கொண்டு கலங்கின நெஞ்சொடு சென்ற தலைவனுக்குத் தலைவியின் உருவம் வெளிப்பட்டு நின்றது.

6. தலைவன் சென்ற நாளை எண்ணும் தன்மையால் பலகால் இடுதலின் நிலனும் குழிந்து, விரலும் தேய்ந்தது. தலைவிக்கு என எண்ணித் தோழி வாடினள். 345

அ தலைவியும் தோழியும்

1. தலைவியும் தோழியும் விளையாடுதல்,

குளித்தல் முதலிய (VIII - 1)

1. இனைவனம் காத்தல்.
2. சிலம்பு எதிர் கூவுதல்.
3. சிற்றிலிழைத்தல்.
4. சுனைவளம் பாய்தல்.
5. மலர் கொய்தல்.
6. ஊசல் ஆடுதல்.
7. அருவி நீர் ஆடுதல்.

117, 118.

௯. பரத்தையர் IX

1 பரத்தையர் தலைவி ஏனைய பரத்தையரைக் குறிப்பது (IX - 1) பக்கம் 165.

அமரப் புல்லும் மினலூர் நகையவர்—372.

2. பரத்தையர் வர்ணனை (IX - 2) பக்கம் 165.

அடி - வீழைய என அடி.

அழகு - இளமயில் ஏர்.

இடை : 1. அராப்பயில் நுண் இடை.
2. பணியுறத் தோன்றும் நுடங்கு இடை.

ஒளி : வாள் இணையோர்.

கண் : கண்மலர் அம்பு மாள்முதிர் நோக்கு வேல் தான் திகழ்கண்.

கரம் : ஓங்கு வளைக் கரம்.

கொங்கை : செப்புற்ற கொங்கை.

நகை : (பல்)
கதிர்த்த நகை,
மினலூர் நகை,

நுதல் : (நெற்றி)
சிலை மலி வாணுதல்.

புருவம் : அணிகாமர் கரும்புருவச் சிலை.

வளை : எடுத்தணிகை ஏறு இனவளை.

விரல் : பந்து ஆர்விரல்

1. அமரப்புல்லும் மினலூர் நகையவர்.
2. சேயிழையார் தவம் செய்த புல்லங்கள்.
3. தில்லைத் தேற்றூர்.
4. மென் தோகை அன்னார்.

3. பரத்தையரும் தலைவனும் [IX - 3] பக்கம் 166.

தலைவன் பரத்தையர் சேரியில் சென்ற பொழுது அப் பரத்தையர் அவனைத் திக்குகள் தோறும் சூழ நின்று பிடித்துக் கொண்டார்கள்.

4. பரத்தையரைக் குறிக்கும் சொற்கள் (IX-4.) பக்கம் 166.

அணிவாள் இளையோர், ஓங்குவளைக் கரத்தார், செப் புற்ற கொங்கையர், தில்லைநகர் வாய் இளையர்.

கo. பிற 10.

1. அலர் : பழிச்சொல் (X - 1) பக்கம் 165

பரவா்த களவு அம்பல் எனப்படும். அம்பல் பூலரால் அறியப்பட்டால் அது 'அலர்' எனப்படும்.

"அலராய் விளைகின்றது அம்பல் கைம்மிக்கு." 180

[அலர் என்பது பழிச்சொல்]

தோழி தலைவனை எதிர்ப்பட்டு நீ இரவில் வரவேண்டாம். அங்ஙனம் வருவது எங்களை வருத்துகின்றது! எனக் கூறிப் பின்னர், 'பகலிலும் வரவேண்டாம் ஏனெனில் அங்ஙனம் பகலில் வந்தால் நீ வருவது அலருக்கு இடமாகும்' எனத் தலைவனிடம் கூறுகின்றாள்.

2. கட்டுவித்தியின் வெறி ஆட்டம். (X - 2) பக்கம் 165.

1. செவிலியும், தலைவியும்

ஏதிலார் தூதுகண்டு அழுங்கிய தலைவியைச் செவிலி பார்த்து "இவள் முன் மாதிரி இல்லை. இவ்வாறு மெலிதற்குச் சேயினது ஆட்சியிற் பட்டனள் போலும்" என்று தலைவியின் மெலிவைக் கண்டு கூறினள். 282

2. செவிலியும் கட்டுவித்தியும்

தலைவியின் மெலிவு கண்டு செவிலி "தலைவியின் நோயைத் தெரிந்து சொல்லுமின்" எனக் கட்டுவித்திக்கு உரைத்தாள். 283.

3. தோழியும் கட்டுவித்தியும்

"எம்மிடத்தில் உண்டாகிய நாணினையுந் தள்ளி, எங் குடியினையுங் குற்றப் படுத்தி அல்லவோ? இக்கட்டுவித்தி நிற்கப் புகுகின்றது." என்று தோழி கலக்கமுற்று நின்றாள்.

4. கட்டுவித்தி நெற்குறி விளக்கியது

"மயில், சேவல், வேல் இவை நெல்லின் வடிவில் தோன்ற உள்ள படியால் முருகனைங்கு ஒழியப் பிறி

தொன்றுமில்லை." எனக் கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறினள். 285.

5. வெறி ஆட்டு

கட்டுவித்தி முருகனணங் கென்று கூறக் கேட்டு, "இப் பிள்ளை இக்குடியில் பிறந்து நம்மை இவ்வாறு நிற்பித்த பண்பினுக்கு வேலன் புகுந்து வெறியாடுக." என்று தாயார் வேலனை அழைத்தாள். 286.

6. வெறி ஆட்டுக்குத் தலைவி அஞ்சி வருந்தியது.

"வெறி ஆடி விளர்ப்பு போகாவிட்டால் அயலார் என்ன சொல்லுவார்கள். விளர்ப்பு ஒழிந்தால், தலைவனுக்கு நாம் என்ன சொல்லுவது; இருவாற்றானும் உயிர் வாழ்தல் அரிது." என்று நினைந்து தலைவி வருந்தினள். 287.

7. தலைவி வெறி விலக்குவிக்க நினைத்தல்

இங்ஙனம் நினைத்த தலைவி நாண் துறந்தும் வெறி விலக்குவிப்பேன் என்று தோழியைக் கொண்டு வெறி விலக்கு விக்க நினைத்தாள். 288.

8. அறத்தொடு நிற்றலைத் தலைவி தோழிக்கு உரைத்தல்.

வெறிவிலக்கை நினைத்த தலைவி "எனது வாயையும் மனதையும் பிரியாத இறைவனது தில்லையை வாழ்த்துவாரைப் போல நான் தூயன்; சூளுறவையுந் தருவேன்; அயலார் ஏசுக; ஊர் நகுவதாக, யாயும் வெகுளுவாளாக! நீயும் முனிவாயாக, நிகழ்ந்ததைக் கூறுவேன். கேட்பாயாக" என்று தோழியிடம் கூறினள். 289.

நாங்கள் வண்டல் செய்து விளையாடிக் கொண்டிருந்த போது, 'யான் விருந்து' என்று கூறி ஒரு தோன்றல் வந்து நின்றபொழுது கடல் அலை என்னைக் கொண்டுபோக அவன் அலையினின்று என்னை எடுத்து மீட்டான்' என்று தலைவி தோழியிடம், கூறி அறத்தொடு நின்றாள். 290.

9. "தலைவியின் குறிப்பை அறிந்த தோழி தலைவனுக்குப் புலப்படாமல் மறைத்துக் கூறுமாறு என்னேவெனத் தான் தலைவியைப் பாதுகாத்தல் தோன்றக் கூறினள். 291.

.0. வெறி விலக்கல்

வெறிக்களத்தே சென்று வேலனை நோக்கிப் "புனலிடை வீழ்ந்து கெடப்புக, வந்தெடுத்து உய்த்தவன் நிற்கப் பிறிதோருபாயத்தைக் கருதும் நின்னைப் போல இவ்வுலகத்தில் இல்லை" என்று கூறித் தோழி வெறி விலக்கினள். 292

11. செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்

நாங்கள் புனங் காத்த போது ஒரு யானை வந்து "உன் மகளை ஏதம் செய்யப்புக்கது; அதுகண்டு அருளுடையான் ஒருவன் ஓடிவந்து யானையைக் கடிந்து அவள் உயிரைப் பாதுகாத்துப் போயினன்" என்று தோழி செவிலியிடம் கூறி இனி அடுப்பது செய்வாயாக என்றனள். 293

12., நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

இளையவளாகிய இவளை என் சொல்லிப் புகழுவோம். "இரண்டெயிறு முளையாத இளமைப் பருவத்தே அறிவு முதிர்ந்தாள்." என்று தலைவியின் கற்புத் தோன்ற நற்றாயிடம் செவிலி அறத்தொடு நின்றாள். 294

.13. தேர்வரவு கூறல்

நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்ற பொழுது தலைவனுடைய தேர் ஒலி கேட்ட தோழி உவகையோடு சென்று தலைவியிடம் தலைவனுடைய தேர்வரவு கூறினள். —295.

வெறியாட்டின்போது வாத்தியம். [X - 2(14)]

முருகியம் - முருகனுக்குக் கொடுக்கின்ற வாத்தியம்

" (பழைய உரை)

3. குறி இடம் கூறல் (X - 3) பக்கம் 169.

1. தலைவி தழையை விரும்பினள் என்று உரைத்த தோழி "ஆங்கவள் (தலைவி) விளையாடுமிடத்து ஒரு பொழில் கதிரவன் நுழையா இருளாய் நடுவண் ஒரு பளிக்குப் பாறையைக் கொண்டுள்ளது. அவ்விடத்து வருவாயாக," என்று தோழி தலைவனுக்குக் (பகற்) குறி இடம் கூறினள். 116

2. "யாங்கள் சந்தனச் சாந்தணிந்து சுனைக் காவிகள் சூடித் தோகை துயிலும் வேங்கைப் பொழிற்கண் விளையாடுவோம். அவ்விடத்து நின் வரவு அறிய மயில் எழுப்புவாயாக" எனத் தோழி இரவுக் குறி இன்ன இடத்து என்று தலைவனுக்கு உரைத்தனள். 154

3. பொன் போலும் நிறைந்த நல்ல மகிழின் பூவிழ அவை விழுகின்ற ஓசையை நீ செய்யும் குறியாகத் தெரிந்து பாம் விரும்பும் மிக்க இருளில் நான் தலைவியைக் கொண்டு வருவேன். நீ குறியிடத்து வந்துநில்" என்று தோழி தலைவனுக்குக் குறி இடம் கூறினள். 210

(இது உடன் போக்கு)

4. தோழியும் தலைவியும் தலைவனும் (X - 4)

தழை.

அருந்தழை, ஆரத்தழை, ஈர்ந்தழை, கொய்தழை, நாகத் தழை (சுர புன்னைத் தழை) பூமென் தழை, மணிநிறப் பூந்தழை, மாந்தழை இவை போல்வன. பிற ஒளிநெறியிற் காணலாகும்.

தழை கிடைக்கும் இடம்.

திருக்குற்றாலத்து அசோகப் பொழில் உள்ள மலையில் அல்லது வேறு இடத்தில் கிடைக்காது. மலயத்தில் (பொதியமலையில் ஆரத்தழை, சந்தனத் தழை) கிடைக்கும். கயிலைமலை மேல் அல்லது தலைவன் எளிதில் தந்த தழை வேறு இடத்தில் கிடையாது.

தழையை அணிவது

மணி நிறப் பூந்தழையை அரையில் அணிவர் மகளிர்.

5. மடல் (X-5) பக்கம் 172

எழுதுதலும் ஏறுதலும்

1. யார் மடல் ஏறுவர் என்பது.

மகளிர் தமது ஒளி வீசும் கண்ணாகிய வலையை வீசின போது அதைக் கண்டு தமது உள்ளம் ஆகிய மீனை இழந்தவர்கள் மடல் ஏறுவர்.

எங்ஙனம் ஏறுவர்

ஈசனுடைய திருநீற்றையும், எருக்கம் பூவையும் அணிந்து கையில் தன்னுடைய படத்தையும், தான் காதலித்தவளுடைய படத்தையும் எழுதி அப்படத்தைக் கையிலெடுத்துக் கொண்டு பனைமடலால் சினம் கொண்ட குதிரை போன்ற உருவம் அமைத்து அதில் ஏறிக் கொண்டு அவளுடைய ஊர் வழியே செல்வார்.

தழையும் தோழியும்
தலைவனும் தலைவியும்

தலைவி மீது காதல் கொண்ட தலைவன் தான் கொண்டு வந்த 'தழையை ஏற்றுக் கொள்ளும்படி தோழியை வேண்டின பொழுது அவள் அதை வாங்க மறுக்க, "தழை வாங்கா விட்டால் நான் மடல் ஏறுவேன்" என்று தலைவன் கூறினபோது, "நீ பனை மரத்தை வெட்டி மடல்மா செய்தால், அதனால் பனை மரத்தில் கூடு கட்டியுள்ள பறவையின் முட்டை எல்லாம் அழியுமல்லவா. அது உன் அருளுக்குத் தகுமா?" என்று தோழி தலைவனிடம் கூறினாள். பின்னர், தோழி தலைவியிடம் சென்று "தலைவன் கொண்டுவந்த தழையை ஏற்றுக் கொண்டால் நமக்குப் பழி ஏறும். ஏற்றுக் கொள்ளா விட்டால், அவன் மடல்மா ஏறுவேன் என்கின்றான்.

என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆயினும் தலைவன் நம்மை அன்று நாம் ஈங்கோய் மலையில் புனம் காத்திருந்த போது நம்மை எதிர்த்து வந்த மலைபோன்ற யானையைத் தோற்பித்தவர்க்கு நாம் பிரதி உதவியைச் செய்ய வேண்டும்'' என்று தலைவிக்கு நினைவு ஊட்டித் தழையை ஏற்கும்படி செய்தாள். செய்தபின் தலைவனிடம் சென்று 'நீ தந்த தழையை யான் தலைவியிடம் கொடுத்து அவளை ஏற்கும்படி செய்தேன். அவள் அது (தழை) வாடும் என்று கருதாது அதை அரைத்துப் பூசினாற் போலத் தன் மேனி முழுவதும் மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டாள்'' என்று தெரிவித்தாள்.

பின்னர், அருந்ததி காணும் அளவும் தழையை வாடாமல் வைத்து அத்தழையைப் பற்றுக் கோடாகத் தலைவி ஆற்றியிருந்தாள் என, மணமுரசொலி கேட்ட தோழி தலைவியைத் தன் உள்ளே மகிழ்ந்து கூறினாள். பின்னும் ஒரு முறை தலைவி (தலைவனுடைய ஒழுக்கத்தைச் சிறப்பித்துத்) தனக்கு முன்னர் புனத்தில் மாந்தழையை ஏந்திவந்த அவர் என் நெஞ்சில் விலக்கினும் விலங்காது இருக்கின்றார் எனக் கூறினள்.

6. தூது [X — 6] பக்கம் 173.

1. "ஒரு தூது வந்து தோன்றுகிறது. அது இன்னார் தூது என்று தெரியாது'' என்று தலைவிக்குத் தோழி கூறினள்.

2. "அயலார் தூது, காதலர் தூது வரவில்லை. அவர் என் செய்யக் கருதியுள்ளார்'' என்று கூறித் தலைவி கவலை உற்றாள்.—281.

7. பாணனும் விறலியும் [X—7] பக்கம் 174.

1. தலைவன் பரத்தையர் மாட்டுப் பிரிந்து நிற்கத் "தலைவி தனியாக இருந்ததை அறியாமல் விறலியும் பாணனும் தலைவர்க்குத் துயில் எழு மங்கலம் பாட வந்து நின்றார்'' எனத் தோழி பாணன் வரவைத் தலைவிக்கு உரைத்தனள்.

7. பாணனோடு தலைவி வெகுளுதல்

நின்னிடத்து அவர் நீங்காதவருள் பெரியரென்று நீ சொல்ல வேண்டுமோ? அது கிடக்க; கொற்சேரியிலூசி விற்கும். (புலையா) ஏ ஆதனின்னி! எம் இல்லத்தில் நின்னுடைய நல்லை நல்ல பொய்யைப் பொருந்தி நிற்கலுற்றோ நீ போந்தது, என வாயில் வேண்டிய பாணனோடு தலைவி வெகுண்டு கூறினள்.

பாணன் தலைவியிடம் வெகுளற்க என்றதும் பாணனுடைய பொறுமையும்.

தலைவி வெகுண்டு நிற்ப, "நின் புருவம் நெரிய வாய் துடிப்ப, என் மேல் எறிதற்குக் கல் எடுக்க வேண்டாம்; நினது கரிய கண்களின் சிவப்பை ஆற்றுவாயாக; நீ வெகுளற்க; நினக்குப் பல்லாண்டு கூறி அடியேன் உனது அடிவலம் கொள்வன்"—எனப் பாணன் கூறிப் புறப்பட்டுச் சென்றான்.

7. பாணனும் விறலியும் [X — 7]

பாணர் — 400.

பாணன் — 375.

விறலி — 375.

விறலியும் பாணனும் வேந்தற்குத் — திறவியல் யாழ் கொண்டு வந்து நின்றார். 375.

(துயில் எழு மங்கலம் பாடுதல்)

ச. பிறபொருட்பகுதி

1. அக்கினி

சிவனும் அக்கினியும் என்னும் தலைப்புப் (பக்கம் 23) பார்க்க.

2. அசுரர், அரக்கர்

1. சிறப்பு

1. **குரண்டாசுரன் :** கொக்கு உருவம் கொண்ட இவன் தேவர்களுக்குக் கொடுமைகள் செய்தனன். அக் கொடுமையை ஆற்ருத திருமால் முதலிய தேவர்கள் சிவபிரானிடம் முறையிட அவர் இவனது இறகை வெட்டிக் கொன்றனர். அவ்வீரத்துக்கு அடையாளமாக அந்த இறகைத் தேவர்கள் விரும்பிய வண்ணம் சிவபிரான் தன் திருமுடியிற் சூடினர்.

2. **சலந்தரன் :** அச்சத்தால் தனக்கு வந்த நடுக்கத்தை வெகுண்ட சலந்தராசுரனுடைய ஆகத்தை முனிந்தார் சிவபெருமான்.

3. **சூரன் :** முருகவேளின் வேல் சூரனைத் தடிந்தது.

4. **திரிபுராதிகள் :** தனித் தலைப்புப் பார்க்க. (பக்கம் 5)

5. **இராவணன் :** தனித் தலைப்புப் பார்க்க.

2. பொது

1. **அசுரர் :** தேவர்களும் அசுரர்களும் சிவபிரானுடைய திருவடிகளைப் போற்றி வணங்குவர்.

2. தன்னைச் சிந்தித்துப் போற்ருத அசுரர்களுடைய விணத்தைக் குத்தின சூலாயுதத்தை உடையவர் சிவ பெருமான்.

3. அடியார் (4)

அடியார், அன்பர், அம்பலவன் கழற்கு ஏய்யாது அன்பினர், அருள் பெற்றவர், சீரடியார், சோதனை மன்னடியும் என்றோர், தாழச் செய்தார், தில்லை மிக்கோன் கழற்கே காதலுற்றார், தில்லையோன் அடிப்பேரது, சென்னித் திகழும் அவர், தில்லை வழுத்துநர், தொண்டனம், தொழுதெழுவார், பணிவோர் மிக்க விருப்புறுவோர், — இவை அடியாரைக் குறிக்கும் சொற்றொடர்கள். பிற ஒளி நெறியிற் காணலாகும்.

4. அடியாரும் சிவனும் (5)

'சிவனும் அடியாரும்' பார்க்க. (பக்கம் 23)

5. அடியார்களும் தேவர்களும் (6)

('தேவர்களும் அடியார்களும்' என்னும் தலைப்புப் பார்க்க).

6. அடுக்குச் சொற்கள் (7)

அணி அணி, செல்லல் செல்லல், சென்று சென்று, திசை திசை, துறை துறை, பிறழப் பிறழ, விம்மி விம்மி — இவை போன்ற 15 அடுக்குச் சொற்கள் ஒளி நெறியிற் காட்டப்பட்டுள.

7. அந்தணர், மறையோர், வேதியர் (8)

1. நான்கு மறைகளை ஓதும் உத்தமராம் வேதியரிடம் சோதிடம் கேட்பர்.

2. ஓதும் இடமாகப் பொழில்களை வேதியர் கொண்டனர். உலகத்தின் பொய் முதலாகிய குற்றங்கெட மறையவர் மறை சொல்வர்.

3. மூங்கில் தண்டு பொருந்திய கையினையும், மெல்லிய கலைத் தோல் (மான் தோல்) பொருந்திய தாளினையும் வெள்ளைப் பூணூலையும் மேகத்தினது

முழக்கத்தினை ஒத்த மறை ஒலியையும் உடையராய் மறையவர் வழி நடை கொள்வர்.

8. அமிழ்து (9)

அம்பலத்து அமிழ்து, அமிழ்தம், பெண் அமிழ்தம் மாலமுது என அமுது கூறப்பட்டுள்ளது.

9. அரசர் (10 — 12)

1. பொது : இருவேந்தர், புனைமுடி வேந்தர், போது குலாய புனைமுடி வேந்தர், மன்னர், மன்னவர் — என அரசர் குறிக்கப்பட்டுள்ளார்.

2. (1) மன்னர் பாசறை, முடிவேந்தர் தம் போர் முனை, வேந்தர் வெம்போர் மிடைந்த பகை, மிகை தணித்தற்கு அரிதாம் இருவேந்தர் வெம்போர் மிடைந்த பகை (ஒருவருள்ள மிகுதியை ஒருவர் தணித்தற்கரிதாகா நின்ற இரு வேந்தரது வெய்ய போர் நெருங்கிய பகை) — என வேந்தரது போர் விளக்கப்பட்டுள்ளது.

2. மன்னர்களுக்கு வேண்டுவன பொன்னால் (பொருளால்) முடியும்.

2. சிறப்பு

வரகுணன்

வரகுணன் பெரிய களி யானையை உடையவன். இமய பருவதத்தின்கண் கயலையும், சிலையையும் அவன் எழுதி வைத்தான். வரகுண பாண்டியன் ஏத்துகின்ற சிற்றம்பலத்தான் என அவனது பக்தி சிறப்பிக்கப் பட்டுள்ளது.

3. அரசாட்சி

அரச சின்னம் (குடை)

விண்ணைத் தோயாநின்ற குடைக்கீழ் உலகத்தோர் எல்லாரும் வியந்து சென்று அகன் அமர்ந்து இறைஞ்சுவர்.

10. அருள் (13)

("சிவன் அருள் என்னும் தலைப்பும் பக்கம் 6 பார்க்க")

அன்பு, அருள், ஆரருள், அருள் தரும் இன்சொற்கள், இன்னருள், கண்ணின் இன்னேக்கருள், சிற்றம்பலத்தார் தரும் பேரருள், தில்லைத் தொல்லோன் அருள், தில்லை முன்னேன் அருள், பேரருள், மெய்யருள், விள்ளா அருள் — இவை கூறப்பட்டுள.

11. அன்பு (14)

அன்புடை நெஞ்சம், ஆய்தந்த அன்பு, இயல் மன்னும் அன்பு, ஈசற்கு யான் வைத்த அன்பு மெய் கொண்ட அன்பு வில்விசைப் போதின் விரும்பா அரும் பாவியர்கள் அன்பு (காமன் கையில் பூ அம்பாலே மகளிரை விரும்பாத அரிய *பாவத்தை யுடையவர்கள். செய்த அன்பு) — இவ்வாறு அன்பு என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

12. ஆகாயம் (106)

(பஞ்ச பூதம் என்னும் தலைப்பும் பார்க்க).

அம்பரம் உயர் வானம், செவ்வானம், நெடுவானம், வான், வானக் கடல், விசும்பு, விண் — கூறப்பட்டுள. விண்ணில் நட்சத்திரங்கள் விளங்கி ஒளி வீசும்.

13. ஆடை உடை (5)

கலிங்கம், செம்பட்டு, வெள்ளைப்பட்டு கூறப்பட்டுள, பின்னும் செம்மலர்ப்பட்டும் (அழகிய செய்ய பூத்தொழிற் பட்டு) கூறப்பட்டுள்ளது.

14. ஆதிசேடன் (6)

திருமாலுக்குப் பள்ளிக்கு இடமாகும்.

15. ஆயுத எழுத்து (17)

அஃதே, எஃகம், எஃகு, பஃறுமலரை இவை வந்துள.

---

*பாவம் — எண்ணம்.

16. ஆவா (18)

இச்சொல் இரங்கற் குறிப்பாகவும் வியப்பக் குறிப்பாகவும் வருகின்றது.

17. இசை (19)

*ஏழிசை சூழல் : கற்போருக்கு அவர் உடல் நலனை மெலிவிக்கும் படியான அவ்வளவு கஷ்டத்தைத் தரக்கூடியது இசை என்பது தெரிகின்றது.

18. இந்திரன் (20)

சிவனும் இந்திரனும் என்னும் தலைப்பைப் (பக்கம் 25) பார்க்க.

19 இரவு (22)

அரை இரவு, எல்லி, கங்குல் — என இரவு விளக்கப் பட்டுள்ளது.

இரவு மிக்க அச்சத்தைத் தருவது; சிங்கத்துக்கும் யாளிக்கும் பயப்பட்ட யானைகள் ஓரிடத்தில் திரண்டு நின்றன, அவ்விடத்தினின்றும் புடைபெயராத மிக்க அச்சத்தை இருள் தரும்; சேவல் தன் குஞ்சுகளோடே தன் பெடைக் குருகையும் தன் சிறகொன்றாலே ஒடுக்கி, மிக்க பனியை (குளிரை)த் தாங்கி நிற்கும் இரவு; பொல்லாத இரவு ; — என்றெல்லாம் இரவு விளக்கப்பட்டுள்ளது.

20. இருவர் (23)

விண்ணிற் பறந்து விண்ணைக் கடந்த பிரமனும் பூமியைத் தோண்டிச் சென்ற திருமாலும் ஆகிய இவர்கள் மிக்கார் (பெரியார்) இருவர் எனப்பட்டுள்ளார்கள்

21. இருள் (24)

1. அல்படு காடு, இருட்டு, இருள், செறி இருள், தூங்கிருள், நள்ளிருள், நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள்,

---

* குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழிசை. தொல். பொ - மெய்ப்பாட்டியல். 5

பொங்கிருள், பொம்மென் இருள், மயங்கிருள், மயங்கும் இருள், மொய் இருள், வினைபோல் இருள்,—என்றெல்லாம் 'இருள்' விளக்கம் தரப்பெற்றுள்ளது.

(2) 1. கண்களைக் கெடுத்தாற் போல இருள் செறிகின்றது; 2. பறவைகள் பிள்ளைகளைத் தழுவித் தம் இணை சூழ இருளில் துயிலும்; 3. இருளுக்கு ஒப்பானது வினை, 4. சூரியன் நுழையாத இருள், 5. இருள் சூழும் போது ஒரு காலுக்கு ஒருகால் குயில்கள் நிறம் பெற்று இருளா கின்றன; 6. பல விளக்குகள் இருளின் செறிவை அடியோடு விலக்கும்—என வரும் இவை தமக்கு உரிய பாடற் பகுதிகள் ஒளி நெறியிற் காணலாம்.

22. இலக்குமி (25)

கமலத்தவள், கமலத்தேவி, திரு, பொன், மலராள் பாவை—இவை இலக்குமியைக் குறிப்பன. இலக்குமி கடலில் தோன்றியதும் தாமரை மலரில் வீற்றிருப்பதும் குறிக்கப் பட்டுள.

23. இன்பம் (26)

இன்பக் கலவிகள், இன்பத்தேன், இன்பதுன்பங்கள், எல்லைதீர் இன்பம், நயந்த இன்பம் — என்று இன்பம் எனும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

24. இனச்சொற்கள் (27)

1. ஆவியும் யாக்கையும்,

2. காயமும் ஆவியும்.

25. உடல் (யாக்கை) உயிர் (28)

1. யாக்கை

'ஆவியும் யாக்கையும் மலவன்' 'குரம்பை' — கூறப் பட்டுள.

2. உயிர் ஆவி

1. ஆவி—அரும் பெறல் ஆவி, 'காயமும் ஆவியும்' வெறிமறி ஆவி செகுத்து' கூறப்பட்டு உள,

2. உயிர் 'ஆருயிர்' 'ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர்' 'எம் உயிர்' 'எனது உயிர் 'மன் உயிர்'—என வருகின்றன. பிற ஒளி நெறியில் காணலாம்.

26. உலகங்கள் (29)

1. அகலிடம், அண்டம், உலகம், நாவல், நிலம், படி, பாதலம், பார், புவி, பொழில், மண், வான் (தெய்வலோகம்), விசும்பு, விண், வையகம், வையம் — என உலகங்கள் குறிக்கப்பட்டுள.

2. அண்டர் அண்டம், அலைநீர்வையம், ஆழி (ஆழி சூழ்ந்த உலகம்), இரும் பொழில் மூன்று, இவ்வியலிடம், ஏழு பொழில், சிற்றம்பலம் வழுத்தும் வான், சேணிலம், நாவல் தழுவிய நானிலம், பணிகளது பதி (நாகலோகம் போதிவர் கற்பக நாடு, விரிநீர் உடுத்த மண், வியன் பாதலம்—என உலகங்கள் விளக்கப்பட்டுள.

27. உலோகம் (30)

இரும்பு, பொன், வெள்ளி கூறப்பட்டுள.

28: உவமை உருபுகள், உவமைச் சொற்கள் (32)

அமர், அன்ன, அனைய, ஆங்கு, ஆர், இல்—இன், உறழ, எடுத்த, என்ன, என, ஒத்து, ஒன்று, செய்த, தங்கு, திகழ், நிகர், நேர், படு, பயில், பாரித்து, புரை, போல், போல, போலும், போன்று, மலி, மன்னு, மானும், வந்த, வளர்,—என்பன போன்ற 38 உவமைச் சொற்கள் வந்துள,

இவை தம்முள் சில எடுத்துக் காட்டுவாம்

தேன் அமர் சொல்லி, வேல் அன்ன கண்ணி
நாகம் அனைய அழற் கான்,
யாழ் ஆர் மொழி,
பாசத்தில் காரென்று,
ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று,
செப்புற்ற கொங்கை,
பாண்டில் எடுத்த பல் தாமரை,
வீயே என அடி,
கோங்கிற் பொலி அரும்பு ஏய் கொங்கை,
பால் ஒத்த நீறு,
சிலை ஒன்று வாணுதல்,
பொன் செய்த மேனி,
மின் தங்கு இடை,
வேல் திகழ் கண்,
பாண் நிகர் வண்டினம்,
மின் நேர் இடை,
வில் படு வாணுதல்.
அராப் பயில் நுண் இடை,
காந்தளும் பாந்தளைப் பரிந்து, அலர்ந்தனவே,
அரவம் புரையும் அல்குல்,
வேல் பொலி கண்,
தில்லை வாழ்த்துநர் போல் தூயன்
மலை மலி மார்பு,
மயில் மன்னு சாயல்,
கயல் வளர் கண்.

29. உவமை உருபு தொக்கது (31)

கனிவாய், துடியிடை, வஞ்சி மருங்குல், வேற். கண், என்னும் சொற்றொடர்களில் 'போன்ற' என்னும் உவமை உருபு தொக்கு நிற்கின்றது. விரிப்பின், கனி போன்ற வாய், துடி போன்ற இடை, வஞ்சி போன்ற மருங்குல், வேல் போன்ற கண் என வரும்.

30. உவமைப் பொருளும் உவமையும் (36)

போர்க்களம், கடலுக்கும், பாந்தள் (பாம்பு) காந்தளுக்கும், குவளை சிவன் மிடற்றிற்கும், மலை—தலைவன் மார்பிற்கும், கெண்டைவேல், காவி, கயல், இவை தலைவியின் கண்ணுக்கும், வில்—தலைவியின் நுதலுக்கும், குயில்-தலைவியின் மொழிக்கும், சிவன் கரத்திலுள்ள அனல் - தோன்றி மலருக்கும், அயில் - பரலுக்கும், சிலை (வில்) பார்வதியின் நெற்றிக்கும், தொண்டையங்கனி (கொவ்வைக் கனி) - பார்வதியின் வாய்க்கும், யாழ் குழல் - பார்வதியின் மொழிக்கும், மலர் - மாதர் அடிக்கும்; அரவு, மின், கொடி, துடி இவை மாதர் இடைக்கும், அம்பு, கயல், குவளை, தாமரை, வாள், வேல் இவை மாதர் கண்ணுக்கும், செங் கழுநீர், மாதர் கண் மலருக்கும், நீர் முத்துமாலை தண்ணீருக்கும், காந்தள் மாதர் கரத்திற்கும், கொன்றை மாதர் குழலினுக்கும், குரும்பை, செப்பு இவை மாதர் கொங்கைக்கும், வெண் முத்தம் மாதர் பல்லிற்கும், சிலை மாதர் புருவத்திற்கும், நாண்மதி மாதர் முகத்திற்கும், கரும்பு-குழல் நற்றேன் இவை மாதர் மொழிக்கும், கொவ்வைக்கனி மாதர் வாய்க்கும், கார் (மேகம்) முழவத்திற்கும் உவமை கூறப்பட்டுள.

31. தெய்வீக உவமை (34)

ஆசிரியர் கூறும் உவமைகள் பலவும் தெய்வீக உவமைகள் ஆகும். இவற்றுள் சில இங்குக் காட்டுவாம்,

தலைவியின் கண் உவமை :—

1. கண்ணின் அகலம் ஈசற்குத் தலைவன் வைத்துள்ள அன்பின் அகலம் எவ்வளவோ அவ்வளவு.

2. கண்ணின் கறுப்பு தலைவனிடம் இருந்து ஈசன் ஒழித்ததான பாசம் எவ்வளவு கறுப்போ அவ்வளவு கறுப்பு.

3. கண்ணின் ஒளி ஈசன் வீற்றிருக்கும் தில்லையின் ஒளி எவ்வளவோ அவ்வளவு; கண்ணின் வெளுப்பு

பெருமான் தோளில் பூசியுள்ள திருநீற்றின் வெளுப்பு. எவ்வளவோ அவ்வளவு வெளுப்பு.

கண்ணின் நீளம் பெருமானுடைய திருவடிப் பெருமையை அடியார்கள் பேசினால் எவ்வளவு பெரு நீளமாகப் பேசுவார்களோ அவ்வளவு பெருநீளம்.

2. தலைவியின் இடை இல்லை அம்பலத்தைப் பாடாதவர்கள் போல் தேய்ந்து இருக்கும்

3. தலைவியின் கொங்கை தில்லை அம்பலம் போல் வளத்தை உடையது.

4. மேகத்தின் நிறம் சிவபிரானின் கண்டத்தின் நிறத்தையும், திருமாலின் எழிலையும் (நீல உரு அழகையும்) ஒக்கும்.

32. உள்ளுறை, உள்ளுறை உவமம் உள்ள பாடல்கள் (37)

1. உள்ளுறை

159, 168, 193, 250, 252, 254, 257, 260, 265, 276, 369, 381.

2. உள்ளுறை உவமம்

99, 128, 377,

மேற்காட்டிய எண்களுள்ள பாடல்களில் எவ்வாறு உள்ளுறை, உள்ளுறை உவமம் அமைந்துள்ளன என்பதை அவ்வப் பாடல்களுக்குள்ள விளக்க உரையிலும் ஒளிநெறியிலும் காணலாகும்.

எனினும் ஒவ்வோர் உதாரணம் ஈண்டுக் காட்டுவாம்,

1. உள்ளுறை : *168.*

வரைவு விலக்கல்

மெய்யே, எளிதே வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச் சென்று விண்ணின்ற கற்பகச் சோலைகதுவுங் கல் நாட இக்கல்லதரே. *168*

வேயிற் பிறந்த தீ ஆண்டு அடங்காது சென்று தேவர் உலகத்தினின்ற கற்பகச் சோலையைக் கதுவினாற் போல, நின் வரவினால் அயலாரிடத்துப் பிறந்த அலர் பெருகி நின்னூரு மறியப் பரந்து நின் பெருமையைச் சிதைக்கும் என உள்ளுறைவகையால் அலரறிவுறுத்தவாறு கண்டு கொள்க.

உள்ளுறை உவமம்

தன் பெடையைத் தகவு
அழிந்து, அன்னம் சலஞ்
சலத்தின், வன் பெடை
மேல் துயிலும் வயலூரன்
வரம்பிலனே —— —— 317

(அண்ணல் பரத்தையிற் பிரியக் குழைமுகத்தவளுக்கு உழையர் உரைத்தது)

தன் பெடை என நாயகியின் அருமை காட்டியும்! வன் பெடையெனப் பரத்தையர் அன்பிலாமையைக் காட்டியும் நின்றது.

அன்புடைய தன் பெடை வருந்த அன்பில்லாத தன் மரபுக்குப் பொருந்தாத சங்கின் பெடையுடனே அன்னம் துயில்கின்ற நாடன் ஆதலால் தன் நாயகி வருந்தத் தன்மாட்டு அன்பிலாதாரும் தன் மரபுக்குப் பொருந்தாதவருமாகிய பரத்தையருடனே உறையும் தகுதியின்மையும் கூறித் தலைமகனைப் பழித்துத் தலைவியை ஆற்றுவித்தல். இப் பாட்டில் உள்ளுறை உவமம் காண்க.

33. உறவு, உறவினர் (38)

அத்தன், அன்னை, ஆய் (தாய்), இனம், உற்றவர், எங்கை, எந்தையர், எமர் ஒக்கல், காதலன் (கணவன்), கொழுநன் (கணவன்) சிற்றவ்வை, சுற்றம், சேய், தங்கை, தந்தை, தாய், புதல்வன், மகன், யாய், என்பன உறவினைக் குறிப்பன.

34. ஊசல் (ஊஞ்சல்) (39)

பெண்கள் ஊசல் ஆடுவர். உயர்ந்த வழை (சுரபுன்னை) மரத்தில் தொடுத்தலால் 'புயல் வளர் ஊசல்' என்றார். (117 உரை) அம்பலத்தானின் மலையில் குளிர்ந்த புனத்தின்கண் உயர்ந்த வழை மரத்தில் தொடுக்கப்பட்ட ஊசலில் பெண்கள் விளையாடுவர்.

35. ஊர், நகர், சேரி, ஊரன் (40)

1. ஊரில் அலர் பழிச்சொல் உண்டாகும்.

2. இடையர் ஊரில் முல்லை வேலி உண்டு.

3. நீரில் முதலைகள் பயிலும் ஊர்.

4. அருமையான தேன் கிடைக்கும். மலையின் கண் உள்ள சிறிய ஊர்.

5. சிங்கம் திரிகின்ற சிறிய ஊர்.

கொல்லர் வாழும் சேரி *கண்டலாகிய மரம் மிக்கு அழகு செய்கின்ற சேரி.

6. மாடம் செய் பொன்னகர் என்று அமராவதி கூறப்பட்டுள்ளது.

நாக லோகம் (நாகர் உலகம்) பணிகள் (பாம்புகளது) பதி எனக் கூறப்பட்டுள்ளது.

ஊரன்

கராப்பயில் புனல் ஊரன், கரும்பு உறை ஊரன், தில்லை ஊரன், வயலூரன் — கூறப்பட்டுள.

36. ஊழ் — விதி (41)

1. சிற்றம்பலத்தான் அமைத்த ஊழை விட வலியதொன்றில்லை.

வரக்கூடிய விதியை (வரக்கடவ அனுபோகத்தை) மாற்ற வழி இல்லை.

* கண்டல் — நீர் முள்ளி.

நல்ல விதியை யுடையோர் சிற்றம்பலத்துப் பெருமானுடைய திருவடியை நினைத்துத் தியானிப்பார்கள்.

37. எண்கள் (42)

அரை, ஒன்று முதல் எட்டு வரை, ஆயிரம், மூவாயிரம், பல், பல, பின்னும் ஒன்று முதல் எட்டு வரை வரிசையாக, — வந்துள.

இவற்றின் விவரம் ஒளி நெறியிற் காணலாம்.

38. எதிர் மொழிகள் (43)

அது — இது, ஆலம் — அமிர்து,
இங்கு — அங்கு, இரா — பகல்,
இன்பம் — துன்பம், உள்ளும் — புறமும்,
கனவு — நனவு, கீழ் — மேல்,
குணம் — குற்றம், பின் — முன்,
புகழ் — பழி, பெடை — ஆண்,
பொய் — மெய், முடி — அடி,
முன்னும் — பின்னும், வருவன — செல்வன.

— இவை போல்வன 33 எதிர் மொழிகள் ஒளி நெறியிற் காணலாகும்.

39. ஓர், ஓர், ஒரு, என்னும் சொற்களின் ஆட்சி (44)

ஓர் ஆகம், ஓர் கூட்டம், ஓர் விடலை, ஓர் திருமுகம், ஓர் பித்தி, ஒரு மான், ஒரு வாசகம், — இவை போல்வன சில ஒளி நெறியிற் காணலாகும்.

40. ஒரு சொல், சொற்றொடர் இரு பொருளில் வந்துள்ள இடங்கள் (46)

இகல் குன்ற வில்லில்

1. இகல் குன்ற — பகை குறைய.
2. குன்ற வில் — மலையாகிய வில்

ஆவியன்னார் 37

1. ஆவி — உயிர் போன்றவர் (ஆவி — உயிர்)

2. (தாமரை)த் தடாகம். போன்றவர். (ஆவி — ...ர் நிலை)

தில்லைக்கண்ணார் கமலத்தேவி 41

1. தில்லைக்கண்ணார் — சிவன்,
கமலத்தேவி — இலக்குமி,
(சிவனும் இலக்குமியும்)

2. இல்லை + கண்ணார் (கமலத் தேவி = இல்லைக்கண் + ஆர் + கமலத் தேவி — இல்லையில் கண்ணிற்கு நிறைந்த இலக்குமி.

மருங்கண்ணனையதுண்டோ 53

1. மருங்கண் + அனையது + உண்டோ. —மருங்கண். (அணித்தாக) அனையது உண்டோ.

2. மருங்கு அண்ணல் + நையது + உண்டோ — மருங்கு (புனத்தின் மருங்கு), அண்ணல் (தலைவன்) நையது (நைந்தது) உண்டோ.

இனியவர்க்கே 89

1. வேண்டியவர்க்கே.

2. இனி + அவர்க்கே.

ஆரத்தழை கொடு வந்தார். 91

1. ஆர் (யார்) — அந்தத் தழையைக் கொண்டு வந்தார்.

2. ஆரத் (சந்தனத்) + தழை கொண்டு வந்தார்.
(ஆரம் — சந்தனம்)

தவவினை தீர்ப்பவன் 108

1. மிகவும் வினைகளைத் தீர்ப்பவன்.
(தவ — மிக)

2. விரதங்களால் வருந்தாமல் தவத் தொழிலை நீக்கி அன்பர்க்கு இன்ப நெறியை அருளுபவன்.

தடமலர் 119

1. பெரிய மலர் (தடம் — பெரிய),

2. தடத்து மலர் — குளத்து மலர்,

செழுநீர் மதிக் கண்ணி 123

1. வளவிய நீர்மையை உடைய மதியாய கண்ணி.

2. வளவிய நீரும் (கங்கையும்) மதியாகிய கண்ணியும்

சிறுகால் மருங்குல் 126

1. சிறிய இடத்தை உடைய (மருங்குல்) இடை.
(கால் — இடம்).

2. சிறிய தென்றல் வரின் தளரும் இடை.
(கால் — (தென்றல்) காற்று)

ஆய் தந்த அன்பு 130

1. ஆராயப்பட்ட அன்பு.

2. தாய்க்குப் பிள்ளையிடத்தே உண்டான அன்பு.

பொன்னுளைப் புனைதல் 137

1. பொன் + நாளைப் + புனைதல்— நாளைக்குப் பொன் புனைதல்.

2. பொன்னுளைப் (பொன் போன்றவளைப்) புனைதல் (பொன் — இலக்குமி)

(i) அலர் தூற்ற 139

1. பூவை மலர்த்த (அலர்—மலர்)
2. பிறங் கூற (அலர் — பழிச்சொல்)

(ii) பெருங்கணியார்

1. பெரிய வேங்கை மரம்.
2. பெரிய சோதிடன்.

(கணி—வேங்கை மரம், சோதிடன்)

(i) நாகம் 171

1. நாகம் (பாம்பு) (பதஞ்சலி)—நாகம் தொழ
2. நாகம் (மலை)—'நடம் நவில்வோன் நாகம்'
3. நாகம் (யானை)—'நாகம் வர எதிர்'
4. நாகம் (சுரபுன்னை)—'நாகம் மலி பொழில்'

(ii) மதியே மதியே

1. மதியே!—சந்திரனே!
2. மதியே!—(உன்) அறிவே!

திருவும் மதியும் 173

1. இலக்குமியும் சந்திரனும்.
2. செல்வமும் அறிவும்.

கண்ணீர் 190

1. கண்ணிலிருந்து வரும் நீர்.
2. (கள்—நீர்) கள்ளாகிய நீர்.

அரி 225

1. அரி (திருமால்) — ஆள் அரி.
2. அரி (சிங்கம்) — கோளரி.
3. அரி (செவ்வரி)—வாளரிக் கண்ணி.

வன்னி வளைத்த வளர்சடை 317

1. வன்னித் தளிரால் சூழப்பட்ட நெடிய சடை
2. தீமை வளர்த்தாற் போலும் சடை

உலவியலாத்தனம் 365

1. ஒரு ஞான்றும் தளர்தல் இல்லாத முலைகள் (தனம்—முலை)

2. ஒரு ஞான்றும் கேடில்லாத பொருள் (தனம்—பொருள்)

இவை போல்வன பிற ஒளிநெறியிற் காணலாம்.

41. ஒரு பொருள் இரட்டைச் சொல் [X—45]

ஒத்தநேர், தடமால் இவையிரண்டும் ஒரு பொருளைக் குறிக்கும் இரட்டைச் சொற்களாக வந்துள்ளன.

42. ஒரு பொருளைக் குறிக்கும் பல சொல் [X — 48]

1. தேன்—கள், நறவம், பிரசம், மது, வேரி
2. மதில்—இஞ்சி, புரிசை
3. விஷம்—கடு, விடம், நஞ்சு.
4. அழகு — அணி, காமர்.

5. சந்திரன் — கதிர், சுடர், சோமன், திங்கள், பனிக்கோடு, பனித்துண்டம், பிறை, மண்டலம், மதி.

ஒலிக் குறிப்பு 49

சலக்கென, துண்ணென, தேதேயென, இழுமென என்னும் சொற்கள். ஒலியைக் குறிக்கும் சொற்கள்.

1 "மணிவாய் திறக்கிற் 'சலக்' கென்பவே" (57) என்பதில் தலைவி வாய் திறந்தால் முத்தமணி சலக்கென்னும் ஒலியுடன் விழுமோ எனத் தலைவியின் வாய் மொழி பெறாத தலைவன் கூறுகின்றான்.

2. "மலர்க் காந்தளைப் பாந்தளென்று
எண்ணித் துண்ணென்று ஒளித்துக்
கண் புதைத்துப் பதைக்கும்" (233)

என வருவதினின்றும் துண்ணென்ற ஒலி அச்சத்தைக் குறிப்பது என்பது தெரிகின்றது.

3. "தே தே" யென என்னும் ஒலி வண்டு தேன் பருகிச் செய்யும் ஒலி.

'வண்டு தண்தேன் பருகித் தே தே எனும்" (82)

4. "இழுமென" என்னும் ஒலி தேன் ஒழுகும் 'இழும்' என்ற ஒலியைக் குறிக்கின்றது.

"பெருந்தேன் இழும் என்று இருல் கழிவுற்று" (252)

44. ஒளி (சுடர் பார்க்க) (50)

1. அளவில்லாத ஒளிகள் விரியா திற்கும் (ஆழியா ழிய) படை.

2. உவா நாளின் மதியை ஒத்து விளங்கா நின்றது. ஒளி சிறந்த முகமானது.

3. என்னை ஒரு பொருளாகப் புகுந்து ஆண்ட பெருமான் ஆனவர். இந்திரன், திருமால், பிரமன் இவர்களுக்கு இருளாக இருக்கும் ஒளியாகத் திகழ்வர்.

4. மேகங்களையும் நட்சத்திரங்களையும் பரப்பி ஆகாயம் விளங்கும்.

5. அளவில் ஒளி, களபத்து ஒளி, தில்லையின் ஒளி, பளிங்கு அடுத்த ஒளி, பிறங்கும் ஒளி, பொங்கொளி, மதிக் கீற்றொளி — கூறப்படுவன. இவற்றின் விரிவை ஒளி நெறியிற் காணலாம்.

45. ஒன்று, ஒன்றும், என்னும், சொற்களின் ஆட்சி (51)

ஊழின் வலியது ஒன்று, கைக்குன்று ஒன்று உரித்து; பற்றொன்றிலார்; ஒன்றும் வாய் திறவார்.

இவை போல்வன சில ஒளிநெறியிற் காணலாம்.

46. கங்கை (52)

சுழியாவரு பெருநீர், தெள்வன் புனல், தெள்ளம் புனற் கங்கை, பெருநீர், பெரும்புனல், பொங்கும் புனற் கங்கை, மீன் தோய் புனற் பெண், வியன் கங்கை, விரிதிரையின் நாரி — என்றெல்லாம் கங்கை விளக்கப் பட்டுள்ளது.

47. கடல், கழி (53)

அகலோங்கு இருங்கழி, அலை நீர், ஆர்க்கும் செறி கடல், ஆர்கலி, ஆழ்கடல், ஆழி, எற்றும் திரை, ஏழியன்றாழ் கடல், கருங்கழி, கலிநீர், கனைகடல், கார்க்கடல், கார்த், தரங்கம், கீழ்கடல் (Bay of Bengal), சுறுக்கடல், சூழ் கடல், செறி கடல், திரை பொருநீர், திரைவாரி, தெண் கடல், மாக்கடல், முந்நீர், மேல் கடல் (Arabian Sea), வங்கம் மலி கலிநீர், வாரி — என்றெல்லாம் கடலும் கழியும் கூறப் பட்டுள.

2. தன் கிரணங்களைச் சுருக்கிக் கொண்டு சூரியன் கடலையுற்றான் எனச் சூரியன் அஸ்தமனம் விளக்கப் பட்டுள்ளது. கீழ்க்காற்று மிகுதலால் புலியூரில் (தில்லையில் - சிதம்பரத்தில்) கரைமேல் வந்து ஏறும் கடல் — என்றதனால் மணிவாசகர் காலத்தில் கடல் சிதம்பரத்தின் அருகில் இருந்தது போலும்!

3. (1) கடலில் சங்குகள் ஒலிக்கும், (2) சங்கிலிருந்து முத்துக்கள் வரப்பெற்றன. (3) கடலில் கப்பல்கள் படகுகள் நிறைந்திருந்தன. சுறு மீன்கள் உலவின.

(4) திரை மோதுதலினால் கடலில் சங்குகள் ஆர்த்தன. (5) கடலில் மீன் பிடிப்பர். (6) கடலிற் குளித்து சங்குகள் எடுத்தனர். (7) கீழ்க்கடலில் சங்குகள் நிறைந்திருந்தன. என்றெல்லாம் கடலைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

4. மதி (சந்திரன்), அமுது, திரு (இலக்குமி, செல்வம்) இவை கடல் கடையப்பட்டபோது வெளிப்பட்டன என்பதையும், அவை தான் இழக்கும்படி பிறரால் பறித்துக் கொள்ளப்பட்டன என்பதையும் கருதியே கடல் ஓயாது இரைச்சலிட்டு ஓலமிடுகின்றது. என (ஒரு தற்குறிப்பேற்ற அணியை) 173ஆம் பாடலில்,

“ஆர்த்துன் அமிழ்துந் திருவும்
மதியும் இழந்தவம் நீ
பேர்த்தும் இரைப் பொழியாய்
பழி நோக்காய் பெருங்கடலே”

என்னும் அடிகளிற் காணலாம்.

5. ஆனந்த மாக்கடல், போர்க்கடல், வானக்கடல் எனும் இடங்களிலும் ‘கடல்’ என்னும் சொல் ஆட்சி தரப்பெற்று உள்ளது.

48. கணங்கள் (54)

கந்தருவர் யாழுடையார் எனக் கூறப்பட்டுள்ளார். (அவர்கள் யாழ் வாசித்தலின்.)

49. கப்பல் (மரக்கலம்) (55)

ஒலிக்கின்ற கடலில் பானு (மரக்கலங்களும்), வங்கம் (படகுகளும்) உலவின.

50. கல்வி (56)

(புலவர், பெரியோர் என்னும் தலைப்பும் பார்க்க.)

1. **கல்வி நலம்**

“நன்மைக்கு எல்லையில்லாது விளங்கும் கல்வெ பாகிய மேருக் குன்றத்தின் மிக்க அளவில்லாத எல்லையை யுடைந்தவர்கள் என்று மிகக் கற்றோர் கூறப்பட்டுளர்.

1 அம்பலத்தில் ஆடுகின்ற ஒப்பு இல்லாதவனுடைய திருவடிகளை நினைந்தவர் போல, நன்மைக்கு எல்லையில்லாத தன்மையர் ஆவர் மிகக் கற்றோர்.

2. இல்லைப் பெரியோனுடைய திருவடிக்கண் அன்புற்றவர்கள் அடையக் கூடிய நன்மையைக் கல்வியானது தரும். ஆதலால் ஓதுதலால் மிக்காரை அடைந்து எல்லா நூல்களையும் உணர்தல் உற்று நன்மை பெற வெளி இடங்களுக்குப் போக வேண்டும்—இவை தமக்கு உரிய பாடற்பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

51. கற்பு (56)

உயிரும் உடம்பும் போல் ஒருவரை ஒருவர் இன்றியமையாமையால் கரிய, வாள் போலும் கண்ணை உடையாளின் கருத்தைக் (தலைவர்) கடவார்; தாமரைப் பூவைச் சேர்ந்த தேனும், சந்தன மரமும், தம் பெருமையைப் புலப்படுத்தினாற் போல இயைந்து, தலைவியின் கற்பு இடத்தே (அவளது வழிபாட்டின் கண்) தலைவர் நிற்பர்.

2. தலைவி தெய்வத்தைப் பணிந்தறியாள்.

3. நாண் ஆனது கற்புப் போல் சிறந்ததன்று.

4. தலைவியின் கற்பு வடமீனும் அருந்ததியின் கற்பினும் சிறந்தது.

இவளுடைய கற்பு நமக்குத் தாயாம் இயல்பை உடையது. இவளுடைய (நாணம் முதலாகிய) இயல்புகள் நல்ல தன்மையன. இவற்றுக்குரிய பாடல் பகுதி ஒளிநெறியிற் காணலாம்.

52. காடு [X — 58]

அழற்கடம், அழற்கான், அல்படு காடு, பொங்கு வெங்கான், கடம், கானகம், வனம், வெம்மைக் கடம்—எனக் காடு கூறப்பட்டுள்ளது.

1. காட்டிலுள்ள பாறைகள் எரியின் மேலுள்ள கொல்வல் போல விளங்கின.

2. ஈப் பழுத்த பழத்தின் உள்ளே சிவந்த விதைகளுடைய கற்கள் உள்ள காடு,

3. தில்லையம்பலத்தின் சீரைப் போற்றாத பாவங் கொண்டவர்கள் சென்று தங்கும் நரகம் போன்ற நெருப்பு வீசும் காடு.

4. காட்டில் ஓரி (நரி) கத்தும்.

5. குறவர்கள் வசிப்பர் — என்றெல்லாம் காடு வர்ணிக்கப்பட்டுள்ளது.

53. காமன் [X—59]

(சிவபிரான்—அட்டவீரம் என்னும் தலைப்பு பக்கம் 1 பார்க்க.

அனங்கன், காமன், காமர், வேள், வில்லி எனக் காமன் குறிக்கப்பட்டுள்ளான். காமன் அம்பு—பூங்கணை, மலராம் கணை என்றும், அவன் படை (வில்) கரும்புவில் (கருப்புச் சிலை) என்றும், வேழப்படை என்றும் கூறப்பட்டுள.

54. காலம், ஊழி, காலத்தைக் குறிப்பன. [X — 60]

அந்தி, அரையாமம், அன்று, இன்று, ஊழி (யாமம்) கங்குல், கார்காலம், பண்டு யாமம் (நான்கு), கூதிர் காலம் (பனிக் காலம்)—குறிக்கப்பட்டுள.

பின்னும், தேவ லோகம் அழியவும், கடல் பரந்து மலைகள் மறையவும், மண் உலகம் அழியவும், வருகின்ற இறுதிக் காலத்திலும் தாம் அழியாது நிற்பர் கடவுள்.

55. கானல் [X—61]

கானல்—இது கடற்கரைச் சோலையைக் குறிக்கும்.

" தில்லை மல் லெழிற் கானல்" என வருவதால் தில்லை (சிதம்பரம்)க்கு அருகில் கடல் அக்காலத்தில் இருந்தது போலும்! இங்கு கானல் என்பது கடற்கழி.

" மடலவிழ் பூங் கைதையங் கானல் "

என் வருவதால் கானலில் தாழை மலர் மலரும் என்பதை அறிகின்றோம்.

56. கோடி [X — 63]

இடபங் கொடி, காமன் தன்வென்றிக் கொடி, கொடித் தேர் மறவர், கொடி முன்றில், கொடி வாரணம், கோப்பு அணிவான் தோய் கொடி என்னும் தொடர்களில் கொடி வருவது காணலாம்.

57. சங்கு - சங்கம் (63)

கடலில் சங்கம் ஆர்க்கும். சங்கினின்றும் முத்து பிறக்கும் (ஒரு சலஞ்சலம் ஆயிரம் வலம்புரிச் சங்கத்துக்குச் சமமானது,)

சலஞ்சலத்தின் வலிய பெடைமேல் அன்னப் பறவை துயில் கொள்ளும். தில்லை முற்றத்தில் சங்க வளையல் விற்கப்படும். மல்லிகை மலராகிய வெண்சங்கை வண்டுகள் ஊதும்.

வலம்புரி வெண் சங்குகள் ஆர்ப்பது பெருந்தேர் வருவது குறிக்கும்.

கீழ்த்திசைக் கடலில் சங்குகள் நிரம்ப உள்ளன. சங்க நிதி கூறப்பட்டுளது.

58. சந்திரன் (64)

கதிர், சந்திரன், சுடர், சோமன், திங்கள், பனிக்கோடு பனித்துண்டம், பிறை, மண்டலம், மதி, — எனும் சொற்களால் ' சந்திரன் ' கூறப்பட்டுள்ளான்.

பசுங்கதிர் வெள்ளைச் சிறு பிறை, பனிச் சந்திரன், சுடர்த்திங்கள், வெண்சுடர், கலைச் சிறு திங்கள், நைகின்ற திங்கள், பனிதரு திங்கள், விசும்புற்ற திங்கள், பசும்பனிக் கோடு, விண்தோய் பிறை, வெள்ளைச் சிறுபிறை, கங்குல் எல்லாம் மங்குல் வாய் விளக்கும் மண்டலம், இரவு அணையும் மதி, இளமதி, எல்லார் மதி, எழில் மதிக்கீற்று, நாண்மதி, வெண்மாமதி என அடைமொழிகளால் சந்திரன் விளக்கப் பெற்றுள்ளான்.

2. (1) "ஆகாயத்தில் உள்ள சந்திரனைத் தா" என வேண்டி அழுகின்ற குழந்தை போல் (2) தலைவியின் ஒளிமுகம் உவா(பௌர்ணமி)நாளில் மதியை ஒத்து ஒளிறந்து உள்ளது.

3. "அவள் (தலைவி) குமுத மலர் (ஆம்பற்பூ) யான் அம்மலரை மலர்த்தும் வானத்து இளமதி" என்று கூறித் தலைவன் மகிழ்வுற்றான்.

4. 'விண்' என்கிற மடுவில் 'மதி' என்கின்ற கமலம் (வெண் தாமரை) எழுந்து அழகு தந்தது.

என்னும் கருத்துக்கள் அமைந்த பாடற் பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

59. சந்து, சாந்து, சந்தனம் (65)

சிவந்த அம் சாந்தம், சுரும்பிவர் சந்து, பொதியின் மலைப் பொலி சந்து, வேரியும் சந்தும் — எனச் (சந்தனம்) சந்துக்கு விளக்கம் தரப்பட்டுளது.

60. சாதி (66)

1. கானவர், குறவர், குன்றவாணர், கான் அமர் குன்றர், கொடிச்சியர், பாணர், மறவர், வேட்டமாதர், வேடர் இவை கூறப்பட்டுள.

2. யானையின் எலும்புகள் கொண்டு ஆக்கப்பட்ட குடிசையில் குறவர் இருப்பார்கள். மழை வேண்டிக் குறவர்கள் மலைத் தெய்வத்தை ஆரவாரத்துடன் பரவுவார்கள்.

61. சுடர் (68)

"சுடர்க் கொற்றவன்" எனச் சூரியன் குறிக்கப்பட்டுள்ளான்.

"செய்ம்முகம் மாந்தி இருள்முகங் கிழும் செடுஞ்சுடர்" என விளக்கு கூறப்பட்டுளது.

62. சுரம் (69)

கடுஞ்சுரம், கற்சுரம், பெருஞ்சுரம், வெஞ்சுரம், இவயில் மன்னு வெஞ்சுரம் முதலிய கூறப்பட்டுள. பிற ஒளி நெறியிற் காணலாம்.

63. சுவை (75)

1. அச்சம் (பயச்சுவை)

1. தோழி தலைவனை எதிர்ப்பட்டு 'நீ கான்யாறு, பலவும் நீந்திக், கைவேல் துணையாக அஞ்சாது வந்தால், யாங்கள் இச் சோலையிடத்து உண்டாகிய தெய்வத்துக்கு அஞ்சுவேம்; அதனால் இவ்விருளிடை வரற்பாலையல்லை, எனத் தங்கள் அச்சங் கூறித் தலைவன் வரவை விலக்கு கின்றாள். (176)

2. இரையாகிய உணவைத் தேடிப் பல சிங்கங்கள் இராக்காலத்துக் காடுதொறும், காட்டில் அவை வாழும் இடங்கள் தொறும், பார்க்கும் வழியிடத்தே ஒரு துணையும் இல்லாத நீ அழகிய வேலே துணையாக வந்தால், அன்பனே! எங்களுக்கு அச்சத்தால் உண்டாகிய துன்பம் தோன்றுகிறது என்று தோழி தலைவனிடம் கூறுகின்றனள், (253)

2. அற்புதம் (வியப்பு)

ஓதெவிமைப் பயப்படுமபடி நின்று அடிமை கொண்ட அவயவங்களையுடைய இவளை (தலைவியை)ப் பார்த்து, இவ்விடத்தே நின்று, அங்கு என்னிடம் வந்து, யான் மறுத்

தாம் அவ்வளவெல்லாம் கூறிய அண்ணலே (தலைவனே) இவ்வுலகத்தில் திண்ணியான் என்று தலைவனுடைய மனத்திடத்தைப் பாங்கன் வியந்து உரைத்தான். (35)

3 இரக்கச் சுவை

கையில் தழையை ஏந்தி (அதனோடு மாறுபடக்) கையில் வில் இன்றியே இப்பெரியவர் (தலைவர்) பித்தழையா நின்றார். இஃதென்ன பாவம்! எனத் தோழி இரக்கத் தோடு கூறித் தழையை வாங்க மறுத்தனள். (102)

4. இன்பச் சுவை (சிற்றின்பம், பேரின்பம்)

இன்ப வெள்ளத்திடை அழுந்தப் புகுகின்ற ஓர் உயிர் ஒருடம்பால் துய்த்தல் ஆராமையான், இரண்டுடம்பைக் கொண்டு அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்து திளைத்தது. அம்பலத்தைச் சேர்ந்த இன்ப வெள்ளத்தைச் செய்யும் (ஒலிக்கும் கழலையுடைத்தாகிய) திருவடியை உடையவனது அருளைப் பெற்றவர் இன்பம் போல—ஒரு காலத்தும் குறைவு படாத இன்பத்தைத் தருவதாகும். (307)

5. கருணைச்சுவை

கயிலைத் திருமலையில் ஆயத்தார் — இடத்து நின்று நீக்கி, இந்தக் கெண்டை போலும் கண்ணை உடையாளை நான் கண்டு கூடுவதற்குக் கூட்டி வைத்த நல்வினையைத் தந்த தெய்வத்தின் கருணையை யல்லது, பிற தெய்வத்தை நான் வியவேன், நயவேன். (6)

6. குற்சை (அருவருப்பு)

1. பண்டு நீர் வரும் வழியிடை வரும் ஏதமும் இருளும் எண்ணாது,—கொடிய சினத்தையுடைய யாளிகளை மாறு செய்வனவாகக் கருதாது, செறிந்த இருளின் பிருதியை இடையூறாக நினையாது, கன்றைப் பிரிந்து ஈன்று அணிமை யுடைத்தாகிய பசுவைப் போல, எம்மாட்டு வந்தீர்; இன்று எம் பொருந்தாதார் (பரத்தையர்) தெருவே யூன்று எம்மாட்டூர்ந்து வந்த தேர்மேலேறிப் போகா

கின்றீர்; இதுவன்றோ எம்மாட்டு நுமது அருள், என்று தோழி தலைவனிடம் தனது அருவருப்புத் தோன்றக் கூறினள். (382)

2. பள்ளியிடத்தாளாகிய தலைவி தலைவனை நோக்கி, 'நின் காதலிமார் நின்னை வெகுள்வர், நீ செய்கின்ற இக் கள்ளத்தை விரும்பேம். அதனால் எங் காலைத் தொடாது ஒழி; எங் கையை விடுவாயாக; என்று அருவருப்புடன் கூறினள். (390)

7. சாந்தச் சுவை

1. "என்மீது கோபிக்க வேண்டா. நீ பல்லாண்டு வாழ்க. அடியேன், உன் சீர் பாதத்தை வலம் கொண்டு போகின்றேன்" என்று தன்மீது கோபித்த தலைவியிடம் யாழ்ப்பாணன் சாந்தமாகக் கூறி வெளிச் சென்றான். (387)

2. கோப நிலையிலிருந்த தலைவியின் சிவந்த கண்கள் தலைவன் விருந்தினருடனே வந்தான் என்று கேட்ட வுடனே சிவப்பு நிறம் மாறி நீலமலரின் குளிர்ந்த செவ்வியை (சாந்த நிலையை) அடைந்தன. இதுவே இல்லக் கிழத்தியின் மாண்பு. (388)

8. சோகச் சுவை

1. தலைவி, தோழி இவ்விருவரிடம் மடல் திறம் கூறி 'நீயிர் அருளாமையின் என்னுயிர் அழியாநின்றது; இதனை அறிமின்' என்று தலைவன் தனது ஆற்றாமை மிகுதியைக் கூறிச் சோகத்துடன் நின்றனன். (73)

2. தலைவியைப் பெறுதற்குத் தோழி உரைத்த அருவிலை கேட்ட தலைவன், "நீ அவளது அருமை கருதாது அவளது அவயவங்களில் உண்டாகிய நயத்தைப்பற்றி விடாது நடுங்கா நின்றாய்; இனி மதியைப் பிடித்துத் தரவேண்டி அழும் அறியாக் குழவியைப் போலக் கிடந்து அரற்றுவாயாக" எனத் தன் நெஞ்சோடு அழிந்து புலம்பி நின்றான். (198)

9. நகைச் சுவை (பரிகாசம்)

நின்னை யொழிய யான் வேறொருத்தியையும் அறியேன் என்ற தலைமகனுக்கு, 'நின் பரத்தை போகாநின்றவள் நம் வாயிற்கண் நின்று தேருருட்டி விளையாடா நின்ற புதல்வனைக் கண்டு நின் மகன் என்றையுற்றுத் தழுவ நீ ஐயுற வேண்டா; அவன் உன் மகன்; உறவு மெய்யாகிய உறவே, ஏதும் உனதில்லமே; ஈண்டு வருவாயாக என்று யான் கூற, அது கேட்டுத் தான் நாணிப் போயினள்; யான் அவளை அறியேனாக நீ மாயம் கூற வேண்டுவதில்லை எனத் தான் பரத்தையைக் கண்டமையைக் கூறித் தலைவி நகைத்தாள்.

10. பக்திச் சுவை

தலைவியின் *கண்ணை நயந்து உரைக்க வந்த தலைவன் அக் கண்ணினுடைய 'வெண்மை, கருமை, செம்மை, அகலம், நீளம், ஒளி,' இவைகளுக்கு எல்லாம் பக்தி மயமாகவே உவமை எடுத்துப் பின்வருமாறு கூறியுள்ளது ஓர் அருமை அமைப்பாகும்.

"ஈசனிடத்துத் தான் வைத்த அன்புபோல் அகன்று, ஈசனால் வாங்கப்பட்ட தனது பாசம் போலக் கறுத்து, ஈசனுடைய தில்லையின் ஒளியை ஒத்து, ஈசனுடைய தோள்களிற் சாத்தும் அத் திருநீறு போல வெளுத்து, ஈசனுடைய செம்மை வாய்ந்த பூப்போலும் திருவடிகளைத் தாம் பேசும் அத்திரு வார்த்தை போல நீண்டதாய் தலைவியின் கண் இருக்கின்றது."

(அக்கண்ணினாற் பெரிதும் மயங்கினன் ஆதலின் கண் மலர் செங்கழுநீர் என்று மட்டும் கூறுவது அமையாத தாகலின் இவ்வாறு தலைவன் கூறினன்.)

---

* கண்ணின் இலக்கணம். கண்ணிற்கு இயல்பு கசடறக் கிளப்பின், வெண்மை, கருமை, செம்மை, அகலம், நீளம் ஒளி யென நிகழ்த்துவர் புலவூர்.

11. வீரச் சுவை

1. தோழியிடம் தலைவன் பின் வருமாறு தன் வீரத்தை விளக்கிக் கூறுகின்றான்:—"நான் உங்களுக்கு எல்லாத் தொழிலும் செய்யவல்லேன். நீர் வேண்டியது ஒன்று சொல்லுமின், விடக்கடவதொரு மரத்தோணியைக் கடலில் விடுப்பேனோ? அதுவன்றாகில் கீழது மேலதுவாக மறுகு திரையிலே புக்கு மீன் படுப்பேனோ? முத்துக்கள் பலவற்றையும் ஒரு குளியிலே எடுப்பேனோ?" (63)

2. தன்னுடைய வீரத்தை விளக்கத் தலைவன் பின் வருமாறு தலைவிக்குக் கூறுகின்றான்:—"கொடியை உடைய தேரும், வீரரது திரளும், வெய்ய யானையினது கூட்டமும் அனைத்தும் திரண்டு வரினும் என் கைவேலின் வாய்க்கு இரை போதாது." (216)

3. தலைவனுடன் சென்ற தலைவியைத் தேடி வந்த செவிலித்தாய் தன் மகள் நின்ற நிலையையும் தலைவனுடைய கைவேலினால் ஒரு வேங்கை பட்டுக் கிடந்த நிலையையும் கண்டு அவனுடைய வீரத்தை வியந்து பின்வருமாறு எண்ணினாள்:—

"குற்றமில்லாத சிறியாள் (என் மகள்) நின்றது இவ் விடத்து; தன்னோடு எதிர்த்த புலியின் வாயின் கண் தனது பெரிய கையை மடுத்து அப் புலி வீழ்ந்து கிடந்து அலறும் வண்ணம் தன் கைவேலைச் செலுத்தின திறலை யுடைய ஆண்டகை நின்றது அவ்விடத்து, அதனால் அவர் இருவரும் போயின வழி இதுவே. (245)

12. வெருளிச் சுவை (கோபச் சுவை)

1. தலைவன் இரவுக் குறியிடை வந்து நிற்ப, நிலவு வெளிப்பாட்டாற் சென்று எதிர்ப்பட மாட்டாமல் தலைவியும் தோழியும் வருந்தி நின்று,

"மதியே! மதியே! நாங்கள் புறப்பட்டுத் தலைவனைக் காணச் செல்ல வேண்டிய சமயத்தில் இருளை நீக்கி நீ செய்

ன்ற முதன்மையான உதவி அறிவுடைத்தாய் இருக்கின்றது."

என்று சந்திரனோடு கோபித்துத் தோழி கூறினாள். (171)

2. வாயில் வேண்டிய பாணனை நோக்கி, "கொற்சேரியில் ஊசி விற்கும் புலையா! என்னிடத்து உன்னுடைய நல்ல நல்ல பொய்யைப் பேசவோ நீ வந்தது?" என்று தலைவி வெகுண்டு கூறினள். (386)

3. தலைவி இங்ஙனம் வெகுண்டு உரையா நிற்பது கண்டு, "நீ உன் புருவம் நெரியச் செவ்வாய் துடிப்ப, என் மேல் எறிதற்குக் கல்லை எடுக்க வேண்டாம்; கண்களைச் சிவப்பு ஆற்றுவாயாக. என்மீது கோபிக்க வேண்டாம்" எனப் பாணன் கூறினன். (387)

64. சுனை (71)

('நீர்நிலை' என்னும் தலைப்புங் பார்க்க,

சுனைகளில் காவி (கருங்குவளை) மலரும்; பெண்கள் நீராடுவர்.

65 சூரியன் (72)

('சிவனும் சூரியனும்' என்னும் தலைப்பும், அட்ட வீரத்தில் 'தக்கன், யாகத்தைத் தகர்த்தது என்னும் தலைப்பும் பக்கம் 26, 2 பார்க்க.)

அருக்கன், ஆழ்சுடர், என்றூழ், சுடர்க் கொற்றவன், சுடர் வானவன், பகல், பகலோன், பல்கதிரோன், *பல்லிலன், வெய்யோன்—இவை சூரியனைக் குறிக்கும். 'பகன்' என்னும் சூரியன் கண்ணிழந்தான் என்று கூறப்பட்டுள்ளான்.

1. சூரியன் அஸ்தமனம்

சிவபிரான் திரிபுரத்தை எரிக்க வளைத்த வில்லாகிய மேருமலையில் சூரியன் மறைவான். சூரியன் அஸ்தமிக்கும் போது தாமரை மலர் குவியும்.

---

*பல் தகர்க்கப்பட்ட சூரியன் பெயர் பூஷண். (பூடா)

2. சூரியன் தேர்

இது ஒரு பெருந்தேர். இதற்கு ஆழி—கால் (சக்கரம்) ஒன்றே.

3. சூரியன் தேர்ப்பாகன்

இவனுக்கு ஈரடியும் இல்லை.

4. சூரியன் வர்ணனை

இரண்டடியும் இல்லாத தேர்ப்பாகன் அவ்வுறுப்புக் குறையோடு நான்கு யாமத்திலும் ஏழ்கடலும் எட்டுத்திசையும் திரிந்து இளைத்து வருவான். மேருமலையைச் சூழ்ந்து பல காதங்களைக் கடந்து செல்வான்.

66. சூரியனும் சிவனும் (72)

"சிவனும் சூரியனும்" என்னும் தலைப்பு 30 (பக்கம் 26 பார்க்க)

67. சொல்லழகு (73)

1. வியவேன், நயவேன்.

2. வாய் திறவீர், ஒழிவீர், உரையீர்.

3. மடுக்கோ, படுக்கோ, குளிக்கோ, கொடுக்கோ, தொடுக்கோ.

4. கூத்தயர்வோன் கழல் ஏத்தலர் போல்.

5. *(i) நாகம் தொழ, (ii) நடம் நவில்வோன் நாகம் (iii) நாகம் வர, (iv) நாகம் மலி பொழில்.

6. அங்கம் எங்கும் விளரும் விழும் எழும் மெலியும்.

7. பருக வருக.

* (i) பதஞ்சலி, (ii) மலை, (iii) யானை, (iv) சுரபுன்னை.

8. வருட்டின் திகைக்கும் வசிக்கின் துலங்கும் மனம் மகிழ்ந்து தெருட்டின் தெளியலள், செப்பும் வகையில்லை.

9. யாயும் தெறுக, அயலவர் ஏசுக, ஊர் நகுக, நீயும் புணிக, நிகழ்ந்தது கூறுவல்.

10. முயங்கி மயங்குகின்றாள்.

11. செவ்வாய் துடிப்பக் கருங்கண் பிறழ.

68. தமிழ் (74)

கூடலின் (மதுரையில்) ஆய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் துறைகளிடத்து நுழைந்ததாலோ அல்லது ஏழ் இசையின் சூழலிற் புகுதலாலோ இறைவனே! பெரிய வரை போலும் நின் தோள்கள் ஏன் மெலிந்துள்ளன ?

[இதனால் தமிழின் அருமை பெருமை விளங்குகின்றன. தமிழின் துறைகளாவன அகமும் புறமும்—(அகப் பொருளும், புறப்பொருளும்) ஆகிய பொருள் கூறு. [ஏழ் இசை 'குரல்' முதலாயின. 'சூழல்' என்றது பண்ணும் பாடலும் முதலாயின. இசை என்னும் தலைப்புப் பார்க்க]

69. தவம் (75)

தவம், தவவினை, புணர்தவம், மாதவம், முன்னைத் தவம் கூறப்பட்டுள.

70. தானியம் (76)

1. ஏனல் (தினை)

மலையில் தாழ்வரையில் வேடர்கள் தினைக்குக் காவல் புரிந்தனர். சூரியனின் வெப்பத்தினால் தினையின் பசுங் கதிர் அழியும் (தினை - பார்க்க).

2. ஐவனம் (மலைநெல்)

அருவி நீரால் வளர்க்கப்பட்ட நீண்ட புனத்திடத்து ஐவனக் கதிர் கொய்யப்படும்.

3. கிழங்கு

மலை வாழ்வோர் தேனும் கிழங்கும் அருந்துவர்.

4. தினை (ஏனல் பார்க்க)

குன்றவர் மகளிர் தினைப்புனம் காப்பர். தினையைக் காக்க வேண்டிக் குன்றவர் கடவுளைப் பரவுவர். தினை விதைத்துக் காத்து, விளைவு கண்டு, தினைக் கதிர்களைக் கொய்தபின் புனத்தைக் காக்க வேண்டிய வேலை இல்லை. மலையர் தினை விதைப்ப அவர் மகளிர் அதைக் காத்து வளர்ப்பர். அங்ஙனம் அவர் வளர்த்த தினைக் கதிர்கள் 'கொழுவார் தினையின் குழாங்கள்' எனக் கூறப்பட்டுள.

5. நெல்

நெல் தூய பலிக்கு உபயோகப் படுத்தப்படும். கட்டு வித்தி (குறி சொல்பவள்) நெல்லில் முருகன் வடிவு தோன்று இன்றது காண்க எனக் கூறுவள்.

71. திசை (77)

1. எண்திசை, தென் மாத்திசை கூறப்பட்டுள.

2. இராப்போதின் கண் சென்று திசையைக் கடக்கும் பறத்தலாகிய இயல்பினை உடையது வௌவால்

3. தெற்காகிய பெரிய திசையின் வசை நீங்கத் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் எரியாடுவர் இறைவன். இவைதமக்கு உரிய பாடற் பகுதியை ஒளி நெறியிற் காண லாம்.

72. திருநீறு (78)

சிவனுக்கு உரியது. பால் போலும் வெண்ணிறத்தை யுடையது. இதைப் பொடி என்று கூறுவர்.

73. திருமால் (79)

1. திருநாமம்

அரி	காரணன்
ஆள் அரி	நிலம் விண்டவர்
கண்ணன்	நெடுமால்
கருமால்	மாயவன்
திருமால்	மால்
தொன்மால்	மாலார்
	வளைக்கரத்தான்

2. திருமால் உருவவர்ணனை

1. கண் : பங்கயக் கண் (பங்கயம் - தாமரை)
2. கரம் : ஆயிரம் கரம். வளைக்கரம்.

3. திருமாலின் நிறமும் அழகும்

கருங்கண்ணன்.
கருமால்.
(மேகநிறம் அழகு.)

4. திருமாலின் படை

1. சக்கரம் அளவில்லாத ஒளிகளை வீசும் படை. இது 'ஆழி' என்றும், 'எஃகம்' என்றும் கூறப்பட்டுள்ளது.

2. சங்கு.

5. திருமாலின் பராக்கிரமம்

உலகு உண்டது—[தணித்து உண்டவன் எனக் கூறப் பட்டுள்ளது. இதன் பொருள்—எஞ்சுவான் தானேயாய் தானல்லாத உலகம் முழுமையும் உண்டவன்.]

6. ஆலிலையிற் பள்ளி

ஆலிலையில் வளர் பாலகன் எனக் கூறப்பட்டுள்ளது.

7. அரவணையிற்பள்ளி

இது 'படமாசுணப் பள்ளி' எனக் கூறப்பட்டுள்ளது.

8. பின்னையை மணந்தவர்

அழகிய (நப்) பின்னையை மணந்தவர்.

'ஏர்ப்பின்னை' தோள் முன் மணந்தவன் எனக் கூறப்பட்டு உள்ளது.

9. திருமாலின் அவதாரங்கள்

வாமன அவதாரத்தில் திரி—விக்ரம சொரூபம் எடுத்ததால் 'நெடுமால்' எனவும், நரசிம்ம அவதாரத்தில் நரசிம்மமாக வந்ததால் 'ஆள் அரி' எனவும் திருமால் கூறப் பட்டுள்ளார்.

10. திருமாலும் சிவனும்

(சிவனும் திருமாலும் என்னும் தலைப்பு, பக்கம் 27 பார்க்க.)

1. கருங்கண்ணனால் (திருமாலால்) அறியப்படாது நின்றவர் சிவபிரான்.

2. முப்புரங்களையும் செயித்தவனுடைய திருவடி களைக் காண வேண்டித் திருமால் பூமியை இடந்து புகுந்து, அகங்கார முகத்தினால் அறியப்படாமையாலே, திருவம்பலத் திலே புகுந்து, 'நீயே இரங்க வேண்டும், எந்தாய்' என்று வேண்டிக் கொள்ள அதற்குச் சிறிதிரங்கிப் பெருமான் ஒரு திருவடியைக் காட்டியருள மற்றத் திருவடியையுங் காட்டி யருள வேண்டுமென்று அங்ஙனே அகங்கரித்த மாயவன் தில்லையம்பல முன்றில் புகுந்து வரங்கிடந்தான்.

74. திருமுகம் (80)

[மதிலை (ஊரை) எரித்த பின்பு இப்பொழுது ஒரு திருமுகம் (ஓர் ஆணை ஓலை) மன்னனுடைய பொறியாகிய கயலையும் (கயல் மீனையும்) வில்லையும் உடைத்தாய் அவனது முனிவையும் (கோபத்தையும்) காட்டி வந்துள்ளது.]

[திருவை உடைய ஒரு முகம் கயல் போன்ற கண்ணை யும் வில்போன்ற புருவத்தையும் உடையதால் தங்கிய இந்திர கோபம் போலும் வாயையுங் காட்டி வாராநின்றது என்பது சிலேடையாகப் பிறிதொரு பொருள்.]

75. தெய்வம் (*81*)

1. தெய்வம் உள்ளத்தில் கருதியதைத் தரும்.

2. என் அறிவோடு கூடிய முயற்சியால் வந்ததன்று. தெய்வம் தர வந்தது. இன்னும் சிறிது முயன்றால் நிலை பெற்ற இந்நெறியைத் தந்த தெய்வம் இன்னும் (தர) இருந்தது.

3. தினைப் பயிரைப் பாதுகாக்கக் கடவுளைப் போற்றி மழை வேண்ட, மேகங்கள் மழையைச் சொரிந்தன.

4. குறவர்கள் மழை வேண்டி மலைத் தெய்வங்களைப் போற்றி ஆரவாரம் செய்வர்.

5. தனது நல்வினையால் தெய்வம் (இவளை தலைவியை) தந்தது.

6. தன்னை விட்டுச் சென்ற தலைவன் வரவேண்டு மென்று வட்டமாகக் கூடலை இழைத்துச் சுழிகளின் எண்ணைக் கணக்கிட்டுப் பார்த்து வருந்தாதபடி தலைவனுடைய உள்ளத்தை நெகிழச் செய்து அவனை வரும்படி செய்ய, கூடல் தெய்வமே! உன்னை வேண்டுகின்றேன் என்று தலைவி அத்தெய்வத்தைப் பரவினள்.

7. தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய சிற்றம்பலத் தாரை அல்லது வேறு தெய்வத்தை நினைக்க மாட்டாள் தலைவி.

8. தெய்வங்கள் பணிகின்ற தில்லைச் சிற்றம்பலம் அனைய தலைவி என்றும் (தன் கணவனை அன்றி) வேறு ஒரு தெய்வத்தைப் பணிந்தறியாள்.

76. தேர் (82)

மறவருடன் தேர் புறப்பட்டது.

(தலைவன் தேர் என்னும் தலைப்புப் பார்க்க.)

77. தேவதைகள் (83)

வானகம் சேர் அரம்பையர், அரமங்கையர் கூறப்பட்டுள்ளனர்.

78. தேவர் (84)

1. அண்டர், அமரர், இமையோர், உம்பர், உம்பரார், தேவர், புத்தேளிர், புலவர், (வானர்) வானவர், விண்ணோர், எனத் 'தேவர்கள்' குறிக்கப்பட்டுளர்.

2. (1) மால்முதல் வானர், (2) தேவர்கள் அஞ்சும்படி பறந்து செல்லும் புரங்கள், (3) தொல்வானவர், (4) பொய் வானவர், (5) முப்பத்து மும்மைத் தேவர்—என்று தேவர்கள் விளக்கப்பட்டுளர்.

79: தேவர்களும் அடியார்களும் (6)

('அடியார்களும் தேவர்களும்' என்னும் தலைப்புப் பார்க்க.)

தன்னைத் தாழ்ந்து வணங்கினவர்களுடைய முடிகளைத் தன் திருவடிக்கீழ் வைத்து அவர்களை விண்ணோர் பரிவாரமாகச் சூழும் வண்ணம் செய்பவர் திருவம்பலத்தார்.

'சோத்தம் உன் அடியம்' என்று ஒருகாற் சொன்னாரைப் பழையராகிய வானவர் சூழுமிப் பரிவாரமாய்ச் சூழ்ந்து நின்று ஏத்தும் வண்ணம் நிற்பவன்.

80. தேன் (85)

கள், தேறல், நறவம், பிரசம், மது, வேரி இவை தேனைக் குறிக்கும் சொற்களாக ஆட்சி பெற்றுள.

2. இன்பத்தேன், கயிலை மலைத்தேன், கொடுங் குன்றின் நீள் குடுமிமேல் தேன், கொழுந்தேன், கோற்றேன், செழுந்தேன், தண்தேன், தில்லைத்தேன், நற்றேன், நுண் தேன், பெருந்தேன், பைந்தேன், மல்தேன், மலைத்தேன — எனத் தேன்விளக்கம் தரப் பெற்றுள்ளது.

தூறுகள், நறைக்கள்—எனக் கள்ளும் தண்ணறவு— என நறவும், கோலாப் பிரசம்—எனப் பிரசமும்; தோடார் மது—என மதுவும், கமலங்கலந்த வேரி—என வேரியும் விளக்கம் தரப் பெற்றுள்ளன.

1. கயிலை மலையில் தேன் பொழிகின்ற சாரல், (2) கொடுங்குன்றில் நீண்ட உச்சியின் மேல் வைத்த தேனை உண்ணுதற்கு இச்சித்த முடவனைப் போல, (3) சிறு பிள்ளைகள் கையில் கவண் வாய்க்கப்பெற்ற மணியால் சிதைந்த பெருந்தேன் இழும் என்னும் ஓசையை உடைத் தாய் (இருல்)—தேன் கூட்டினின்றும் கழிதலையுற்று எமது சிறு வீடுகளிற் பரவும். (4) பொழில்களில் செழுந் தேன் திகழும், (5) தில்லையில் மதுமிக்க தேன் மலர்கள் உண்டு, (6) தேன் போலும் சாறு முதிர்ந்த கரும்பு, (7) ஆண் குரங்கு பெண்குரங்கின் வாயில் மாம்பழத்தைத் தேனில் தோய்த்து உண்ணச் செய்து மகிழும். (8) மலையம் (பொதிகை மலையினின்றும்) தேன் வரும். (9) பலாப்பழம் விழுதலால் உண்டாகிய தேனை இளைய மந்தி கள் அறியாதே உண்டு பின் களியாற் சோரும். (10) வண்டுகள் தண் தேனைப் பருகித் "தே தே" எனப் பாடும், (11) கொன்றை மலரில் வாசனையுள்ள தேன் (கள்) மலிந் திருக்கும்; அதை வண்டினங்கள் ஆரவாரத்துடன் உண்ணும், (12) வேங்கை தாதை இடத்தே கொண்டு பொன் போலும் மலரைக் கொடுத்து தனது (கள்ளை) தேனைப் பூத்த இடம் சொரிய நிற்கும் (13) தேன் கூட்டில் மக்கள் விளையாடுவது கண்டு (நறவின்) தேனின் விளைவை அறிந்து (வேடர்கள்) குறவர்கள் மூங்கிலில் கண் ஏணி

* கொடுங்குன்றம் என்பது பிரான்மலை. * தேவாரம் பெற்ற தலம். மதுரைக்கு வடகிழக்கில் 42 மைல் தூரத்திலுள்ளது.

வைத்து ஏறுவர். (14) யானையின் கோடுகளைக் கொழித்துத் தேன் திசை திசைதோறும் பெருக்கடித்துப் பாயும் மலை. (15) பாதிரிப் பூவிலும் சுரபுன்னையிலும் (நறவம்) உண்டு. (16) நல்ல மருத நிலத்தில் குளிர்ந்த தேனை வண்டினங்கள் உண்ணும். (17) சிவனுடைய திருமலையில் ஈ முதலானவற்றால் வைக்கப்படாத (பிரசம்). (18) ஒலிக்கின்ற அருவி போல விழுகின்ற (மது) தேன். (19) இதழ் நிறைந்த தேனைக் (மது) கொண்டவை சுரபுன்னை மலர்கள்; கொன்றை மலர்களிலும் தேன் (மது) உண்டு. (20) தேனில் (மதுவினில்) அதன் இனிய சுவையை மாற்றிக் கசப்பாகிய சுவையை வைத்தது போல உள்ளது இந்தப் பெரிய புனம். (21) யானையின் தந்தத்திலிருந்து விழுகின்ற முத்தைக் கொடுத்து அதற்கு ஈடாக மலையில் வாழும் மகளிர் (வேரி) கள்ளை வாங்குவர் (யானை மருப்புகள் உகுத்த முத்துக்களை கள்ளுக்கு முகந்து கொடுப்பர் மலையிலுள்ள குறமகளிர்). (22) வெறியாட்டு விழாவில் (வேரி) மதுவுண்ண விதி உடையார் அதை உண்ணட்டும். நாம் அதை விலக்கேம்—இக் கருத்துக்கள் உள்ள பாடற் பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

81. தொகை (86)

எண்களில்

ஒன்றில்—சிவன் அம்பும், சூரியன் சக்கரமும்.

இரண்டில்—கரமும், கண்ணும், யானையின் தந்தங்களும், இம்மையும் மறுமையும், அயனும் அரியும், பாதங்களும்.

மூன்றில் —புரமும் மதிலும், யானையின் மதமும், (சிவனது) கண்களும், உலகமும், தீயும், சுடரும், சந்திரன், சூரியன், அக்கினியும், மூவரும் (அயன், அரி, இந்திரன்).

நான்கில்— நிலமும், மறையும், யாமமும்.

ஐந்தில்—பூதங்களும், காக்கையின் குணமும், பாம்பின் படமும்,

ஏழில்—கடலும், உலகமும், பிறப்பும், இசையும், மலையும்,

எட்டில்—திசைகளும், சிவனுடைய தோள்களும்,

முப்பத்து மூன்றில்—தேவர்களும்,

பல் என்பதில்—பிறவியும், மலர்களும்,

எண்ணில்லாதனவாக — பந்தாடுபவர்களும் கூறப்பட்டுள.

82. தொழில் (87)

[“வினை” என்னும் தலைப்பைப் பார்க்க].

பூவினால் பொலிவு பெற்ற தொழிலினையும் புலிப்பல் தாலியையுமுடைய பொற்றொடி (மாது).

நகர லக்ஷணம்

1. அகழி

தில்லையில் அகழியும், மதிலும் இருந்தன. அவ்வகழியில் (இடங்கில்) தாமரைப் பூக்கள் நெருங்கி அழகு தந்தன.

2. இறப்பு

மென் நடையையுடைய மாடப் புறாக்கள் இறப்பில் துயின்றன.

1A. கிடங்கு (‘அகழி’ பார்க்க).

3. கொடி

கொடி என்னும் தனித் தலைப்பும் (56) பார்க்க.

1. வீதியில் நீண்ட கொடிகள் விளங்கின.

2. கலியாணத்திற்குப் பொருந்திய கோப்புக்களை (அலங்காரங்களை) நிறைத்த ஆகாயத்தே தோயும் கொடிகளையுடைய முற்றம் (மன்றில்).

3. மிக்க ஆகாயமாகிய கடலிடத்தே மின்னை ஒத்த கொடியானது குடையை ஒக்க விரிப்ப—இக்கருத்துக்களை யுடைய பாடற்பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

4. சூலம் (இடிதாங்கி)

(மன்னாகிய) சிவபிரானைப் போலப் பிறையணிந்த மாளிகைகள் அவரைப் போலச் சூலத்துடன் (இடிதாங்கி யுடன்) விளங்கின.

5. தெரு (வீதி)

1. தெரு, மறுகு, வீதி இவை தெருவைக் குறிப்பன.

2. (1) மிக்க ஒளியால் நிறைந்த நிறத்தையுடைய செம்பொன்னால் இயன்ற மதிலை உடைய (மறுகு) தெரு.

(2) தில்லையில் நெடிய கொடிகளையுடைய பரத்தையர் வீதி.

(3) சீறூர்த் தெரு.

இவைக்குரிய பாடற்பகுதிகளை ஒளிநெறியிற் காண லாம்.

6. தேர்

(அகப்பொருள் பகுதியில் 'தலைவன் தேர்' என்னும் தலைப்பையும், பிற பொருட் பகுதியில் 'சூரியன்' என்னும் தலைப்பையும் பார்க்க.)

(1) உடைமணியை அரையிற் கட்டிச் சிறுதேர் உருட்டி உலாவும் புதல்வன் (2) வளவிய சிறு தேரை யுருட்டி விளையாடுகின்ற மை பொருந்திய ஒளி சிறந்த கண்களையுடைய பிள்ளை. (3) பெரிய தேர் போன வழியை, பெரிய கடலே! நீ உன் திரைகளால் (தூராது ஒழிக.) அழிக்காதே—இக் கருத்துக்கள் அமைந்த பாடற் பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

7. நகர்

எழில் நகர், சீர் நகர், செல்வி சீர்நகர், சேண் தில்லை மாநகர், சேண்நகர், தில்லைத் தொல்நகர், தில்லைமணி நகர், தில்லை மாநகர், தென் தில்லை மாநகர், நம் பொன்னகர், நம் விழுநகர், நல்நீள் நகர், மாடம் செய் பொன்னகர்—என 'நகர்' குறிக்கப்பட்டுள்ளது.

1. நகரை இரவில்வேல் இளைஞர் (அக்காலத்தில்) காவல் காத்தனர்.

2. மிக்க ஒளியுடைய நிறம் கொண்ட செம்பொன்னால் இயன்ற உயர்ந்த மதிலையுடைய ஊரில் தெருவில் சேர்ந்து விளையாடி மென்னடையுடைய மாடப்புருக்கள் இறப்பில் துயின்று முற்றத்தில் இரை தேர்ந்து உண்ணும் அழகிய நகர்.

3. இல்வாழ்க்கைக்குச் செல்வத்தை உடையவளது அழகை உடைய நகர்,

4. தில்லை அணையிடத்தே நின்று சிறைப்படும் புனல் சுற்றிச் சூழப்பட்ட சீரிய நகர்.

5. மன்னனை (சிவபிரானை)ப் போல் பிறையை அணிந்த மாளிகைகள் அவரைப் போல, சூலத்தை உடையனவாய், ஒளியானும் நுடக்கத்தானும் மின்னை ஒக்கும் கொடிகள் பெரிய வானமாகிய கடலுள் திரையைப் பரப்பப் பொன்னால் இயன்ற புரிசை (மதில்) மேருவைக் காட்டப் பொலியும் புலியூர்.

6. *மிகவும் களித்து ஆரவாரிக்கின்ற பெரிய முரசு உள்ள நம் விழு நகர்.

7. நல்ல மணத்தையுடைய மலர்களைத் தூவி நெல் கலந்த தூய பலியைக் கொடுத்து இல்லுறை கடவுட்குப் பூசனை செய்யும் பெரிய நகர்.

* இது நகரில் மண முரசு ஒலித்ததைக் குறிக்கும்.

இவை தமக்கு உரிய பாடற் பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

8. மதில்

எயில், புரிசை, மதில்—இவை மதிலைக் குறிப்பன.

1. தொழில் மிக்க மதில்.

2. மிக்க ஒளியுடைய நிறம் கொண்ட செம்பொன்னால் இயன்ற உயர்ந்த மதில்.

3. பொன்னால் இயன்ற புரிசை (மதில்) மேரு போன்றது.

4. தில்லையில் அழகிய மதில் இருந்தது.

5. கூடலில் (மதுரையில்) மதில் இருந்தது.

6. பகைவர்களால் இடப்பட்ட மதில்.

7. காவலையுடைய மதில்.

8. நுண்தொழில் விளங்குகின்ற திண்ணிய மதில்.

9. கல்லால் செய்யப் பெற்ற பரந்த மதில்.

10. பெருமை ஆர்ந்த மதில்.

11. அதி தூரத்தே (சேய்மைக் கண்ணும்) சிறந்து தோன்றும் மதிலையுடைய தில்லை.

12. வானளாவும் உயர்ந்த மதிலையுடைய தில்லை.

13. மேகம் தங்கும் பெரிய மதிலையுடைய தில்லை.

9. மாடம்

மாடமாகச் செய்யப்பட்ட பொன் நகராகிய அமராவதி (மாடம்—Storied House)

10. மாளிகை

அணிமணி மாளிகை, செழுமிய மாளிகை, செம்பொன் மாளிகை, (புலியூர்) பிறையணி மாளிகை, பருங்குன்ற மாளிகை, (புலியூர்) பொன்னார் அணிமணி மாளிகை—என 'மாளிகை' விளக்கப்பட்டு உள்ளது.

2. தில்லையில் செம்மைக் கண் விளங்கித் தோன்றுகின்ற செம்பொன்னால் இயன்ற மாளிகைகளும் மன்னனை (சிவபிரானை)ப் போலப் பிறையணிந்து சூலத்தை (முடி தாங்கியை) ஏந்திய மாளிகைகளும் வளவிய மாளிகைகளும் பொன் நிறைந்த அழகையுடைய மணியால் விளங்கும் மாளிகைகளும் விளங்கி இருந்தன.

3. எம்மூரிடத்துப் பெரிய குன்றம் போலும் மாளிகைகளின் நுண்ணிதாகிய வெண்சாந்தினொளி பரந்து நும்மூர்க்கணுண்டாகிய கரிய குன்றம் வெள்ளை நிறத்தையுடைய சட்டையிட்டதனோடு ஒக்கும்—என்னும் கருத்துக்களைக் கொண்ட பாடற் பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

11. முரசு

*மிகவும் களிப்பு உண்டாய நமது சிறந்த நகரின்கண் முழங்கா நின்ற இப் பெரிய முரசு.

12. முற்றம்

மாடப்புறுக்கள் இறப்பில் துயின்று முற்றத்தில் இரை தேரும்.

13. முன்றில்

கலியாணத்திற்குப் பொருந்திய கோப்புக்களை (அலங்காரங்களை) நிறைத்த ஆகாயத்தே தோயும் கொடிகளையுடைய முன்றில் (முற்றம்).

---

* இது மணமுரசைக் குறிக்கின்றது.

84. நகை (ஆபரணம்)

1. பொது

அணி, இழை, கலம், பூண்.

2. சிறப்பு

உடைமணி, கலை (மேகலை), கழல், கிண்கிணி, குழை, (சங்கு) மணி, சங்கு, வளை, சிலம்பு, தொடி, நூபுரம், மேகலை, வளை,—இவை கூறப்பட்டுள.

வளைகளுள் இனவளை, ஓங்கு வளை, வரிவளை, வான் நிகர் வெள்வளை, வெள்வளை கூறப்பட்டுள.

85. நட்சத்திரம்

1. பொது

தாரகை, விண்மீன் எனும் பெயரால் நட்சத்திரம் கூறப்பட்டுள்ளது.

சுரபுன்னையின் மலர்கள் நட்சத்திரத்துக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. நட்சத்திரங்கள் விண்ணில் பரந்து விளங்கும்.

2. சிறப்பு

வடமீன், (அருந்ததி) கூறப்பட்டுள்ளது. திருமணத் தின் போது அக்கினியை வலம் செய்து வசிட்டனுக்கு இடது பாகத்திலுள்ள அருந்ததியைக் காட்டுவர். அருந்ததி கற்பிற் சிறந்தவள். அந்தி வேளையிற் காணக் கூடியது. வடக்கே உள்ளது. ஆதலின் 'கற்பு அந்தி வாய் வடமீன்' எனக் கூறப்பட்டுள்ளது.

86. நரகம் (91)

சிவபிரானுடைய தில்லை அம்பலத்தின் சீரை வழுத் தாத பாவம் செய்தவர்கள் (தீவினையாளர்கள்) நரகத்தில் தங்குவர்.

87. நாடகம் (*92*)

முன்பால் அணைத்து அவள் பின்னே இப்பெரிய வழி செல்லும் படியாய் இல்லை. ஆடவன் ஒருவன் செல்கின்றான். அவன் பின்பு அவள் நெடும்பொழுது செல்கின்றாள்.

ஆணும் பெண்ணும் ஆகிய இவர் முன்னும் பின்னும் சென்ற காட்சி. பூக்களின் மது உண்ட வண்டுகள் களித்து ஒன்றையொன்று சுற்றி விளையாடினாற் போல நடப்ப தொரு நாடகமாயிருந்தது.

இக்காட்சி கண்டார்க்கு இன்பம் செய்தலின் நாடகம் என்றார்.

88. நாடு—தேசம் (*93*)

இலங்கை, கலிங்கம், கற்பக நாடு, தில்லைநன்னாடு, நெருங்கும் பழம் கமுகின் குலைமேல் விழுந்து அங்கிருந்து அதன் கீழ் இருக்கும் வாழைக் குலையைத் தள்ளுகின்ற வயல் உள்ள குளிர்ந்த நாடு—குறமகளிர் ஆனை மருப்பு ஈந்த முத்துக்களைக் கொடுத்து அதற்கீடாகக் கள்ளைப் பெறுகின்ற மலைநாடு—இவை கூறப்பட்டுள்ளன.

89. நாண் (*94*)

1. என்னுடன் வளர்ந்த நாண் ஆனது (தலைவன் மீது நான் கொண்ட விருப்பம் நுந்துதலால்) என்னுடைய கற்பென்னும் கடிய காற்றினால் கலக்குண்டு பறித்து எறியப் பட்டது.

இனி ஏழு பிறப்பிற்கும் என்போலும் பெண்கள் குடியிற் பிறவா தொழிக.

2. தையலாருக்குத் தாயிற் சிறந்தது நாண். அந்த நாணானது கற்பு போலச் சிறந்தது அன்று.

90. நாயன்மார் (*96*)

தில்லைவாழ் அந்தணர் — இவர்கள் தில்லையம்பலத்துப் பெருமானை வணங்கி நிற்பவர். இவர் மூவாயிரர்.

91. நிலம் (*97*)

பாலை நிலத்துக் காடுகள் இறைவனுடைய திருவருளை நினையாதவருடைய வினை போலத் துன்பத்தைத் தருவதாய் இருக்கும்.

92. நிறம் (*98*)

பவள நிறம், பொன்னிறம், வெண் நிறம் கூறப்பட்டுள.

94. நிறை (*99*)

நெஞ்சும் நிறையும் நில்லாமை கூறப்பட்டுளது. (நிறை நில்லாமையாவது) பொறுத்தலருமையான் அங்கோம் புறத்தார்க்குப் புலனாதல்.

95. நீர்நிலைகள் (*100*)

அருவி, ஆறு, ஊருணி, கிடங்கு, சுனை, செறு, தடம், திருத்தம், பொய்கை, மடு, வாவி இவை நீர் நிலைகளாம்.

1. அருவி : குன்றில் நின்று அருவிகள் ஒலியுடன் பெருகி வரும். மணி, சந்தனம், யானையின் மருப்பு, தேன், இவைகளைத் தள்ளிக் கொண்டு அருவிகள் திசை திசை பாயும். கயிலை மலையிலும் திருப்பரங்குன்றம் மலையிலும் அருவிகள் உண்டு. அருவிகள் சுனைகளை நிரப்பும்.

2. ஆறு : ஆறுகள் கடலில் ஒடுங்கும். கயிலை மலையினின்றும் அளவு கடந்த காட்டாறு பெருகி வரும்.

கங்கை, காவிரி (பொன்னி) கூறப்பட்டுள.

3. ஊருணி: தலைவன் தன்னை அடுத்தவர்க்கு ஊருணி போல் உதவுவான்.

4. கிடங்கு : கிடங்கில் தாமரை மலரும்.

5. சுனை : கயிலை மலையின் உயர்ந்த உச்சிச் சிகரத்தில் நீர் உள்ள சுனை உண்டு.

6. செறு: தில்லை நிலத்தில் செறுவில் (குளத்தில்) குவளை நிறைந்த மலர்கள் உண்டு.

7. நடம் : கடம்பூர் எனும் தலத்தில் திருக்குளம் உள்ளது. பச்சை இலையும், தாமரையும் குளத்தில் இருக்கும்.

மாதர்கள் நீராடுதற்கு தடத்திற்குச் (குளத்திற்கு) செல்வர்.

8. பொய்கை : பொய்கையில் புதுநீர் பாயும்.

9. மடு (1) தில்லையில் பல வகையான மலர்கள் உள்ள மடுவில் நீராடுவர்’

(2) நட்சத்திரம் ஆகிய மலர் மொட்டும், மேகமாகிய பச்சை இலையும் கொண்டுள்ள ஆகாயம் ஆனது ஒரு மடுவை ஒக்கும்.

(3) மடுவில் குவளை மலரும்.

10. வாவி-வாவியில் பூக்கள் மலரும்.

95. நூல் (*101*)

நூல் ‘சொற்பா’ என்னும் சொற்றொடரால் விளக்கப் பட்டுள்ளது. ‘சொற்பா’ (சொல் பா)—சொல்லால் இயன்ற பா ஆகிய நூல். (*310* உரை.)

96. நெஞ்சு—மனம் (*102*)

உள், உள்ளம், சிந்தை, நெஞ்சு, மனம்—இச் சொற்கள் நெஞ்சைக் குறிக்க ஆளப்பட்டுள.

1. உள் : உள் உருக, உள் நோய்.

2. உள்ளம் : உள்ளம் தெய்வம் தரும்; உள்ளமீன்.

3. சிந்தை : சிந்தைக்கும் ஏறற்கு அரிது.

4. நெஞ்சு: கள்ளம்புகு நெஞ்சர், நன்னெஞ்சம், நெஞ்சத் தாமரை, நெஞ்சு நில்லா, வருந்தும் மடநெஞ்சம்.

5. மனம்: மனத்தின் வழுத்துநர், கூழின்மலி மனம், வன் மனம்—இவை தமக்கு உரிய பாடற்பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

97. நெறி (வழியென்னும் தலைப்பும் பார்க்க) (*103*)

1. அம்பலவரை வணங்காதவர்கள் அவ்வணங்காமைக்குக் குறியாக வாழும் தீய நெறி.

2. நிழலிடம் தீய்ந்து நீரில்லாத நெறி.

3. திருந்தின கட்டுப்பாட்டையுடைய நெறி (முறைமை).

4. ஞாயிற்றினுடைய கிரணங்கள் வெதுப்பும் நீறு தூளி பரந்த கொடிய நெறி.

5. இவ்வொழுக்கம் நல்ல நெறியது. தெய்வம் தந்தது.

6. ஆகாயத்திற்கு ஏறவிட்ட ஏணி வழியை ஒத்திருக்கின்றது இந்தச் சிறிய வழி.

98. நோய்—பிணி (*104*)

அணங்குற்ற நோய், அம்பலத்துக் குனிக்கும் பிரான் செழுவின தாள் பணியார் பிணி, அம்பலவன் கழல் பணியார் பிணி, அல்லற் பிறவிப் பிணி, உள் நோய், தில்லை யுறுரினவர் உறுநோய், தில்லை மறையோன் அடி வாழ்த்தலரிற் பிணி, நோய், பிணி பிணியாலுற்றுத் தேய்வித்தது, பிணியும் அதற்கு மருந்தும், பிறவிப் பிணி, புரி நோய் (வந்த நோய்), புலியூரைப் புகழாதவரைப் போல வருந்த வந்த நோய்—என 'நோயும் பிணியும்' விளக்கம் பெறும் படி ஆட்சி தரப்பட்டுள.

99. பகல் (*105*)

"பகலில் நீ வரின், அது பெரிய பழிக்கு இடந்தரும். ஏனெனில் நீ தலைவிக்காக வருதல் யாவர்க்கும் எளிதில்

வெளியாகி விடும்'' என்று தோழி தலைவனிடம் கூறுகின்
றனள்.

100. பஞ்சபூதம் (*106*)

1. மண் : ('உலகம்' என்னும் தலைப்பும் பார்க்க.)

நிலம், நிலன், மண், விரிநீர் உடுத்த மண் என 'மண்' குறிக்கப்பட்டுள்ளது.

2 நீர் : அப்பு, தோயம், அலைநீர், எறிதிரைநீர், ஒலி நீர், சுழியாவரு பெருநீர், திரைபொரு நீர், தூநீர், தெண்ணீர், நீர், பெருநீர், பேரொலி நீர், விரிநீர், புயல், புனல், அம்புனல், கராப் பயில் பூம்புனல், கனையார் புனல், செறக்கண் மலிபுனல், சுனைப்புனல், தீம்புனல், தெள்வன் புனல், தெள்ளம் புனல், பள்ளம் புகுபுனல், பாம்புனல், புதுப்புனல், பூம்புனல், பொன்னி வளைத்த புனல், மீன் தோய் புனல், வன்புனல் - என்றெல்லாம் நீர் விளக்கப் பட்டுள்ளது.

3. தீ : அழல், அனல், இரும்தீ, எரி, எரியும் தீ, கடும் தீ, கனல், கழல், தீ, நெருப்பு, படர் தீ, மூத்தீ, மும்மைத் தீ, வன்னி - எனும் சொற்களால் 'தீ' குறிக்கப் பட்டுள்ளது.

4. காற்று : ஊதை, கால், கடுங்கால், கொடுங்கால், கொண்டல் (கீழ்க்காற்று) கொண்டலூற்று ஏறுங்கடல், - எனக் காற்று விளக்கப்பட்டுள்ளது.

5. விண் : ('ஆகாயம்' என்னும் தலைப்பும் பார்க்க.)

வான், வானகம், வானம், விசும்பு, விண், விண் மடங்க- என 'விண்' கூறப்பட்டுள்ளது.

101. படை (ஆயுதம்) (*107*)

1. அம்பு, அயில், வேல், ஆழி (சக்கரம்), எஃகம் (சக்கரம்), எஃகு (வேல்), கட்டங்கம் (மழு), கணை (அம்பு) சக்கரம், சிலை (வில்), சூலம்' தண்டாயுதம், படை (பொது)

மழு, வாள், வாளி (அம்பு), வில், வேல், ஆவம் (அம்பறாத் தூணி) இவை கூறப்பட்டுள. இவற்றுள்,

I. அம்பு

கண்ணுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

1. மானை எய்வதற்குத் தொடுத்த பாணத்தை எய்யாது குறவர் மடக்குவர், ஏனெனில் மானின் நோக்கு தங்கள் துணைவியரின் கண்போல் இருத்தலின்.

2. மூன்று மதிலை அழிக்க ஓர் அம்பை ஏவினவர் சிற்றம்பலவர்.

II. எஃகம்

1. (சக்கரம்) திருமால் பூசை செய்தற்குச் சிவபிரான், சக்கரம் அளித்தார்.

2. மால் வணங்கச் சிவபிரான் அவருக்கு ஆழி தந்தார். அவர் தந்த ஆழி அளவு கடந்த ஒளியை வீசுவது.

III. சிலை—வில்

1. மூன்று மதிலை அழிக்க ஒரே வில்லை ஏந்தினர் சிவபிரான்.

2. வரகுணன், (இமய) மலையில் கயல் வில் பொறி பொறித்தான்.

IV. படை

காமனுடைய படையாகக் கரும்புவில் கூறப்பட்டுள்ளது.

V. வாள்

மாதருடைய கண் வாளுக்கு ஒப்பிடப் பட்டுள்ளது.

VI வேல்

1. சூரனைத் தடிந்தது வேல்.

2. அயில்வேல், இலைவேல், உலைவேல், கதிர்வேல், காய்சினவேல், கொலைவேல், கொன்நுனைவேல், சினவேல், செய்வேல், தழல்வேல், திகழ்வேல், நிணங்குற்றவேல், நிற வேல், போராறுவேல், மணிவேல், என வேல் விவரிக்கப்பட்டுளது.

3. காட்டில் உள்ள பரல் தீ மேல் உள்ள அயிலுக்கு ஒப்பிடப்பட்டுளது.

4. மாதர்களின் கண் கூர் வேலுக்கு உவமிக்கப் பட்டுள்ளது.

102 பரல் (*108*)

காட்டில் உள்ள பருக்கைக் கற்களானவை எரிகின்ற தீயின் மேல் வேல் போல இருந்தன.

103. பலி (*110*)

பெரிய நகரத்தில் வாசனையுள்ள மலர்களைத் தூவி நெல் கலந்த தூய பலியைக் கொடுத்து இல்லுறை கடவுட்குப் பூசனை புரிவார்கள்.

104. பழக்க வழக்கங்கள் (*111*)

(உடுக்குறி இட்டன மாதர்களுடைய பழக்க வழக்கங்களைச் சாரும்)

1. *மலர் கொய்தல்.
2. *அங்கைகள் கூப்ப நின்று பந்து அடித்தல்.
3. *சுனைநீர் ஆடல்.
4. *மலையின் எதிரில் எதிரொலி கேட்பக் கூவுதல்.
5. படகைக் கடலில் செலுத்துதல்.
6. கடலில் மீன் பிடித்தல்.
7. ஒரு குளிப்பில் பல சங்குகள் எடுத்தல்.

8. தில்லைக் கடையில் சங்குவளை விற்றல்.

9. ஐயன் மார்க்குப் (பெரியோர்களுக்கு)க் குற்றேவல் செய்தல்.

10. *தேன் உள்ள மலர்களைக் கொண்டு கூந்தலுக்குத் தொடுத்தல்.

11. ஆற்றில் ஆடுதல்.

12. *கூந்தலில் பூ முடித்தல்.

13. மாதர் கண் வலையிற்பட்டவர் பனை மடல் ஏறுவர்.

14. *சந்தனச் சோலையிற் பல மகளிர் பந்தாடுதல்.

15. *விளையாடும் பொழிலில் சுரபுன்னை மரத்தில் கட்டியுள்ள மணி ஊசல் ஆடுதல்.

16. *தினைவளங் காத்தல்.

17. *சிற்றில் இழைத்தல்.

18. குன்றர் குரவை இரவில் விளையாடுதலும், பார்த்தலும்.

19. மதுவும் இழுங்கும் உண்ணுதல்.

20. ஈ மொய்ப்பது கண்டு மூங்கில் உச்சியில் உள்ள தேனை ஏணி வைத்து ஏறி எடுத்தல்.

21. ஏறு தழுவுதல்.

22. *சாந்து அணிதல்.

23 நிழலிடத்தே இரவில் விளையாடுதல்.

24. *பொதிய மலைச் சந்தனத்தை அணிந்து, நீலப் பூவைச் சூடி, வேங்கை மரநிழலிலே பொழிலில் விளையாடுதல்.

25. மழை வேண்டிக் குறவர் தெய்வத்திற்குப் பலி கொடுத்து ஆரவாரித்தல்.

26. *கூந்தலுக்கு அகிற் புகை ஊட்டுதல்.

27. *கண்ணிற்கு மை எழுதுதல்.

28. *கழுத்தில் வடம் அணிதல்.

29. *வேங்கைப்பூ, கோங்கம் பூ, பாதிரிப்பூ, இவை களைத் தலைவன் தலைவியின் கூந்தலில் அணிதல்.

30. *பொம்மை, பந்து, பூவை, கிளி இவை தமை வைத்திருத்தல்.

31. வள்ளைப்பாட்டு (உலக்கைப் பாட்டு) பாடுதல்.

32. காக்கையைக் கூவிக் குறி பார்த்தல் ;

33. *வேட்ட மாதர் பூக்கொய் தொழிலையும், புலிப் பல்லை அணிந்த கழுத்தினையும் உடையர்.

34. யானையின் எலும்பு கொண்டு குறவர் மனை யமைத்தல்.

35. சிறு பிள்ளைகள் கவண் வீசிப் பெருந்தேன் கூட்டில் நின்று தேனை ஒழுகச் செய்தல்.

36. இளைஞர் காவற்பறை அடித்து நகரைக் காத்தல்.

37. மலை மகளிர் யானை மருப்பில் நின்று விழுந்த முத்துக்களை வேரிக்கு (கள்ளுக்கு) விலைக்குக் கொடுத்தல்.

38. தமது துணைவியரின் கண்ணுக்கு மானின் கண் நிகராய் இருப்பதைக் கண்டு, குறவர் மான் மேல் எய்ய எடுத்த அம்பைச் செலுத்தாமல் நிறுத்திக் கொள்ளுவர்.

39. பசிசென்ற தினையைக் காக்கத் தெய்வத்தைக் குறவர் பரவி ஆராவாரம் செய்ய மழை பெய்தல்.

40. புனத்தில் வரும் கிளிகளை மகளிர் ஓட்டுதல்.

41. *வண்டல் விளையாட்டு விளையாடுதல்.

42. மங்கலச் செயல்கள் :—

(1) பூரண பொற்குடம் வைத்தல்.

(2) மணி, முத்தம், பொன் பொதிந்த தோரணம் தொங்க விடுதல்.

(3) வாத்தியங்கள் முழங்குதல்.

43. மண முரசு ஒலித்தல்.

44. திருமணச் சடங்கில், எரிவலஞ் செய்து அருந்ததி காணுதல்.

45. இடை ஒடியும் என்று பயப்பட்டு நெற்றியில் பொட்டு இட்டுத் தலைவன் தலைவியை அலங்கரியான, நகைகளைப் பூட்டி அலங்கரியான், வண்டு ஏறும் என்று அஞ்சித் தலைவியின் கூந்தலில் மலர் வைக்க மாட்டான்.

46 பகைவரைச் சென்று இட்டித் தலைவன் திறை கொள்ளச் சென்றாலும் திறை கொண்டு வந்து தலைவியின் இல்லத்து அல்லது, ஆண்டுத் தங்கி அறியான். இஃது தலைவனது இயல்பு.

47. அந்திக் காலத்தில் கற்புடைய மகளிரால் தொழப் படுதலின், அருந்ததி அந்தி வாய் வடமீன் எனப்படும்.

48. பகை முனைக்கு (மன்னனால் ஏவப்பட்டுச்) செல்லுதல்.

49. போரில் வெற்றி அடைந்தவர் பகைவர் தந்த விருதுகளையும் கொண்டு வருதல்.

50. மயக்கம் அடைந்தவர் மேல் தண்ணீர் தெளித்து தெளிவு பெறச் செய்தல்.

51. *தலைவன் சென்ற நாளை நிலத்தில் விரலால் குழியிட்டு நாள் எண்ணுதல்.

52. மாலைப் பொழுதில் மணி ஒலிக்க ஏறு கன்றி னுடன் வளர் சேர்தல்.

53. முது பெண்டிர் கூடித் தலைவியின் வருத்தத் தைத் தீர்க்க, மலர் தூவி, நெல்பலி கொடுத்து, வீட்டுத் தெய்வத்தைப் பூசித்தல்.

54. உலகியல் முறையாலே நாயகனுக்குப் பூப்பறிவு உரைக்கச் சிவந்த பூவும், சிவந்த பட்டும், செஞ்சந்தனமும் அணிந்து போவது வழக்கம்.

55. குழந்தைகளுக்கு அரையில் உடைமணி கட்டுதல்.

56. குழந்தைகள் சிறுதேர் உருட்டுதல்.

57. புலையர் பசுவைக் கொன்று தின்பது.

58. கோபித்துக் கல்லெடுத்து அடித்தல்.

105. பழம் (கனி) (*112*)

I. சிறப்பு

கொவ்வைக்கனி (தொண்டைக்கனி), கொன்றைப் பழம், தெங்கம் பழம், நாவற்கனி, பலாப்பழம், மாங்கனி, வாழைப்பழம், என்பன வந்துள.

II. பொது

செங்கனி, தீங்கனி வந்துள. மேலும் அழல் பழுத்த கனி (பழுத்த பழம்), எனவும் வந்துளது.

மேற் கூறியவற்றுள் கொன்றைப் பழம் கூந்தலுக்கு உவமையாகக் கூறப்பட்டுளது. தெங்கம் பழம் வரால் மீன் தாக்குதலால் கமுகின் குலை மேல்விழ அதன் கீழ் இருந்த வாழைக் குலையைத் தள்ளிக் கீழே வயலில் உள்ள தாமரை யைக் கிழிக்கும்.

106. பழமொழி—நீதி வாக்கியம் (*113*)

I. பழமொழிகள்

1. அழல், சேர் மெழுகொத்து, 2. கன்று அகன்ற, புனிற்று ஈற்று ஆ,. 3. நெருப்புறு வெண்ணெய்,

4. வைகொண்ட ஊசி கொல் சேரியின் விற்று - என்பன போன்ற பழமொழிகள் உள்ளன.

II. நீதி மொழிகள்

1. கொளப்படாது, மறப்பது, அறிவிலென் கூற்றுக்களே.

2. சிறுவர்கள் உகிர் உற்று உருமுன்னம் சின்னப் படுங்குவளைக்கு எறிவாள் கழித்தனள்.

3. தாயிற் சிறந்தன்று நாண் தையலாருக்கு, அந் நாண் கற்பின் விழுமிதன்று.

4. புகழும் பழியும் பெருக்கிற் பெருகும், பெருகி நின்று நிகழும் நிகழா, நிகழ்த்தின் அல்லால்.

5. பேய் வயினும் அரிதாகும் பிரிவு.

6. மதுவினிற் கைப்பு வைத்தால் ஒத்தவாம்.

7. முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்.

8. மதி வேண்டி அழும் மழப் போலும்.

9. விசும்புற்ற திங்கட் கழும் மழப் போன்று என்பன போன்ற ஒளி நெறியிற் காணலாம்.

107. பழி (114)

இல்பழி (குடிப்பழி), இல்லாப்பழி, ஏயாப்பழி, பொருந் தாப்பழி, ஏறும்பழி, வான்பழி, வெளியுற்ற வான்பழி (வெளிப்படுதலை உற்ற பெரிய பழி) கூறப்பட்டுள. புகழும் பழியும் பெருகச் செய்யின் பெருகி நிற்கும். அல்லாத போழ்து அவ்வளவிலேயே நின்று ஒழியும்.

108. பளிங்கு (115)

நிகழும் பளிங்கால் (சந்திரன் வாணிடத்து வாழ்வை ஒழித்துக் காணிடத்து வாழ்வைப் பெற்றுற் போலப்) பொழில் விளக்கம் தந்து தனது எழிலைக் காட்டிற்று.

109. பனி (115)

இரும்பனி, பசும்பனி, சுற்றின வீழ்பனி, எழில் வாய்த்த புனிமுகில், பனித்துண்டம், பனிதரு திங்கள் பசும்பனிக்கோடு, பனிச்சந்திரன் கூறப்பட்டுள.

புள்ளினங்கள் தமது பெடையைச் சிறகால் ஒடுக்கித் தமது பிள்ளைகளைத் தழுவிக் கொண்டு மற்றுள்ள தம் மினத்தையும் சூழ்ந்து உறங்குகின்ற இல்லில் மேனி எங்கும் சுற்றிப் பனி வீழா நின்றது.

சேவல் தன் குஞ்சுகளுடன் தன் பெடையை ஒடுக்கி மிக்க பனியிற் பாதுகாக்கும். விழுகின்ற பனியினால் ஏற் படும் குளிரைத் தாங்க எல்லோரும் நெருப்புத் திரளை விரும்புவர்.

110. பாசம் (117)

பாசம் என்பது கட்டு கருநிறம் உடையது என்ப.

111. பாட்டு (119)

பாட்டு 'சொற்பா' என்னும் சொற்றொடரால் விளக்கப் பட்டுள்ளது. சொற்பா (சொல்பா) சொல்லால் இயன்றபா —310 பழையவுரை.

112. கரந்துறை பாடல் (120)

(பாடலில் உள்ள எழுத்துக்களைக் கொண்டே அமை வனவாயுள்ள பாடல்கள்.)

திருக்கோவையாரில் உள்ள 400 பாடல்களினின்றும் ஒருவாறு கிடைத்த கரந்துறை பாடல்களில் குறள் வெண் பாக்கள் 29. இன்னிசை வெண்பா 2. அகவல்பா 1. கொச்சகக் கலிப்பா 7. ஒளி நெறியிற் காணலாம்.

ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் கீழ்க் காட்டுவாம்:—

1. குறள் வெண்பா

56. ஊரென்ன என்னவும் வாய்திற வீர்பழியேல்.
ஊரென்ன வேவுரை யீ

2. இன்னிசை வெண்பா

83. தாதேய் மலர்க்குஞ்சி வண்டுதண்டேன் பருகித்
தேதேய் எனுந்தில்லை யோன்சேய் எனஒருவர்
மாதே! புனத்து வருவர்வந் தியாதுஞ் சொல்லார்
யாதே செயத்தக் கது.

3. அகவல்

289. யாயுந் தெறுக, அயலவர் ஏசுக,
நீயும் முனிக, நிகழ்ந்தது கூறுவல்;
வாய்மனம் பிரியா இறைவாழ்த் துநர்போல்
தூயன் நினக்குக் கடுஞ்சூள் தருவனே.

4. கொச்சகக் கலிப்பா

242. சுத்திய பொக்கணத் தென்பணி சூழ்சடை வெண்
பொத்திய கோலத்தினீரம் பலவர்க் குற்ற
பத்தியர் போலப் பணைத்த பயோதரத் தோர்
பித்தி வரமுன் வருமோ வொர் பெருந்தகையே.

113. பார்வதி (121)

1 தேவியைக் குறிக்கும் சொற்கள்

உடையாள்.
உமை.
*குழல்வாய் மொழி மங்கை.
சிலம்பணி கொண்ட செஞ்சீறடி.
சிலையொன்று வாணுதல்.
தயல் (தையல்).
தேமென் கிளவி.
தேவி.
தையல்.
பெடை நடை(யள்).
பொருப் பரசி.
மங்கை.
மாது.
மாவை வந்தாண்ட மென்னோக்கி.
மெல்லியல்.
யாவையுமாம் ஏகம் (பராசக்தி).
யாழார் மொழி மங்கை.
யாழின் மொழி மங்கை.
வில் நிற வாணுதல் வேல்நிறக் கண் மெல்லியல்.
வேல்நிறக் கண் மெல்லியல்.

---

*இது குற்றாலத்துக் தேவியின் பெயர்.

2. தேவியின் அங்க வர்ணனை

1. அடி

சிலம்படி கொண்ட செஞ் சீறடி.	சீறடி.
செஞ்சீறடி.	

2. இயல் (சாயல்)

மெல்லியல்.

3. கண்

அம்கண்	மென்னோக்கு.
மாவை வந்தாண்ட மென் நோக்கு.	வேல்கிறக் கண்.

4. கொங்கை

அம்கதிர் முலை.	மோட்டங் கதிர் முலை.
கதிர் முலை.	

5. நுதல் (நெற்றி)

சிலையொன்று வாணுதல்.	வில்கிற வாணுதல்.
வாணுதல்.	

6. மொழி (சொல்)

அம் தீங்குழல்வாய் மொழி.	தேமென் கிளவி.
குயிலிதன்றே யென்னலாம் சொல்லி.	யாழார் மொழி.
குழல்வாய் மொழி.	யாழின் மொழி.

7. வாய்

தொண்டையங் கனிவாய்.

3. தேவியின் அணிகலன்

சிலம்பு, நூபுரம்.

4. தேவியின் நடை

பெடை நடை (அன்னப் பெடையின் நடை).

5. தேவி அச்சம் தீர்ப்பவள்

பிறவி காரணமாக வரும் அச்சத்தை தீர்த்தருள் பவள்.

6. தேவியின் ஆடை

செம்பட்டு.

7. ஒப்பிலாதவள்

தனக்கு உவமையில்லாதவள் தேவி.

114 பாவம் (122)

மலைமகளின் கணவனும் சிவனைப் பணியாதவர் போல மிகு பாவம் செய்த எனக்கு என்று தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய் தன்னை நொந்து கூறுகிறாள்.

115. பாவிசேடம் (123)

'ஆர்ப்ப' ஆர்ப்ப - என வரும் பாட்டு. (295)

'ஆனந்த வெள்ளம்' ஆனந்த வெள்ளம் - என வரும் பாட்டு. (307)

'மணி' மணி - என வரும் பாட்டு. (385)

'முகம்' முகம் - என வரும் பாட்டு. (356)

இசையின் அருமை பெருமை கூறும் பாட்டு. (20)

"இடம் அணித்து" என்னும் அகப்பொருள் துறைப் பாட்டு. (15)

ஐவகைத் திணைக்கும் பொதுப்பாட்டு. (1 - 400)

ஒன்று முதல் எட்டு வரையும் வரும் பாட்டு. (339)

சந்திரனை நோக்கித் தோழி புலந்து கூறும் பாட்டு. (171)

கடலை நோக்கித் தோழி புலந்து கூறும் பாட்டு. (173)

சிலேடைப் பாட்டு (85, 327, 365) உரை பார்க்க.

சொல்லழகு உள்ள பாட்டு. (270, 389)

தமிழின் அருமை பெருமை கூறும் பாட்டு. (20)

தலைவன் சிறப்பைக் கூறும் பாட்டு. (400)

தெய்வீக உவமைப் பாட்டு. (109)

நாகம் என்னும் சொல் பல பொருளில் வரும் பாட்டு. (171)

இவை பா விசேடங்களை உடையன.

116. பாவை (124)

சிறு பெண்கள் பாவை வைத்து விளையாடுவது உண்டு. என்னைப் புல்லிக்கொண்டு தன்னுடைய பந்தையும், பாவையையும், பூவையையும் இன்று என் கையில் தந்தாள் என்று தோழி தலைமகனுக்குத் தலைவியின் குறிப்பை உரைத்தாள்.

117 பிரமன் (126)

அவன், தாமரையோன், திசைமுகன், நான்முகன், பீடஞ் செய்தாமரை யோன், மிக்கார். (பெரியார்) என்று பிரமன் குறிக்கப்பட்டுள்ளான். இவன் (சிவன் திரு முடியைக் காணும் பொருட்டு விண் இறந்தான் (கடந்தான்).

118. பிரமனும் சிவனும் (127)

(சிவனும் பிரமனும் என்னும் தலைப்பு (பக்கம்-42) பார்க்க.)

119. பிறவி (128)

அல்லற்பிறவி, எழுமை (ஏழுபிறப்பு), என் பிறப்பு, தொல்பிறவி, ஏழு, நம் அல்லற் பிறவி, பல் பிறவித்

தொகை, பிறவி என்னும் முறை எனப் பிறப்பு, என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

1. இனி மகளிர் எழு பிறப்பின் கண்ணும் குடியிற் பிறவாது ஒழிக.

2. சிற்றம்பலம் சென்று சேர்ந்தவர்களுடைய பிறவி போல (சேர்ந்தவர்களுடைய பிறவியற்ற கடுமை போல) விரைந்து முடுகுவதாக இத் தேர்.

3. பிறவி என்னும் குகை.

4 பிரானுடைய புலியூரை மறத்தல் கூடுவதொரு தீவினை வருமாகில் அதனால் சென்று சென்று (பிறப்பான் அடுப்பினும்) பிறக்க வேண்டி வந்தாலும் பின்னும் சேரத் தகும் தன்மையையுடையவர் (தலைவர்).

5. அம்பலத்து அமிழ்தாய் இருக்கின்ற இவர் நம் அல்லற் பிறவியாம் பிணியை நீக்கும் மருந்தாவர் என்னும் கருத்துள்ள பாடற்பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

120. புகழ் (*129*)

ஒருவன் இடையறாது நிகழ்த்துவானாயின் புகழும் பழியும் பெருகும். அங்ஙனம் நிகழ்த்தா விட்டால் அவை தாமாக நிகழா.

121. புலவோர், பெரியோர் முதலியோர்

(கல்வி, கற்றோர், என்னும் தலைப்பும் பார்க்க.)

கற்றவர், தக்கோர் (சான்றோர்), (மங்கலம் கூறும்) புலவர்கள் கூறப்பட்டுள்ளனர். அப்புலவர்களின் வளவிய திரள்களின் ஆரவாரமும் கூறப்பட்டுள்ளது.

122. புனம் (*130*)

இரும்புனம், கடிப்புனம், கார்ப்புனம், சுனைப்புனம், தண்புனம், தாழ்புனம், தினைப்புனம், தேம்புனம், தொல்

புனம், பெரும்புனம், பைம்பூம்புனம், மஞ்சார்புனம், வான் புனம், புனக்கிளி, புனத்து ஐவனம், புனமயில், ஈங்கோய் மலைப்புனம், கயிலைப் பைம் பூம்புனம், பரங்குன்றின் வாய் புனம் - இவ்வெல்லாம் கூறப்பட்டுள. பிற ஒளி நெறியிற் காணலாம்.

123. பூசனை (*131*)

மலர்ப்பூசனை

நறு நாற்றத்தையுடைய கொழுவியமலர்கள் இட்டுப் பெரிய திருமால் அஞ்சலி செய்து பரவ, திருக்கூத்தைத் விரும்பிச் செய்பவன் பெருமான்.

124. பேய் (*132*)

கூளி, பேய்த்தொகை கூறப்பட்டுள. தலைவன் ஒரு காட்சியைக் கண்டு (நாவல் பழத்தை ஒரு நண்டு தன் பெடைக்குக் கொடுக்கும் காட்சியைக் கண்டு) பிரமித்து நின்றான். அங்ஙனம் நின்றதைப் 'பேய் கண்டனைய தொன்றாகி நின்றான் அப்பெருந்தகையே' (54) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

* பேயோடாயினும் பிரிவு செய்தால் ஆற்றுதல் அரிதாகும்.

125. பேய்த்தேர் (*133*)

கல் நிறைந்த மேட்டு நிலங்களிற் பெண் மான்களும், ஆண் மான்களும் நீர் வேண்டி அணையும்.

126. பொய் (*134*)

1. இவர் புனத்தினைக் காப்பது பொய்யே.
2. கரத்தில் தழை காண்டலும் பொய்.
3. அன்பர் போக்கு பொய்.

---

* பேயோடாயினும் பிரிவொன்று இன்னாதென்பர்-சுந்தரர்.

4. தோன்றியின் புதுமலரும் மெய்யாகத் தோன்று கின்ற இது பொய்யோ.

5. பொய் முதலாகிய குற்றம் கெட மறையவர் மறை சொல்லும் இடம்.

6. வண்ண வண்ணப் பொய் சொல்லிக்கொண்டு நிற்பதாக (உற்றோ).

7. பொய்போலும் இடை என்று கருதி பூணப்பூட்டி யணியான்.

8. பொய்யான தேவர்களிடத்து மறந்தும் புகாதே என்னும் கருத்துள்ள பாடற் பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

127. பொருள் (நிதி) (135)

தனம், நிதி—எனப் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

1. அம்பலத்து நின்றவன் அருளை ஒத்து ஒரு ஞான்றும் கேடு இல்லாத பொருளைத் தலைவன் தேடிச் சென்றனன்.

2. பொருளை வளர்ப்பதற்குக் கொடிய காட்டின் வழிச் சென்றார்.

3. பொருளை ஈட்டுதற்கு நெஞ்சம் ஓட்டம் தரும்.

4. பொன்னைப் போன்ற திருமகளை விட்டு வேறு பொன்னைத் தேடுவது ஏன் எனப் பொருள் தேடச் சென்ற தலைவன் தன்னுள் நினைத்தான்.

5. பொருள் இல்லாதவர் இம்மை மறுமையாக வுள்ள இன்பம் அறியார் என்று கருதித் தொலையாது நிலை பெறும். பெரிய அரும் பொருளைத் தேடுதற்கு வழி அறிதற்கு அரிய அரும் சுரத்தே நமர் போகலுற்றார்.

6. துறந்தாரும் அரசரும் கருதுவனவாகிய மறுமை யும் இம்மையும் (துறந்தார் கருதுவதாகிய மறுமை

பின்பமும், அரசர் கருதுவதாகிய இம்மையின்பமும்) பொருளால் முற்றுப்பெறும்.

7. சான்றோருக்குத் தொலையாத நிதியாய் இருத்தலின் தலைவன் சங்கநிதிக்கு ஒப்பாவான்.

128. பொருள்நலம்

முனிவரும் மன்னரும் நினைப்பன (பொன்னால்) பொருளினால் பெறக் கூடும்.

129. பொழில் - சோலை (136)

1. **பொழில் :** அணி பொழில், இரும் பொழில், உயர் பொழில், கார்ப்பொழில், குற்றாலத்துப் பிண்டிப் பொழில், சூழ் பொழில், செழும் பொழில், தாழ்பொழில், தில்லைப் பல் பூம்பொழில், தேமாம் பொழில், நாகம் மலி பொழில், நாண் மலர்ப்பொழில், பூம்பொழில், பைம் பொழில், பொழில் திருப்பூவணம், மணம் தாழ் பொழில், மயில் முட்டை இளையமந்தி பந்தாடு இரும் பொழில், மலயத்து இருள் தரு பூம்பொழில், மலர்வாய்ப் பொழில், மாம்பொழில், மின் தோய் பொழில், வான் பொழில், விசும்பு இயங்கி நைகின்ற திங்கள் எய்ப்பாறும் பொழில்.

2. **சோலை :** கற்பகச் சோலை, சந்தனச் சோலை, குருறு சோலை, மது மலர்ச்சோலை, வெற்பகச் சோலை.

3. **கா :** சேணிகர் கா.

4. **போதும்பர் :** வளமாம் பொதும்பர்.

இவை கூறப்பட்டுள; பிற ஒளி நெறியிற் காணலாம்.

130. பொன், மணி, முத்து முதலிய (137)

1. **பொன் :** அம்பொன், சிற்றம்பலம் அன்ன பொன், சீர்பொன், செம்பொன், நிறைபொன், பூ மேவிய பொன், பைம் பொன், வாஞ்சியம் அன்ன பொன், பொன் அடி, பொன் அணி, பொன் இஞ்சி, பொற்கூடம் பொன்நகர்,

பொன் புரிசை, பொன்னம் பந்து, பொன் மாலை - இவை கூறப்பட்டுள. 'பொன்னார் மணி புலம்ப' எனும் இடத்தில் பொன் என்பதற்கு இரும்பு எனப் பொருள் கொள்ளப் பட்டுளது.

பொன்னின் (பொருளின்) விசேடம்

1. பொன் : பொன்னை ஈட்டுதலில் நெஞ்சு ஓட்டம் தருகின்றது.

(முனிவர்) துறந்தார் கருதுவதாகிய மறுமையின்பமும் அரசர் கருதுவதாகிய இம்மையின்பமும் பொருளில் முற்றுப் பெறும்.

2. மணி : அக்கின் மணி, அணிமணி, உடை மணி, கதிர் மாமணி, கவண்மணி, குருமா மணி, சிந்தாமணி, சூளாமணி, தோளாமணி, தேர்மணி, நீலமணி, பொன்னார் மணி, பௌவம் பணிமணி, மணி கண்டன், மணி முத்தம், மணிவேல், இவையும் பிறவும் கூறப்பட்டுள. பிறவற்றை ஒளி நெறியிற் காணலாம்.

3. முத்து : ஆரம் கித்திலம், இவை முத்தைக் குறிக்கும். எழில் முத்தம், கடல் முத்து, கண்முத்த மாலை, கதிர் முத்தம், களிற்றின் மருப்பு உகு முத்தம், குளிர் முத்தம், சங்கம் தரும் முத்து, செங்கனி, வெண் முத்தம், நன் முத்தம், பொன் அவிழ் முத்தம், பௌவம் பணி மணி (முத்து), முத்தணி புன்னை, முத்தின் குவளை, வெண் கித்திலம், வேய்தந்த வெண் முத்தம் இவை கூறப்பட்டுள. பிற ஒளிநெறியிற் காணலாம்.

4. பவளம் : மாதர்களின் வாய் பவளத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

சிவபிரான் சடை பொன், மணி, பவளம் இவைகள் போன்று பொலிந்து இலங்கும்.

5. பளிங்கு : இது அடுத்ததைக் காட்டும்.

6. மாணிக்கம் : பாம்பிடத்தில் மாணிக்கம் உண்டு. சிவபிரான் மாணிக்கக் கூத்தன் எனப்பட்டுளர்.

131. போர் (*138*)

முடிமேவந்தர்கள் கொடிய போரிடுவர்.

132. மக்கள் (*139*)

அண்டர்கள் (ஆயர்), அம்பலம் வணங்காக் கலர், அயலவர், ஆய்பவர், இளைஞர், இனியவர், ஏதிலன், ஏர் குழலார் ஐயர், ஒக்கல், ஒன்னார், கட்டுவித்தி, (நெற்குறி காட்டுபவர்.) கலர், கள்வர், கள்ளப் படிறர், கள்ளம் புகு நெஞ்சர், களி (களிமகன்) கானவர், குட்டன், குன்றர், கொடிச்சியர், சிறார், தக்கோர், திருவினர், தில்லை வாழ்த் துநர், தில்லை வாழ்த்தார், துன்னார்கள், தெவ்வர், நண்ணார், நான்மறை, உத்தமர், நொதுமலர், பற்றற்றவர், பாணர், பாவர், பித்தி (பேதை), புலவர்கள், வள்ளினம், பெருந் தகை, மதியுடையார், மலையர், மழ (குழந்தை) மீறவர் குழாம், மீன் எறிவோர், முடவன், மூனகர், மூர்க்கர், வஞ் சகர், வறியார், விதியுடையோர், விரதியர், விறலி, வேலன் (வெறியாடுபவன்)—இவை போல்வன. மக்கட் பெயர்களை (*106*) ஒளி நெறியிற் காணலாகும்.

133. மணம் (*140*)

களவு மணம், யாழுடையார் மணம், (காந்தருவ மணம்) இதைத் தேவர் தரப்பெற்ற மணம் என்பர்.

[முயற்சியும் உளப்பாடும் இன்றித் தேவராலே பெற்ற மணம்].

134. மணல் (*141*)

இது முத்தை ஒத்த வெள்ளிய மணல் என்று கூறப் பட்டுள்ளது.

135. மரம் செடி கொடி (142)

I. மரம் - சிறப்பு.

"அகில், ஆல், கண்டல், கமுகு, கரும்பு, கற்பகம், (தெங்கு), குரா, கொன்றை, கோங்கு, சந்தனம், தெங்கு, தொண்டை, நாகம் (சுரபுன்னை), நாவல், பலா, பனை, பாடலம், பிண்டி, புன்னை, மகிழ், மா (மாமரம்), மூங்கில், வன்னி, வாழை, வேங்கை இவை கூறப்பட்டுள. இவற்றுள்,

1. அகில் : இதன் புகை, மாதர்களின் கூந்தலுக்கு ஊட்டப்படும்.

2. கண்டல் : இது கடற்கழியிற் காணப்படும். தலைவன் புன்னைமர நிழலில் கண்டல் (தாழை) சான்றாகத் தன்னைக் கலந்ததைத் தலைவி கூறுகின்றாள்.

3. கமுகு : (கமுகின் குலை)

வரால்மீன் தெங்கம் பழத்தை எற்ற, அப்பழம் கமுகின் குலையைத் தள்ள அது கீழுள்ள வாழையைத் தள்ள அப் பழம் விழுந்து வயலில் உள்ள தாமரையைக் கிழித்தது.

4. கரும்பு : கழை, வேழம், தில்லையிற் கரும்புத் தோட்டம் உண்டு. கரும்பு பெண்களின் தோளுக்கு உவமை கூறப்படும். கரும்புச் செடியின் மெல்லிய பூவைச் சேவல் சூல் முதிர்ந்த தன் பெடைக்குக் குஞ்சு பெற வீடு கட்டிக் கொடுக்கும். கரும்பு மன்மதனுக்குப் படை (வில்).

5. கற்பகம் : "தெங்கு" பார்க்க.

6. குரா : குரா மரத்தின் மலரில் வண்டுகள் ஒலிக் கும். குராமலர் பாவை போல் இருக்கும்.

7. கொன்றை : பெண்களின் கூந்தலுக்கு ஒப்பிடப் பட்டுள்ளது.

8. கோங்கு : மகளிர் கூந்தலில் வேங்கைப் பூவுடன் கோங்கம் பூ, பாதிரிப்பூ இவைகளைப் பனை...

9. சந்தனம் : (ஆரம்) சந்தன மரத்தழை அழகாய் இருக்கும். குளிர்ச்சி உள்ளது மகளிர் அணிவர்.

10. தெங்கு : தெங்கம் பழம் கீழே விழக்குழின் குலை, வாழை, இவைகளின் மேற்பட்டு அவைகளைக் கீழே உள்ள வயலில் தள்ளும்.

11. தொண்டை : இதன் கனி (கோவைக் கனி) மகளிர் வாய்க்கு உவமை கூறலாம்.

12. நாகம் : வழை (சுரபுன்னை) இதற்குத் தழை உண்டு. இதன் மலரில் வண்டு நுகரும் தேன் உண்டு. மலர் என்னும் தலைப்பினும் பார்க்க.

13. நாவல் : இதன் கனி வண்டு போல் இருக்கும்.

14. பலா : (வருக்கை) இதன் சுளை அடுக்காய் இருக்கும். இதன் பழத்துத் தேனை இளமந்திகள் உண்டு மயங்கிக் கிடக்கும்.

15. பனை : (பெண்ணை) இதற்கு மடல் உண்டு. இது யானையின் துதிக்கைக்கு ஒப்பிடப் படும்.

16. பாடலம் : (பாதிரி) இதன் பூவை மகளிர் கூந்தலிற் சூடுவர்.

17. பிண்டி : குற்றாலத்துப் பொழிலில் அழகிய அசோக மரங்களும் உண்டு.

18. புன்னை : வண்டு பாட புன்னை பொன் தரும் புன்னையின் அரும்பும் மலரும் முத்தும் பொன்னும் போல விளங்கும்.

19. மகிழ் : மகிழம்பூ பொன் போன்ற அழகிய நிறத்தை உடையது.

20. மா கொக்கு : (மாமரம்)—மாம் பொழிலில் வண்டுகள் மொய்க்கும். இனிய பழங்கள் உண்டு.

21. மூங்கில் : (அமை, காம்பு, பணை, வெதிர், வேய்) இது மகளிர் தோளுக்கு உவமை கூறப்படும். காடுகளில் வளரும். மூங்கில் ஏணியில் ஏறித் தேன் கூட்டினின்றுப் தேன் எடுப்பர். மலைகளில் மூங்கில் தீப்பிடித்து எரியும்.

22. வன்னி : வன்னி பத்திரத்தைச் சிவபெருமான் சூடுவர்.

23. வாழை : (கதலி)—வாழைப் பொழில் இருண்டு இருக்கும். தெங்கம் பழம் கமுகின் குலையின் மேல் விழுந்து அக்குலை வாழையின் மேல் விழுந்து அதைக் கீழே தள்ளும். வாழையின் குலை செழுமை உள்ளது.

24. வேங்கை: (கணி) வேங்கை மலர தினை முதிர்ந்து விட்டதென்று தினைக்காவல் நீக்கப்படும். வேங்கை மலரை மகளிர் தலையிற் சூடுவர். வேங்கைமர நிழலில் மயில்கள் தூங்கும். வேங்கை மலர் பொன் நிறங் கொண்டது. தினைக்கதிர் கொய்வதற்குக் காலம் வந்துள்ளது என்று வேங்கை மலர்தலால் அறியக் கிடக்கும். வேங்கைக்குக் 'கணி' என்ற பெயர் உண்டு. கணி என்பதற்குச் சோதிடன் என்னும் பொருளும் உண்டு. ஆதலால் வேங்கைப் "பெருங்கணியார்" எனக் கூறப்பட்டுள்ளது.

II. மரம் - பொது

1. ஆண் யானை குழியில் சேற்றில் மாட்டிக்கொள்ள அதன் துன்பத்தை நீக்க, அது குழியினின்று ஏறப் பெண் யானை மரத்தைக் கொடுத்து அதற்கு உதவும்.

2. வௌவால் (வாவல்) பகலில் பெரிய மரங்களில் தங்கும்.

III. கொடி, செடி, இலை.

1. இலை : (ஆல் இலை) தாமரையிலை கூறப்பட்டுள்ளது.

2. கொடி : இளங்கொடி; பூங்கொடி; வளரும் கறிக் கொடி (மிளகுக் கொடி) கூறப்பட்டுள்ளன.

4. கொம்பர் : மகளிர்க்கு உவமை கூறப்பட்டுள்ளது.

5. தழை : பூந்தழை, மாந்தழை கூறப்பட்டுள.

6. பஞ்சி : அழகிய பஞ்சி எனச் செம்பஞ்சி கூறப் பட்டுள்ளது

7. மடல் : பனை மடல் கூறப்பட்டுள்ளது.

8. வஞ்சி : (கொடி) மகளிர் இடைக்கு உவமை கூறப்பட்டுள்ளது.

9. வல்லி : (கொடி)—காற்றில் அசையும்.

10. வள்ளி : வள்ளிக்கொடி கூறப்பட்டுள்ளது.

136. மலர் போது (*144*)

1. அரும்பு : கோங்கரும்பு கூறப்பட்டுள்ளது.

2. அலர் : கழுநீர்ப்பூ தெய்வத்திற்கு உரியது.

3. குரல் : (பூங்கொத்து).

4. சுணங்கு : வேங்கைச் சுணங்கு - வேங்கை சுணங்கு போலும் பூ.

5. தாது : செழுந்தாது, தண்ணறுந்தாது.

6. தொத்து : மலர்த் தொத்து.

7. நனை : (மென்நனை).

8. பூ - பல்பூ : பூ அணை, பூவார் அகலம், மெல்லடி பூ வண்டு ஆல் இயலும் வளர் பூ, வேங்கையின் பூ.

9. போது : அடிப்போது, இணர்ப்போது, கைப் போது, கொழும்போது, சிவந்த பைம்போது, தாதிவர் போது, துணர்ப்போது, வேங்கையம்போது.

10, மடல் : மென்பூ மடல்.

11. மலர் : அறுகால் நிறைமலர், ஆய்மலர், இணை மலர், இனமலர், கடிமலர், கள் மலிமலர், கார் மலர், கான் மலர், குரூஉமலர், கொங்கார் மலர், சந்தமா மலர், சீர் மலர், செம்மலர், தடமலர், தவிசின்மலர், தாதேய் மலர், துணை மலர், தூ மலர், தேன் மலர், நாண் மலர், நிறை மலர், பன் மலர், பொலி மலர், பொன் மலர், மது மலர், மலி மலர், மாமலர், விரை மலர்.

12. வீ : வெறி வீ, வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வீ - ஆகிய இவை கூறப்பட்டுள. பிறவற்றை ஒளி நெறியிற் காணலாம்.

மலர் சிறப்பு

1. அல்லி : இது மலர்க்குஞ்சி எனக் கூறப்பட்டுள்ளது.

2. அனிச்சம் : இது மாதர் அடிக்கு உவமையாகக் கூறப்படும். அப்பூவை மிதிக்கினும் தலைவியின் அடி பதைக்கும் மென்மையானது என்று கூறப்பட்டுள்ளது.

3. ஆம்பல் : ஆம்பலம் போது கூறப்பட்டுள்ளது.

4. இந்தீவரம் : (கருங்குவளை) இது மாதரின் கண்ணுக்கு உவமை.

5. எருக்கு : மடல் ஏறுபவர் எருக்க மாலை அணிவர்.

6. கரும்பு : கரும்பின் பூ. இதைச் சூல் கொண்ட பெடைக்குச் சேவல் பள்ளிக்குக் கொண்டு வந்து சேர்க்கும்.

7. கழுநீர் : இதைத் தெய்வத்திற்குரிய பூ என்பர். இது மாதர் கண்ணுக்கு உவமை கூறப்படும்.

8. காந்தள் : காந்தள் மலரைப் பாம்பென்று நினைத்துப் பயந்து தன் தோகை மலரால் மயில் போன்ற

தலைவி தன் கண்களை மூடிக் கொண்டாள். காந்தள் மலர் நிறமுடைய குழையும் நாணும் போன்றிருக்கும், நிறமுடைய குழையும் நாணும் பாம்பு ஆதலின் முழவு ஒலிக்க அதை இடி யென்று நினைத்துக் கார்காலம் வந்த தென்று காந்தட்பூ பாம்புபோல விரிந்து மலர்ந்தது.

முத்துப் போலும் நீரைத்தரும் கண்ணும் குவளையை மெல்லிய கைகளாம் காந்தட் பூவால் மூடுவள் தலைவி.

காந்தட் பூ கார் காலத்தில் மலரும்.

13 குவளை : இது மாதர் கண்ணுக்கு உவமை கூறப்படும். இம் மெல்லிய பூ கை நகத்தால் கீறினும் சின்னப்படும். இது சிவபெருமானின் கண்டத்தின் நிறத்தை உடையது. மாதரின் முகம் என்ற மடுவிற் கண்ணும் குவளை மலரும்.

14. கைதை (தாழை) : இதற்கு மடல் உண்டு.

15. கொன்றை : மணமுள்ளது. தேன் நிறைந்தது. ஆதலின் வண்டுகள் ஆரவாரத்துடன் அத்தேனைப் பருகும். கொன்றைப்பூ மாலை போல மலர்வது.

16. கோங்கு : இதன் அரும்பு மாதர் கொங்கைக்கு உவமை கூறப்படும். இதன் மலரை வேங்கைப் பூ, பாதிரிப் பூ இவைகளுடன் மாதர் கூந்தலில் அணிவர்.

17. தாமரை : கமலம், பங்கயம், பூ, வனசம் - இவையும் தாமரையைக் குறிக்கும். இம் மலரில் தேன் உண்டு. இலக்குமியைக் கமலத்தவள் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் மலரில் இலக்குமி வாசம் செய்கின்றாள். ஆதலின் இது 'திருவளர் தாமரை' 'பூ மேவிய பொன்' என விவரிக்கப் பட்டுள்ளது.

இது நல்ல நிறமுடையது. மாதரின் அடி, கை, கண் இவை தமக்குத் தாமரை உவமை கூறப்பட்டுள்ளது. நெஞ்சத் தாமரை, முகத் தாமரை என்றும் வருகின்றன.

இரவில் தாமரை மலரை கதிரோன் அடைத்து விடுவான். இம் மலர் வயல் நீரிலும், பொய்கையிலும் மலரும். இது பாண்டில் (கிண்ணம்) போல் இருக்கும். பிரமனுக்குத் தாமரைப் பூ வாசம் செய்யப் பீடமாகும். திருமாலின் கண் செந்தாமரைக்கு ஒப்பிடப் பட்டுள்ளது

தாமரை இலை கூறப்பட்டுள்ளது.

18 தோன்றி : இது சிவபெருமானுடைய கையில் உள்ள நெருப்புப் போன்று மலர்வது.

19 நாகம் (சுரபுன்னை) : நாகப்பூ தேன் உள்ளது. தேன் (வண்டு) நாடுவது. சுரபுன்னை நட்சத்திரம் போன்றது.

20. நீலம் : வண்டு மொய்ப்பது. வயலில் மலர்வது.

21 பாடலம் (பாதிரிப் பூ) : இதன் பூவில் தேன் உண்டு. இம் மலரை மகளிர் கூந்தலில் அணிவர்.

22. மகிழ் : இதன் பூ பொன்மணி போன்றது.

22. மல்லிகை : மல்லிகையாம் சங்கில் வண்டுகள் ஊதும்.

24. வேங்கை : இப் பூவை மாதர்கள் அணிவர். குறவர்களின் முன்றிலில் வேங்கை மரம் உண்டு. வேங்கைப் பூக்கள் பொன் நிறத்தன. அவை பாறையின் மீது பரந்து விழ அதைப் புலியென்று நினைத்து யானைகள் அணுக அஞ்சும்.

வேங்கை மலர்ந்தால் தினைக் கதிர் முதிர்ந்து கொய்யும் நிலையை அடைந்துளளது என்று சோதிடஞ் சொல்வது போலத் தெரிய வரும்.

137. மலை (சிறப்பு) (*145*)

இமயம், ஈங்கோய் மலை, கயிலை மலை, கழுக்குன்றம், குற்றாலம், பரங்குன்று, பொதியமலை, மேரு கூறப்பட்டுள,

1. இவற்றுள்

1. இமயம் : இது பார்வதி தேவியின் மலை. வர குணபாண்டியன் இம்மலையில் கயல்மீன், வில் இவைகளின் அடையாளத்தைப் பொறித்து வைத்தான்.

2. ஈங்கோய் மலை : இம் மலையில் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். (இது தலைவியின் தினைப்புனம் இருந்த இடம்) இது தலைவன் யானையைக் கடிந்து தலைவியையும் தோழியையும் காப்பாற்றிய இடம்).

3. கயிலை : இது சிவபிரான் வீற்றிருக்கும் மலை இது பெரு நெடுவரை. இது பொன் மலை, வெள்ளி மலை திருமலை எனவும் படும். இம்மலை வடக்கில் உள்ளது.

4. கழுக்குன்றம் : (திருக்கழுக்குன்றம்) இங்குள்ள சந்தனச் சோலையில் பல பெண்கள் பந்தாடினர்.

5. குற்றாலம் : இங்குத் தேவியின் பெயர் 'குழல் வாய் மொழி மங்கை' இத் தலத்தில் உள்ள அழகிய அசோக மரத்துப் பூந்தழை வேறு எங்கும் கிடைக்காது.

6 பரங்குன்று (திருப்பரங்குன்றம்) : இம் மலையில் பாயும் புனல் உண்டு. இது சிவபிரான் புதல்வனும் முருக வேளின் தலம்.

7. பொதியமலை : தெற்கே உள்ளது, மேகம் படிவது. இத்தலத்தில் சந்தன மரங்கள் உண்டு. சிவபிரான் திருவடியைத் தேவர்கள் பரவிச் சூடும் இடம். இம் மலையில் வேடர்கள் வாழ்வர்.

8. மேரு : சூரியன் அத்தமிக்கும் மலை. சிவபிரான் திரிபுரத்தை எரித்தபோது இம்மலையை வில்லாக ஏந்தினர். இம் மலையில் பொன் கிடைக்கும். ஆதலால் இது 'செம்பொன் வரை' எனப்பட்டது. மேரு மலைக்குக் கல்வி ஒப்பிடப் பட்டுள்ளது (அளவு கடந்து இருப்பதால்.)

2. மலை - பொது.

குன்றம், குன்று, சிலம்பு, சிலை, பொருப்பு, மலை. வரை, விலங்கல், வெற்பு இச் சொற்கள் மலையைக் குறிக்கும்.

1. குன்றம், குன்று : கடற்கரையில் மணல் குன்று உண்டு. இருங்குன்றம், எழில் குன்று, கருங்குன்றம், செங்குன்று, பருங் குன்றம், புயல் மன்னு குன்றம், மணற் குன்றம், கூறப்பட்டுள. யானைக்கு மலையை உவமை கூறப் பட்டுள்ளது. குன்றில் நின்று அருவிகள் பாயும்.

2 சரி : (மலைச்சரி, மலைவழி) மலை வழிகளில் யானை கள் நடுங்கும்படி சிங்கம் வேட்டையாடித் திரியும்.

3 சிலம்பு : இருஞ்சிலம்பு, மஞ்சார் சிலம்பு, கூறப் பட்டுள. பூங்கொடிகள் மகளிர் சிலம்பின் (மலையின்) எதிர் ஒலி கேட்கக் கூவுவர். மந்தி வாழையின் நிழலில் தூங்கும்.

பொருப்பு : நிலம், விசும்பு, மலை, இவைதமை இறை வன் படைப்பான். மேகம் மலைமீது படியும்.

மலை அருவி : மணி, சந்தனம், யானையின் மருப்பு இவைகளைத் தள்ளித் தேனைத் திசை திசை பாயச் செய்யும் மலை. யானையின் மருப்பைக் கொடுத்து அதற்கு ஈடாக மலை மகளிர் வேரி(கள்) வாங்கும் மலை.

வரை : கல்வரை, கனவரை, கார்வரை, குலவரை, குளிர் வரை, செவ்வரை, தடவரை, நெடுவரை, பல்வரை, பெருவரை, பிரசம் திகழும் வரை, மால்வரை கூறப்பட்டுள.

மிளகுக் கொடியை அறியாத மந்தி தின்று மயக்கத் துடன் தளர்ந்து கிடக்கும் மலை.

விலங்கல் : காற்று மலைகளைப் பிளந்து மேல் கீழாக ஒடித்து மேலும் மேலும் தள்ளும்.

வெற்பு : குறைவில்லாமல் மண்டலமாகத் தன் ஒளியை நிலா பரவச் செய்யும் மலை. அல்லது மதி பரிவேடிக்கும் மலை. மலையில் மூங்கில் விளையும்.

138 மறை (146)

1. அருமறை, சந்தம், நான்மறை, என "மறை" கூறப்பட்டுள்ளது.

2. தலைவனையும் தலைவியையும் தேடிச் சென்ற செவிலித்தாய் வேதியர்களை நோக்கி 'நான் மறையில் வல்ல அறிவர்களே' நும் உள்ளத்தால் (ஆராய்ந்து) தலைவியை இன்னமும் நான் பெறுமாறு உண்டோ!' என்பதைக் குற்றம் தீரச் சொல்லுமின்கள் என அவர்களிடம் சோதிடம் கேட்டனள்.

3. "இடியின் முழக்கம் போல மறை (வேதத்தின்) ஒலியுடன் இவ்வழியிற் செல்லும் வேதியர்களே! நீங்கள் வரும் வழியில் மயிலன்ன சாயலாள், ஒரு ஏந்தலுடன் (ஆண் மகனுடன்) செல்வதைக் கண்டீர்களோ?" என்று தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய் எதிரில் வந்த அவர்களை வினவினள்.

139. 1. மனப் பாடத்துக்கு உரிய பாடல்கள் (147)

எண்	பாட்டு முதற்குறிப்பு
1.	திருவளர் தாமரை.
7.	ஏழுடையான்.
20.	சிறைவான்.
86.	புரங்கடந்தான்.
109.	ஈசற்கு.
285.	குயிலி தன்றே.
307.	ஆனந்த வெள்ளத்.
400.	காரணி கற்பகம்.

குறிப்பு: திருக்கோவையாரில் அநேக பாடல்கள் மனப்பாடத்திற்கு உரியன. ஆயினும் முக்கியமான ஒரு சிலவே இங்குக் குறிக்கப்பட்டுள.

2. எழுத்திலும் பேச்சிலும் பயன் படுத்தக் கூடிய பாடற் பகுதிகள்.

எண்		பாடற்பகுதி
9.	... ...	உணர்ந்தார்க்கு உணர் வரியோன் தில்லைச் சிற்றம் பலவன்.
21.	... ...	கொம்பிக்கு ஒதுங்கி மேயா மஞ்ஞை.
40.	... ...	மாதிவர் மாதவம் அம்பலத்தான் மலை எய்துதற்கே.
43.	... ...	தாழச் செய்தார் முடி தன் அடிக்கீழ் வைத்தவரை விண்ணோர் சூழச் செய்தான்.
57.	... ...	மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே.
71.	... ...	காகத்து இரு கண்ணிற்கு ஒன்றே மணி கலந்தாங்கு.
72.	... ...	அம்பலத்து மூவாயிரவர் வணங்க நின்றோன்.
86.	... ...	வரம் கிடந்தான் தில்லை அம்பல முன்றில் அம் மாயவனே.
97.	... ...	புற்றில வாளரவன்.
100.	... ...	தெங்கம் பழம்.
181.	... ...	புகழும் பழியும் பெருக்கிற் பெருகும்.
198.	... ...	விசும்புற்ற திங்கட்கு அழும் மழப் போன்று.
204.	... ...	தாயிற் சிறந்தன்று நாண் தையலாருக்கு. அந்நாண் திண் கற்பின் விழுமிதன்று.

336. ... ... குணங்கள் அஞ்சாற் பொலியும். நலசேட்டைக் குலக் கொடியே.

393. ... ... விதியுடையார் உண்க வேரி (வேரி = கள்)

308. ... ... கல்விச் செம்பொன் வரை.

332. ... ... முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்.

343. ... ... நாய் வயினுள்ள குணமும் இல்லேனே.

343. ... ... பேய் வயினும் அரிதாகும் பிரிவு.

குறிப்பு: இவை போல்வன பிற ஒளி நெறியிற் காணலாம்.

குறிப்பு: சேட்டை = மூதேவி.
கொடி = காக்கை.
மூதேவியின் கொடி காக்கை.

140 : மாதர்கள் (148)

1. மாதர்களைக் குறிக்கும் சொற்கள்

1. ஏழையர், தையலார், நல்லார், நாரி, மகளிர், மங்கை, முதலியன.

2. மாதர்கள்—அவயவ வர்ணனை

2. (தலைவி வர்ணனை பக்கம் 67, 75 பார்க்க.)

1. இடை: மின் தங்கு இடை.

2. கண்: வேலன்ன மின்னியல் கண், மான் அமர் நோக்கு, மான் முதிர் நோக்கு.

3. குழல்: ஏர்குழல், தாதேய் மலர்க்குஞ்சி.

4. சாயல்: மென் தோகை, வல்லி, கொடி.

5. நுதல் : (நெற்றி) மதியேர் நுதல்.

6. பல் : வெள்ளை நகை.

7. முலை : கட்டார் முலை.

8. மொழி : கரும்பன மென்மொழி.

9. விரல் : பைங் காந்தள்.

3. உருவ வர்ணனை

(தலைவி உருவ வர்ணனை பக்கம் 67, 75 பார்க்க.)

4. மாதர்களின் தன்மை

சந்தனமும், கடல் முத்தும், வெண் சங்கும், சங்கு வளையும் தம்மை விரும்பினவர்களிடத்தே சென்று அவர்களுடைய மெய்க்கு அலங்காரமாய் நிற்கும். அதுபோலத் தான் மகளிரும் ஆராயப் புகின் மகளிர் தம்மை விரும்புவோர்க்குப் பயன் படுவர்.

5. பழக்க வழக்கம், விளையாட்டு

(பழக்க வழக்கம் என்னும் தலைப்புப் பார்க்க.)

1. சிலம்பு (மலை) எதிர் கூவுதல்.
2. ஊசல் ஆடுதல்.
3. சுனைநீர் ஆடுதல்.
4. தினைவளம் காத்தல்.
5. பந்தாடுதல்.
6. மலர் கொய்தல்.
7. வண்டல் இழைத்தல்.
8. சிற்றில் இழைத்தல்.

6. மாதர்களின் வாழ்வைப்பற்றி இரங்குதல்

பொருப்பர் மேல் யான் வைத்த விருப்பம் இடையே புகுந்து தள்ளக் கற்பாகிய கடிய காற்று எனது நாணை

முலைக்குப் பிடுங்கிப் புறத்து எறிந்து விட்டது. இனி மகளிர் எழு பிறப்பின்கண்ணும் குடியிற் பிறவா தொழிக.

7. மாதர்களின்மீது மையல்

மாதர்களின் கண்ணாகிய வலை வீசின பொழுது அவ் வலைப்படுதலால் உள்ளம் ஆகிய மீனை இழந்தவர்கள் பனை மடலச் சிறார்க்கண் ஏறுவர். (தம் முள்ளம் பெறுதற்கு வேறு வழி இல்லாத இடத்து.)

141. மாலை (*149*)

(சிவபிரான் மாலை என்னும் தலைப்பு பக்கம் 22 பார்க்க.)

1. அலங்கல், ஆரம், கண்ணி, கோதை, தார், பிணை, மாலை, இவை மாலையைக் குறிப்பன. சுடர்த்திங்களங் கண்ணி, நறுங்கண்ணி, நாகத் தொண்பூங் குறுங்கண்ணி (நாகம் - சுரபுன்னை), அல்லியங் கோதை, குரூஉ மலர்த்தார், தேன் நக்க தார், தேன்பிணை, கண் முத்த மாலை கண்ணீர், தெய்வ மருவளர் மாலை, (நீர்) முத்தமாலை (கண்ணீர்), பூங்குவளைப் பொலி மாலை, (வேங்கைப்) பொன் மாலை - என 'மாலை' பலவித அடைமொழிகளால் விளக்கப்பட்டுள்ளது.

2. மாணிக்கம் முதலாயினவற்றாற் பல நிறத்தை உடைய - மாலைகளின் தொகைகளால் இராப்பொழுதும் பகலாக நிற்கும்.

142. முருகவேள் (*150*)

1. முருகவேள் சிவபிரானுடைய புதல்வர். அவரை நல்ல மலரிட்டு வாழ்த்தி வணங்குவதல்லாமல் (2) அவரைக் கண்டவர்கள் பிறிதொன்றை நினைக்க மாட்டார்கள், நினைத்தால் உயிர் வாழும் வகையில்லை.

3. முருகன் வாகனம் மயில், கொடி கோழி, படை சூரனைச் சங்கரித்த வேல்.

4. சிவபிரானுடைய வெற்றிப் பிள்ளையாம் முருகன் ஊராவுகின்ற மயில் இதுவன்றோ? அவனுக்குக் கொடி

யாகிய கோழியும் பாருங்கள்; வலிய சூரனை வெட்டின வேல் இது வன்றோ? நெல்லிலே தோன்றினவன் வடிவு இது வன்றோ? (என்ன, அவனாலே வந்ததோ காணும்) என்று கட்டுவிச்சி நெல்லில் தான் கண்ட குறியை எடுத்துக் கூறினாள்.

4. முருகன் தலம் திருப்பரங்குன்றம்.

5. அவர் சூரனை அட்டவர்.

6. வேலனுடைய வெறியாட்டின் போது வாசிக்கப் படும் வாத்தியம் முருகியம்.

143. முனி பத்தினி (152)

அருந்ததி: அந்திவாய் வடமீன், கற்பு அந்திவாய் வடமீன், வடமீன் என அருந்ததி விளக்கப்பட்டுள்ளாள்.

அந்திக் காலத்தில், வடபால் கற்பிற் சிறந்த அருந்ததி தோன்றும். (திருமணத்தின்போது) அக்கினியை வலம் கொண்டு வசிட்டனுடைய இடப் பக்கத்துத் தோன்றும் அருந்ததியைக் காண்பது வழக்கம்.

144. முனிவர்கள் (152)

1. பதஞ்சலி

1. சிறப்பு: (நாகம்) பதஞ்சலி முனிவர் தொழும்படி அழகிய தில்லையம்பலத்தில் பெருமான் நடஞ் செய்கின்றார்.

2. வசிட்டன்: இம் முனிவர்க்கு இடப் பாகத்தில் அருந்ததி விளங்குகின்றாள்.

2. போது

முனிவரும் மன்னரும் கருதுவன ஆகிய இம்மை இன்பமும் மறுமை இன்பமும் பொருள் இருந்தால் முற்றுப் பெறுவன ஆகும்.

145. மெய் (*153*)

1. இந்தப் பெரிய உலகத்தில் மெய் என்பது சிறிதும் இல்லை போலும்.

2. மெய் விளங்கும் அன்பு

3. தலைவ! நீ பகலில் வந்தால் பழிக்கு இடமாம் என்பது மெய்.

4. உண்மையை நோக்கு மிடத்து (தலைவனுக்கு) வேட்டையின் மேல் மன மில்லை.

இக் கருத்துக்களைக் கொண்ட பாடற் பகுதிகளை ஒளிநெறியிற் காணலாம்.

146. மேகம்—மின்—மழை—இடி (*154*)

1. மின்: மேகமானது மின்னி உலகத்தை வளைத்துப் பரந்த கடலைப் பருகும்.

2. மழை: *1.* முழங்கி மின்னி மழை பொழியும். 2. பெய்ய வேண்டிய காலத்து மழை பெய்யாது மாறுதலும் உண்டு. மழை நின்ற பின் இடையிடை அசும்பு (சிறு திவலை) உண்டாம்.

3. இடி: இடியேறு—போர் மிக்க வேலை அஞ்சும்.

4. மேகம்: மலையிடத்துக் குறவர் மழை வேண்டிக் கடவுளைப் பரவிப் போற்றுவர்.

மேகம் எட்டுத்திசையிலும் பரவி வரும். தினைப் பயிரைக் காக்கும் பொருட்டுக் குறவர் கடவுளைப் பரவ, மேகங்கள் மழை பொழிந்தன.

தில்லை மதிலில் மேகங்கள் படியும்.

(பெண்கள்) ஆடின ஊ(ஞ்)சல் மேகத்தை அளாவி நின்றது.

மேகங்கள் சோலைகளில் படியும்.

5. முத்துக்கள் பரந்து திரை பொருகின்ற கடலானது மேகத்தையும் மீனையும் பரப்பிக் கொண்டு ஆகாயம் போல் ஒளியைத் தோன்றச் செய்கிறது.

6. மேகம் கடல் நீரைக் கவரும்.

இவை தமக்குரிய பாடற் பகுதிகள் ஒளி நெறியிற் காணலாகும்.

147. யமன்—காலன் (157)

(சிவபிரான் அட்டவீரம் என்னும் தலைப்பு பக்கம் 1 பார்க்க).

1. காலன் மடியும்படி திருவடியை நீட்டின மேலோன் (சிவன்)

2. விடப் போவதில்லை யென்று வந்த காலன்.

3. யமன் விடுத்த தூது.

4. கூற்றுவன் போலக் கோபத்தை உடைய சிங்கம் (ஆளி)—இக் கருத்துக்களைக் கொண்ட பாடற் பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

148. இராவணன் (158)

(சிவனும் ராவணனும் என்னும் தலைப்பு பக்கம் 30 பார்க்க)

1. இவன் இலங்கையர் வேந்தன் வாள் ஏந்தினவன்.

149. வடமொழி (160)

'பயங்கரமாய்'—என்னும் சொல் ஆளப்பட்டுளது

150. வணக்க வகை (161)

தில்லை அம்பலத்தானுடைய திருவடிகளைத் தலையில் வைத்துக் கைகூப்பித் தொழ வேண்டும்.

151. வயல் (162)

பணை, பழனம், வயல்—இச் சொற்கள் வயலைக் குறிக்க ஆளப்பட்டுள.

முகன் பணை, தண் பூம் பணை, கொங்கம் பழனம், சோலைதான் நிகழ் வயல், வடிவார் வயல்—என வயல் குறிக்கப்பட்டுள்ளது.

இவை தமக்கு உரிய பாடற் பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

152. வரணனை (*163*)

1. கடுவனும், மந்தியும்

1. நல்ல மாம்பழத்தைத் தேனில் தோய்த்து மந்தியின் வாயிற் கடுவன் கொடுக்கும்.

2. பலாப் பழத்தின் சுளையை நல்ல தேனில் தோய்த்து ஆண் குரங்கு பெண் குரங்கின் வாயில் கொடுக்கும் மலை (*99*)

2. கண் வர்ணனை

1. தலைவியின் கண் வர்ணனை-கண்ணின் அகலம் :- தலைவன் சிவபிரானிடத்துவைத்த அன்பு எவ்வளவு அகலமோ (பெரிதோ) அவ்வளவு அகலம்.

2. கண்ணின் கறுப்பு :- சிவபிரானால் வாங்கப்பட்ட பாசம் போலக் கருமையுடையது.

3. கண்ணின் ஒளி :- சிவபிரான் வீற்றிருக்கும தில்லையின் ஒளி போன்றது.

4. கண்ணின் வெளுப்பு : சிவபிரானுடைய தோள்களிற் பூசியுள்ள திருநீறு போல வெண்மையுடையது.

5. கண்ணின் நீளம் :- பிரானுடைய பூப்போலும் திருவடிகளையாம் பேசும் அத்திருவார்த்தை போல மிகவும் நெடியது. (*109*)

குறிப்பு :- "கண்ணிற்கு இயல்பு கசட்டறக் கிளப்பின் வெண்மை, கருமை, செம்மை யகலம் நீளம் ஒளி என விளம்பத்துவர் புலவர் "ஆயின் இதனுட் செம்மை கண்டிலே-

மென்பார்க்குச் செம்மையுங் கூறிற்று, சிவன் தோள் செந்நிறத்தது ஆதலின்."

3. கேசாதி பாத வர்ணனை

(தலைவியின்)

திருமகள் தங்கும் தாமரை போலும் முகம், அழகுள்ள நீலப் பூப் போலும் கண்கள் பூங்குமிழம் பூப் போலும் மூக்கு, கோங்கரும்பு போலும் கொங்கைகள், காந்தள் பூப் போலும் கைவிரல்கள், அன்னம் போலும் நடை—எனத் தலைவி வர்ணிக்கப்பட்டுள்ளாள்.

4. தலைவி செவ்வியலள் என்று தோழி மறுத்தல்

விளையாடாமையின் அன்னங்கள் தலைவியின் நடையைக் கற்கப் பெற்றன வில்லை; கண் மலர் நோக்குகளை அவள் கொடுப்ப மான்கள் பெற்றன வில்லை; உரையாடாமையின் அவள் மொழிகளைக் கிளிகள் பெற்றன இல்லை. நீர் (தலைவன்) என்னிடம் வந்தவாறும் யான் (தோழி) உமக்குக் குறை நேர்ந்தவாறும் அவள் இன்னும் அறிந்திலள். அதனால் அவள் செவ்வி பெற்றிலள்.

5. தலைவியின் கோப வர்ணனை

(பாணன் உரைத்தது)

குளிர்ந்த தில்லை. ஒப்பாய்! உனது புருவம் நெரியச், செவ்வாய் துடிப்ப என்மேல் எறிதற்குக் கல்லை எடுக்க வேண்டாம். உன்னுடைய கரிய கண்களின் சிவப்பு ஆற்றுவாயாக. என் மேல் கோபம் கொள்ளாதே. (387)

6. நண்டும் பெடையும்

ஒரு நண்டு தன் பெடையின் வாயில் வண்டு போலக் கரிய நாவல் கனியைக் கொடுக்கக் கண்டு, தலைவன் பேயைக் கண்டது போல வேறுபாட்டை அடைந்து தன் உணர்வு இழந்து நின்றான். (84)

7. நாட்டு வர்ணனை

தெங்கம் பழம் விழுந்து கமுகின் குலைகள் உதிரமோதி அதன் கீழுள்ள வாழையின் குலைகளை முறித்து விளங்கும் பழத்தை உடையநாடு. (100)

8. பொழில் வர்ணனை

1. புறம் எங்கும் கதிரோன் சென்று நுழையாத இருளாய், நக்ஷத்திரங்கள் போலத் தேன் வண்டு நுழையும். நாகப்பூ (சுரபுன்னைப்பூ) மலர்வதாய்ச் சந்திரன் வானிடத்து வாழ்வை ஒழிந்து காணிடத்து வாழ்தலைப் பெற்றாற் போலத் தனதெழிலைப் புலப்படுத்துவதாய்க் கரியபொழில் விளங்கிற்று.

2. சென்று ஆராய்வார் இல்லாத மயிலின் முட்டையை இளைய மந்தி பந்தாடி விளையாடும். (276)

மந்தி வர்ணனை

1. பச்சை மிளகை அறியாமல் மந்தி தின்று மயக்க மாய்க் கிடக்கும் (193)

2. வாழைத்தோட்டத்தில் பலாப்பழத்தில் நின்று விழுந்த தேனை அறியாமல் இளமந்திகள் உண்டு சோர்வு அடையும். (262)

9. மந்தியும் மாலையும்

கயிலை மலைச் சிற்றில் இடத்துச் செவிலியர் சூட்டிய மாலையின் மேல் நான் (தோழி) ஒரு மாலை சூட்டினும் அது புதிதென்று தலைவி நாணுவள்; ஏனெனில் இந்தக் குன்றிடத்துச் சுரபுன்னை மரத்தின் பூக்களால் ஆய சிறு மாலையைச் சூட்டினால். இளமந்திகளும் நாணி நிற்கும். 95

10. மருத நில வர்ணனை

தூண்டிலை விழுங்கிய வரால்மீன் தெங்கொடு மோத அதன் பழம் விழுந்து கிண்ணம் போலும் உள்ள தாமரை மலர்களைக் கிழிக்கும் வயல்கள் விளங்கின. (249)

11. மலை வர்ணனை

1. கயிலை மலையில் மலை போலும் யானைகள் பல. கும்பபடி சிங்கம் திரியும். (*100*)

2. மணிகளையும், சந்தனத்தையும் உருட்டித் தள்ளி யானையின் மருப்புக்களைக் கொழித்துத், தேனைத் திசைகள் தோறும் பரப்புகின்ற மலை. (*128*)

12. வேங்கையின் மலர் வர்ணனை

3. வேங்கையின் மலர்கள் பாறையின் மேல் விழுந்து கிடக்க அப்பாறையைப் புலி என்று நினைத்து யானை மிகவும் அஞ்சுகின்ற மலை. (*96*)

153. வரலாறு (*164*)

1. சிவபிரான் பாம்பாட்டினது

கரிகால் சோழனுக்கு எதிரியான குறும்பராஜன் ஒருவனுக்கு உதவியாக, ஒரு பெரும் பாம்பைக் குடத்தில் விட்டுச் சமணர்கள் சோழனிடம் அனுப்ப, அச்சோழனுக்கு உதவியாகச் சிவபெருமான் அப்பாம்பை எடுத்து ஆட்டியருளிய தலம். (திருப்பாசூர்)

2. கொக்கின் இறகதணிந்தது (*376*)

கொக்கு உருவம் கொண்ட குரண்டாசுரனைக் கொன்று அதன் இறகைச் சிவபிரான் அணிந்தனர் என்பது வரலாறு.

சிவபராக்கிரமம் - பக்கம் 121 பார்க்க.

154. வலை (*165*)

கொல்கின்ற சினத்தையுடைய வேலை யொத்த ஒளியுடைத்தாகிய கண்ணாகிய வலையை (மகளிர்) கலந்து வீசின போது அந்த வலையிற் படுதலால், உள்ளமாகிய மீனை இழந்தவர்கள் சிறூர்க்கண் பனை மடல் ஏறுவர். (தம் உள்ளம் பெறுதற்கு வேறு வழியில்லாத விடத்து.)

155. வழி

(நெறி என்னும் தலைப்புப் பார்க்க. (166)

அத்தம், அதர், கடறு, சரி, வழி - இச் சொற்கள் வழியைக் குறிக்க ஆளப்பட்டுள.

1. ஆண்மானும் பெண்மானும், நீர் வேண்டிப் பேய்த் தேரைச் சென்று அணுகும் முரம்பு (கல் உயர்ந்திருக்கும் நிலம்) நிரம்பிய வழி.

2. பொம்மென்று செறிந்த இருளில் பக்கத்திலுள்ள யானைகளை வெருட்டி அவை புக்க இடத்தைச் சிங்கம் உணவு தேடுகின்ற வழி.

3. முழங்குதலால் கிட்ட வொண்ணாத சிங்கம் யானைகளை வேட்டம் செய்கிற இருளின்கண் மனிதர் நடந்தறியாத வழி.

4. மலையிலுள்ள மூங்கிலில் வளரும் தீ மேலே சென்று தெய்வ லோகத்திலே நின்ற கற்பகச் சோலையைப் பற்றுகின்ற கற்களையுடைய சிறுவழி.

5. முன்னோன் திருவருளை முற்பிறப்பில் நினையாத தீவினையை உடைய நீசர் சேரும் துன்பத்தைச் செய்கின்ற அரிய வழி. (பாலைநிலம்)

6. கண்ணைப் புதைத்தாற் போன்றிருக்கும் செறிந்த இருளின் கண் யானைகள் நடுங்கச் சிங்கம் வேட்டமாட உலவும். (மலை) வழி.

1. பெரிய தேர் போன வழியைக் கடலே! நீ அழிக்காதே. இக்கருத்துக்களைக் கொண்ட பாடற் பகுதியை ஒளி நெறியிற் காணலாம்.

156. வறுமை (167)

வறுமையுற்றவரின் நிலை

பொருளில்லாதார் இம்மையும் மறுமையும் ஆகிய இருமையின்கண் வரும் இன்பத்தை அறிய மாட்டார்

என அறிந்து மிகப் பெரிய அரும்பொருள் தேடுதற்கு அரிய காட்டுவழிப் போகின்றார் தலைவர்.

157. வாத்தியம் (*168*)

1. இயம் : தூரியம், முருகியம், வயிர் கூறப்பட்டுள. முருகியம் என்பது முருகனை வரவழைக்கும் வெறியாட்டு வாத்தியம்.

தூரியம் என்பது வாத்தியப் பொது.

2. குழல் : பார்வதியின் மொழிக்கும் தலைவியின் மொழிக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

3. சங்கம் : திருமணத்தின்போது சங்கம் முழங்கத் திருமண முரசு உடன் ஒலிக்கும்.

4. துடி : மாதரின் இடைக்கு உவமையாகத் துடி கூறப்பட்டுள்ளது.

4A. தூரியம் : இயம் பார்க்க.

4B. பணிலம் : சங்கம் பார்க்க.

5. பறை : நகரைக் காக்கின்ற இளைஞர் உடைய பறை ஒலிக்கும்.

6. முரசம் : முரசு.

1. வீரமுரசு முழங்க யானை, குதிரைகளுடன் (தலைவர் வந்து) குறுகினார்.

2. சங்கம் முழங்கத் தலைவியின் திருமணம் என்று மிகவும் களிப்புடன் நமது இல்லத்தில் பெரிய மணமுரசு முழங்குகின்றது. வெறியாட்டுக் காரணமாக ஒலிக்கு முருகியமும் நீங்கி நின்றது.

7. முருகியம் : 'இயம்' பார்க்க.

8. முழவு : கார்காலம் வந்தது என்று பாம்பு போலும் துடுப்புக்களைக் காந்தள் மலர்கள் பரப்பி மலர்ந்தன.

சிவபெருமான் நடம் ஆடத் திருச்சிற்றம்பலத்தில் முழவு வாத்தியம் அதிரும்.

9. யாழ் : 1. பார்வதியின் திருமொழிக்கும், தலைவியின் மொழிக்கும் யாழ் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

2. விறலியும், பாணனும் தில்லை இறையால் அமைக்கப்பட்ட வெற்றியியலும் யாழை வேந்தற்குக் கொண்டு வந்து நின்றார்.

10. வயிர் : இதுவாயில் வைத்து ஊதும் கொம்பு.

158. வியாபாரம் (*169*)

வளைவிற்றல் : தில்லை முற்றத்திற் சென்று எல்லாருங் காணச் சங்க வளையல்களை விற்று வருவேனே.

159. விரதியர் (*170*)

விரதியர் - எலும்பு அணிந்த கோலத்தவராய், திருநீற்றுப் பை, கட்டங்கம், மழுப்படை, உடையவராய் சடை உடையவராய் விளங்கினர்.

விரதம் : இந்தப் புனத்தில் உள்ளவர்கள் விருந்தினரோடு பேசாமையை விரதமாக உடையர்; மீட்டு வாய் திறக்கின் சலக்கென விழுகின்ற முத்த மணிகளை மெய்யாக உடையர்

160. விழா (*172*)

1. இறைவிழா : தில்லைநகர் இறைவனுடைய திருவிழாவில் மாணிக்கம் முதலான பல நிறத்தையுடைய மாலைகளின் தொகைகளால் இராப் பொழுதும் பகலாகும்; அதுவேயும் அன்றி பல விளக்குகள் இருளை ஓட்டும்.

2. புனல் விளையாட்டு விழா : தலைமகனுடன் புனலாடுகின்ற பரத்தையர் சேடிமார் ! அரமங்கையரைப் போலப் புனலாடாநின்றவர்களே ! என்று விளித்து, 'நாமெல்லாம் பித் தன்மையேமாக, வீரன் அரமங்கையர் என்று சொல்லும்

வண்ணம் மற்றொருத்தி வந்து இவனைத் திரித்துக் கொள்ளக் கொடுத்துப் பின் வருந்தாது முன்னுறக் காப்போம்' எனத் தம்முள் கூறி நின்றனர்.

161. விளக்கு (*172*)

1. நெய்யைக் குவளையிலே உண்டு இருள் முகத்தைத் இழிக்கும் நெடிய விளக்கு.

2. பலவாகிய விளக்குகள் இருளுடைய ஒங்கலை ஒட்டும்.

162. விறு (*173*)

பித்தை உடையீராகிய பெரிய முலைகாள்? இடை நெருங்க இன்னமும் நீங்கள் பெருக்கின்றது என்ன காரணம் தான்? *121.*

163. வினை (*174*)

1. தில்லை அம்பலத்தானை முடி தாழ்ந்து நினையாதவருடைய வினை பெருகும்.

2. பழ வினையால் உயிர் துயர் உறும்.

3. வினையைப் பொடியாக்கும் திருநீறு.

(வினைவள நீறெழ நீறணி அம்பலவன் என்றூர்· புதல்வனது பிணிக்குத் தாய் மருந் துண்டாற் போலத் தொழு தெழுவார் வினைக்குத் தான் நீறணிந்தான் என்பர்.)

164. வினை (*175*)

(தொழில்) என்னும் பொருளில் பக்கம் *169* பார்க்க.

கொல்வினை, அழுவினை, வில்வினை கூறப்பட்டுள.

165. வெள்ளம் (ஆனந்த வெள்ளம்) (*175*)

இன்ப வெள்ளத்தே அழுந்தக் கடவதோர் அரிய உயிர் இரண்டு வடிவு கொண்டு காம இன்பம் துய்த்தல்

மையாக (வற்றாத இன்பம் வளரும் திரு அம்பலத்தைப் பொருந்தின இன்ப வெள்ளத்தைத் தருகிற வீரக்கழல் ஆரவாரிக்கிற சீர் பாதங்களை உடையவனுடைய திரு வருளைப் பெற்றவர்களைப் போல இவ்வின்பம் ஒருநாளும் குறையாது; இவ்வழகிய நன்மை முதிருவதும் செய்யாது, நீர்க் கடலுக்கு ஒரு நாளிலே வற்றுவதும் உண்டு; இவ் வின்பக் கடலுக்கு அது இல்லை.

166. வேட்டை (*177*)

உண்மையாகவே இவருக்குத் (தலைவருக்கு) வேட்டை யின் மீது மனம் இல்லை. கையில் வில் இல்லை. சுர புன்னைத் தழைதான் கையில் வைத்துள்ளார். மேலுக்கு வேட்டை என்கின்றார்.

167. வேள்வி (*178*)

தக்கன் வேள்வி (சிவபிரான் அட்டவீரம் பக்கம் 2 பார்க்க).

1. தக்கன் வேள்வியின் அழகை அழித்தவர் பெருமான்.

2. தக்கன் வேள்வியின்போது விண்ணோர் சிவ பிரானைப் பழித்ததால் முத்தீக்கள் தமது வலிமை, தலை, கண் இவைகளை இழந்து திசை திசை தோறும் போயின. கால்லையெல்லாம் புகுந்து தலைவியைத் தேடுவேன் என்று செவிலித்தாய் துணிந்தனள்.

168. வைதல் சொற்கள் (*179*)

ஆத்தின்னி, கள்வன், புலை ஆத்தின்னி என்பன வைதல் சொற்களாக வந்துள.

169. சீவராசிகள் (*180*)

ஊர்வன

அரவம், அரவு, அரா, பணி, பாந்தள், பாம்பு, மாசுணம், இவை பாம்பைக் குறிப்பன.

அரவு

1. புற்றில் வாழும் படங்களில் தீயை உடையது; ஒளி உடையது. கோபமுள்ளது. ஆடவல்லது.

2. சிவபிரான் அணியும் அரவு புற்றில் வாழாதது.

3. சிவபிரான் காதில் பணி (அரவு) குழையாக விளங்கும்.

நாகலோகம் கூறப்பட்டுளது.

காந்தள் மலர் (பாந்தளைப் போல) பாம்பு போல இருக்கும்.

பெண்களின் இடைக்கு பாம்பு உவமை கூறப்படும்.

4. சிவபிரான் பாம்பை அணிகலமாக அணிந்துள்ளவர்.

5. படத்தை உடைய (மாசுணத்தைப்) பாம்பைத் திருமால் படுக்கையாகக் கொண்டவர்.

யானையைக் கொல்ல வல்ல பெரிய பாம்புகள் உண்டு.

6. பாம்பைப் பிடித்து அதன் படத்தைக் கிழித்தது மாதர் இடை.

2. அலவன் (நண்டு)

நண்டு தன் பெடையின் வாயில் வண்டு போன்ற நாவல் பழத்தைக் கொடுக்கும்.

தில்லைக் கானலில் தன் பெடையொடு நண்டு பயிலும்.

3. கீடம் (புழு)

தம்மை நினையாதாரைப் புழுக்களாகச் செய்வர் தில்லைப்பிரான்.

4. கோபம் (இந்திர கோபம்)

கோபம் :- இது மாதர் வாய் இதழுக்கு உவமை கூறப்படும்.

5. கோம்பி (பச்சோந்தி)

கோம்பிக்குப் பயந்து மயில் மேய்வதற்குப பயப்படும்.

ஜீவராசிகள்-நீர்வாழ்வன

மீன்வகை :- கயல், கெண்டை, சேல், மீன், வரால். இவை மீன் வகைகளைக் குறிக்கின்றன.

1. கயல், கெண்டை, இவை பெண்களின் கண்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள.

2. கயல் :- கார்க்கயல் (கரிய கயல்) எனக் கூறப்பட்டுள்ளது.

3 சேல் வயலில் இகழும்.

4. மீன் :- மீனை அன்னங்கள் உண்ணும். மீன் கழிகளில் இருக்கும்; கொழுமீன் என்பது ஒருவித மீன்.

5. வரால் :- வரால்மீன் தெங்கின் பழத்தின்மீது மோத அப்பழம் கீழே விழுதலால் வயலில் உள்ள தாமரை மலர்கள் கிழிபடும்.

கரா (முதலை). இது நீரில் இருக்கும்.

ஜீவராசிகள் பறவை

1. அன்னம் :

1. அன்னம் மீன் உண்ணும்.

2. தாமரைப் பூவில் வீற்றிருக்கும்.

3. (அன்புடைய) தன் பெடைவருந்த (அன்பிலாது தன் மரபுக்குப் பொருந்தாத) சலஞ்சலச் சங்கின் பெடை மேல் தகுதி கெட்டு அன்னம் கிடந்து உறங்கும்.

4. களிப்புடைத்தாகிய அன்னம் தான் விரும்பிய இன்பத்தைத் தரும் சேவலைத் தழுவிக் கொண்டு போர் ஒரு கவலையின்றித் துயில்கின்றது.

5. புன்னையில் தன் சேக்கையிடத்துத் தனிமையுற்று அன்னங்கள் எல்லாம் விடியுமளவும் உறங்காதே வருந்தின.

6. பெண்களின் நடை அன்னத்தின் நடைக்கு ஒப்பிடப்படும்.

2. ஈ:

1. தேன் உள்ள இடம் ஈ மொய்ப்பதால் அறியப்படுகின்றது

3. காகம்:

1. காக்கையின் இரண்டு கண்களிலும் ஒரே மணி கலந்து இயங்கும்.

2. காக்கை மூதேவியின் கொடி.

3. காக்கை மாமிசப் பலி சோறு உண்ணும்.

4. காக்கையைக் கூவிக் குறி பார்ப்பர்.

5. காக்கைக்குக் குணங்கள் ஐந்து; அவை தாம்:—

(1) மறைந்து புணர்தல்.

(2) கலங்காமை.

(3) பொழுது போகு முன்பு தன்னிடம் புகுதல்.

(4) நெடுகக் காண்டல்.

(5) மடியின்மை.

காலை எழுந்திருத்தல், காணமலே புணர்தல்,
மாலை குளித்து மனை புகுதல்—சாலவே
உற்றாரோ டுண்ணல், உறவாடல், இவ்வைந்தும்
கற்றாயோ காக்கைக்குக் குணம். (தனிப்பாடல்)

4. கிளி:

1. கிள்ளை, தத்தை என்பன கிளிக்குப் பெயர்.

2. கிளி புனத்தில் வாழும்.

3. சிவந்த வாயும் பச்சை நிறமும் உள்ளது.

4. கிளியின் மொழியைப் பெண்களின் மொழிக்கு ஒப்பிடுவார்கள்.

5. ஒருவருடன் பழகினால் பின்பு பிரிதல் அரிதாகும் என்னும் உண்மை தினைக்கதிர்களைத் தின்ற கிளிகள் அக்கதிர்களைக் கொய்த பின்னும் கொய்த தட்டை தாள்களை விடாது இருப்பதிலிருந்து அறியக் கிடக்கின்றது.

6. தலைவி தன்னை விட்டுப் போக அவள் வளர்த்த கிளி என்னுடைய அன்னை போயினள். அவள் எவ்விடத்தாள் பருந்து தன்னைக் கொல்லும் என்று அஞ்சிக் கூறும்.

5. குயில் :

1. பார்வதியின் மொழிக்கு குயிலின் மொழி ஒப்பிடப்படுகின்றது.

2. திருச்சிற்றம்பலத்தை விரும்பாமல் கூழ்உணவில் வெளிக்கும் மனத்தின் இருள் போல், ஒருகாலைக் கொருகால் குயிலின் நிறம் இருண்டு செல்லாநின்றது.

6. கொக்கு :

கொக்கின் இறகைச் சூடி ஆடுவர் பெருமான்.

7. சேவல் :

1. முருகவேளுக்குக் கொடி சேவல்.

2. இரவில் பெட்டைக் குருகையும் அதன் குஞ்சுகளையும் சேவலானது தனது சிறகு ஒன்றினால் மூடிக்கிப் பனியினின்றும் அவைகளைப் பாதுகாக்கும்.

3. நூன் முதிர்ந்த துள்ளு : நடையை உடைய பெடைக்கு ஈனும் இல்லை செய்ய வேண்டிச் சேவலானது தேன் மிக்க கரும்பின் [illegible] வைக் கோதிப் (கூடு-கட்டி) பாதுகாக்கு[illegible]

சேவல், பெடை, முட்டை கூறப்பட்டுள.

8. பருந்து :

1. பருந்து இளியைக் கொல்லும்.

2. பாறு என்பது பருந்தின் பெயர். பருந்துகள் மிக்க ஆரவாரத்தை உடையன.

9. புள்ளினம் :

1. புள்ளும் பெடையைச் சிறகால் ஒடுக்கித் தம் பிள்ளைகளைத் தழுவி இனம் சூழச் செறிந்த இருளில் துயிலும்.

2. கடலில் புள்ளுந் திரையும் பொரச்சங்கு ஒலிக்கும்.

10. புறு : மென்னடையை உடைய மாடப்புறுக்கள் இறப்பில் துயின்று முற்றத்தின்கண் இரை தேர்ந்து உண்ணும்.

11. பூவை : இதைப் பெண்கள் வளர்ப்பார்கள்.

12. மயில் : இளமயில், கனமயில், (மயில் இனங்கள்) கருமஞ்ஞை, களிக்கருமஞ்ஞை, (களிமை உடைய கருமயில்) கார்மயில், சேய்கடவும் மயில், தூவியங் தோகை, தோகை, பொருப்புறு தோகை, பைந்தோகை, மென் தோகை, புன மயில், மஞ்ஞை, மடமயில், மயிற்குலம், மயிற்பீலி, மயில் முட்டை இவை கூறப்பட்டுள. ஆரவாரத்தை உடைய வாய் மயில் இனம் உறக்கம் ஒழிய நின்றன.

கண் சென்று நுழைய மாட்டாதபடி விண்ணில் மேகங் கள் விரவுதலால் மலர் உள்ள இடங்களில் எல்லாம் மயிலினங்கள் திரண்டு பீலியை விரித்து நின்று ஆடா நிற்கும்.

பச்சோந்திக்கு ஒதுங்கிப் பயப்பட்டு மயில் இரை கவராது.

வேங்கைப் பொழிலில் மயில்கள் துயில் கொள்ளும்.

பாம்பின் படத்தைப் பிடித்து மயில் கிழிக்கும்.

பெண்களின் சாயலுக்கு மயில் ஒப்பிடப்படும்.

இவை தமக்குரிய பாடற் பகுதிகளை ஒளி நெறியிற் காணலாம்.

13. வண்டானம்: (நாரைவகை) கழிகளில் வண்டானங்கள் மகிழ்ந்து பகலில் இரை தேரும்.

14. வண்டு: ('அளி') அறுகால், கள் (வண்டினுள் ஒரு சாதி), சுரும்பு, தேன், மதுகரம், வண்டு இவை வண்டின் பெயர்களாக வந்துள்ளன.

1. வாசனை உள்ள மலர்களில் வண்டுகள் மொய்க்கும்.

2. நீண்ட கூந்தல் ஈரபாரம் உடைய பூங்கொத்துக்களால் மூடி வண்டுகள் ஆரவாரிக்கும்.

3. யானையின் மும்மதங்களில் வண்டுகள் மொய்த்து ஆரவாரிக்கும்.

4. வண்டுகள் மலரில் உள்ள குளிர்ந்த தேனை உண்ணும்.

5. நீல மலரிலும், கொன்றை மலரிலும் (சுரபுன்னை மலரிலும்) வண்டின் கூட்டங்கள் மொய்த்து உண்ணும்.

6. கூந்தலில் உள்ள மலர்களில் வண்டுகள் சேர்ந்து பண் பாடும்.

7. அரும்புகள் மலரும் காலம் பார்த்து வண்டுகள் சூழும்.

8. பொதிய மலையிடத்து நின்று வண்டின் சாதிகள் நறு நாற்றத்தை விரும்பிக் களிப்புடன் வந்து பூக்களை மலர்விக்கும்.

9. நட்சத்திரங்களைப் போன்ற சுரபுன்னை மலர்களில் வண்டுகள் நுழையும்.

10. களி வண்டு, சிறை வண்டு, தேன் வண்டு கூறப்பட்டுள.

11. வண்டுகள் தேனைப் பருகித் தேதே என்று பாடும்.

12. வண்டுகளே! "நூல் போன்ற இடையின் நொய்ம்மையை எண்ணாமல் தேன் உண்ணும்." ஆகையால் நீங்கள் கொண்டையில் சாருவதே தக்கது அன்று.

13. பாணரை ஒக்கும் வண்டுகள் பாடத் தாராகிய பசும் பொன் தருகிற போதாகிய வெண் கிழி (சீலையை) பொழிலில் புன்னை கொடுக்கும்.

14. மல்லிகைப்பூ வெண்சங்காக வண்டுகள் ஊதும்.

15. செந்தாமரையில் வண்டினம் வாழும், வாழ்ந்து, அதில் உள்ள தேனைப் பருகும்,

16. வண்டு நீலமணி போன்று இருக்கும்.

15. வெளவால்: (வாவல்) வெளவால் இரவில் இரைக்காகச் சென்று திசைகளில் பறக்கும் இயல்பை உடையது. இரை தேடும் காலம் அல்லாத பகல் பொழுதில் பெரிய மரத்தில் தங்கும்.

ஜீவராசிகள் - மக்கள்

தனித் தலைப்புப் பார்க்க.

விலங்குகள்

1. ஆ, பசு, கன்று நாகு: பாணர் பசுவின் மாமிசம் உண்பர். மாடுகள் கன்றுடன் மணி ஒலிக்க வரும்.

2. ஆடு: வெறியாடலில் வெள்ளாட்டைக் கொல்வர்.

3. ஆளி: உண்பதற்கு இரவில் யானைகளை ஆளிகள் தேடும். 'யானைகள், அஞ்சி இரவில் ஆளிவரும் வழியில் செல்லா.'

4. கரடி : (எண்கு) குரும்பியாகிய உணவின் பொருட்டு உயர்ந்த புற்றை (கரடி) அகழும்.

கரடி உணவுக்காக இரவில் இருட்டில் செல்லும். ஆதலால் அவ்வழி செல்வார் இல்லை.

5. குதிரை : 1. பாயவல்லது

2. பனைமடலில் குதிரை போல் செய்து 'மடல்மா' ஏறுவர் காதலர். குதிரை ஆரவார ஒலி செய்யும்.

6. குரங்கு : பலாப்பழத்தின் சுளையைத் தேனில் தோய்த்து (கடுவன்) ஆண் குரங்கு பெண் குரங்கின் வாயில் கொடுக்கும்.

2. ஆண் குரங்கு நல்ல மாம்பழத்தைத் தேனில் தோய்த்துப் பெண் குரங்கின் வாயில் உண்ணும் பொருட்டுக் கொடுத்து மகிழும்.

3. இளமந்திகள் வாழைக் குலையில் உள்ள பழங்களைத் தின்று வாழை மரநிழலிலே தூங்கும்.

4. வாழைத் தோட்டத்தில் பலாப்பழத்திலிருந்து விழுகின்ற தேனை இளமந்திகள் பருகி அதன் சுவை மிகுதியால் களிப்பினால் சோரும்.

5. (இளைய) வளரும் கொடியில் இருந்து பச்சை மிளகை விளைவு அறியாமல் மந்தி தின்று மயக்கம் கொண்டு தளரும்.

6. இளமந்திகள் சுரபுன்னை மாலையைச் சூடி நாணும்.

7. வந்து ஆய்ந்து எடுப்பவர் இல்லாமல் பொழிலில் கிடக்கும் மயிலின் முட்டையை இளைய மந்தி உருட்டிப் பந்தடிக்கும்.

7. சிங்கம் : (அரி, ஆளரி, கோளரி, சிங்கம், சீயம், மடங்கல் - இவை சிங்கத்தைக் குறிக்கும் சொற்கள்.)

1. முழக்கம் செய்யும் சிங்கங்கள் இருளில் யானை வேட்டை செய்யும். அதற்குப் பயந்து யானைகள் அவ் வழியில் வரா.

2. மலை அன்ன யானை பதைத்துப் பயப்படும்படி சிங்கங்கள் திரியும்.

3. மழை அடர்ந்து பெய்யும் கண் தெரியா இருட்டில் யானைகள் நடுங்கச் சிங்கம் திரியும்.

4. சிங்கமானது யானையைக் குறுகா வண்ணம் இடையில் பிடி (பெண்யானை) செல்லும்.

5. யானையின் தசையை உண்ண வேண்டிப் பல சிங்கங்கள் இருளில் அங்கங்கே திரிந்து தேடிப் பார்க்கும்.

6. சிங்கத்தின் தோலை அம்பலத்தார் (கூத்தப் பிரான்) அணிவர்.

8. நரி : காட்டில் நீர் இல்லாமையால் ஓரி (நரி) ஊளையிடும்.

9. நாய் : (ஞாளி) நாய் குலைக்கும்.

நாய்க்குள்ள குணம்கூட இல்லாதவன் நான்.

10. பன்றி : (ஏனம்) வேட்டைக்குச் செல்பவர் யானை, பன்றி இவைகளை வேட்டை ஆடுவர்.

11. புலி : (உழுவை, புலி, வேங்கை, இவை புலியைக் குறிக்கும்.)

1. பூவினுல் பொலிவு பெற்ற தொழிலையும், புலிப் பல்லை யும் உடைய கழுத்தை உடையவர் (தாலியை உடைய) வேட்ட மாதர்கள்.

2. எதிர்க்க வந்த புலியின் வாயில் கையைக் கொடுத்துத் தன் கை வேலினுல் அதை வென்ற வீரன் (தலைவன்).

3. நல்ல நிறம் உள்ள புலித்தோலைக் கூத்தப்பிரான் அணிவர்.

12. மா : இச்சொல் விலங்கின் பொது. யானை, குதிரை, மான் இவைகளைக் குறிக்கும்.

13. மான் : 1. மானின் கண்ணுக்கும் சிவபிரானது திருக்கரத்தில் உள்ள மானின் கண்ணிற்கும் தலைவியின் கண் ஒப்பிடப்பட்டுள்ளது.

2. நீர் பருக வேண்டி ஆண்மானும் பெண்மானும் பேய்த்தேரை அணையும்.

3. மான்தோல் படுத்து உறங்க உபயோகப்படும்.

4. உழை, கலை, நவ்வி, பிணை, மரை, மறி, மா, மான் இவை மானைக் குறிக்கும் சொற்களாக ஆட்சி பெற்றுள.

14. யானை : ஆனை, கரி, களிறு, குஞ்சரம், குன்றம் - மலை, நாகம், பிடி (பெண்யானை), மா, கடமா, கைம்மா, யானை, வாரணம், வேழம். இவை யானையைக் குறிக்கும் சொற்களாக ஆட்சி தரப்பட்டுள.

1. யானைக்கு மும்மதம் - நால்வாய் (தொங்குகின்ற கை), சிறிய கண்கள், குழைந்த செவிகள், செவ்வியமுகம் இவை உண்டு.

2. சிங்கம், ஆளி இவைகளுக்குப் பயந்து இரவில் போதலுக்கு யானை அஞ்சும்.

3. யானையின் தந்தத்தில் இருந்து விழுகின்ற முத்தை மலை மகளிர் கொடுத்து அதற்கு ஈடாகக் கள்ளை வாங்குவர்.

4. மலைப்பாம்பு யானையைக் கொல்ல வல்லது.

5. யானையின் கை பனை மரத்துக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. யானையின் உருவம் மலை போன்றது.

6. பாறையின் மேல் விழுந்துள்ள வேங்கை மலரைப் புலி என மருண்டு யானை அஞ்சும்.

7. அடர்ந்த மழையில் கண்ணுக்குத் தெரியாத நள்ளிருளில் யானைகள் நடுங்கும்படி சிங்கம் வேட்டையாடும்.

8. யானை பிளிறும்.

9. யானையின் மதநீரில் வண்டுகள் மொய்க்கும்.

10. குத்துக் கோலைக் கண்டவுடன் யானை வெருளும்.

11. யானையின் உணவு வேண்டிப் பல சிங்கங்கள் இரவில் யானை வரும் வழியைப் பார்த்துத் திரியும்.

12. குறவர் வசிக்கும் இடத்திற்கு வேலியாக யானையின் எலும்புகள் நடப்பட்டு உள்ளன.

பிடியும் யானையும்

1. வழி அல்லா வழியில் சென்றதால் அசும்பில் (சேற்றில் வழுக்கு நிலத்தில்) அகப்பட்ட யானையை மீட்பதற்குப் பெண் யானை மரத்தை முறித்துக் கொடுத்துப் பிளிறும்.

2. ஆண் யானையைச் சிங்கம் குறுகா வகைக்குப் பெண் யானை இடையில் வந்து நிற்கும்.

யானையின் செயல்

சுரபுன்னை மரத்தில் கட்டியுள்ள ஊசலை யானை அழித்துத் தள்ளும்.

15. விடை

விடை, இடபம், ஏறு.

1. ஏறு தனது வலிய கொம்பால் கழுத்தில் உள்ள மணி ஒலிக்கப் புற்றினைத் தோண்டும்.

2. முல்லை நிலத்தார் (இடையர்) விடையின் கொம்பைக் கூராகச் சீவி விடுவர்.

3. இகலை (பகையை) உடைய இடங்களிலே தாவிச் செல்கின்ற விடை (திருமால்).

ரு. இலக்கணப் பகுதி

இலக்கணப் பகுதி

திருக்கோவையாரில் உள்ள இலக்கண விசேடங்களுள் சில ஒளி நெறியிற் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சில இக்கட்டுரையிற் சுருக்கமாகக் காட்டப்படுகின்றன.

1. அசைச்சொற்கள் (1)

அரோ, ஐ, மற்று முதலிய.

உ-ம்: பொழில் ஏழிலும் வாழியரோ...*393*. குறவரை ஆர்க்கும் குளிர்வரை...*260*. மணிகண்டன் மற்று அண்டர்க் கெல்லாம் மருந்து...*272*.

2. அன்மொழித் தொகை (3)

உ-ம்: பொன்னங் கழல்...*131*.

முத்த மணல் ...*273*.

3. ஆகுபெயர் (4)

உ-ம்: குழல் வாடினள்—குழலை உடையாள் வாடினள்...*218*.

4. இரட்டிப்பு (5)

உ-ம்: என் எங்கை—*373*.

என் (என்) தங்கை.

5. 4. உடம்படுமெய் (6)

உ-ம்: செல்வரிது...*264*.

(கன். சங். நம. கூ...*163*.)

6. எதுகையில் வரும் சொற்கள் (8182)

அணரி, ஆண்டு, உற்ற, ஒன்று, ஓங்கு, குலாய, செந்த தந்த, திருத்திய, படு, பயில், முதிர், வந்த, வளர், விளையாட—இவை போல்வன பிறவற்றை ஒளி நெறியிற் காணலாம்.

எதுகை வேறுபட்டதற்கு உதாரணம்.

(விசும்—அசும்—குயம்—நயம்—198)

7. ஏகாரம் (9)

உ-ம் : உளவே....ஏ...எதிர்மறை
ஏ ...110.

மாதே ...ஏ...விளி...82.
யாதே ...ஏ...வினா...82.

809. ஒருமை, பன்மை (10)

மயக்கமும் பன்மை ஒருமை மயக்கமும்

உ-ம் : உவவின நாண்மதி—இது பன்மை (108) ஒருமை மயக்கம்.

9. குறை (12)

1. இடைக்குறை (12-1)

எ(வ்)வம்				358.
தந்தென	...	தந்(த)தென	...	124.
போரும்	...	போ(த்)ரும்	...	182.

2. கடைக்குறை (12-2)

மெய்யா(க) அரியது		..262
அழுந்தா(த) வகை		...124
கற்றவா	கற்றவாறு	... 60

பையுடை(ய)	வாளரவு	... 48
சோத்து —	சோத்தம்	...173
மல் ...	மல்லல்	...208

3. முதல்குறை (12-3)

கலைக்கீழ் —	மேகலைகீழ்	...59
வருங்கள் —	வாருங்கள்	...55

10. கோல் கோலாம் (13)

உ-ம் : அல்குங் கொல் ...319
இல்லை கொலாம் ...277

11. சாரியை (16)

உ-ம் : கண்ணின் வலை — இன் அல்வழிச் சாரியை...74

12. தன்மை, முன்னிலைப் பொருளில் வந்தது (18)

உ-ம் : நாம் அரையாமத்து என்றோ வந்து வைகி நயந்ததுவே—164.
நாம் என்னும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை உயர்வு தோன்ற முன்னிலைக்கண் வந்தது.

13. துணைச் சொல் (20)

உ-ம் : அது பணிகள் அது பதியோ—2

14. தொழிற் பெயர் (21)

உ-ம் : இரவில் வந்து மீளியுரைத்தி ...மீட்டல்
என்பது மீளியென நின்றது ...151

15. போலி மரூ (23)

உ-ம் : தயல்—தையல்-- ...117
மரு—அருந்தி—அருந்துதி ...300

16. முதல்நிலைத் தொழிற்பெயர் (25)

உ-ம் : சூழுடை ஆயம்—(சூழ்—சூழ்தல்)...7

17. வழு அமைதி (26)

உ-ம் : இறுமாப்பு ஒழிய இறுமாப்பு ஒழிந்த இணைமுலையே...373

[ஒழிந்த என்னும் இறந்த காலம் விரைவு பற்றி வந்தது.]

18. விகாரம் (27)

உ-ம் : 1. வாருங்கள் என்பது 'வருங்கள்' என்று குறுகியது...55

2. குழீஇ—என்பது குழி என்று குறுகி நின்றது...135

3. வருடி—என்பது வருட்டி என்று மிக்கு நின்றது...270

4. ஒட்டந்தரும் என்பது 'ஒட்டரும்' என்று குறுகி நின்றது...342

19. விகுதி (28)

உ-ம் : 1. அர் (28) (1)
கொம்பர்...55.

2. ஆர் (28) (2)

எரியார்...340

இது இழிவுக்கண் வந்தது

மாலார்......110 •

இதுவும் இழிவுக்கண் வந்தது 28(3)

3. (1) (எதிர்மறை விகுதி)

அல் தீண்டல்—தீண்டாதே...390
தொடல்—தொடாதே...390

(2) ஏல் 28(4)

தொடரேல்...தொடர்
வேண்டா ...390

20. விகுதிமேல் விகுதி (28)

உ-ம்: உரைமின்கள்...54

21. வினைத்தொகை

உ-ம்: சீர் வாய் சிலம்ப...80

22. வேற்றுமை உருபுகள்

உ-ம்: 1. ஆறும் வேற்றுமை

அ கூத்தனதாள்...291
அது உணரானது அம்பலம் 287

2. 7-ஆம் வேற்றுமை உருபுகள்

உ-ம்: அகம்:	அதர் அகத்தே	395
இடை:	காட்டிடை ஆட்டு	389
இல்:	வாழை நிழலில் துயில்	250
இன்:	பரிசினின் நிற்பித்த	286
உழை:	மண் உழை யாவும்	347
உள்:	சிந்தையுள்	20
கண்:	சிறைக்கண் மலிபுனல்	258
கீழ்:	மலைக்கீழ்	59

தலை : விண் தலையாவர்க்கும் 177
பால் : விரும்பினர் பால் 248
மிசை : தேர்மிசை 382
மீது : அலர்மீது கனி 35
மேல் : அமளியின் மேல் 355
வயின் : நாய் வயின் உள்ள குணம் 343
வாய் : சிற்றிலின் வாய் 95

23. வேற்றுமை உருபு தொக்கது (132)

உ-ம். குன்றத்திடை கண்டனம் அன்னை நீ சொன்ன கொள்கையரே 246

[கொள்கையர் - கொள்கையரை
2-ஆம் வேற்றுமை உருபு தொக்கது.]

24. வேற்றுமை உருபு மயக்கம் (33)

உ-ம் 1. சூழ் பொழிற்கே; துயில் பயின் மோ
(சூழ்ந்த பொழிலிடத்துத் துயிலைப் பயில்வாமாக)

நாலின் உருபு ஏழின் பொருளில் வந்தது 167

2. 1. வடிக்கு அலர் வேற்கண்ணி (வடுவகிரிற் பரந்த வேல் போலுங் கண்ணையுடையாய்).
வடிக்கு என்னும் நான்காவது ஐந்தாவதன் பொருட்கண் வந்தது. 291

அணி அலங்காரம்

1. இல் பொருள் உவமை அணி (1)

உ-ம். தூண்டா விளக்கு 244

2. உயர்வு நவிற்சி அணி (12)

உ-ம். வெற்பகச் சோலையின் வேய் வளர் தீச் சென்று விண்ணின்ற,

கற்பகச் சோலை இதுவும் 168
(மலையிலுள்ள சோலையின் இருந்த மூங்கிலில் வளர்ந்த தீ விண்ணில் உள்ள கற்பகச் சோலையைப் பற்றும்.

3. உருவக அணி (3)

உ-ம். மின்னியல் கண்ணின் வலை கலந்து வீசின
போதுள்ள மீனிழந்தார் 74
ஒளியுள்ள கண்ணாகிய வலையை மகளிர்கலந்த போது தமது உள்ளமாகிய மீனை இழந்தவர்கள்.

4. உவமை அணி (4)

உ-ம். வான் உந்து மாமதி வேண்டி அழும் மழப் போலு மன்னே,
நானும் தளர்ந்தனன் நீயும் தளர்ந்தனை நல் நெஞ்சமே. 147

1. (வானிற் செல்கின்ற சந்திரனைக் கொள்ள
வேண்டி அழுகின்ற குழந்தை போல நானும்
தளர்ந்தேன், நெஞ்சமே! நீயும் தளர்ந்தாய்).

2. [1]சிற்றம்பலவற்றொழாது தொல்சீர் கற்றும்
அறிவிலரின்—இடைநைவது 134

சிற்றம்பலவரைத் தொழாது அவருடைய பெருமையை கற்றும் அறிவிலர் நைவது போலத் தலைவியின் இடை நைந்துள்ளது.

5. ஐய அணி (5)

உ-ம். நீங்கிற் புணர்வு அரிதென்றோ நெடிது இங்ஙனே இருந்தால் ஆங்கு இறப்பழியாம் எனவோ அறியேன் அயர்கின்றதே. 13

[தலைவன் பிரிந்தால் தன்னைக் கூடுதற்கு அரிதென்றோ, நெடும்பொழுது இங்ஙனம் தாழ்க்க இருந்தால்

அவ்விடத்து (ஆவது சுற்றத்தாரிடத்தும் அயலாரிடத்தும்), குடிப்பழியாம் என்றோ அறிகிலேன்; வருந்துகின்றது].

6. ஒட்டணி (6)

உ-ம். 'அன்னம் புலரும் அளவும் துயிலாது
அழுங்கினவே.' 172

(இது தலைவி பொழுது விடியும் அளவும் தூங்காமல் துன்புற்றாள் என்பதைக் குறிக்கின்றது.)

ஒட்டணி என்பது கருதிய பொருளை வேறுபட மொழிவது.

7. சிலேடை அணி (7)

உ-ம். 'மாமதியின் அயல் வந்த ஆடரவு
ஆட வைத்தோன்'. 381

(இது தலைமகனையும் தலைமகளையும் மதிக்கும் அரவுக்கும் ஒப்பச் சிலேடை).

8. சொற்பின் வருநிலை அணி (8)

உ-ம். நாகந்தொழ எழில் அம்பலம் நண்ணி நடம் நவில்வோன்
நாகம் இதுமதியே மதியே நவில் வேற்கை எங்கள்,
நாகம் வர எதிர் நாம் கொள்ளும் நள்ளிருள்வாய் நறவார்
நாகம் மலிபொழில் வாய்எழில் வாய்த்த நின் நாயகமே. 171

9. தற்குறிப் பேற்ற அணி (9)

உ-ம். 'விசும்பு இயங்கி நைகின்ற திங்கள் எய்ப்பாறும் பொழில் அணை'. 223

(இயற்கையாக வானிற் செல்லும் மதிபொழில் மீது செல்வதை அம்மதி பொழிலில் இளைப்பாறுவதாகக் கவி தன் குறிப்பைக் குறிப்பது.)

10. மயக்க அணி (*10*)

உ-ம். முழவம் துளிதரல் காரென ஆர்த்தன, ஆர்ப்ப,
காந்தளும் பாந்தளைப் பாரித்து அலர்ந்தனவே. 324

(முழவம் மேகம் போல ஆரவாரித்தது. அங்ஙனம் ஆரவாரித்ததனால் அக்காலத்தைக் கார் காலம் என்று மயங்கித் தெரியாமல் காந்தள் பூக்களும் பாந்தளின் (பாம்பின்) படத்தை ஒத்து மலர்ந்தன.

11. முரண் அணி (*11*)

உ-ம். *1.* செந்நிற மேனி வெண்ணீறு அணிவோன்,
(சொல்முரண்) *69*

2. காந்தளைப் பாந்தளென்று எண்ணித்
துண்ணென்று ஒலித்து : பதைக்கும்
எங்கார் மயிலே *233*

(பாம்புக்கு மயில் அஞ்சியது - பொருள் முரண்.)

12. வேற்றுப் பொருள் வைப்பணி (*12*)

உ-ம். பிரிவு செய்தால் அரிதே கொள்க, பேயோடும் என்னும் பெற்றி, இருவி செய்தாளின் இருந்து இன்று காட்டும் இளங்கிளியே. 144

[பேயோடாயினும் பிரிவு அரிது என்னும் தன்மையை இருவி (கதிர் கொய்த தட்டை) செய்யப்பட்ட தாளிலே யிருந்து இளங்கிளிகள் இப்பொழுது காட்டாநின்றன.]

ஒரு பொருள் தொடங்கிய பின்னர் அது முடித்தற்கு வலியுடைய பிறிதொரு பொருளை உலகறி பெற்றியான் வைத்து மொழிவது வேற்றுப் பொருள் வைப்பென்னும் அலங்காரமாம்:

1. பரியாய அலங்காரம் (5)

பெருவெண் கோடார்கரி ஊசலைக் கோப்பழித்து
நாகத்தை நூக்கும்நம் சூழ் பொழிற்கே. 161

(இவ்வாறு கூறவும் வாளாகிடப்பின் தாய் துயின்றாள் ஆயில் குறியிடத்துத் தலைவி சொல்வாள்):

கருதியது இளவாது அப்பொருள் தோன்றப்
பிறிதொன்று உரைப்பது, பரியாயம்மே.
(தண்டி - 72) :

குறிப்பு :—ஏனைய அலங்காரங்களை ஒளிநெறியிற் காணலாம்.

ஸ்ரீ. பேரின்பப் பகுதி

தில்லைக் கூத்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது திருக்கோவையார் ஆதலின் பேரின்பப் பொருள் இந்நூலில் புதைந்துள்ளது. தலைவி சிவமாகவும் (பரமாத்மா ஆகவும்), தலைவன் உயிராகவும் (ஜீவாத்மா ஆகவும்), தோழி திரு அருளாகவும் கொள்ளப் பெறும். இதனால் அன்றோ இந்நூலை "காமஞ் சான்ற ஞானப் பனுவல்" என்றார் குமர குருபரசுவாமிகள். இந்நூலில் உள்ள 400 பாடல்களிற் பல இடங்களில் தெளிவாகவும், சில இடங்களில் மறை பொருளாகவும், பேரின்பப் பொருளைக் காணலாகும்.

உதாரணமாகச், சில பாடல்களை இங்கு எடுத்துக் காட்டுவாம்.

பாட்டு எண்	சிற்றின்பம்	பேரின்பம்
1.	தலைவியைத் தலைவன் கண்ணுற்றது	குருவின் திருமேனி காண்டல்.
5.	தலைவியின் உள்ளக் கருத்தைத் தலைவன் அறிந்தது.	தன்னிடத்தில் சிவத்திற்குக் கருணையுண்டென்று உயிர் (ஜீவாத்மா) அறிந்தது.
8.	தலைவன் புணர்ச்சி இன்பத்து இயல்பு கூறியது.	பெற்ற இன்பத்தை வியந்தது.
10.	தலைவியின் மென்மொழி கேட்கத் தலைவன் விருப்புற்றது.	குரு மொழி வேண்டிக் குறையிரந்துரைத்தது.
18.	காதல் தோழியை	சிவம் அறிவிக்கத்

	மடவரல் (தலைவி) காட்ட மன்னன் (தலைவன்) அறிந்தது.	திருவருளைக் கண்டது.
115.	தலைவன் தந்த தழையைத் தலைவி விருப்புடன் ஏற்றனள் என்று தோழி தலைவனுக்கு உரைத்தது.	தலைவன் பணி சிவத்துக் குவப்பென, உயிருக்குத் திரு அருள் உணர்த்தியது.

இவ்வாறு புதைபொருளாகப் பேரின்பப் பொருள் 400 பாடல்களிலும் இருப்பதை "திருக்கோவையார்" "உண்மை விளக்கம்" என்னும் நூலிற் காணலாம்.

தலைவியைக் கடல்அலை அடித்துக் கொண்டு போன போதும், மதயானை தலைவியை விரட்டி வந்த போதும்" சுனைநீரில் வீழ்ந்து தலைவி தத்தளித்த போதும், தலைவன் தலைவியை அந்தந்த ஆபத்தினின்றும் மீட்டனன். என்பது உயிர் (ஜீவாத்மா) (தலைவியை) சிவத்தை மீட்டது எப்படி என்றால் சிவத்தை அடிக்கடி மறந்துபோன நிலையில் நின்றும் ஜீவாத்மா (தலைவன்) சிவத்தை மீட்டு நினைவிற்குக் கொண்டு வருவதைக் குறிக்கும் போலும். இத்தகைய விளக்கம் எல்லாம் அறிஞர்பால் கேட்டு உணரலாகும்.

எ. மணிவாசகர் வரலாற்று நினைவுப் பகுதி

மணிவாசகர் வரலாற்று நினைவுப் பகுதி :

திருக்கோவையாரில் - 38. இடங்களில் உள்ள பாடல் பகுதிகளில் நின்றும் மணிவாசகருக்குத் தில்லைப் பெருமான் இடத்தில் உள்ள பக்திநிலை நன்கு புலப்படுவன வாய் உள்ளது. அப்பகுதிகளின் கருத்துக்கள் பின் வருமாறு.

1. தலைவன் கூற்று : அணியும் அமிழ்தும் என் ஆவியும் ஆயவன் தில்லைப் பெருமான் அவர் என்னை ஆளும் படியாக வாழ் இருந்தது. அவருடைய திருவடி மலர் என் தலைக்கு அணியாகும். இந்திரன், பிரமன், திருமால் இவர்களுக்கு இருளாய் இருக்கும் பெருமான் என்னை ஒரு பொருளாகப் புகுந்து ஆண்டு கொண்ட ஒளியாய் விளங்குகின்றார்.

அவருடைய திருவடி என்பிறவி கெடும்படி அழிக்கின்றது. அதுவோ, இதுவோ நல்ல சமயம் என்று பொதுவாக நின்ற நிலைமையை நீக்கி உண்மை வழிகாட்டி என்னை ஆண்டவர் தில்லைப் பெருமான். யான் நரகத்தில் அழுந்தாத வகை என்னை அவர் ஆண்டு கொண்டார். நாய்க்கு உள்ள குணம்கூட இல்லாத என்னைத் தனக்கு நல்ல தொண்டு செய்யும்படி ஆண்டனர் பெருமான். சுற்றத்தார் உடைய பலம் இன்மையை எனக்கு விளக்கி என்னை உய்வித்தனர். என்னைக் 'கடவுட் பித்தனாக்கினர்' பெருமான்.

2. தலைவி கூற்று : உள்ளம் உருகத் தன்னை ஆட்கொண்டு தம் அடியார், கூட்டத்தில் என்னையும்சேர்த்துக் கொண்டார். என்னுடைய வாயிலும் மனத்திலும் பிரியாதவர் இறைவர்.

3. தோழி கூற்று : மறந்தும் பொய் வானவரிற் புகாது தனது பொற்கழற்கே நான் புகும்படி செய்தவர். தில்லைப் பெருமான். திருமால் கண்டிலாத திருவடியை எனக்குக் 'காட்டி அருளினர் பெருமான். எனது ஏழு பிறப்பையும் சிதைத்தவர் அவர். மேரு மலையை முன்பு வளைத்துப் பயின்ற பின் என் கல் நெஞ்சை ஆண்டனர். என்பாசத் தளையை அறுத்தார். தன் திருவடியை என் தலைமேல் வைத்தார். தம்மை நினைவித்து, என் நெஞ்சில் நின்று தம்மைப் பாடும்படி வைத்தார்.

என்னைத் தாமே பிடித்தாண்டு எனக்கு எல்லையில்லாத இன்பத்தைத் தந்தனர். அவர் மாட்டு எனக்கு நீங்காத அன்பைத் தந்து அருளினர். என்னை ஆட்கொண்டு இது செய் அது செய் எனக் கட்டளையிட்டார். என் கடைக் கண்ணுலும் நான் பிறரை ஏத்தா வகை அருள் புரிந்தார்

4. பாங்கன் கூற்று : சிற்றம்பலத்திலும் எனது நெஞ்சிலும் இறைவன் உறைகின்றார். யான் அவருடைய திருவடியைத் தொடருவேன்; விடமாட்டேன்.

5. செவிலியின் கூற்று : என் நெஞ்சிற் பயின்று அதை விட்டுப் பிரியாதவர் பெருமான்.

நற்றாய் கூற்று : யான் பிறவி பெறாமல் அருள் பொழிந்தார் இறைவன். என் கண்ணில் புகுந்து எப் பொழுதும் இருக்கின்றார் இறைவர்.

இவ்வாறு ஒவ்வொருவர் வாய்க் கூற்றிலும் மணி வாசகர் உடைய பெரும் பக்தி நன்கு புலப்படும்.

1. இறைவர் தன்னைக் கோவை பாடும்படி செய்வித்தது.

" நினைவித்துத் தன்னை .... ஈசன் (140) என்னும் பகுதியில் ஊகிக்கக் கிடக்கின்றது.

2. திருவாசகம், திருக்கோவையார் என்னும் நூல்களில் துதி பாடும்படி இறைவர் செய்வித்தது.

"'இருந்துதி என் வயின் கொண்டவன்'," என்னும் 300 என்ற எண்ணுள்ள பாடற் பகுதியிற் பெறலாகும்.

3. பெருமான் தம் திருவடியை மணிவாசகருடைய சென்னியிற் சூட்டியது.

(சென்னிப் பத்து) 17, 32, 76, 78, 126, 293, 338, என வரும் எண்ணுள்ள பாடற் பகுதிகளாற் பெறப்படும்.

4. தம் சுற்றத்தாரால் தான் ஒரு பலனும் அடையாமை.

346 எண்ணுள்ள பாடற் பகுதியாற் பெறப்படும்.

5. தம்மைத் தமது அடியார் கூட்டத்துடன் இறைவர் சேர்ப்பித்தது.

185 எண்ணுள்ள பாடற்பகுதியாற் பெறப்படும்.

6. சிவபெருமானைத் தவிர வேறு தெய்வத்தை மறந்தும் நினைப்பதில்லை என்பதும், பிற தெய்வத்தைத் தாம் கடைக் கண்ணாலும் ஏத்துவதில்லை என்பதும் 67, 298, எண்ணுள்ள பகுதிகளில் நின்றும் கருதக் கிடக்கின்றன.

குறிப்பு :

1. பாடற் பகுதிகளை ஒளிநெறியில் காணலாம்.

2. திருக் கோவையார் பழைய உரையில் 279 பாடலின் கீழ்ப் பின் வரும் குறிப்பு உள்ளது.

"தொளாயிரத்துத் தொண்ணூற்றென்பது மாணாக்கர்க்குச் சுரந்த பெரிய அருளைப் பொறுக்க மாட்டாமையினாலே தானும் வாய்மை மறுத்து என்னை அடிமை கொண்ட திருச்சிற்றம்பலநாதன்.

திருக்கோவையார்

உரைநடை

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார் உரைநடை

க. இயற்கைப் புணர்ச்சி

இது ‘தெய்வப் புணர்ச்சி’, ‘முன்னுறு புணர்ச்சி’, ‘காமப் புணர்ச்சி’ எனவும் படும்.

தலைமகனும் தலைமகளும் பொழிலிடத்து எதிர்ப்பட்டுத் தெய்வம் இடை நிற்பத் தம்முள் ஒத்த அன்பினராகக் கூடுவது.

1. காட்சி [1. திருவளர்]

தலைவன் தலைவியைக் கண்ணுற்று இவள் காமன் தன் வென்றிக் கொடிபோல் விளங்குகின்றாள் என வியக்கின்றான்.

2. ஐயம் [2. போதோ]

வியந்து, இம் மாது திருமகள் முதலாகிய தெய்வமோ அல்லது மக்களுள் ஒருத்தியோ என ஐயுறுகின்றான்.

3. தெளிதல் [3. பாயும்]

தலைவியின் கண் இமைத்தலாலும், அடி நிலத்தில் தோய்தலாலும், சூடிய மலர் வாடுதலாலும் இவள் தெய்வம் அல்லள் எனத் தெளிவுறுகின்றான்.

4. நயப்பு [4. அகல்கின்ற]

தெய்வம் அல்லள் என்று தெளிந்த பின்னர், மக்களுள்ளாள் என்று நயந்து இடையில்லைகொல் என்ற நெஞ்சிற்கு, அல்குலும் முலையுங் காட்டி இடையுண்டு என்று அவளை அடைய நினைந்து அவள் அழகை வியந்து நிற்கின்றான்.

5. உட்கோள் [5. அணியும்]

அம் மாதுக்குத் தன்னிடத்தில் காதல் உண்டு என்பதை அவளுடைய கண்ணிற் கண்டு அவள் உள்ளக் கருத்தை அறிகின்றான்.

6. தெய்வத்தை மகிழ்தல் [6. வளைபயில்]

அங்ஙனம் அவள் கருத்தை அறிந்த தலைவன் அவளைத் தனக்குத் தந்த தெய்வத்தை நினைந்து வியந்து, வேறு தெய்வத்தை யான் வியவேன் என மகிழ்ந்து கூறினன்.

7. புணர்ச்சி துணிதல் [7. ஏழுடையான்]

அங்ஙனம் தெய்வத்தை மகிழா நின்றவன் இஃது எனக்குத் 'தெய்வப் புணர்ச்சி' எனத் தன் நெஞ்சிற்குச் சொல்லி, இவளை ஆயத்தின் நின்று பிரித்த விதியே துணையாகத் தெய்வம் கூட்டி வைத்தது (கந்தருவ மணம் கை கூடிற்று) என எண்ணிப் புணரத் துணிகின்றான்.

8. கலவி உரைத்தல் [8. சொற்பால்]

புணர்ந்த தலைவன் கலவி இன்பத்திற் களித்து இவள் அமுது, நான் அமுதின் சுவை எனக் கூறி மகிழ் கின்றான்.

9. இருவயின் ஒத்தல். [9. உணர்ந்தார்க்கு]

தலைவிமீது அன்பு மீதூர இவளைப் புணருந்தோறும் இன்பம் பெருகுகின்றது எனத் தலைவன் மகிழ்கின்றான்.

10. கிளவி வேட்டல் [10. அளவியை]

அங்ஙனம் மகிழ்ந்த தலைவன் தலைவியின் பேச்சின்பம் எத்தகைய சுவையுடைத்தோ என அவள் பேச்சைக் கேட்க விரும்புகின்றான்.

11. நலம் புனைந்துரைத்தல் [11. கூம்பலங்கை]

அங்ஙனம் விரும்பிய தலைவன் தலைவியின் புன்முறுவலைக் கண்டு வருத்தம் சிறிது நீங்கிப் பொழிலில் இருந்த வண்டுகளைப் பார்த்து, ''வண்டுகளே! இவளது வாய் போல நறுமணம் வீசுகின்ற ஆம்பற் பூக்களை உங்கள் மருத நிலத்தில் நீங்கள் கண்டதுண்டோ'' என அவள் நலத்தைப் பாராட்டி வினவுகின்றான்.

12. பிரிவு உணர்த்தல் [12. சிந்தாமணி]

தனது நலத்தைத் தலைவன் பாராட்டக் கேட்ட தலைவி நாணி வருந்த, அதைக் கண்ட தலைவன் 'நான் இவளை விட்டுப் பிரிவேன் என நினைக்கின்றாள் போலும்' என நினைத்து 'நான் உன்னைப் பிரிந்து ஆற்றுவேனோ' என வருந்தி, அவளுக்குத் தனது பிரிவின்மையைப் பற்றிக் கூறுகின்றான்.

13. பருவரல் அறிதல் [13. கோங்கின்]

அதனை உணர்ந்த தலைவி பிரிவு என்பது ஒன்று உண்டு என நினைத்துப் பெரிதும் வருத்தம் அடையத், 'தான் பிரிந்தால் பின்பு கூடுதல் அரிது என்று நினைத்தோ, அல்லது நெடும்பொழுது இவ்வாறு வருத்தத்துடன் இருந்தால் அது குடிப் பழியாகும் என நினைத்தோ இவள் வருத்தம் அடைந்துள்ளாள், உண்மை யாதோ அறிகிலேன்' எனக் கருதுகின்றான்.

14. அருட்குணம் உரைத்தல் [14. தேவரில்]

அங்ஙனம் கருதித் தலைவியை நோக்கி, 'திருவே! யார் நம்மைக் கூட்டி வைத்தார்; யார் நம்மைப் பிரிக்க வல்லார்; தெய்வத்தின் அருள்தானே நம்மைக் கூட்டி வைத்தது, நீ ஏன் வாடிப் புலம்புகின்றாய்' என்று தெய்வத்தின் அருட்குணத்தைத் தலைவிக்குத் தலைவன் எடுத்துரைத்தான்.

15. இடம் அணித்துக்கூறி வற்புறுத்தல். [15. வருங்குன்றம்]

இங்ஙனம் தலைவன் எடுத்துரைத்தும் வருத்தம் நீங்காத தலைவிக்கு 'என்னுடைய ஊரில் உள்ள மாளிகைச் சாந்தின் ஒளி வீசி உன்னுடைய ஊரிலுள்ள கரிய மலை வெண்ணிறச் சட்டையிட்டதுபோலக் காட்டும் அளவுக்கு அண்மையில் எம்மூர் உம் ஊருக்கு அருகில் உள்ளது' எனத் தலைவியிடம் கூறினன்.

16. ஆடிடத்து உய்த்தல் [16. தெளிவளர்]

இங்ஙனம் இருவர் ஊர்களின் அணிமையைக் கூறிய தலைவன் 'நீ சென்று உன் ஆயத்துடன் விளையாடுக, நான் கயிலைமலைச் சாரலில் மரச்செறிவில் ஒளிந்து நின்று இங்கு வந்து சேருவேன்' எனத் தலைவியிடம் கூறி அவளை விட்டு அகன்றான்.

17. அருமை அறிதல் [17. புணர்ப்போன்]

அங்ஙனம் அகல நின்ற தலைவன் தலைவி ஆயத்துடன் நிற்றலைக் கண்டு, 'இவளை இனி எப்படி நான் அடைய முடியும்; இங்ஙனம் ஆயத்தோடு இருப்பவளைத் தில்லைப் பொழிலில் நான் தனி வரக் கண்டது என்ன மாயமோ, கனவோ இன்னது என்று அறியேன்' என்று தலைவியின் அருமையை நினைத்து வருந்தி நின்றான்.

18. பாங்கியை அறிதல் [18. உயிர் ஒன்று]

ஆயத்துடன் செல்கின்ற தலைமகளைத் தலைமகன் நோக்க, அவள் தன் காதல் தோழியைப் பலமுறை

கலைக் கண்ணால் பார்க்கக் கண்டு, 'இந்தத் தோழி போலும் தலைவிக்கு வேண்டியவள் இதுவும் எனக்கு ஒரு துணையாம்' என உட்கொண்டு அந்தக் காதல் தோழியை அறிந்து கொள்கிருன்.

குறிப்பு: "க. இயற்கைப் புணர்ச்சி" என்னும் இவ்வதிகாரம் [களவிக் கொத்து] மேற்காட்டிய 1. காட்சி முதலான 18 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உ. பாங்கற் கூட்டம்

[பாங்கனுற்கூடும் கூட்டம்]

பாங்கற் கூட்டம் என்பது தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தன் பாங்கனைக் கொண்டு தலைவியை அடைதல் முறைமை எனக் கொள்ளுதல்.

1. பாங்கனை நினைதல் [19. பூங்கனை]

'தலைவிக்கு அவள் கண்ணுற் காட்டப்பட்ட காதல் தோழி எவ்வளவு சிறந்தவளோ அவ்வளவு எனக்குச் சிறந்துள்ள என் பாங்கனை(தோழனை)க் கண்டு நடந்ததை நான் தெரிவித்தால் அந்தத் தலைவியை நான் அடைவதற்கு அவன் உதவி செய்வான், அதைத் தடுப்பார் யாருமில்லை' எனத் தலைவன் தன் காதற் பாங்கனை நினைக்கின்ருன்.

2. பாங்கன் வினுதல் [20. சிறைவான்]

தலைவனுடைய தோள்கள் மெலிந்துள்ளதைக் கண்ட பாங்கன் "தலைவ! நீ இவ்வாறு மெலிதற்குக் காரணம் என்ன, தமிழின் துறைகளில் நுழைந்து

உழைத்தனையோ, அல்லது ஏழிசைச் சூழலிற் புகுந்து உழைத்தனையோ,'' எனத் தலைவனை வினவுகின்றான்.

3. உற்றது உரைத்தல் [21. கோம்பி]

அங்ஙனம் வினவிய பாங்கனுக்கு, ''நான் ஒரு மடமான் நோக்கியைக் கண்டேன். சிவபிரானுடைய தாமரைத் தாளைச் சூடும் எனது வலிமை எல்லாம் அவளைக் கண்டதும் நீங்கிற்று; எங்ஙனம் எனில் யானைக்கும் தீங்கு செய்யவல்ல வலிய பாம்பு ஒன்றின் படத்தை ஒரு மயில் பிடித்துக் கிழித்தது போல'' எனத் தலைவன் பாங்கனுக்கு உற்றது உரைத்தான்.

4. கழறி உரைத்தல் [22. உளமாம்]

உற்றது உரைக்கக் கேட்ட பாங்கன் ''ஒரு இளமான் விழியை உடைய மாதுக்கோ அண்ணலே! நீ இரங்கியது, இஃது உன் பெருமைக்குத் தகாது'' என்று கூறினான்.

5. கழற்றெதிர் மறுத்தல் [23. சேணில்]

இவ்வாறு பாங்கன் சொல்லக் கேட்ட தலைவன் பாங்கனை நோக்கி 'என் உயிரன்ன பொற் கொழுந்தாம் அந்த மாதை நீ கண்டிலை; கண்டால், இவ்வாறு சொல்லமாட்டாய்;'' என்றான்.

6. கவன்று உரைத்தல். [24. விலங்கலை]

தலைவன் இவ்வாறு சொல்லக் கேட்ட பாங்கன் ''கடல் கலங்குதலை அடைந்தாலும் கலங்காத நீ(சிவபிரானுடைய அருள் இல்லாதவர் போல) ஏனோ கலங்கித் துயர் உறுகின்றாய்'' எனத் தலைவனை வினவினன்.

7. வலி அழிவு உரைத்தல் [25. தலைப்படு]

இதைக் கேட்ட தலைவன் ''நான் அமைதி அழிந்து உள்ளம் தளரேன், சித்தம் பித்தன் என்று என்னை அறிவாரும் இல்லை; நான் பாரையும் நன்றாகத்

தேற்றவும் வல்லேன், அங்ஙனம் இருந்தும் இப்பொழுது ஒரு சிறிய மானினுடைய (இளமாதினுடைய) விழியினால் மனம் அழிந்து மயங்குகின்றேன்,'' எனக் கூறினான்.

8. கிழியொடு வெறுத்தல் [26. நல்வினை]

வலியழிந்தமை கூறி வருந்தி நின்ற தலைவன் பாங்கனோடு புலந்து வெள்கி “ஒரு மாதுக்கு நான் தளர்வுற்றேன் என்று, நான் பற்றுக்கோடாக நினைந்து இருந்த பாங்கனே என்னை இகழ்கின்றான். தில்லையைத் தொழாதவர் போல எனது தொல்வினையால் எனது உயிர் துயரம் உறுகின்றது; அவ்உயிர் வலியுறும் வண்ணம் நான் செய்த நல்வினையும் நான் உய்யும்படி பயன் தரவில்லை,'' எனக் கூறி வருந்தினான்.

9. பாங்கன் நொந்து உரைத்தல் [27. ஆலத்தினால்]

இதைக் கேட்ட பாங்கன், ''அமிர்தம் தன்குணம் கெடினும், பெய்யும் காலத்து மழை பெய்யாது மாறினும், மாறாத வன்மையை உடைய உனது சீரிய ஒழுக்கத்தை ஒருத்தி காரணமாக நீ மறந்தது என்னுடைய தீவினைப் பயன்தான் என்று கூறித் தானும் தலைவனுடன் கூட வருந்தினான்,

10. இயல் இடம் கேட்டல் [28. நின்னுடை]

இங்ஙனம் நொந்து உரைத்த பாங்கன் தலைவனை ஆற்றுவித்தல் தனது கடன் என உணர்ந்து, 'சிலம்பா! உன்னை இவ்வாறு செய்த மாதின் இருப்பிடம் கயிலை மலையோ? தாமரைப் பூவோ? வானோ? அவள் இடம் யாது? அவள் தன்மை யாது? கூறுவாயாக'' எனத் தலைவனை வினவினான்.

11. இயல் இடம் கூறல் [29. விழியால்]

தலைவியின் இடமும் இயலும் கேட்ட பாங்கனுக்கு ''கயிலைமலையில் திகழும் பொழில்தான்'' என்று தலைவியின் இடத்தையும், அவள் மான்போலும் விழியாள்;

மயில் போலும் இயலாள், கிளிபோலும் மொழியாள்'' என்று அவள் தன்மையையும் தலைவன் குறிப்பிட்டான்.

12. வற்புறுத்தல் [30. குயிலை]

இதைக் கேட்ட பாங்கன், ''தலைவி தனது ஆயத்தாருடன் [மலையின் எதிர் ஒலிகேட்டு] விளையாடும் இடத்திற்குப் போய்த் தலைவியைக் கண்டு வருவேன் [அதுவரை நீ பொறுத்திரு] வருந்தாதே'' எனத் தலைவனுக்கு வற்புறுத்திக் கூறினன்.

13. குறிவழிச் சேறல் [31. கோடுங்கால்]

அங்ஙனம் தலைவனை வற்புறுத்தி அவன் கூறிய வழியே சென்ற பாங்கன் அந்த வேற்கண்ணி கயிலை வான் பொழிலில் உள்ள புனத்தில் இருப்பாளோ இருக்கமாட்டாளோ என்ற ஐயத்துடன் சென்றான்.

14. குறிவழிக் காண்டல் [32. வடிக்கண்]

தலைவன் சொன்ன குறிவழிச் சென்ற பாங்கன் 'தலைவன் அவளைப்பற்றிக் குறித்த கண், இடை, வாய் எல்லாம் அவன் சொன்னபடியே இருக்கின்றது. ஆதலால் அவன் சொன்ன இடமும் இதுவே; இயலும் இதுவே; அவளும் இவளே; என்று தெளிவுற்றான்.

15. தலைவனை வியந்து உரைத்தல் [33. குவளை]

அப்படித் தெளிவுற்ற பாங்கன் 'இலக்குமியும் அஞ்சும்படியான அவயவ அழகை உடைய இவளைக் கண்டு, இங்கிருந்து அங்கு வந்து இவளைப் பற்றி அத்துணை விரிவாக என்னிடம் உரைத்த என் அண்ணலே திண்ணியான்' என்று தலைவனை வியந்து நின்றான்.

16. கண்டமை கூறல் [34. பணம் தாழ்]

அங்ஙனம் வியந்த பாங்கன் தலைவனிடம் சென்று தான் அவளைப் பொழிற் புனத்திற் கண்டதைக் கூறினன். (எங்ஙனம் கூறினன் எனில், தன்னைப்

புணர்ந்து அகன்ற ஆண் யானையைக் காண ஒரு பெண்யானை தன் கண்ணைப் பரப்பி ஆண்யானையின் வரவை எதிர்பார்த்திருந்ததைக் கண்டேன் என்று (பிடிமிசை வைத்து) கூறினன்.)

17. செவ்வி செப்பல் [35. கயலுள]

அங்ஙனம் பிடிமிசை வைத்துக் கூறக்கேட்ட தலைவன் பாங்கன் சொன்ன விவரம் தனக்குப் போதாமையிற் பின்னும் ஆற்றுமை நீங்காதுயினன்; அது கண்ட பாங்கன் தலைவனை ஆற்ற வேண்டித் தலைவியின் கண் முதலிய அவயங்களின் அழகை (செவ்வியை) எடுத்து விளக்கமாகக் கூறினன். (எங்ஙனம் எனில் தாமரைப் பூவின் மேல் கயல் மீன்கள் கிடந்தன எனக் கண்களையும், பவளத்தின் அயலில் நிரையாக முத்துக்கள் உள என்று பற்களையும், தில்லையம்பலத்தின் வசீகர இயல்பைக் கொண்ட இணைச் செப்புகள் இருந்தன எனக் கொங்கைகளையும், இருள் செறிந்து கிடந்த புயல் (மேகம்) விளங்கிற்று எனக் கூந்தலையும் கொண்ட உருவம் தான் தலைவ! நீ கூறிய உருவம் என்றபடி)

18. அவ்விடத்து ஏகல் [36. எயிற்குலம்]

அங்ஙனம் தலைவியின் செவ்வியைச் செப்பக் கேட்ட தலைவன் 'குயில் போல் விளங்கி' [1]தொண்டைக் கனியிடத்தே குளிர்ந்த முத்தங்களை நிரைத்து, [2]வேலைக் கமலத்திற் கிடத்தி, அன்னம்போல் நடக்கும் மயிலை நீ கண்டது உண்டேல் அதுவே எனது நிலைபெறும் உயிராம்' என்று கூறித் தான் அவ்விடம் நோக்கிச் செல்கின்றான்.

---

1. இது வாயில் உள்ள பல் வரிசையைக் குறிக்கும்.
2. இது முகத்தில் உள்ள கண்ணைக் குறிக்கும்.

19. மின்னிடை மெலிதல் [37. ஆவியன்னாய்]

'ஆவியன்னாய் கவலேல்' எனக்கூறி என்னைவிட்டுப் பிரிந்த தலைவர், அருஞ்சுரத்திலே நீர் வேட்டற்கு உதவும் தாமரைத் தடாகம் போன்ற தலைவர், என் மேல் மிகுந்த ஆசை உடையராய் நெஞ்சழிந்து என் தோழிமார்கள் விளையாடுகின்ற கயிலைத் தாழ்வரையிடத்து அவர்கள் காண வந்திடுவாரோ அல்லது இங்கே வருவாரோ என்ற நினைவுடனே தனியே நின்று தலைவனை நினைத்துத் தலைவி மெலிந்து நின்றனள்.

20. பொழில் கண்டு மகிழ்தல் [38. காம்பிணை]

தலைமகளைக் காணச் செல்லா நின்ற தலைமகன் "அவள் இருந்த பொழிலைக் கண்டு பொழிலில் உள்ள வேய் இணைந்து நிற்றலால் அவள் தோள்களை ஒத்தும், அங்குள்ள மயில்களால் அவள் சாயலை ஒத்தும் அங்குள்ள பெரிய நீலமணியால் அவள் கூந்தலை ஒத்தும், அங்குள்ள இளமான் நோக்கத்தால் அவள் விழியை ஒத்தும் இருத்தலாலும், அங்குள்ள கொடிகள் அவள் இடைபோல விளங்குதலாலும், இப்பொழில் என் மனத்துக்கு அவளே எனத் தோன்றி என் மனத்தை இன்புறுத் துகின்றது" என்று அப்பொழிலைக் கண்டு மகிழ்ந்தான்.

21. உயிரென வியத்தல் [39. நேயத்ததாய்]

பொழிலைக் கண்டு மகிழ்ந்த தலைவன் 'என்சிந்தைக் கண்ணதாய், பெரிதும் மாயத்ததாய் இதோ நிற்கின்றது என் உயிர்' எனத் தலைவியைத் தன் உயிர் என வியந்தான்.

22. தளர்வு அகன்று உரைத்தல் [40. தாதிவர்]

தன் உயிர் என வியந்து நின்ற தலைவன் 'இவர் (தலைவி) பூக்களைக் கொய்யார்' பந்து அடியார், சுனை நீரில் ஆடல் செய்யார், தேவலோகம் பொலிவு அழியத்

நம்முடைய அடிகளை நிலத்தில் வைத்து இக்கயிலைப் புனத்தில் தனி நின்று செய்யக் கருதுகின்ற பெரிய தவம் யாதோ' எனக் கூறித் தளர்வு நீங்கினன்.

23. மொழிபெற வருந்தல் [41. காவிநின்று]

அங்ஙனம் தளர்வு நீங்கின தலைவன் தலைவியை நோக்கி "நீ கமலத் தேவியோ [இலக்குமியோ] என ஐயுற்றேன், நான் தெளிந்து அறிய சிறிதாயினும் நீ வாய் திறவாய், திறவாவிடில் என் அமுதமே! அணங்கே! இப்பொழுதே என் உயிர் அழிகின்றது; இதனை நீ கருதாதது ஏனோ" என்று வாடி உரைத்தான்.

24. நாணிக்கண் புதைத்தல் [42. அகலிடம்]

இங்ஙனம் தலைவன் தன்முன் நின்று தன்னைப் புகழக் கேட்ட தலைவி பெரு நாணினள் ஆதலின், அவன்முன் நிற்கலாகாது நாணி ஒரு பூங்கொடியின் மறைவில் கண் புதைத்து நிற்கக் கண்ட தலைவன் "பூங்கொடியே! என் உயிர் நையா வண்ணம் நான் ஒதுங்குவதற்கு எனக்கு ஒரு புகல் இடம் தருவாயாக" என்று கூறினன்.

25. கண்புதைக்க வருந்தல் [43. தாழச்செய்தார்]

தலைமகள் நாணிக் கண் புதையா நிற்பக் கண்ட தலைமகன் "என் மனம் நடுங்க வேல் போலும் கண்களை மூடிக்கொண்ட பொன்னே! உன் கண் என்னை வருத்தும் என்று கண்ணை மறைத்து என்னை வாழச் செய்தாய், என் மனம் நடுங்காது செய்ய வேண்டுவதாயின் நீ உன் மேனி முழுவதும் மறைப்பாயாக" என்றான்.

26. நாண்விட வருந்தல் [44. குருநாண்]

இங்ஙனம் தலைவன் தனது ஆற்றாமையைக் கூறக் கேட்ட தலைவி, ஒருநாளும் 'தன்னைவிட்டு நீங்காத நாண். (அழகைச் சேர்ந்த [illegible] போலக்) தன்னை

விட்டு நீங்க, அதன் பிரிவாற்ருது வருந்தி 'இனி வரக் கடவ நாளில் (மேல் வரும் நாளில்) இங்ஙனம் நாண் அழியப் பிறவாது ஒழிய வேண்டும்' என ஆற்ருது வருந்தினள்.

27. மருங்கு அணைதல் [45. கோலத்]

தலைவி நாண் இழந்து வருந்தி நிற்றலைக் கண்ட தலைமகன் அவளது வருத்தத்தைத் தணிப்பான் போன்று வண்டுகளை விளித்து 'வண்டுகாள்! தனிக் கொம்பில் ஏறி அதன் அடிக்கண் குறைப்பவர் போலும் தன்மையது நீங்கள் தேன் உண்ணும் ஆசையால் இவளது நூலை ஒத்த இடையின் நொய்மையைக் கருதாது இவளது கொண்டையைச் சார்வது; ஆதலால் கொண்டையை விட்டு நீங்குங்கள்.' என்று அவ் வண்டுச் சாதிகளை ஓட்டுவாரைப்போலத் தலைவியின் மருங்கு அணைந்தான்.

28. இன்றியமையாமை கூறல் [46. நீங்கரும்]

அங்ஙனம் தலைவியின் மருங்கு அணைந்த தலைவன் "விசும்பும் நிலனும் ஒருங்கு பெறவரினும் இத் தலைவியின் செப்பையும் கோங்கரும்பையும் வென்று என்னையும் அடிமை கொண்ட அவளுடைய கொங்கைகளை யான் மறவேன்" என்று தனது இன்றியமையாமையைக் கூறினன்.

29. ஆயத்து உய்த்தல் [47. சூளாமணி]

இன்றியமையாமை கூறிப் பிரிய நின்ற தலைவன் தலைவியை நோக்கி, "நினக்கு எனது ஆருயிர் அடிமை ஆயிற்று; ஆதலால் பல சொல்லிப் பெறுவதீ என், என் அமிர்தே! என் அணங்கே! என் தோளாமணியே! மான் பிணையே! இனி நீ சென்று நினது ஆயத்திடைச் சேர்வாயாக" எனக் கூறித் தலைவியை ஆயத்துக்கு அனுப்பினன்.

30. நின்று வருந்தல் [48. பொய்யுடை]

அங்ஙனம் தலைவியை அனுப்பிய தலைமகன் ‘இப் புனம் பொய்யுடையார்க்கு அரன், அவரை விட்டு அகன்றது போல அகன்று துன்பத்தைத் தந்தும், மெய் யுடையார்க்கு அரன் நணுகுவது போல நணுகி இன்பத் தைத் தந்தும் – விளங்கும். ஆதலால் நீங்குதல் பெரி தும் அரிது’ என நினைத்துத் தலைவன் பிரிவு ஆற்றாது நின்று வருந்தினன்.

குறிப்பு:—‘‘௨. பாங்கற் கூட்டம்’’ என்னும் இவ்வதிகாரம் 1. ‘பாங்கனை நினைதல்’ முதலான 30 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

---

௩. இடந்தலைப்பாடு

[பொழிலிடைச்சேறல்]

‘இடந்தலைப்பாடு’ என்பது ‘முன்னைக் கூடின இடத் திலே வந்து தலைவியை எதிர்ப்படுதல். அங்ஙனம் வருந்தி நின்ற தலைவன் ‘‘இப் புணர்ச்சி என் முயற்சி யால் வந்தது அன்று; தெய்வம் தர வந்தது; இன்னும் அத் தெய்வம் தானே தரும்; யான் அப் பொழிலிடைச் செல்வேன்’’ எனத் தன் நெஞ்சொடு கூறினன்.

1. பொழிலிடைச் சேறல் [49. என்னறிவால்]

அங்ஙனம் வருந்தி நின்ற தலைவன், ‘இப் புணர்ச்சி என் முயற்சியால் வந்தது அன்று; தெய்வம் தர வந்தது; அத் தெய்வம் இன்னும் இருக்கின்றது; அது முடித்து வைக்கும். அதனால் நெஞ்சே! வருந்தாதே யான் அப்பொழிலிடைச் செல்வேன்’ எனத் துணிந் தனன்.

குறிப்பு:- 'ங. இடந்தலைப்பாடு' என்னும் இவ்வதிகாரம் 1. 'பொழிலிடைச் சேறல்' என்னும் இவ் ஒரு தலைப்புடன் முடிகின்றது.

ச. மதி உடம்படுத்தல்.

மதி உடம்படுத்தல் என்பது தலைவிமீது தான் கொண்ட காதலைத் தலைவன் தோழிக்கு உணர்த்தி அவளது அறிவை ஒரு வழிப்படுத்துதல். தலைவன் தலைவியர் இருவர் கருத்து ஒற்றுமையால் அவர் தம்முள் கூட்டம் உண்மையைத் தோழி உணர்தல்.

1. பாங்கியிடைச் சேறல் [50. எளிதன்று]

அங்ஙனம் துணிந்த தலைவன், 'இனித் தலைவியை அடைதல் எளிதன்று. அவள் கண்ணால் காட்டப் பட்ட காதல் தோழிக்கு நான் அடைந்த துன்பங்களை எல்லாம் குறிப்பினால் அறிவிப்பேன்' என்று நினைத்துத் தோழியிடம் செல்கின்றான்.

2. குறை உறத் துணிதல் [51. குவளை]

அங்ஙனம் நினைத்துத் தோழியிடம் சென்ற தலைவன், (தெய்வத்தின் அருளால் தலைவியும் தோழியும் ஓர் இடத்தில் தனியாக நிற்பதைக் கண்டு) இத்தோழியைத் தன்னுடைய உயிர் என்று தலைவியின் கண் சொல்லிற்று; ஆதலால் என்னுடைய குறையை (வருத்தத்தை) இத் தோழியிடம் சொல்வேன் என்று அவள் இடம் தலைவன் பேசத் துணிந்தான்.

3. வேழம் வினாதல் [52. இருங்களி]

தன் குறையைப் பேசத் துணிந்த தலைவன் (என் குறை இன்னது என்று இவளுக்கு வெளிப்படையாகக்

கூறுவோமாயின் இவள் மறுக்கவும் கூடும் என உட்கொண்டு, என் குறை இன்னது என்று இவள் தானே உணரும் அளவும் குறிப்பு மொழியால் சொல்லிப் பின்பு குறையை வெளிப்படக் கூறுவது நன்றெனக் கருதி அவ்விருவர் நின்ற இடத்திற்குச் சென்று) வேட்டை கருதிச் சென்றவன் போலத் தன் காதல் தோன்ற 'இங்கே ஒரு மதயானை வரக் கண்டீரோ என வேழம்' வினவினன்.

4. கலைமான் வினுதல் [53. கருங்கண்ணனை]

வேழம் வினவி நின்ற தலைவன் (தலைவியின் கண்ணால் தான் இடர்ப்பட்டமை தோன்ற) அவ்விருவரையும் நோக்கி 'நும்முடைய கண்கள் போலும் எனது அம்பு பொருதலால் உண்டான புண்ணுடன் இப்புனத்தில் கலைமான் ஒன்று வரக் கண்டீரோ?' என அவர்களை வினவினன்.

5. வழி வினுதல் [54. சிலம்பணி]

கலைமான் வினவி நின்ற தலைவன் (தன் கருத்து வேறு என்று தோழி அறிய விரும்பி) ''நான் கேட்டது கூறீராயின் கயிலை மலையின்கண் உங்கள் சிறிய ஊருக்குச் செல்லும் வழியைக் கூறுமின்'' என்று கேட்டான்.

6. பதி வினுதல் [55. ஒருங்கடமூவெயில்]

கேட்ட வினுக்களுக்கு மறுமொழி பெருமையால் தலைவன் அவர்களை நோக்கி 'இங்கே வாருங்கள், உங்கள் (பதியின்) ஊரின் பெயரைச் சொன்னுல் இம்மலை வாழ்பவர்களுக்குப் பழி (குற்றம்) ஆமோ?'

'பழி ஆகாது; ஆதலால் உங்கள் பதி இன்னதென்று கூறுமின்' என வினவினன்.

7. பெயர் வினுதல் [56. தாரேன்ன]

பதி வினவவும் அதற்கு அவர்கள் வாய்திறந்து பதில் கூருதது கண்டு 'நும் பதி கூறுதல் பழியாயின், அதனை

ஒழிமின்; நும் பெயர் கூறுதல் பழி ஆகாதே, அதைக் கூறுமின்' என்று தலைவன் வினவினன்.

8. மொழிபெறாது கூறல் [57. இரதமுடைய]

பெயர் வினவியும் வாய் திறவாமை கண்டு "இப் புனத்தில் உள்ளவர்கள் வரவேற்கத் தக்க விருந்தினரோடு வாய் திறவாமையை விரதமாக உடையார் போலும்; அல்லது வாய் திறக்கின் 'சலக்' என்று முத்து மணிகள் உண்மையாகவே சிந்தும் போலும். இவ் இரண்டினுள் ஒன்றுதான் வாய் திறவாமைக்குக் காரணமாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன்'' எனத் தலைவன் கூறினன்.

9. கருத்து அறிவித்தல் [58. வின்னிற]

அங்ஙனம் கூறிய தலைவன் நீயிர் வாய் திறவாமைக்குக் காரணம் உடையீர்; அது கிடக்க, இத்தழை நும் அல்குற்குத் தகுமாயின் அணிவீராமின் எனத் தழை காட்டி நின்று தன் கருத்தை அறிவித்தான்.

10. இடைவினுதல் [59. கலைக்கீழ்]

தழைகாட்டித் தன் கருத்தை அங்ஙனம் அறிவித்த தலைவன் "நும் அல்குலும், முலையும் அதிபாரமாயிரா நின்றன. முலைக்கீழ்ச் சிறிதாயினும் ஒன்று இன்றி இவ்வுரு நிற்றல் முடியாது. ஆதலின் நுமது சிற்றிடை யாது? கண்ணுக்குத் தெரியவில்லை. சொல்லுவீராக'' என்று மொழி பல மொழிந்தான்.

குறிப்பு:- 'ச. மதி உடம்படுத்தல்' என்னும் இவ்வதிகாரம் 1. 'பாங்கி யிடைச் சேறல்' முதலான 10 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

௫. இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்

இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்பது தலைமகளும் தோழியும் உள்வழிச் சென்று, தலைமகன் கரந்த மொழியால் தன் கருத்து அறிவிக்கத் தோழி அவன் நினைவு இன்னது என்று அறிந்து நிற்றல்.

1. ஐயுறுதல் [60. பல் இலனாக]

இங்ஙனம் தலைமகன் தழை கொண்டு நின்று கரந்த மொழியால் தன் கருத்தை அறிவிக்க "மேனி ஒளியிலனாய் இப் புனத்தினின்றும் போகாமல் யானை யோடு மான் வினவி இவ்வாறு பொய் சொல்லுகின்ற இவன் யாவனோ? இவன் வேட்டையாட வந்தது மெய் யன்று போலும்" என்று தோழி ஐயுற்று நின்றாள்.

2. அறிவு நாடல் [61. ஆழமன்றோ]

அங்ஙனம் ஐயுற்ற தோழி "முதலில் வேழமாய், பின்னர் மானாய், அதன் பின்னர் வேறு சிலவாய், அதன்பின் மெல்லிய தழையாய் வந்து வந்து முடிவில் தலைவியின் இடை ஆய்விட்டது. ஆதலால் இந்த ஐயர் வார்த்தை ஆழம் உடையதாய் இருக்கின்றது." என்று தலைவன் நினைவை ஆய்ந்து அறிகின்றாள்.

குறிப்பு:- 'ஓ. இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்' என்னும் இவ் அதிகாரம் 1. 'ஐயுறுதல்' முதலான 2 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

௯. முன்னுறவுணர்தல்

முன்னுறவுணர்தல் என்பது முன்னர்த் தலைமகனது வாட்டத்தைப் பாங்கன் வினயவாறு போல் தலைமகளது

வாட்டத்தை எதனால் இவள் வாடியது எனத் தோழி வினவி உணர்தல்.

1. வாட்டம் வினுதல் [62. நிருத்தம்]

'எம்பெருமான் (தலைவன்) என் பொருட்டு இடர்ப் பட்டு நிற்கின்றான்,' எனத் தலைமகள் வருந்துவதைக் கண்டு "சுனை நீராடிச் சிலம்பிற்கு எதிரழைத்து வருத்தம் செய்யும் விளையாட்டைப் பயின்றோ, வேறு காரணத் தாலோ, நீ வாடியது என்னே" எனத் தோழி தலைமகளது வாட்டத்தை வினவினள்.

குறிப்பு:- "சூ. முன்னுறவுணர்தல்' என்னும் இவ் அதி காரம் 1. வாட்டம் வினுதல் என்னும் 1 துறையைக் கொண்டு முடிகின்றது.

எ. குறையுற உணர்தல்

குறையுற உணர்தல் என்பது தலைமகன் குறை யுறத் தோழி அதனைத் துணிந்து உணர்தல்.

1. குறையுற்று நிற்றல் [63. மடுக்கோ]

தலைமகளது வாட்டம் கண்டு ஐயுற்று நின்ற தோழியிடம் சென்று "நான் உங்களுக்கு எல்லாத் தொழிலும் செய்ய வல்லேன்; கடலில் படகைச் செலுத் துவேன்; கடலிற் புக்கு மீன் பிடிப்பேன்; ஒரு குளிப்பில் பல சங்குகளை எடுப்பேன்; தில்லை முற்றத்தில் எல்லாரும் காணச் சங்க வளைகளை விற்பேன்; நும் ஐயன்மார்க்குப் பொருந்தின குற்றேவல்களைச் செய்வேன்; நல்ல மலர்களை நும் கூந்தலுக்குத் தொடுப்பேன்; உங்களுக்கு வேண்டியதைச் சொல்லுங்கள்" என்று தலைமகன் தன் குறையைக் கூறினன்.

2. அவன் குறிப்பு அறிதல் [64. அளிய]

அங்ஙனம் கூறின தலைமகனுடைய முகத்தில் தலைமகனது செயல் புலப்படக் கண்டு, தலைமகனது குறிப்பு இவளிடத்ததெனத் தோழி அவனது நினைவைத் துணிந்து உணர்ந்தாள்.

3. அவள் குறிப்பறிதல் [65. பிழை கொண்டு]

தலைமகனது நினைவை இன்னதென அறிந்த தோழி இவனிடத்து இவள் நினைவே அன்றி, இவளிடத்து இவன் நினைவும் உண்டோ எனத் தலைமகளை நோக்க, அவள் முகத்திலும் அவன் செயல் புலப்படக் கண்டு இவள் குறிப்பும் இவனிடத்ததெனத் துணிந்து உணர்ந்தாள். (எங்ஙனம் எனில் 'மாந்தழையைக் கொண்டு ஒருவன்' என்று சொல்லுவதன் முன் உள்ளம் குழைந்து நின்ருள்; அதனல் இவள் குறிப்பு இவன் கண்ணதே போலும்.)

4. இருவர் நினைவும் ஒருவழி உணர்தல் [66. மெய்யே]

இங்ஙனம் இருவர் நினைவும் கண்டு இன்புற்ற தோழி இவ்விருவரும் இவ்விடம் வந்த காரியம் இவன் முகமாகிய தாமரைக் கண் இவள் கண்ணுகிய வண்டு இன்பத் தேனை உண்டு எழில்பெற வந்ததற்கே அன்றிப் பிறிதில்லை. இவற்கு மெய்யாகவே வேட்டையின் மேல் உள்ளமில்லை; இவளும் புனத்தினைக் காப்பது பொய்யேயாம்'' என்று அவ் விருவருடைய நினைவைத் துணிந்து உணர்ந்தனள்.

குறிப்பு:-'எ. குறையுற உணர்தல்' என்னும் இவ் அதிகாரம் 1. குறையுற்று நிற்றல். முதலான 4 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

அ. நாண நாட்டம்

நாண நாட்டம் என்பது இருவர் நினைவும் ஐயம் அறத் துணிந்த தோழி அவர்களுடைய கூட்டம்

தனன்'' என்று தோழி தலைவியை நடுங்க வைத்துப் பார்த்தாள்.

குறிப்பு:- 'கூ. நடுங்க நாட்டம்' என்னும் இவ் அதிகாரம் 1. நடுங்க நாட்டம் என்ற 1. துறையைக்கொண்டு முடிகின்றது.

கo. மடல் திறம்

'மடல் திறம்' என்பது நடுங்க நாடவும், பெரு நாணினள் ஆதலின் தலைமகள் தன்குறை சொல்ல மாட்டாது நிற்ப, இனி இவள் இறந்துபடவும் கூடு மென உட்கொண்டு தலைமகனுடன் சொல்லாடத் தொடங்கா நின்ற தோழி தானும் பெருநாணினள் ஆதலின் தலைமகன் பின்னும் குறையுற வேண்டி நிற்ப, அந்நிலையில் தலைமகன் ''இந்நாளெல்லாம் என் குறை நின்னால் முடியும் என்று நின்னை வந்து இரந்தேன்; இது நின்னால் முடியாமையின் யான் மடலூர்ந்தாயினும் இக் குறை முடித்துக் கொள்வேன்'' எனத் தோழியிடம் கூறுதல்.

1. ஆற்றாது உரைத்தல் [73. பொருளா எனை]

அங்ஙனம் நடுங்கப் பார்த்த தோழி தலைமகன் பின்னும் குறையுற வேண்டி வாளா நிற்ப, தலைமகன் அவ் இருவரிடம் சென்று நின்று ''நீவிர் அருளாமை யால் என் உயிர் அழிகின்றது; இதனை அறிமின்'' என்று தனது ஆற்றாமை மிகுதியைக் கூறினன்.

2. உலகின்மேல் வைத்து உரைத்தல் [74. காய்சினவேல்]

அங்ஙனம் தனது ஆற்றாமையை எடுத்துக் கூறிய தலைமகன் ''மகளிர் தமது வேல் போலும் கண்ணாகிய வலையை வீசினபோது அவ் வலைப்படுதலால் தமது உள்ளமாகிய மீனை இழந்தவர்கள் ஈசனுடைய திருநீற் றையும், எருக்கம் பூவையும் அணிந்து ஒரு கிழியை (படத்தை)க் கையிற் பிடித்துப் பாய்ந்து செல்லும் புரவி

என்னும்படி. சீறூரிடத்துப் பனைமடல் ஏறுவர் தம் உள்ளம் பெறுதற்கு வேறு உபாயம் இல்லாமையால்'' என உலகியலை எடுத்துக் கூறினன்.

3. தன் துணிபு உரைத்தல் [75. விண்ணை]

அங்ஙனம் உலகியலை எடுத்துக் கூறிய தலைமகன் "அம்பலவன் அருள் இல்லாதவர் போல மடல் மிசை யான் வரப் பண்ணிற்று ஒரு பெண் கொடி'' என்று தான் மடல் ஏறப்போகும் துணிவை எடுத்து உரைத் தனன்.

4. மடல் ஏறும் வகை உரைத்தல் [76. கழிகின்ற]

அங்ஙனம் தன் துணிவைத் தலைமகன் எடுத்துக் கூறியும் சொல்லாடாத தோழிக்குத் தான் நாணிழந் தமை தோன்ற நின்று, "ஒரு கிழியில் என் உருவையும் உன் தலைவியின் உருவையும் எழுதி அப்படத்தை என் கையில் பிடித்துக் கொண்டு உங்கள் ஊர்த் தெருவில் நான் மடலேறி வருவேன்'' என்று (தோழியிடம்) தலை மகன் கூறினான்.

5. அருளால் அரிதென விலக்கல் [77. நடன்]

இங்ஙனம் 'மடலேறுவேன்' என்று தலைவன் கூறக் கேட்ட தோழி இனி இவன் மடலேறவும் கூடுமென உட்கொண்டு தன்னிடத்து நாணினை விட்டு வந்து, எதிர்நின்று "ஒரு பெண்ணையில் (பனை மரத்தில்) உள்ள பெடையையும் சேவலையும், முட்டையையும் அழித்து மடலை நாம் பண்ணினால், மன்னனே! இனிய அருள் இவ் உலகத்தில் யாரிடத்து உண்டு'' என்று அவன் அருளை எடுத்துக் கூறி அவன் மடலேறுதலை விலக்க முயன்றாள்.

6. மொழி நடையெழுதல் அரிதென விலக்கல் [78. அடிச்சந்தம்]

அங்ஙனம் விலக்க முயன்றும் தன் வழி வராமை கண்ட தோழி, அவன் வழி ஒழுகி விலக்குவாளாக,

"நுமது அருள் கிடக்க, மடலேறுவார் யாழ் ஓசையைக் கற்ற மென்மொழிக் கன்னியின் அன்னம் போன்ற நடையை (அது எழுத வராது) எழுதுகிற சித்திரங் களும் உண்டோ? உன்னுடைய சித்திரச் சாலையிடத்து; நுமக்கு அவள் மொழிநடை எழுத முடியாது ஆதலின் நீயிர் மடலெழுதுதல் எப்படி?" எனக் கூறி மடலெழுது தலை விலக்க முயன்றாள்.

7. அவயவம் எழுதல் அரிதென விலக்கல் [79. யாழும்]

தலைவியின் மொழிநடை கிடக்க, அவள் மொழி யோடு ஒக்கும் யாழையும் எழுதி (மொழியின் இனி மையை எழுதி) முறுவலான அவளுடைய முத்துக்களை எழுதி, (அழகிய பல்வரிசையை எழுதி,) கூந்தலாகிய இருளின்கண் மெல்லிய பூச்சூழலையும் எழுதி, வாயாக ஒரு தொண்டைக் கனியையும் எழுதி, (கண்ணாகிய) இளமாவடு வகிரையும் எழுதி, அங்ஙனம் இவையெல் லாம் எழுதப்பட்ட ஒரு வஞ்சிக் கொம்பு எழுதியுள்ள படத்தைக் கொண்டுவர முடியுமாயின் அங்ஙனே கொண்டு வந்து எம் ஊர்க்கண் மடலேற வாரும்" என்று தோழி கூறினள்.

8. உடம்படாது விலக்கல் [80. ஊர்வாய்]

அங்ஙனம் எழுதலாகாமையைக் கூறிய தோழி "அது கிடக்க, நும்மை யாம் விலக்குகின்றேம் அல்லேம்; தலைவ! நீ மடல் ஊர்வையோ, அன்றி ஒழிவாயோ, உன் கருத்தை யாம் திருத்த இருந்தேம் அல்லேம்; உன் விருப்பத்தைத் தலைவியிடம் அவள் உடம்படும் வண்ணம் சிலவற்றைக் கற்பித்துச் சொல்லிப் பார்க்கிறேன்; அவள் அதற்கு இடம் தருவாளோ யார் அறிவார்? தாராளாயின் பின்பு நீ அறிந்த வற்றைச் செய்வாயாக" என்று மடலேறுவதை விலக்கினள். ('நான் போய் அவள் நினைவு அறிந்து வருவேன், அதுவரையில் நீ வருந்தாது ஒழி' என்றது கருத்து)

9. உடம்பட்டு விலக்கல் [81. பைங்காண்]

இங்ஙனம் உடம்படாது முன் பொதுப்பட விலக்கின தோழி பின்னர்த் தன்னோடு தலைவியிடம் வேற்றுமையின்மை கூறிவிளக்கம் தரவேண்டிக், "கடலிடத்தே நான் அழுந்தினால் எனக்கு முற்பட்டுத் தலைவி அழுந்துவாள், இன்றுவரை தலைவிக்கு என்னிடமுள்ள இனிய அன்பும் அருளும் இவ்வாறு ஆகும்; ஆதலின் யான் நின் கருத்தை முடித்துத் தருவேன், நீ வருந்த வேண்டாம்" என்று தோழி தான் உடம்பட்டு மடலேறுதலை விலக்குகின்றாள்.

குறிப்பு: '௰. மடல்திறம்' என்னும் இவ் அதிகாரம் 1. ஆற்றாது உரைத்தல், முதலான 9 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

---

௧௧. குறைநயப்புக் கூறல்

குறை நயப்புக் கூறல் என்பது தலைமகனை மடல் விலக்கிக் குறை நேர்ந்த தோழி தலைமகளைக் குறை நயப்பிக்க அவன் குறையை எடுத்துக் கூறுதல்.

1. குறிப்பு அறிதல் [82. தாதேய்மலர்]

இங்ஙனம் தலைமகனது குறையைத் தலைமகளிடம் கூறத்துணிந்த தோழி 'தெற்றெனக் கூறுவேனாயின் அவள் அதனை மறுக்கவும் கூடும்' என உட்கொண்டு "நம் புனத்தின்கண் முருகவேள் என்றே சொல்லத் தக்க ஒருவர் சின வேலேந்திப் பலகால் வருகின்றார்; வந்து நின்று யாதும் உரையாடார்; அவரிடத்து யாம் செய்யத்தக்கது யாது என்று அறிகிலேன்" எனத் தோழி தலைமகளிடம் கூறினள்.

2. மென்மொழியால் கூறல் [83. வரிசேர்]

பின்னும் தலைவியின் நினைவை அறிந்தவளாய் "ஒருவன் எரிசேர்ந்த தளிரை ஒக்கும் மேனியன்,

வாடாத தழையை உடையவன், முருகனே, காமனே தெரியவில்லை. அவன் நம் புனத்தைவிட்டுப் பிரியான்; ஒன்றும் உரையான், அஃதென்ன மாயமோ அறிகிலேன்'' என்று தோழி தலைவியிடம் மென்மொழியால் பக்குவமாகக் கூறினாள்.

3. விரவிக் கூறல் [84. நீ கண்டனை]

அங்ஙனம் கூறிய தோழி வன்மொழியால் கூறின் மனம் மெலியும் என்று அஞ்சி, "ஒரு ஆண் நண்டு தன் பெடையின் வாயில் ஒரு நாவல் பழத்தைக் கொடுப்பதைக் கண்ட [முருகவேள் போல்வான்] ஒருவன் பேயைக் கண்டாற்போல வேறுபாடு உடையவனாய்த் தன் உணர்வு இழந்து நின்றான்; அந்நிலையை நீ கண்டாயாயின் உயிர் வாழமாட்டாய், யான் வன் கண்மையேன் ஆதலின், அதனைக் கண்டும் ஆற்றியுளேன் ஆயினேன்'' என மென்மொழியோடு சிறிது வன்மொழியும் விரவிக் கூறினள்.

4. அறியாள் போறல் [85. சங்கம்]

பேய்கண்டாற்போல நின்றான் எனத் தலைமகன் நிலையைக் கேட்ட தலைமகள் பெரு நாணினள் ஆதலின் அதனை அறியாதாளைப் போல ''ஏந்திழாய்! பல பெரிய மரக்கலங்களைப் பெற்ற இக்கடல் தில்லைவானவனும் சிவனை ஒக்கும்; அஃது எப்படியெனில் சிலேடையினாலே ஒக்கும். எங்ஙனம் எனில் :

''கடலானது சங்கு தரும் முத்துக்களை முத்துக் குளிப்பாரே அன்றி நாமும் பெறும்படி மிக்க கழிகளை உடையதாய்; மிக்க நன்னீரைக் கொண்ட கங்கை தன்னிடம் சேரப் பெற்றதாய்; பாருகிய மரக்கலங்கள் இயங்கப் பெற்றதாய் விளங்கும். அதுபோலத் தில்லை வானவனாகிய சிவனும் அன்பு தருகிற முத்தியை அன்பிலாத நாமும் பெறும்படி ஆகாயத்தையும் கழிந்ததுள்ளதான திருவடியை உடைய ஒரு வடிவை

உமை பாகராய், கங்கையைத் திருச்சடையில் தரித்தவராய், பாறு என்னப்பட்ட [பருந்து] பறவைகள் உண்ணப்பெற்ற தலை ஓட்டை உடையவராய் விளங்குகின்றார்.''

இவ்வாறு நேரான மறுமொழி கொடாது தில்லை மாயவன் கடல்வடிவாய் இருந்தவாறு காணாய்'' எனப் பிறிது ஒன்று கூறுவாளாயினள்.

5. வஞ்சித்து உரைத்தல் [86. புரங்கடந்தான்]

இங்ஙனம் நாணினால் பிறிது ஒன்று கூறிய தலைமகள் வெளிப்படத் தன் நினைவைக் கூறமாட்டாது ''சிவனது திருவடியைப் பூமியைத் தோண்டிக் காண முடியாத திருமால் அம்பலத்தில் அவரது திருவடி ஒன்று காணக் கிடைக்க மற்றைய திருவடியையும் காட்டி அருள் என்று அங்கு வரம் கிடந்தார்'' எனத் தலைமகள் தன் உண்மை எண்ணத்தை மறைத்துப் பிறிது ஒரு செய்தியை மாயவன் மேல் வைத்து வஞ்சித்துக் கூறினாள் (இது தோழிக்குத் தலைவி மறுமொழியாகக் கூறியவாறு; எப்படியென்றால் ஒன்று காட்ட என்றது முன்னர்ப் பாங்கற்கூட்டம் பெற்றான். அதன்பின் உனது கூட்டம் பெறுகை காரணமாக உன்னிடத்து வந்து இரந்து குறையுறுநின்றான். அஃது எதுபோல் என்றால் ''மற்றொன்றதும் காட்டிடென்று மால் வரம் கிடந்தாற் போல'' என்றவாறு; வஞ்சித்தல் மறுமொழியை வெளிப்படையாகக் கொடாது பிறிது ஒன்றாகக் கூறுதல்)

6. புலந்து கூறல் [87. உள்ளப் படுவன]

இங்ஙனம் வஞ்சித்துத் தன் எண்ணத்தைத் தலைமகள் மறைத்துக் கூறியதால், ''என்னோடு இதனை வெளிப்படக் கூறாயாயின் நின் காதல் தோழியர்க்கு வெளிப்படச் சொல்லி அவரோடு சூழ்ந்து நீ கருதியதைச் செய்யத் துணிவாய், அல்லது துணியாது ஒழிவாய்;

அறிவு இல்லாத நான் சொன்ன சொற்களை உள்ளத்திற் கொள்ளத் தகாது; அவற்றை மறப்பாயாக; யான் வேண்டுவது இதுவே'' எனத் தோழி தலைமகளோடு புலந்து கூறினாள்.

7. வன்மொழியாற் கூறல் [88. மேவியந்தோல்]

அங்ஙனம் புலந்து கூறிய தோழி ''திருநீற்றை மெய் முழுதும் பூசி, கையிற் சித்திரம் விளங்கும் கிழியுடன், ஒன்றும் வாய் திறந்து பேசாமல், பனைமடல் ஏற அக் கொடியோன் துணிந்து உள்ளான்; அக்கிழியிலுள்ள சித்திரம் நின்னுடைய வடிவு என்னும் உரையும் உளது; இதற்குக் காரணமாகிய தீவினை யாதோ; இனி நீ உனக்கு உற்றது செய்வாயாக யான் அறியேன்'' என்று வன்மொழியால் தலைவியிடம் கூறினள்.

8. மனத்தொடு நேர்தல் [89. பொன்னார் சடை]

இங்ஙனம் தோழியால் வன்மொழி கூறக் கேட்ட தலைமகள் ''எனக்கு வந்துள்ள நோய் என்னால் அறியப் படுவதில்லை; ஆதலால், யான் மறுமாற்றம் சொல்லேன்; எனக்குத் துணை நிற்கின்ற மனமே! அயலார் வந்து சொன்னார்கள் என்ற இக் குற்றம் என் இடத்துச் சேராமல் குணம் நிறைந்த அந் நல்லவற்கு (தலை மகனுக்கு) நான் படும் துயரத்தை நீயே அறிவிப்பாயாக'' எனத் தான் ஆற்றாளாய்த் தலைமகனைக் காணவேண்டித் தன் மனத்தொடு கூறினள்.

குறிப்பு:—'கக. குறை நயப்புக் கூறல்' என்னும் இவ் அதிகாரம் 1. 'குறிப்பு அறிதல்', முதலான 8 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

கஉ. சேட்படை

'சேட்படை' என்பது தோழி தலைமகன் குறையைத் தீர்க்க உடம்படாமல் மறுத்தல் (தூரவிடல்). தலைமகளது

பெருமையையும், தனது முயற்சியின் அருமையும் தோன்றும்படி இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய மணந்து கொள்ள வேண்டித் தலைமகனிடம் தோழி மறுத்துக் கூறுதல்.

1. தழைகொண்டு சேறல் [90. தேமென் கிளவி]

இங்ஙனம் தலைமகள் தன் மனத்தொடு கூறி வாளா இருக்கச், சேட்படை கூறத் துணிந்து நின்ற தோழியிடம் தலைமகன் கையுறையுடன் சென்று பின்னும் தனது குறையைத் தெரிவிக்க வேண்டிப் "பூவை உடைய மெல்லிய தழையையும், அழகிய பூக்களையும் கொள்கின்றிலீர்; தனித்து நான் வருந்தக் கொடுமைப் பாட்டினைச் செய்து உம் கண்மலராம் காம பாணத்தைக் கொண்டு என்னை அலைத்தலையோ நீங்கள் முழுதும் கற்று உள்ளது, நும்மால் அருளுமாறு கற்கப்பட்டது இல்லையோ" என வருந்திக் கூறினன்.

2. சந்தனத்தழை தகாது என்று மறுத்தல் [91. ஆரத்தழை]

சந்தனத் தழையுடன் வந்த தலைமகனை நோக்கிப் "பொதிகை மலையில் உள்ள இச் சந்தனத் தழைகளை அண்ணலே! நீ தந்தால் அத் தழைகளைப் பிறர் அவள் அணியக் கண்டால் இங்கு இல்லாத இத் தழையைக் கொண்டு வந்தார் யார்? என ஐயமுண்டாகும்; ஆதலால் இவை கொள்ளேன்" என்று தோழி கூறித் தலைமகனைச் சேட்படுத்தினள்.

3. நிலத்தின்மைகூறி மறுத்தல் [92. முன்தகர்த்து]

இங்ஙனம் சந்தனத் தழையைக் கொள்ள மறுத்த தோழி பின்னும் அவன் பிறிதொரு தழையைக் கொண்டு வந்ததைக் கண்டு, "இம் மலையிடத்து (கயிலைமலையிடத்து) இல்லாத இத்தழையை அண்ணலே! நீ தந்தால் குறத்தியராகிய எங்களுக்கு இதுவரை எங்கள் குடியில் இல்லாத பழிவந்து சூழ்ந்து கொள்ளும் என்று

அஞ்சுகின்றோம். அதனால் இத்தழை கொணரற்பால தன்று'' என்று கூறி அதனை வாங்க மறுத்தனள்.

4. நினைவு அறிவுகூறி மறுத்தல் [93. யாழார் மொழி]

நிலத்துக்கு உரியது அன்று என்று தோழி கூறினதால் அந் நிலத்திற்கு உரிய தழை கொண்டு தலைமகன் வர, அது கண்டு தான் உடம்பட்டவளாய், ''யான் சென்று தலைவி இத் தழையை வாங்க உடம்படு வாளோ என அவள் நினைவை அறிந்து வந்து தடை யின்றிக் கொள்வேன்; அவள் சொல்வது அறியாது தழையைக் கொள்ள அஞ்சுகின்றேன்'' எனத் தோழி கூறினள்.

5. படைத்து மொழியால் மறுத்தல் [94. எழில்வாய்]

தலைவியின் நினைவு அறிந்து ஏற்பேன் எனக் கூறிய தோழி சிறிது புடை பெயர்ந்து தலைவியின் நினைவை அறிந்தாள் ஆகத் தலைவனிடம் வந்து ''இத் தழையை யானே அன்றி அவளும் விரும்புவாள் ஆயினும் ஒரு குறை உண்டு; இத்தழை சிவபிரான் வீற்றிருக்கும் குற்றாலத்தில் உள்ளதாகிய அசோகப் பொழிலில் அல்லது வேறு ஓர் இடத்து இப் பூந்தழை இல்லை; ஆதலால் இத்தழை தலைவிக்கு எவ்வாறு வந்தது என்று ஆராயப்படும். அதனால், இதைக் கொள்ளேன்'' என்று கூறினள். (பிற இடத்தும் உள்ள அத்தழை அவ்விடத்து அல்லது இல்லை என்றதனால் படைத்து மொழி ஆயிற்று.)

6. நாண் உரைத்து மறுத்தல் [95. உறுங்கள்]

இதைக் கேட்ட தலைமகன் தழையை விட்டு ஒரு மாலையைக் கையுறையாகக் கொண்டு சென்றால் அவள் மறுக்கும் வகையில்லை என்று கருதிக் கழுநீர் மலரை மாலையாகத் தொடுத்து எடுத்துச் செல்ல, அது கண்ட தோழி ''செவிலியர் சூட்டிய கண்ணியின்மேல் இந்தக்

கண்ணியை யான் சூட்டினால் தலைமகள் நாணுவள்" என்று கூறி மறுத்தனள்.

7. இசையாமை கூறி மறுத்தல் [96. நறமனை]

தலைமகள் நாணுவள் என்று கூறி (தலைவி) தோழி "அவள் நாணம் கிடக்க, குறவர் மனையில் உள்ள வேங்கை மலரை அல்லது, தெய்வத்திற்குரிய கழுநீர் முதலிய பூக்களைச் சூட மாட்டோம்" என்று கூறி அம்மாலையை வாங்க மறுத்தனள்.

8. செவ்வியிலள் என்று மறுத்தல் [97. கற்றில]

அங்ஙனம் மறுத்த தோழி "இவள் தலைவி புடை பெயர்ந்து விளையாடாமையின் "அன்னம் இவளைக் கண்டு இவளது மெல்லிய நடையைக் கற்கவில்லை; மான் இவள் கண்ணைக் கண்டு இவளது கண் நோக்கம் போன்ற நோக்கம் இன்னும் பெறவில்லை ; கிளி இவளுடைய பேச்சைப் போலப் பேசும் திறத்தை இன்னும் பெற வில்லை; என் பிள்ளை (தலைமகள்) இன்னும் விளையாட்டின் கண் உற்றிலள்; அது கிடக்க, நீர் என்னிடம் வந்ததும், நான் உமக்கு விடை கூறினதும், அவள் இன்னும் அறிந்திலள் ; ஆதலால் அவள் பக்குவி அல்லள் (செவ்வியிலள்); செவ்வி பெற்றபின் நீர் கையுறைகொண்டு வரலாம் எனத் தலைவனிடம் கூறி மறுத்தனள்.

9. காப்புடைத்தென்று மறுத்தல் [98. முனிதரும்]

செவ்வியிலள் என்று கூறிச் செவ்வி பெற்றால் குறை யில்லை என்றாள் தோழி என உட்கொண்டு தலைமகன் நிற்ப, "கதிரவன் மறைந்தான்; இனி, தாழ்ப்பின் அன்னையும் முனியும், என் ஐயன்மார் நன்றாக ஆராயாமல் ஏதம் செய்யும் மூர்க்கர்; இவ்விடமும் இனி இயங்கு வாரின்மையின் தனிமையைத் தரும்; ஐயனே! உனது குன்றமும் இந்நிலத்தின்கண்ணதன்று; அதனால் இங்கு நிற்கத் தகாது, நீர் நாளை வாரும்" என்று கூறித் தோழி மறுத்தனள்.

10. நீயே கூறு என்று மறுத்தல் [99. அந்தியின்]

அங்ஙனம் அவ்விடம் காப்புடைத்து என்று கூறின தோழி, பலாச்சுளையைக் கடுவன் (ஆண்குரங்கு) மந்தியின் (பெண் குரங்கின்) வாயில் கொடுத்துப் பாதுகாக்கும் சிலம்ப! (மலையை உடையவனே!) தலைவியின் மனம் நெகிழும்படி இனிய வாய்மொழிகளை அவளிடம் நீயே சென்று சொல்வாயாக எனக் கூறி மறுத்தனள்.

[உட்கோள் :—கடுவன் மந்தியை மகிழ்வித்தது போல உன் வார்த்தைகளை அவளிடம் நீயே கூறி அவளை மகிழ்விப்பாயாக என்பது உள்ளுறை உவமம்.]

11. குலமுறை கூறி மறுத்தல் [100. தெங்கம் பழம்]

நீயே கூறு எனச் சொல்லக் கேட்ட தலைமகன் இது வரை என் குறையை முடித்துத் தருவேன் என்று *உடம்பட்ட தோழி இப்போது என்னிடம் நின் குறையை நீயே முடித்துக்கொள் என்கிறாளே என ஆற்றாது நிற்ப, அவனை ஆற்றுவிப்பது காரணமாக நீர் பெரியீர், யாம் சிறியேம் எனக் குலமுறை கூறித் தோழி மறுத்தனள். (நீர் தொழத்தக்க உயர்ந்த குலத்துள்ளீர், நாங்கள் இழி குலத்தவர் என்றபடி)

12. நகையாடி மறுத்தல் [101. சிலையொன்று]

குலமுறை கிளத்தலால் தோழி மறுத்துக் கூறியவாறன்று என உட்கொண்டு தலைமகன் மகிழ்ந்து நிற்ப, "எம் ஐயன்மார் எய்த கணை ஒரு பெரிய யானையின் முகத்தை உருவிச் சென்று மண்ணில் குளித்துப் புதையும்; அவ்வாறன்றி இந்தத் தலைவர் ஒரு மான்மேல் எய்த அம்புடன் அந்த மான் விரைந்து ஓடி விட்டது. ஆதலால் இவர் கையில் இருந்த வில் கொலைத் தொழிலில் மிக்க திண்ணியது தான்!" என்று கூறித் தோழி நகையாடினள்.

---

* *91, 93* ஆம் பாடல்கள் பார்க்க.

13. இரக்கத்தொடு மறுத்தல் [102. மைத்தழை]

தோழி நகையாடுவதைக் கண்ட தலைவன் இவள் என்னுடன் நகையாடுவது தழை வாங்குதற் பொருட்டு என உட்கொண்டு நிற்ப, பின்னும் தழை ஏலாது, இவர் கையில் தழையேந்திக், கையில் வில்லில்லாமலே யானை வந்ததா? எனக் கேட்கின்றனர். பித்தர் போலும் இப் பெரியார்! என்ன பாவம் இது! எனத் தோழி இரக்கத் துடன் கூறித் தழையை ஏலாது மறுத்தனள்.

14. சிறப்பின்மை கூறி மறுத்தல் [103. அக்கும்]

என் வருத்தத்துக்கு இவள் கவலைப்படுகின்றா ளாதலின் என் எண்ணத்தை இவள் முடித்து வைப்பாள் எனக் கருதித் தலைமகன் பின்னும் நிற்பத், தோழி சிலம்பா! இக்குன்றிலுள்ள மாமரங்களும், சுனைகளும் குளிர்ந்த தளிர்களையும், நல்ல மலர்களையும் எக்காலத்தும் விரிந்தறியாத தன்மையன; (இந்த மலையிடத்துத்) தலைவி தோன்றின நாள் தொடங்கி இவள் மேனியின் நிறத் துக்குப் பயந்து மாமரங்களும் தளிர் ஈன்று அறியா. சுனைகளும் மலர்கள் ஈன்றறியா ஆதலால் இந் நிலத்து இல்லாதவற்றை நாங்கள் ஏற்றால் பலர்க்கும் வினவு வதற்கு இடமாகும். ஆதலால் தழை வேண்டாமெனச் சிறப்பின்மை கூறி மறுத்தனள்.

15. இளமைகூறி மறுத்தல் [104. உருகுதலை]

சிறப்பின்மை கூறித் தோழி மறுத்தனளே ஒழிய, வேறு காரணம் இல்லையென நினைத்துத் தலைவன் சிறப்பு உடைய தழைகொண்டு செல்ல அது கண்டு "எமது பெருந்துறைப் பிள்ளையாம் தலைவியின் குழல்கள் முடிக்கப்படா; முலைகள் தோன்றா; அவள் மொழி குதலைச் சின்மொழி; அப்படி இருக்க, நீ அவளிடம் சொல்லுவது யாதாம்! சிறிதும் பொருத்தமில்லை" என்று தலைவியின் இளமை கூறித் தோழி தழை வாங்க மறுத்தனள்.

16. மறைத்தமை கூறி நகைத்துரைத்தல் [105. பண்டால்]

வேறு காரணம் சொல்லி மறுத்து இப்பொழுது தலைவி இளையள் என்று இயையாமை கூறி மறுக்க வேண்டியது என்ன காரணம்? இனி இவ் ஒழுக்கம் இவளை (தோழியை) விட்டு நான் வேறு வகையில் என் எண்ணத்தை முடிப்பேன் என உட்கொண்டு தலைவன் நிற்க, இனி நீ என்னை மறைப்பின் கருதியது முடியும் முறைமை (வழி) இல்லைபோலும் (காரியம் முடிக்கை அரிது) என்று கூறித் தோழி நகைத்து உரைத்தாள்.

17. நகை கண்டு மகிழ்தல் [106. மத்தகஞ்]

இவளை (தோழியை) ஒழிய ஒழுகக் கடவேன் என்று தலைமகன் தன் மனத்திற் குறித்த குறிப்பைத் தோழி அறிந்து நகைக்க, அவளது (தன்னை மறைத்தால் முடியாது, மறையா விட்டால் முடியும் என்பதை) உள்ளக் கருத்தை நான் அறிந்து இவள் மறுத்தாளாயினும் நம் மாட்டு மலர்ந்த முகத்தினளாய் இருப்பதால் தோழியை நோக்கி "உனது முகமாகிய மதியின்கண் உண்டாகிய மெல்லிய நோக்கந்தான் எனக்குச் சிறந்த துணை ஆகும் அதனால் ஆற்றத் தகும்" என்று தலைவன் மகிழ்ச்சியுடன் கூறினன்.

18. அறியாள் போன்று நினைவு கேட்டல் [107. விண் இறந்தார்]

தலைமகனது மகிழ்ச்சியைக் கண்ட தோழி, இவன் வாடாமல் தழையை வாங்குவேன் என உட்கொண்டு "எம் பெருமானது திருக்கழுக்குன்றத்துச் சந்தனச் சோலையில் பந்தாடுகின்ற எனது தோழியர் எண்ணிறந்த பேர் உண்டு, மன்னனே! அவருள் யார் கண்ணதோ? நினது அருள் கூறுவாயாக" எனத் தலைவனைக் கேட்டனள்.

19. அவயவம் கூறல் [108. குவவின]

தோழி அங்ஙனம் கேட்க, அவளை (தலைவியை) இவள் (தோழி) அறிந்திலள்; அறிந்தாளாயின் தழைஐய வாங்கு வாள்; என உட்கொண்ட தலைவன், தன்னால் கருதப் பட்டாளுக்கு அவயவம் இவை எனத் தோழிக்கு விளக்க வேண்டித் "தலைவியின் குவிந்த கொங்கை குரும்பையை ஒக்கும்; குழல் கொன்றைப் பழத்தை ஒக்கும்; செவ்வாய் கொவ்வைக் கனியை ஒக்கும்; அவளுடைய வாள் நகை (பற்கள்) வெண்முத்தை ஒக்கும்; கண்மலர் செங்கழு நீரை ஒக்கும்; ஒளி முகம் உவவின் மதிபோல் (பூரண நிலவு போல்) ஒளிரும்; என்னால் காதலிக்கப்பட்டவளுக்கு அவய வங்கள் இவ்வாறு இருக்கும். இப்படிக்கு அவயவங்களை உடையாளையும், அல்லாதாரையும் உன்னால் கண்டு கொள்ள முடியாதோ" எனத் தோழிக்குக் கூறினான்.

20. கண்ணயந் துரைத்தல் [109. ஈசற்கு]

அங்ஙனம் தலைவியின் அவயவ இலக்கணங்களைக் கூறிய தலைவன், அத்துடன் அமையாது அன்று தனக்கு இத் தோழியைத் தனது கண்ணால் காட்டின தலைவியின் கண்ணை நினைந்து, அக்கண்ணால் தான் பெரிதும் இடர்ப் பட்டான் ஆதலின் கண்மலர் செங்கழுநீர் என்று தான் கூறினது அமையாது ஆதலின், பின்னும் அக் கண்ணை நினைந்து,—"ஈசனிடம் யான் வைத்த அன்பு போல அகன்று, ஈசனால் வாங்கப்பட்ட எனது பாசம் போலக் கறுத்து, அவனது தில்லையின் ஒளியை ஒத்து, அவன் (சிவந்த) தோள்களில் பூசியுள்ள அத் திருநீறு போல வெளுத்து, அவனுடைய பூப்போலும் திருவடிகளைப் புகழ்ந்து யாம் பேசும் அத்திரு வார்த்தை போல மிகவும் நீண்டு இருக்கும்; என்னால் காணப்பட்டவ ளுடைய பெரிய கண்கள்" எனப் பின்னும் தலைவன் விளக்கமுறக் கூறினான்.

•

விளக்கம்:—இவை கண்ணின் இலக்கணம் காட்டிய வாறும். அவ்விலக்கணம் பின் வருமாறு:—

''கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின்
வெண்மை, கருமை, செம்மை, அகலம்
நீளம், ஒளியென நிகழ்த்துவர் புலவர்''

இவ்விலக்கணப்படி செம்மை கண்டிலேம் என்பதற்குச் செம்மையும் கூறிற்றும். எங்ஙனம் எனில் அவன் தோளில் பூசத் திருநீறு என்றதனுல் சிவப்பும் சொல்லிய தாயிற்று. (அவன் ''சிவனெனும் நாமந் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்'' ஆதலின்.)

['யான்' பேசத் திருவார்த்தை என்னது 'யாம்' என்றது என்னேயோ எனில் திருவார்த்தை பேசும் அன்பர் பலர் ஆகலான் 'யாம்' என்று பலராகக் கூறினர்.]

21. தழை யெதிர்தல். [110. தோலாக்கரி]

தலைவன் இங்ஙனம் தலைவியின் கண்களை விளக்கியதைக் கேட்ட தோழி, ''எம்மை ஏதம் செய்ய வந்த யானையை நீ வென்றதை நினைத்தும், யான் பலமுறை மறுத்தும் போகாது, பேரன்பினை உடையவனாய் நீ விடாது துவண்ட துவட்சியை நினைத்தும் தழையை வாங்குவேம், அல்லது, எமது குடியின் பழமைக்கு இயலாத இயல்பை உடையது இத்தழையை ஏற்பது'' என்று கூறி மறுப்பது நியாயம் அன்று அதனுல் நீ அவளுக்குத் தந்த கொய் தழையை ஏற்கிறேம். (நீ செய்த உதவியைப்பற்றி அல்லது ஏலேம் என்றவாறு.)

22. குறிப்பறிதல். [111. கழை காண்டலும்]

தலைவன் மாட்டுத் தழையை ஏற்றுக்கொள்வேன் என்ற தோழி, தலைவிக்குத் தெற்றெனக் கூறுவேனுயின் அவள் மறுக்கவும் கூடும் என உட்கொண்டு ''இதுவரை தழை ஏலாமைக்குத் தக்க பொய் சொல்லி மறுத்தேன்; இனித் தலைவனுக்கு வருத்தம் தரக்கூடிய நோக்கத்தைக் கண்டபின் என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவளிடம் இனிப் பொய் சொல்லும் நெறி அறிகின்றிலேன்'' என்று கூறித் தழை ஏற்கத், தலைவியினுடைய குறிப்பைத் தோழி அறிய விரும்பினள்.

23. குறிப்பறிந்து கூறல் [112. தவளத்த]

அங்ஙனம் விரும்பின தோழி யானையைக் கடிந்து பேருதவி செய்தவருடைய கையில் தழைதுவளத்தகுமோ. அது துவளாமல் நாம் அவரது குறையை முடிக்க வேண்டாவோ என்று பக்குவமாகத் தலைவியினிடம் தோழி கூறினள்.

24. வருத்துரைத்தல் [113. ஏறும் பழி]

இங்ஙனம் தோழி கூறியும் தலைவி பெரு நாணாளாதலின் தழையை வாங்காது நிற்ப, அக்குறிப்பு அறிந்து ''இரு வகையாலும் நமக்குப் பழி வரும். எங்ஙனம் எனில் தழை ஏற்பின் நாமே ஒரு நட்புச் செய்தோம் என்ற பழி வரும். தழையை ஏலாவிடின் வேறுவழி காணாது தலைவன் மடல்மா ஏறும் பழி நமக்கு வந்து சேரும். தழையை ஏற்றால் அதனால் வரும் பழி அறத்தொடு நிற்றல் முதலாய வழியால் தீர்க்கலாம். ஏலாவிடின் தலைவன் மடல்மா ஏறும் பழியை நம்மால் எவ்வகையாலும் தீர்க்க முடியாது. ஆதலால் தழை ஏற்பதே தக்கது என்று தோழி தலைவிக்கு வகுத்துரைத்து நாம் புனங்காத்த போது நம்மை நோக்கி வந்த மலை போலும் யானையைத் தொலைத்த அவருக்கு யாம் செய்வது என்னே அதனை அறிகின்றிலேன், என்று தோழி கூறினள்.

25. தழையேற்பித்தல். [114. தேவ்வரை]

அங்ஙனம் தோழி தன்னிடம் கூறக் கேட்ட தலைவி தழை ஏற்பதே நன்று என்று உட்கொண்டு நிற்ப, அக் குறிப்பறிந்து தோழி ''நம்மாட்டுத் தலைவன் வைத்த அன்பால் இம்மலைக்கண் தலைவன் எளிதாகக் கொண்டு வந்து தந்த இத்தழை வளவியு கயிலைமலையிடத்து அல்லது

பிறிதோரிடத்தில் இல்லை. ஆதலால் இத்தழையைக் கொள்வாயாக'' என்று கூறித் தழையைத் தலைவியிடம் கொடுத்தாள்.

26. தழை விருப்புரைத்தல் [115. பாசத்தளை]

தழையைக் கொடுத்தபின் தோழி தலைவனிடம் சென்று ''நீ தந்த தழையை நான் தலைவியிடம் கொடுத்தேன். அங்ஙனம் கொடுப்ப அங்கு நிகழ்ந்ததைச் சொல்வேனாயின் பெருகும். சுருங்கச் சொல்லின் அத் தழையை அவள் அரைத்துப் பூசிக்கொள்ளவில்லையே ஒழிய வேறு செய்யாதனவில்லை'' என்று தலைமகளுக்கு அத்தழைமீது இருந்த விருப்பத்தைத் தலைவனுக்கு எடுத்துக் கூறினள்.

குறிப்பு :- 'கஉ. சேட்படை' என்னும் இவ்வதிகாரம் 1. தழைகொண்டு சேறல் முதலான 26 துறைகளைக்கொண்டு முடிகின்றது.

கரு பகற்குறி

தலைமகளைத் தழை ஏற்பித்த தோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கண் சேர்ப்பித்தல்.

1. குறியிடங் கூறல் [116. வான் உழை]

தலைவி தழை விரும்பினதைத் தலைவனிடம் கூறிய தோழி ''தலைவி விளையாடுமிடத்து ஒரு கரிய பொழில் கதிரவன் நுழையா இருளாய் உள்ளது. அப்பொழிலின் நடுவில் ஒரு பளிங்குப் பாறை இருக்கின்றது. அங்கு நட்சத்திரங்கள்போலச் சுரபுன்னை மலர்கள் விளங்கி நிற்கும். அப் பளிங்குப் பாறை சந்திரன் தன் வானிடத்து வாழ்வைவிட்டு அக்கானிடத்து வாழ்தலை விரும்புதல் போலத் தனது எழிலைப் புலப்படுத்தும். அவ்

விடுத்து வருவாயாக'' என்று தலைவனுக்குத் தோழி குறியிடம் கூறினள்.

2. ஆடிடம் படர்தல் [117. புயல்வளர்]

தலைமகனுக்குக் குறியிடம் கூறினபின் தோழி தலைவியிடம் சென்று ''நாம் திருவம்பல நாதனுடைய மலையிற் குளிர்ந்த புனத்தின்கண் உயர்ந்த சுரபுன்னை மரத்தில் தொடுத்துள்ள ஊசலில் விளையாடிப், பின் போய் அதற்கு அயலில் உள்ள குன்றில் நின்று வரும் அருவியில் விளையாடுவோம் நீ வருவாயாக'' என்று தலைவியிடம் கூறி ஆடிடத்திற்குத் தலைவியுடன் சென்றனள்.

3. குறியிடத்துக் கொண்டு சேறல் [118. தினைவளம்]

ஆடிடம் சென்ற தோழி தலைவனுக்குத் தான் சொன்ன குறியிடத்துத் தலைவியைக் கொண்டு சென்று சேர்க்கும் பொழுது ஆயத்தாரைத் தம்மிடத்தினின்றும் நீக்க வேண்டுதலின் தினைகாத்தல் முதலாய விளையாட்டுக்களைத் தான் கூறவே *அவ்வவ் விளையாட்டுக்கு உரியவர் தலைவி அவ்வவ்விடங்களிலே வருவாளென்று கருதித் தோழி சொன்ன வகையே அவ்வவ் விளையாட்டு விருப்பினால் எல்லாரும் பிரிவர். இங்ஙனம் ஆய வெள்ளத்தைப் பிரிந்து தமியளாகி நின்ற தலைவியுடன், நாம் போய் மயிலாடுதலைக் காண்போம் எனக் கூறி, குறியிடத்துக்குத் தலைவியுடன் தோழி சென்றாள்.

4. இடத்துய்த்து நீங்கல். [119. நரல்வேயின]

குறியிடங் கொண்டு சென்ற தோழி, ''யான் அவ் விடத்துச் சென்று நின் குழற்குப் பூக்கொய்து வருவேன்;

---

* அவ்விளையாட்டுக்களாவன :- 1. தினைவளங் காத்தல் 2. சிலம்பில் கூவி எதிரழைத்தல் 3. சுனைப்புனலில் பாய்ந்து விளையாடுதல் 4. மலர்க்கொய்தல்.

அவ்விடம் வேய் முத்துதிர்தலான் நினது மெல்லடிக்குத் தகாதாதலான் நீ என்னோடு வாராது இங்கே நின்று பூக்கொய்வாயாக'' வெனத் தலைமகளைக் குறியிடத்து நிறுத்தித் தான் நீங்கினள்.

5. உவந்துரைத்தல் [120. படமா]

இங்ஙனம் தோழி, தலைவியைக் குறியிடத்து நிறுத்தி நீங்கினவுடன் தலைவன் வந்து தலைவியை எதிர்ப்பட்டு ''இப்பளிங்குப் பாறையைப் படத்தை உடைய பாம்பாகிய பள்ளியாக்கி என்னை அப் பாம்புப் பள்ளியில் தங்கும் திருமால் என்று நீ நினைத்தோ அல்லது திருமாலின் மார்பிலன்றித் தாமரையிலும் இருத்தலால் நான் உன்னை விட்டு நீங்கினும் என் இதய தாமரைப் பூவையே உனக்கு இடமாக இருக்க நினைத்தோ நீ இந்தப் பொழிலிடத்து வந்து நிற்கின்றாய்'' எனத் தலைவியை உவந்து உரைத்தான்.

6. மருங்கணைதல். [121. தோத்தீன்மலர்]

அங்ஙனம் தலைவன் உவந்துரைப்பக் கேட்ட தலைவி பெருநாணினள் ஆதலின் தன் கண் புதைத்து ஒரு கொடியின்கண் நாணத்துடன் மறைந்து நிற்க அவளது இடை அடர்ப்புண்ணக் கண்ட தலைவன் பித்தை உடையீர்! ஏ 'பணைமுலைகாள்! நீர் இன்னும் பெருக்கின்றது என்னுக்கு? இது நன்றன்று,'' என்று கூறி தான் ஆதரவு உரைத்து அம்முலைகளை முனிந்து அவளது இடையைத் தாங்குவானாய் அவள் மருங்கு சென்று அவளை அணைத்து நின்றான்.

7. பாங்கி யறிவுரைத்தல் [122. அளிநீடு]

அங்ஙனம் தலைவியின் மருங்கு அணைந்த தலைவன் தலைவியை நோக்கி ''உன் கூந்தலில் இட்ட பூவும் நீ அணிந்துள்ள அணிகளும், கூந்தலில் நீ சுற்றி வைத்துள்ள மாலையும் எல்லாம் முன்போல் இருக்

கின்றனை'' எனக் கூறித் தலைவியைக் கோலஞ் செய்து ''இவை நின் தோழி செய்த கோலமே, நான் பிறிதோர் கோலம் செய்தேனென்று நீ கலங்க வேண்டாம்.'' எனச் சொல்லித் தான் தலைவியுடன் கூடியதைத் தோழி அறிந்தமையைத் தலைவிக்கு உரைத்தனன்.

8. உண்மகிழ்ந் துரைத்தல். [123. செழுநீர்]

அங்ஙனம் தலைவன் தங்கள் கூட்டத்தைத் தோழிக்கு அறிவித்தனன் என அறிந்த தலைவி இனி நமக்கொரு குறை இல்லை என உண்மகிழ்ந்து முகம் மலரா நிற்ப, அம்முகமலர்ச்சியைக் கண்ட தலைவன் தலைவியைக் கழுநீர் மலராகவும், தான் அம் மலரில் உள்ள தேனைப் பருகும் வண்டாகவும் புனைந்து தன்னுள் மகிழ்ந்து கூறினன்.

9. ஆயத்துய்த்தல் [124. கொழுந்தாரகை]

அங்ஙனம் மகிழ்ந்து கூறின தலைவன் நட்சத்திரங் களாகிய முகைகளையும் மேகமாகிய பச்சை இலையையும் உடைய விண்ணாகிய மடுவின்கண் எழுந்து நிறைந்த மதியாகிய வெண்டாமரைப்பூ தனது எழிலைப் புலப்படுத் தினமை போல நீ சென்று பொழிலில் விளையாடுகின்ற உன் ஆயத்துடன் உன் பொலிவு விளங்க இனிச் சேர்ந்து விளையாடுவாயாக என்று கூறித் தலைவியை ஆயத்துக்குச் செல்லச் செலுத்தினன்.

10. தோழிவந்து கூடல் [125. பொன்னையான்]

இங்ஙனம் தலைமகனைப் பிரிந்த தலைவி பூக்கொய்யா நின்றாளாகப் பிரிவாற்றாமையானும் பெருநாணினானுந் தடுமாறி மொட்டுக்களைப் பறியாநிற்ப, 'யானின்குழற் காம் பூக்கொண்டு வந்தேன், நீ விரல் வருந்த மொட்டுக்களைப் பறிக்க வேண்டா' எனக் கூறித் தோழி வந்து அவளிடம் சேர்ந்தாள்.

11. ஆடிடம் புகுதல் [126. அறுகால்]

அங்ஙனம் சேர்ந்த தோழி "அழகான நல்ல மணம் பொருந்திய பூங்கொத்துக்களை ஐம்பால் வகுத்த உனது கூந்தலிலே நிறைய அணிந்தேன். சிறிய தென்றல் வீசும் உன் இடை தளர்ந்து வருந்தாதபடி உன் பழைய ஆயக் கூட்டத்தாரிடத்தே நீ மெல்லச் சென்று சேர்வாயாக" எனக் கூறித் தலைவியுடன் ஆடிடம் புகுந்தனள்.

12. தனிகண்டுரைத்தல் [127. தழங்கும்]

தலைவியை ஆயத்துய்த்த தோழி தலைவனைத் தனியாகக் கண்டு, "அருவியை உடைய இதே எம்முடைய சீறூர். இதன்கண் யாம் அருந்தும் தேனையும் கிழங்கையும் நீ அருந்தி இன்று எம்மூர் தங்கி, குன்றத்தினர் விளையாடும் குரவைக் கூத்தை இன்று இரவு கண்டு நாளை உன் நகர்க்கு ஏகுவாயாக," என்று உலகியல் கூறுவாள் போன்று வரைவு (திருமணம்) பயப்பக் கூறினள்.

13. பருவங் கூறி வரவு விலக்கல். [128. தள்ளி]

இங்ஙனம் உலகியல் கூறுவாள் போன்று குறிப்பால் திருமணத்தைத் தலைமகனுக்கு உணர்த்திய தோழி, "தலைவ! தலைவியுடைய இடையை அவளுடைய அழகிய முலைகள் வளர்கின்றபடியால் வருத்துவன போன்றன. ஆகையால் கடுக அவளைத் திருமணம் செய்து கொள்வாயாக," எனத் தலைவியின் பருவங் கூறித் தலைவன் வரவைத் தோழி விலக்கினள்.

14. வரைவுடம்படாது மிகுத்துக்கூறல். [129. மாடம்செய்]

இங்ஙனம் தன் வரவைத்தோழி விலக்கக் கேட்ட தலைவன் "தெய்வலோகத்திலுள்ள பெண்களும் இத்தலைவிக்கு ஒப்பு அல்லர் என்னும்படி, தாமரைப் பூவைத்தனது நிலை பெற்ற பீடமாகக் கொண்டிருக்கின்ற பிரமனாலே பெறப்

பட்ட இத் தலைவியை இம் மலையில் வாழும் கொடிச்சி என்றோ நீ சொல்வது. அங்ஙனம் சொல்லற்பாலையல்லை எனத் தலைவன் திருமணத்திற்கு உடன்படாது தலைவியை விசேடித்துக் கூறினான்.

15. உண்மை கூறிவரைவு கடாதல் [130. வேய்தந்த]

திருமணத்துக்கு உடன்படாது தலைவியை விசேடித்துக் கூறிய தலைமகனிடம் "எமக்குத் தாயுந்தந்தையுமாய்த் தன் திருவடிக்கு எனக்கு அன்பைத் தந்து என்னை அடிமை கொண்டவராயுள்ள அம்பலவர் மலையில் என்னுடைய தாயும் தந்தையும் கானவரே (குறவரே) எங்கள் தொழில் தினைகாவல்; ஆதலால் உனக்கு வரைவு வேண்டாமென்றிருந்தால் நீ ஒன்றும் புனைந்து கூற வேண்டாம்" என்று தோழி தலைவனிடம் உண்மையைக் கூறி வரைவு கடாவா நின்றாள்.

16. வருத்தங் கூறி வரைவு கடாதல் [131. மன்னுந்திரு]

"அங்ஙனம் உண்மை கூறிய, 'நீர்' வரையாவிடின் தலைவி வருந்துவள். ஆனால், 'நீர்' வரைவு என்று நினைப்பதற்கே மனம் தளர்ந்து வாடுகின்றீர். இவ்வாறு உங்கள் இருவரின் உள்ளம் மாறுபட நிகழ்தலால் 'நான்' (சிவபிரானுடைய திருவடியைப் போற்றாதவரின் அறிவு போல) தனிமையுற்று வருந்துகின்றேன்" என்று தோழி தலைவனிடம் மனம் குழைந்து கூறி வரைவு கடாவினாள்.

17. நாயச்சம் கூறி வரைவு கடாதல் [132. பனித்துண்டம்]

அங்ஙனம் மனம் குழைந்து கூறின தோழி "சிலம்பா தலைவியின் கதிர் முலைகளின் ஒருப்பாட்டைக் கண்டு எம் அன்னை நெஞ்சழிந்து தலைவியின் சிற்றிடைக்கு இனி ஒரு பற்று (ஆதாரம்) கண்டிலம், என்று அஞ்சுகின்றாள். (ஆதலால் கடுக வரைந்து கொள்வாயாக) என்று தலைவனிடம் கூறி வரைவு கடாவினாள்.

இளமைப் பருவம் புகுந்தமையால் மகட் கூறு வார்க்கு அன்னை மாருது கொடுக்கும்; நீ அதற்கு முற்பட வரைந்துகொள்ள வேண்டும் என்றது

18. இற்செறிவு அறிவித்து வரைவு கடாதல்

[133. ஈ விளையாட]

இங்ஙனம் கூறிய தோழி எம் அன்னை தலைவியை உற்று நோக்கி, நீ திருமலைக்கப்புறம் போய் விளையாட வேண்டாம் என்று கூறினுள். இனி இற்செறிப்பாள் போலும் என்று தலைவனிடம் உரைத்து வரைவு கடாவினள்.

19. தமர் நினைவுரைத்து வரைவு கடாதல்.

[134. சுற்றுஞ்சடை]

தலைவியை இற்செறிப்பாள் எனக் கூறிய தோழி "முலை தாங்க கில்லாது தலைவியின் இடை வருந்துதலைக் கண்டு தலைவியைத் தமர் இற்செறிப்பார் மற்றும் இந்தச் சீறூரில் பேசப்படும் பெரிய வார்த்தைகள் பழிச் சொற்கள் சில பலவுளவாகும். அயலவரும் மகட்பேச நினையா நின்ரு" ரெனத் தமர் நினைவுரைத்து வரைவு கடாவா நிற்பர் எனத் தலைவனிடம் கூறி வரைவு கடாவினள்.

20. எதிர் கோள்கூறி வரைவு கடாதல். [135. வழியும்அது]

அங்ஙனம் தமர் நினைவுரைத்து வரைவுகடாய தோழி,

"தலைவியை அடைவதற்கு வழி அவளை மணந்து கொள்வதே, அன்னையும் என்னைப் போல மகிழ்வாள். எந்தையும் உன் தகுதி நோக்கி உன் மொழியைக் கடவாது அதன் வழியே நிற்கும். சுற்றத்தாரும் நின் வசப்படுவார். அயலவரும் நின் வரவை எதிர்கொள்வர். பல சொல்லுவானேன் திருக்குற்ருலத்துள்ளார் அறிய

உம்மதே தலைவியின் பணைத்தோள் ஐயுற வேண்டாம். இனி பல நினையாது பலரும் அறிய வரைவொடு வருவாயாக,'' என எதிர்கோள் கூறி வரைவு கடாவா நின்றாள்.

21. ஏறுகோள் கூறி வரைவு கடாதல்

[136. படையார்கருங்கண்ணி]

* அங்ஙனம் எதிர்கோள் கூறி வரைவுகடாய தோழி, ''எம்முடைய ஐயன்மார் அவளுடைய முலையின் பெருமையும் இடையின் சிறுமையும் கண்டு எம்மூர்க்கண் விடையின் மருப்பைத் திருத்தி விட்டார்; அந்த விடை சிவபிரான் வாகனமாகிய ஏறு போன்றது. இனி அடுப்பன அறியேன்,'' என ஏறுகோள் கூறி வரைவு கடாவா நின்றாள்.

22. அயலுரையுரைத்து வரைவு கடாதல் [137. உருப்பனை]

ஏறுகோள் கூறி வரைவுகடாய தோழி, ''அயலவர் நாளைப் பொன்புனையப் புகுதா நின்றார்; இதற்குத் தீவினையேன் சொல்லுவ தென்னே'' வெனத்தான் முன்னிலைப் புறமொழியாக (சிறைப் புறமாக) தலைவனிடம் அயலுரை யுரைத்து வரைவு கடாவா நின்றாள்.

23. தினைமுதிர் வுரைத்து வரைவு கடாதல்

[138. மாதிடம்கொண்ட]

அங்ஙனம் அயலுரை யுரைத்து வரைவு கடாய தோழி கயிலாயத்தின் பக்க மலையிலுள்ள பொன் போன்று மலர்களையுடைய வேங்கை, புனத்தில் தினை

---

*இப்பாட்டு முல்லைத்திணை யாகலின், அந்த முல்லைத் திணைக்கு மரபாவது, ஓரிடத்தொரு பெண்பிறந்தால் அப் பெண்ணைப் பெற்றவர் தந்தொழுவில் அன்று பிறந்த சேங் கன்றுகளை யெல்லாம் தன்னூட்டியாக விட்டு வளர்த்து அப் பரிசினால் வளர்ந்த ஏற்றைத் தழுவினானொருவனுக்கு அப் பெண்ணைக் கொடுத்தல் மரபென்க.

கொய்யுங்களென்று பொன்னையொத்தமலர்களைச் சிதறித் தனது தேனைப் பூத்த இடம் சொரிய நின்று'' சோதிடம் சொல்லிற்று. இங்ஙனம் சோதிடம் சொல்லி அஃது எம்மைக் கெடுத்தது.

இனி நமக்கு ஏனல் விளையாட்டில்லை யெனச் சிறைப்புறமாகத் தலைமகளோடு கூறுவாள் போன்று, தினைமுதிர்வுரைத்து வரைவு கடவா நின்றாள்.

24. பகல் வரல் விலக்கி வரைவு கடாதல்
[139. வடிவார்வயல்]

சிறைப்புறமாகத் தினைமுதிர் வுரைத்து வரைவு கடாய தோழி தலைவனை எதிர்ப்பட்டு நின்று, 'இப் பெருங்கணியார் (பெரிய சோதிடர்)நமக்கு நோவு தகரப் பருவஞ் சொல்லுவாராயிருந்தார்; எம்மையன்மார் இவர் சொல் கேட்டு இத்தினையைத் தடிவராயிருந்தார்; எமக்கும் இனித் தினைப்புனங்காவலில்லை; நீரினிப் பகலில் வர வேண்டா'வெனப் பகல்வரவு விலக்கி வரைவு கடாவா நின்றாள்.

25. தினையொடு வெறுத்து வரைவு கடாதல்
[140. நினைவித்து]

தலைவனிடம் பகல் வரவு விலக்கி வரைவு கடாய தோழி ''பொதியின் மலைக்கண் உளனாகிய பொருப்பன் மேல்வைத்த விருப்பினால் தினைவித்தி, அதனைக் காத்து, உள்ளம் மலிந்து நின்ற எங்களுக்கு, அத்தினையை வித்திக் காத்த காவல் போய்த் தீவினையை வித்தி அதனைக் காத்து அதன் விளைவையும் உண்டதாகி முடிந்தது'' என்று சிறைப்புறமாகந் தினையொடு வெறுத்து வரைவு கடாவா நின்றாள்.

26. வேங்கையொடு வெறுத்து வரைவு கடாதல்
[141. கனைகடல்]

தினையொடு வெறுத்து வரைவுகடாய தோழி, 'கயிலை மயில் அனையவளே! இவ்வேங்கை யரும்பிய ஞான்றே

அரும்பறக் கொய்தோமாயின், இன்று நம்மைக் கெடுப்பான் வேண்டி இந்தக் கணி (வேங்கை) இத்தினை கொய முயலுமாறு முண்டோ? யாமது செய்யப் பெற்றிலேம் என்று வேங்கையொடு வெறுத்து அவ்வேங் கையை இழித்துக்கூறித் தோழி வரைவு கடாவா நின்ருள்.

27. இரக்கம் உற்று வரைவு கடாதல் [142. வழுவாஇயல்]

வேங்கையொடு வெறுத்து வரைவுகடாய தோழி, 'விதைக்கும் பருவத்தும் கொய்யும் பருவத்தும் வழுவாது செய்யும் இயல்பையுடைய எம் தமராகிய மலையர் விதைப்ப யாம் வளர்த்த தினைக் கதிர்கள் எல்லாம், (திருச்சிற்றம் பலவரைச் சென்று நின்று தொழுவார் வினை அவர் மாட்டு நின்ருல்) இப்புனத்தில் நிற்கும், எவ்வாறு அவ்வினை நில்லாதோ அவ்வாறு அக்கதிர்களும் நில்லா ஆயின' என்று சிறைப்புறமாகத் தலைவன் மாட்டு இரக்க முற்றுத் தோழி வரைவு கடாவா நின்ருள்.

28. கொய்தமை கூறி வரைவு கடாதல் [143. பொருப்பர்க்கு]

அங்ஙனம் தலைவன் மாட்டு இரக்கமுற்று உரைத்த தோழி, ''அம்பலவரின் அன்பர்களுடைய கரு (பிறவி) பற்று விட்டது போலக் காவலில் இருந்த இப்புனம் இப்பொழுது கொய்யப்பட்டுத்தொடர்பற்று நிற்கின்றது. அதனுல் எமக்கு இப்புனங் காவல் இனி இல்லை. உமக்கு யாம் அறிவு சொல்கின்றேம் அல்லேம். நீரே அறிவீர்'' எனத் தலைவனிடம் தினை கொய்தமை கூறி வரைவு கடாவா நின்ருள்.

29. பிரிவு அருமை கூறி வரைவு கடாதல் [144. பரிவுசெய்து]

தினை கொய்தமை கூறி வரைவுகடாய தோழி, ''இப் புனத்தில் உண்டாய தினையைக் கொய்த பின்பும் கொய்யப்பட்ட தினையின் தாளில் இளங்கிளிகள் வந்து நிற்கின்றன. இச்செய்கை 'பேயோடாயினும் பிரிவு அரிது என்னும் உண்மையைக் காட்டுகின்றது.''

என்று மறைப்புறமாக சிறைப்புறத்தேக் கூறித் தோழி வரைவு கடாவா நின்றாள்.

30. மயிலொடு கூறி வரைவு கடாதல் [145. கணியார்]

பிரிவு அருமை கூறி வரைவு கடாய தோழி, 'கணியார் கருத்து இன்று முடிந்தது. நாங்கள் போகின்றோம். புனமே பொழில்களே! வேங்கையொடு சேர்ந்தீராயின் நீர் எம்மை மறப்பீர். கயிலையினின்று வந்த மயில்காள்! வேலேந்தித் தனியாக வரும் அவர் (தலைவர்) வந்தால் அன்புடைய நாங்கள் துணியாதன துணிந்தோம். (பிரிந்திருக்கத் துணிந்தோம்) என்று அவருக்குச் சொல்லுங்கள்'' என மயிலொடு கூறி வரைவு கடாவா நின்றாள்.

31. வறும்புனங் கண்டு வருந்தல் [146. போதுவினில்]

அங்ஙனம் கூறித் தோழி புனங்காவலை விட்டுப் போன பின்பு தலைவியை நாடி வந்த தலைவன் புனத்திடை வந்து, ''யான் முன்பு பயின்ற இடமேயாயின் இந்த இடம் ஏன் இவ்வாறு இருக்கின்றது! பெரிய பொழிலே! நுமக்குத்தான் இன்று வந்தது யாது? இப்பெரிய! புனம் அருவியாய் விழும் மதுவின்கண் (தேனில்) அதன் சுவையை மாற்றும். கைப்பாகிய (கசப்பாகிய) சுவையை வைத்ததுபோல் இருக்கின்றது'' என்று கூறி வறும்புனத்தைக் கண்டு மெய்யுற்று வருந்தினன்.

32. பதி நோக்கி வருந்தல் [147. ஆனந்தமாக் கடல்]

இவ்வாறு வறும் புனத்திலே வருந்தி நின்ற தலைவன் 'பொன்னினுடைய (தலைவியினுடைய) மலைக்கண் உள்ள சீறூர் இது; இவ்வாறு ஊர் அணித்தாயினும் எம்மால் செய்யலாவ தொன்றில்லை; வானின்கண் செல்லும் பெரிய சந்திரனைப் பெறவேண்டி அழுகின்ற குழந்தையைப் போல எய்துவதற்கு அரிய தலைவியை விரும்பி

நல்ல நெஞ்சமே! நீயும் தளர்ந்தனை, நானும் தளர்ந்தனன்' என்று தன் நெஞ்சோடு உசாவித் தோழி கேட்பத் தலைவியின் பதி நோக்கி வருந்தினன்.

குறிப்பு: பகற்குறி என்னும் இவ்வதிகாரம் 1. குறியிடங் கூறல் முதலான 32 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

கச. இரவுக்குறி

பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைமகன் பின்னையும் தோழியைத் தலைப்பட்டு இரவுக்குறி வேண்டிச் சென்று எய்துதன் முறைமை.

1. இரவுக்குறி வேண்டல் [148. மருந்து]

பதிநோக்கி வருகின்ற தலைவன் "மேகத்தினால் புதைந்து இருள் நிறைந்த உங்கள் சீறூருக்கு நான் விருந்தினன். என்னை ஏற்றுக் கொள்வாயாக" என்று தோழியிடம் கூறினான்.

2. வழியருமை கூறி மறுத்தல் [149. விசும்பினுக்கு]

இவ்வாறு தலைமகன் இரவுக்குறி வேண்டி நிற்ப, "ஐயனே! ஆகாயத்திற்கு இட்டதோர் ஏணி நெறி போலும் எம் வாழ்பதி உளது. அதுவேயும் அன்றி, மழை இடையருது பெய்வதால் இடையிடை உண்டாகிய திவலைகளால் முழையிலே (குகையிலே) நுழைவது போலும் அவ்வழி; அதுவன்றியும், வழுக்குதலாலே, மலைத்தாலும் ஏறி வருவதற்கும் வழி அரிதாகும். இளம் பிறை சூடிய பெருமானுடைய பொதியின் மலையில் நாங்கள் வாழுமிடம் உள்ளது" என்று வழியருமை கூறித் தோழி, தலைவன் வரவை மறுத்துக் கூறினள்.

3. நின்று நெஞ்சு உடைதல் [150. மாற்றேன்]

இவ்வாறு தோழி வழியருமையைக் கூறக் கேட்ட தலைமகன் "கொடுங்குன்ற மலையின் உச்சியிலுள்ள தேனைப் பெற விரும்பிய முடவனைப் போல அடைதற்கு அரியாளை விரும்பு "நெஞ்சமே" நீ மெலிகின்றாய்; நான் இதற்கு ஆற்றேன்" எனக் கூறி நெஞ்சுடைந்து வருந்துகின்றான்.

4. இரவுக்குறி நேர்தல் [151. கூளிநிறைக்க]

இங்ஙனம் தலைவன் நெஞ்சு உடைந்து வருந்தி இருப்பதைக் கண்டு (இவன் இறந்து படவுங் கூடும் எனக் கருதித்) தோழி, தலைவனிடம் "நீ ஆளிகள் நிறைந்து யானைகளைத் தேடும் இரவில் வந்து மீளுதலைச் சொல்லா நின்றாய்; இனி தலைவிக்குத் தீவினையேன் சொல்லுவது என்? உடன்படுவாயென்பேனா? மறுப்பாயென்பேனா?" என்று இரவுக் குறிக்கு நேரா நின்றாள் (உடம்பட்டாள்)

5. உட்கோள் வினுதல் [152. வரையன்று]

இரவுக் குறிக்கு உடம்பட்ட தோழி (தங்கள் நிலத்து மக்கள் கோலத்தனாய் வருதற்கு அவன் உட்கொள்ள வேண்டி) நின்னூரிடத்தார் பூசும் விரை (வாசனைப் பொருள்) யாது? அவர் விளையாடும் நிழல் எத்தன்மையது? அவர் சூடும் வாசனையுள்ள மலர் எத்தன்மையது? நன்மை பரந்து விளங்குவன எத்தன்மையன? சொல்லுவாயாக" என்று தலைவனைக் கேட்டாள்.

6. உட்கொண்டு வினுதல் [153. செம்மலர்]

அங்ஙனம் தோழி கேட்ட வினாவை உட்கொண்டு அந்நிலத்து மக்கள் கோலத்தனாய் தான் வருதற்கு வேண்டி "இராப்பொழுதின்கண் நுமர் விளையாடுவது எம்மலரைச் சூடி நின்று? எச்சாந்தை அணிந்து

கண்ணை நன்னிழற் கீழ்? கூறுவாயாக'' என்று தோழியைத் தலைமகன் கேட்டான்.

7. குறியிடம் கூறல் [154. பனைவளர்]

இவ்வாறு வினவிய தலைவனுக்கு, ''பொதிய மலையிற் பொலியும் சந்தனச் சாந்தை அணிந்து, சுனைக்கண் வளரும் காவி மலர்களைச் சூடி, மயில்கள் துயில் செய்யும் வேங்கைப் பொழிலில் நாங்கள் விளையாடுவோம்'' எனத் தோழி கூறி, ''அவ்வேங்கைப் பொழிற்கண் நீ வந்து நின்று நின் வரவறிய மயிலெழுப்பு வாயாக'' என்று குறி இடத்தை அவன் அறியும்படி சொன்னாள்.

8. இரவுக் குறி ஏற்பித்தல் [155 மலவன் குரம்பை]

இங்ஙனம் தலைமகனுக்குக் குறி இடம் கூறித் தலைமகளிடம் சென்று, ''தில்லையைச் சூழ்ந்த கானலிடத்து நல்ல பெடையொடு ஒரு அலவன் (நண்டு) விளையாடுவதைக் கண்டு வருத்தம் மிக்குத் தலைமகன் அந்திப் பொழுதின்கண் செல்வதைக் கண்டேன் அவன் எங்ஙனம் துயில்வானோ அறிகிலேன்,'' என்று தோழி அவனது ஆற்ருமையைக் கூறித் தலைமகளை இரவுக் குறிக்கு உடம்படும்படி செய்தாள்.

9. இரவரவு உரைத்தல். [156 மோட்டம் கதிர் முலை]

இரவுக் குறிக்குத் தலைமகளை உடம்படும்படி செய்த, தோழியிடம், ''சிவபிரான் திருவடிக்கே தலைவணங்கும் நம் தலைவன் மேகம் திரளுதலால், கண்ணைப் புதைத்தாற் போல இருக்கும் செறிந்த இருளில் யானைகள் நடுங்கச் சிங்கம் வேட்டம் திரியும் மலைச்சரிவிடத்துத் தான் வருவதாகச் சொல்கின்ருன். இனிச் செய்வதென்ன?'' என்று தலைவியிடம் கூறினள்.

10. ஏதங்கூறி மறுத்தல் [157 செழுங்கார்]

இது கேட்ட தலைவி ''சிற்றம்பலத்தின்கண் கூத்தியற்றும் திருவடியை ஏத்தாதாரைப் போல வருந்தும்

படி சிங்கமானது யானை வேட்டை செய்யும் வல் இருளில் யாவரும் வழங்காத வழி இடத்து எம்முடைய வள்ளலை 'வா' என்று சொல்லத் தகுமோ'' என்று தோழியிடம் கூறினள்.

11. குறை நேர்தல் [158. ஓங்கும் ஒரு]

இங்ஙனம் ஏதம் கூறி மறுத்த தலைவி தலைவனுடைய ஆற்ருமை ஆகிய நிலையைக் கேட்டு, ''மலையிலுள்ள சுனைப் புனலில் நான் விழுந்து அழுங்க என்னைப் பிடித்து எடுத்துக் கரையிற் சேர்த்த பெரியோருக்குச் சிறியேனுகிய நான் (அவர் செய்த உதவிக்குக் கைம்மாருக) இன்ன வார்த்தை சொல்வதென அறியேன்'' என்று தோழியிடம் கூறி இரவுக் குறிக்கு உடம்பட்டாள்.

12. குறை நேர்ந்தமை கூறல் [159. ஏனற் பசுங்கதிர்]

இவ்வாறு தலைவி உடம்பட்டவுடன் தோழி தலைவனிடம் சென்று, ''நின் ஏவலை இன்று இரவின்கண் செய்ய வேண்டி யான் (தில்லையைச் சேராதார் படுகின்ற) துன்பம் எல்லாம் பட்டேன். இப்படிப் பாடுபட்டு நீ கருதிய காரியத்தை முடித்தேன், (தலைவியை இரவுக் குறிக்கு உடம்படும்படி செய்தேன்) என்று தலைவனிடம் தலைவியின் உடம்பாட்டைத் தெரிவித்தாள்.

13. வரவுணர்ந்துரைத்தல் [160. முன்னுய ஒ[illegible]

இங்ஙனம் தலைவியின் உடம்பாட்டைத் தலைவனுக்கு உரைத்த தோழி "சிற்றம்பலத்தாருடைய திருவருள் போல ஓர் இன்பம் வந்து பொருந்து மென்று தம்முடைய தோகைகளுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியைச் சொல்லுவது போல மயில் கூட்டங்கள் ஆரவாரத்தை உடையனவாய் உறக்கம் ஒழிய நின்றன.'' என்று தலைவனது வரவைத் தலைவிக்குத் தெரிவித்தாள்.

14. தாய் துயில் அறிதல் [161. கூடார் அரண்]

அங்ஙனம் குறிப்பாகத் தலைவனுடைய வரவைத் தலைவிக்கு உணர்த்திய தோழி, தலைவியைத் தலைவனிடம் கொண்டு செல்லக் கருதி, "நம்முடைய பொழிலில் நாம் ஒரு நாக (சுரபுன்னை) மரத்தில் மணிகளால் கட்டி இருந்த ஊசலை (ஊஞ்சலை) ஒரு யானை சீர் அழிந்து அந்த மரத்தையும் தள்ளி விட்டது. இதற்கு நாம் என்ன செய்வேம்" என்று தாயின் துயிலை அறிய வேண்டிக் குறிப்பாகத் தலைவியிடம் கேட்டாள் [இவ்வாறு கூறியும் வாளா கிடப்பின் தாய் துயின்றாள் என்று அறியக் கூடும் ஆதலின்]

15. துயிலெடுத்துச் சேறல் [162. விண்ணுக்கு]

இவ்வாறு தாயின் உறக்கத்தை அறிந்து புறப்படும் உபாயத்தை ஆராய்பவளாகிய தோழி தாயின் துயிலை அறிந்து, "தில்லைச் சிவனுடைய மிடற்றின் வண்ணம் உடைய குவளைப் பூக்கள் மலர்கின்றன. அவை சினவாள் ஒளி வீசுவது போல ஒளி வீசும் உன் கண்களை ஒக்குமாயின் காண்பாயாக." என்று தலைவியிடம் சொல்லி அவளைக் குறி இடத்துக்கு அழைத்துச் சென்றாள்.

16. இடத்து உய்த்து நீங்கல் [163. நந்தீவரம்]

அங்ஙனம் சென்ற தோழி தலைவியைக் குறித்து நிறுத்தி[க் 'கண்ணை இடந்திட்டு அதை மலராக வைத்துப் பூசித்த, நாரணனுக்குச் சக்கரத்தைத் தந்த சிவபிரானுடைய] புலியூரை ஒப்பவளே! நின் பெரிய கண்கள் இந்நீல மலர்களை வென்று நிற்பதைக் காண்பாயாக உன் (கரிய) கூந்தலுக்கு நான் நல்ல சந்தனத் தளிர்களையும் மணமுள்ள மலர்களையும் கொண்டு வந்து தருவேன். நீ நீலப் பூக்களைக் கண்டு இங்கே நிற்பாயாக' என்று தலைவியிடம் கூறிச் சிறிது அகலா நின்றாள்.

17. தளர்வு அகன்று உரைத்தல் [164. காமரை]

இங்ஙனம் தலைவியைக் குறி இடத்தில் நிறுத்தித் தோழி நீங்கத், தலைவன் எதிர்ப்பட்டு, (இலக்குமி போன்றவளே!) சூரியன் அடைத்த தாமரையாகிய உனது வீட்டின் இதழ் ஆகிய கதவைத் திறந்தோ போந்தது. இது கிடக்க, மேகலை ஒலிக்காமல் பிடித்துச் சிலம்பு ஒலிக்காமல் மேலே தள்ளித் தனியே பைய அரையாமத்தில் நாம் இருவரும் வந்து தங்க நீ விரும்பியது என்னே? எனக் கூறுவாயாக'' என்று தலைவியைக் கேட்டான்.

18. மருங்கு அணைதல் [165. அகிலின் புகை]

அங்ஙனம் கேட்ட தலைவன் "கூந்தலில் அகிலின் புகை ஊட்டி மலர் சூட்டி, உன் கண்ணுக்கு அஞ்சனம் எழுதத் தகும். ஆனால், ஒரு தனிவடத்தைப் பூட்டவும் தக்கவள் அல்லள் நீ; ஏனெனில் உன் இடை அதைத் தாங்காது; அங்ஙனம் மெலிந்துள்ள உன் இடை ஒடியும் போல் இருந்தாலும், அந்நிலையை உணராமல் உன் கொங்கைகள் மிகவும் விம்முகின்றன; இது எப்படி முடியுமோ?'' என்று தலைவியின் இயலைப் புகழ்ந்துரைத்துத் தலைவியின் இடையைத் தாங்குவானைப் போல அவள் மருங்கு அணைந்தான்.

19. முகங்கண்டு மகிழ்தல் [166. அழுந்தேன் நரகத்து]

அங்ஙனம் தலைவியின் மருங்கு அணைந்த தலைவன், "யான் நரகத்தில் அழுந்தாவண்ணம் என்னை ஆண்டு கொண்ட பெருமானுடைய தில்லைப் பொழிலிடத்து உள்ள வயலில் மலர்ந்த குமுத மலர் இவள், நான் அம்மலரை மலர்த்தும் வானத்து இளமதி'' என்று கூறி மகிழ்ந்தான்.

20. பள்ளி இடத்து உய்த்தல் [167. சுரும்புறு நீலம்]

அவ்வாறு மகிழ்ந்த தலைவன், "நீ இப் பொழிலிடத்துத், தனியாக நின்று, நீல மலர்களைக் கொய்ய

வேண்டாம். உன் அருமையான தோழியுடன் ஆயத் திரளைப் போய்த் துயில்க'' என்று கூறிப் பிரியலுற்றான்.

21. வரவு விலக்கல் [168. நற்பகல்]

தலைவியைப் பள்ளியிற் சேர்த்த பின் தோழி தலைவனிடம் சென்று, ''தலைவியின் பொருட்டு இந்த மலைச் சிறுவழி உனக்கு மெய்யாகவே எளிதாக இருக்கின்றது. ஆயினும் நீ வரற்பாலையல்லை'' என்று கூறித் தலைவனுடைய வரவை விலக்கினள்.[1] [இக்களவொழுக்கம் இவள் பிறந்த குடியும் அழிந்து உன் பெருமைக்கும் அழிவாகப் புகும் என்ற காரணத்தால்]

22. ஆற்றாது உரைத்தல் [169. 'பைவாய் அரவு']

தலைவியை மணத்தல் வேண்டும், களவொழுக்கம் வேண்டாம் என்று கூறித் தலைவன் வரவை விலக்கின வரைவு (திருமணத்துக்கு) உடம்படாது பின்னும் களவொழுக்கமே வேண்டி, ''யான் முன் செய்த தவப்பயனாக எனக்கு எய்தலாம் வண்ணம் திருமகளே இவ்வாறு கொடிச்சியாய் (குறமகளாய்) இருக்கின்றாள் என்று கருதியே எனது இன்னுயிர் என்றும் நிற்கின்றது. ஆதலால் நான் இத்தன்மையளை மணந்து கொள்வது எளிதாக நீ கூறுவது ஏன்?'' என்று தலைவன் தனது ஆற்றாமை தோன்றக் கூறினன்.

23. இரக்கம் கூறி வரைவு கடாதல்

[170. 'பைவாய் அரவும்']

இவ்வாறு களவு விரும்பி வரைவுக்கு உடம்படாத தலைவனுக்கு, ''நீ செல்லும் வழியில் உனக்கு இடையூறு ஏதேனும் வருமோ என்று அஞ்சித் தலைவி கண்ணீர் விடுகின்றாள், ஆதலால் நீ தில்லையை நல்லபடி சேர்ந்ததைத் தெரிவிக்கக் கரிய கொம்பைச் சிவந்த வாயிலே வைத்து ஊத வேண்டும்'' என்று தலைவனிடம் தோழி கேட்டுக் கொண்டாள்.

24. நிலவு வெளிப்பட வருந்தல் [171. நாகம்தோழ]

"ஏ சந்திரனே! (நாகம்) யானையைப் போன்ற எங்கள் நாயகர் வர, நாங்கள் புறப்பட்டு எதிர் கொள்ளுகிற செறிந்த இருளிடத்தே தேனூர்ந்த' (நாகம்) (சுரபுன்னைகள்) மிக்க பொழிலிடத்து அழகு வாய்ந்த உன்னுடைய முதன்மையை நீ காட்டுகின்றாய்; இதுதான் உன்னுடைய அறிவு இம் மலை நாகம் (பதஞ்சலி) தொழ அழகுள்ள அம்பலத்திற் கூத்துப் பயில்வானுடைய மலைகாண். இதைக் கடைப் பிடிப்பாயாக" என்று தோழி சிறைப்புறமாக, நிலவொடு புலந்து கூறித் தங்களுடைய தளர்ச்சியை அறிய மதியினுடைய விளக்கத்தைத் தலைவனுக்குத் தெரிவித்தாள்.

[நாகத்தால் விழுங்கப்படும் சந்திரனே! நீ நாகம் தொழுகின்ற அம்பலத்தான் மலையில் விளங்குதல் நன்றன்று நீ நன்மை பெற மாட்டாய்] நீ கண் கூசி நடக்க வேண்டும் என்பது கருத்து.]

25. அல்லகுறி அறிவித்தல் [172. மின்அங்கு அலரும்]

குறியில்லாத குறி யெதிர்ப்பட்டு மீண்டதற்கு அடுத்த நாள் தலைவன் பகற்குறியில் வந்து நிற்பத், "தில்லையை ஒப்பவனே! பொன் மலரும் புன்னைக்கண் உண்டாகிய தம் சேக்கை இடத்து அன்ன மெல்லாம் துன்புற்றுப் புலருமளவும் துயிலாது துன்புற்றன. அவை ஏன் அங்ஙனம் துன்புற்றன என்று அறிகிலேன்" என்று தோழி அல்லகுறிப் பட்டமையைச் சிறைப்புறமாகத் தலைவனுக்கு உரைத்தனள்.

26. கடலிடை வைத்துத் துயர் அறிவித்தல் [173. சோத்துன்]

"பெருங் கடலே! முன்பு ஒருகால் நீ இவ்வாறு ஒலித்து உன்னிடத்து இருந்த அமிர்தத்தையும், திருவையும் மதியையும் (திங்களையும்) இழந்தாய்; அங்ஙனம் இழந்தும் நீ மறுபடியும் ஒரு பயனும் இல்லாமல் இவள் (தலைவி) வாடும்படி இரையா நின்றாய்; காரண

மின்றிர் பிறரை வருத்துதலான் வரும் பழியை நோக்கு கின்றிலை; நினக்கிது நன்றோ?'' என்று இரவில் உண் டாகிய தலைவியின் வருத்தத்தைத் தலைவன் அறியும்படி தோழி கடலொடு புலந்து கூறினள். (ஒருவருடைய திருவையும் (செல்வத்தையும்) மதியையும் ஒருவர் பறித் துக் கொண்டால், அவர் பின்னை அடங்குவார். அந்த அடக்கம் உனக்கு இன்று இல்லை, பெருங் கடலே!)

27. காமம்மிக்க கழிபடர்கிளவி [174. மாதுற்ற மேனி]

"பூம்பொழில்காள்! பொழிலைச் சூழ்ந்த கழிகாள்! அக் கழிகளிற் பயில்கின்ற புள்ளினங்காள்! என்னை நீங்கள் ஏன் துன்புற்று அழுகின்றாய் என்று ஒருகால் கேட்கின்றிலீர்! நான் படும் வேதனையைத் தலைவனிடம் கூறுகின்றிலீர்; இதுவோ என்னிடம் உங்களுக்குள்ள அன்பு, சொல்லுங்கள்'' என்று தலைவி காமம்மிக்கு மிக்க துன்பத்துடன் நெஞ்சு அழுங்கினள்.

28. காப்புச் சிறைமிக்க கையறுகிளவி

[175. இன்நறவார் பொழில்]

இங்ஙனம் காமம் மிக்குத் துன்பமுற்ற தலைவி தில்லை இறைவனுடைய திருவிழாவில் மாணிக்கம் முதலான வற்றால் ஆகிய மாலைகளின் தொகைகளால் இராப் பொழுதும் பகல்போல விளங்குகின்றது. அதுவன்றி, பல விளக்குகள் இருளை ஓட்டுகின்றன. ஒருபொழுதும் தூங்காத வீட்டில் உள்ளவர் துயில்வாராயினும் தலைவர் வருவாராயின் அப்பொழுது நாய் குலைக்கும். அதனால் தலைவனை நாம் சென்று காண்பது அரிது போலும்! என்று தலைவி சோர்வுடன் எண்ணிக் காப்புச் சிறைக்கு வருந்தினள்.

29. ஆறுபார்த்து உற்ற அச்சக் கிளவி

[176. தாருறு கொன்றையன்]

இவ்வாறு தலைவியின் ஆற்றாமையைச் சிறைப்புற மாகக் கேட்ட தலைவன் குறியிடம் சென்று நிற்பத் தோழி

எதிர்ப்பட்டு நீ கான்யாறு அளவில்லாதனவற்றை நீந்தி வந்தால் அங்குள்ள இடியேறு உன்னுடைய போர் வேலுக்கு அஞ்சி நின்பால் வாராதொழிக, ஆனல் தெய்வங்கள் பொருந்தும் சோலையில் செறிந்த இருளில் வருதல் முறையன்று; அத் தெய்வங்களுக்கு நாங்கள் அஞ்சுகின்றோம்; அதனல், அந்த இருளில் நீ வரற் பாலையல்லை'' என்று தங்கள் அச்சத்தைக் கூறித் தலைவனுடைய வரவை விலக்குகின்றாள். (களவொழுக்கம் வேண்டாம் திருமணம் செய்துகொள் என்பது கருத்து.)

30. தன்னுள் கையாறு எய்திடுகிளவி [177. விண்தலை]

இங்ஙனம் தலைவனுடைய வரவு விலக்கப்பட்டதனல் வருந்திய தலைவி சந்திரனை நோக்கி, "இரவு முழுதும் விண்ணிடத்து விளங்கும் சந்திர மண்டலமே! தில்லையில் கழி சூழ்ந்த கண்டலே (தாழையே) சான்றாகக் கன்னிப் புன்னைக் கண் என்னைக் கலந்த கள்வர் ஒருகால் வரக் கண்டிலையோ? துணையில்லாத எனக்கு ஒரு சொல் அருள்வாயாக'' என்று தன்னுள் வருத்தத்துடன் வினவினள்.

31. நிலைகண்டு உரைத்தல் [178. பற்றேன்றிலார்]

இவ்வாறு தலைவி தனது வருத்தத்தை மதியொடு கூறி வருந்துவதைச் சிறைப்புறமாகக் கேட்ட தலைவன் ஆற்றாமையால் குறி இடத்தில் வந்து நிற்கத், தோழி அவனை எதிர்ப்பட்டு நீ முருகவேளைப் போல இம்மலை யிடத்து வந்து நின்றால் உன்னைக் கண்டவர்கள் இம் மலைக்கு உரியனாய முருகன் என்று கருதி உன்னை மலரிட்டு வாழ்த்தி வணங்காமல், வேறு வகையாக நினைவாராயின் (அதாவது இவள் (தலைவி) காரணமாக வந்தாய் என்று கருதி உனக்கு ஏதம் (கெடுதி) செய்வார் களாயின்) தலைவி உயிர் வாழும் வகை வல்லளோ? (உயிரை விடுவாள் என்றபடி) அதனல் இவ்வாறு ஒழுகற்பாலையல்லை (மணம் செய்துகொள்) என்று கூறினள்.

32. இரவுறு துயரங் கடலொடு சேர்த்தல் [179. பூங்கணை]

இங்ஙனம் தோழி தலைவனிடம் கூறினதால், தலைவனை எதிர்ப்பட மாட்டாமல் வருந்திய தலைவி கடலை நோக்கி, "ஏ கடலே! நீ ஓங்கி அணைந்த கரையைப் பொருந்தி புரண்டு விழுந்து எழுந்து கூச்சலிட்டு துன்ப முற்று ஓர் இரவு முழுதும் கலங்கித் தெளிகின்றிலை; அதனால் உன்னை அணைந்த பின் உன்னை அகன்று சென்றவர் உளரோ" என்று தலைவி தான்பட்ட துயரத்தைக் கடலுடன் கூறினள்.

33. அலர் அறிவுறுத்தல் [180. அலர் ஆயிரம்]

இங்ஙனம் தலைவி தான் இரவில் பெற்ற துயரத்தைக் கடலொடு கூறினதைச் சிறைப்புறமாகக் கேட்ட தலைவன் குறியிடைச் சென்று நிற்பத் தோழி எதிர்ப்பட்டு, "சக்கரப் படையைத் திருமாலுக்குக் கொடுத்த தில்லைச் சிவனுடைய அருள்போல, ஐயனே! உன்னுடைய மெய்யாகிய அருள் எங்களுக்கு (அம்பல் கைம்மிக்கு) அலராய் விளையா நின்றது. இனித்தக்கது செய்வாயாக" என்று தலைவனிடம் கூறினள்.

குறிப்பு: 'கச. இரவுக்குறி' என்னும் இவ்வதிகாரம் 1. இரவுக்குறி வேண்டல் முதலான 33 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

கரு. ஒரு வழித்தணத்தல்

அலர் எழுந்ததென்று விலக்கப்பட்ட பின்னர் தெருண்டு வரைதல் தலை; தெருளானாயின் அவ்வலர் அடங்கச் சிலநாள் ஒருவழித் தணந்து உறைதல், உடன் கொண்டு போதல், தோழியால் வரைவு (திருமணம்) முடுக்கப்பட்டு அருங்கலம் விடுத்து வரைந்து கோடல் இம்மூன்றினுள் ஒன்று முறைமை என்ப. அவற்றுள் ஒரு வழித்தணத்தல் வருமாறு.

1. அகன்று அணைவு கூறல் [181. புகழும் பழியும்]

அவ்வாறு அலர் அறிவுறுத்த தோழி தலைவனை நோக்கி "நீ இத்தன்மையை நினைந்து சில நாள் அகன்று பின்பு அணைவையாயின், அம்பலும் அலரும் அடங்கி இப்பொழுதே தலைவிக்குப் பழி இல்லையாகும்" என்று அவன் இசையும்படி பின்வருமாறு கூறினள்.

காரணமாக உண்டான புகழும் பழியும் ஒருவன் வளர்க்குமாயின் தாம் வளரும் அக்காரணத்தை இடையறுமல் செய்தால் அது மாளாது பின்னும் வளரும்; அங்ஙனம் செய்யாவிட்டால் அவை தாமாக வளரா; ஆதலால் நீ இப்பெற்றியைக் கருதுவையாயின் தலைவிக்குப் பழி இப்பொழுது இல்லையாகும்.

2. கடலொடு வரவு கேட்டல் [182. ஆரம்பரந்து]

தோழி கூறியபடி தலைவன் தலைவியை விட்டுப் பிரிய அப்பிரிவுக்கு ஆற்றாத தலைவி, "ஒலிக்கும் கடலே! என்னை விட்டுப் பிரிந்த தலைவர் என்னிடம் மீண்டு வரும் பரிசை உன்னிடம் கூறினரோ?" என்று தலைவன் வரவைப் பற்றிக் கடலைக் கேட்டாள்.

3. கடலொடு புலத்தல் [183. பாண்நிகர்]

இவ்வாறு கடலொடு வரவு கேட்ட தலைவி, அக்கடல் தனக்கு வாய் திறவாமையின், "என் வளை கொண்டு போன தலைவரின் செய்தியை யான் கேட்க, நீ ஒரு வார்த்தையும் சொல்லுகின்றிலை. அஃது ஏன்?" என்று பின்னும் அக்கடலொடு புலந்து கூறினாள்.

4. அன்னமோடு ஆய்தல் [184. பகன் தாமரை]

அவ்வாறு கடலொடு புலந்து கூறிய தலைவி, "தாமரைக்கண் வாழும் அன்னமே! அரும்பாகிய முத்தை அணிந்த இப்புன்னை நான் இந்நிலையில் இருக்கக்கண்டும், ஒன்றும் சொல்கின்றதில்லை. என்னை

விட்டுப் பிரிந்த தலைவர் அகன்றே விடுவரோ? அறியோய், நீ உரைப்பாயாக'' என்று அன்னத்துடன் ஆய்ந்து வினவினள்.

5. தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல்

[185. உள்ளும் உருகி]

அவ்வாறு அன்னத்துடன் வரவு கேட்ட தலைவி அதுவும் வாய் திறவாமையின் பின்னும் கடலை நோக்கிப் "புலியூரை விட்டு நீங்கும்படி சென்ற தலைவர் (மீளும் அளவும்) ஏ! கடலே! நீ அவருடைய பெரிய தேர் போன வழியை உனது திரைகளால் அழிக்காதே; என் உயிர்க்குப் பற்றுக்கோடு இனி அதுவே'' எனத் தேர் வழி நோக்கிக் கடலொடு கேட்டுக் கொண்டாள்.

6. கூடல் இழைத்தல் [186. ஆழிதிருத்தும்]

அவ்வாறு தேர்வழி நோக்கிக் கடலொடு கேட்டுக் கொண்ட தலைவி, "இம்மணற் குன்றின்கண் என்னை நீத்து அகன்றவர் வரவேண்டுமென்று கூடல் இழைத்துச் சுழிக் கணக்கைச் சொல்லி யான் வருந்தாமல் ஐயனே! நீ வாழ்வாயாக, தலைவர் உள்ளத்தைத் திருத்தி அவ்வள்ளலை நீ தரக்கிற்றியோ? அவர் உள்ளத்தை நெகிழ்த்து வள்ளலையீண்டு தரும்படி யான் வேண்டு கின்றேன்.'' என்று கூடல் தெய்வத்தை வாழ்த்த, கூடல் இழைத்து வருந்தி வேண்டினள்.

(ஐயனே என்றது கூடற்றெய்வத்தை)

7. சுடரொடு புலம்பல் [187. கார்த்தரங்கம்]

அவ்வாறு கூடல் இழைத்து வருந்தி நின்ற தலைவி (மேற்கடலில்) 'ஆழ்கின்ற சுடரே தலைவருடைய பிரிவும், தில்லைப் பொழிலில் நின்னைப் பிரியேன் என்று அவர் சொன்ன சூளுரையும் என் மேனியை நோயுற்றார் மேனி யாகச் செய்கின்றன; நான் உய்யும் நெறி யாது? கூறுவாயாக'' என்று தலைவி அச்சுடரொடு புலம்பினள்.

8. பொழுது கண்டு மயங்கல் [188. பகலோன்]

அங்ஙனம் சுடரொடு புலம்பி நின்ற தலைவி, கதிரவன் மறைந்தான் இம்மாலைக் காலத்து உண்டாகும் துன்பத்தினின்றும் என்னைக் காக்கும் அவர் சேயரா யிருந்தார் (தூரத்தில்உள்ளார்) : அன்னங்கள் இவ்விடத்தை விட்டு தம் சேக்கைகளை (உறங்குமிடத்தை) அடைந்தன. இனி யான் என் செய்வேன் ? ஆற்றுதல் அரிதுபோலும் என்று மாலைப் பொழுது கண்டு தலைவி மயங்கினள் (கவலை யுற்றனள்.)

9. பறவையொடு வருந்தல் [189. பொன்னும்]

பொழுது போனது கண்டு மயங்கின தலைவி "என்னுடையஆற்ருமைக்குப்பரிகாரம் யாதும்சிந்தியாது, கழியிடத்து உணவு தேடும் வண்டானங்களாகிய (குருகுகள்) என் உள்ளத்து நோயை இன்னும் அறிகின்றனவல்ல. இஃது என்ன பாவம்'' என்று அப் பறவைகளுடன் கூறி வருந்தினள்.

10. பங்கயத்தோடு பரிவுற்று உரைத்தல் [190. கருங்கழி]

அங்ஙனம் பறவைகளுடன் வருந்தின தலைவி "சூரியன் மேருவைச் சூழ்ந்து மிக்க காததூரம் போய் விட்டான். இனி இவள் எங்ஙனம் ஆற்றுவாள் என்று வருந்தித் தாமரைகள் கண்ணீர் விட்டு (தலைவர்) விரைந்து வரவேண்டுமென்று அந்தச் சூரியனை நோக்கித் தம் மலராகிய கைகளைக் கூப்பி இரந்து நிற்கின்றன. இவை என்மாட்டு அன்புடையன போலும்'' என்று தலைவி பங்கயத்தொடு (தாமரையொடு) அன்புற்று உரைத்தனள்.

11. அன்னமோடு அழிதல் [191. மூவல்]

பங்கயத்தை நோக்கி அவ்வாறு அன்புற்ற தலைவி "இவ்வுலகம் முழுதும் துயில்கின்றது, நான் துயிலாமல் வருந்துகின்றேன்; யான் துயிலாமைக்குக் காரணமாகிய

பெருத்தத்தை என் காவலராம் தலைவருக்குச்சொல்லாமல், இந்த அன்னம் தன் ஆணுடன் தழுவிக் கவலை இல்லாமல் இன்பத் துயில் துயில்கின்றது. இனி என் கவலையைத் தலைவருடன் கூறுவார் யார்?''. என்று அன்னத்துடன் அழிந்து கூறினள்.

12. வரவு உணர்ந்து உரைத்தல் [192. நில்லா வளை]

இவ்வாறு தலைவி அன்னத்தோடு அழிந்து வருந்தி நிற்க, தலைவன் ஒருவழித் தணந்து வந்தமையைச் சிறைப் புறமாக உணர்ந்த தோழி, "ஒளி பொருந்திய சந்திரனே! கண்ணோட்டமின்றிப் போனவர் போதலால் உண்டாகிய இத்தலைவியின் துன்பத்தை நீயே கண்டாய். யான் சொல்ல வேண்டியதில்லை. இவள் கையில் வளைகள் நிற்கின்றதில்லை. இவள் நெஞ்சம் நெகிழ்ந்து உருகுகின்றது; இவள் கண்கள் துயிலாமல் கண்ணீர்த் துளியாகிய முத்துக்கள் உதிர்கின்றன என்று அவர்க்குச் சொல்வாயாக, உன்னை இரக்கின்றது இது'' என்று தோழி மதியொடு கூறினள்.

13. வருத்த மிகுதி கூறல் [193. 'வளரும்கறி]

இங்ஙனம் சிறைப்புறமாக மதியொடு வருத்தம் கூறிய தோழி தலைவனை எதிர்ப்பட்டு "நீ போன பின்பு தலைவி படாநின்ற வருத்தம் என்னால் சொல்லும் அளவல்ல; அவளுடைய அங்கம் எங்கும் விளரும்; (வெளுக்கும்); மேனி முழுதும் பசக்கும்; படுக்கையில் விழுவாள்; எழுவாள்; விம்முவாள்; பொருமி வாடா நிற்பாள்; நின் வன்கண்மையை நினைந்து மெலிவாள்; அதனால் அவள் இன்ன நிலைமையள் என்று என்னாற் சொல்ல முடிய வில்லை'' என்று தலைவனிடம் கூறினள்.

குறிப்பு:- கரு. ஒருவழித் தணத்தல் என்னும் இவ்வதிகாரம் 1. 'அகன்று அணைவு' கூறல் முதலான 13 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

கசா. உடன்போக்கு

1. பருவம் கூறல் [194. ஒராகம்]

இவ்வாறு சொல்லித் தலைவனுக்கு அலர் அறிவித்த தோழி, “பூசப்படுவன பயின்று, அமிர்தத்தைப் பொதிந்து, செம்பொன் பொடி சிதறினது போன்ற (தலைவியின்) கொங்கைகளின் பெருத்த கதிர்ப்பைக் கண்டால் எங்கள் உறவினர் எண்ணுவது ஒன்றுமில்லை (அதாவது மெத்தவும் விசாரிப்பார்கள் என்பது) கொங்கையின் முதிர்வு கண்டமையான் மகட்பேசுவார்க்கு எமர் மருது கொடுக்கவும் கூடும்; அதுபடாமல் நிற்ப, நீ முற்பட்டு வரைவாயாக” எனத் தலைமகனுக்குத் தலைமகளது பருவநிலை கூறினள்.

2. மகட்பேச்சு உரைத்தல் [195. மணி அக்கு அணியும்]

அவ்வாறு, பருவம் கூறிய தோழி படைத்து மொழியால் (நடவாததை நடந்தது போன்று சொல்லினல்) “துறைவா! நிறைந்த பொன்னை மேலும் மேலும் அயலவர் பலர் தலைவிக்கு அணியக் கருதுகின்றார். ஆதலால் நீ இந்நிலையில் தலைவியின் காரியத்தில் செய்யக் கருதுவதை இன்றே துணிந்து செய்வாயாக” என்று தலைவனிடம் உரைத்தாள்.

3. பொன் அணி உரைத்தல் [196. பாப்பணியோன்]

அவ்வாறு படைத்து மொழியால் மகட்பேசல் கூறின தோழி, “துறைவனே! தலைவிக்குக் காப்புக் கட்டினார்கள். இனிப் பொன் அணிவார்களாய் இருக்கின்றார்கள். முற்றத்தில் கலியாண முரசுகள் குழுமித் திரண்டு நின்று சங்கங்கள் முழங்கா நின்றன. இனிச் செய்ய வேண்டியதைச் செய்வாயாக” என்று தலைவனை எச்சரித்தாள்.

4. அருவிலை உரைத்தல் [197. எலும்பால்]

இவ்வாறு தோழி பொன் அணி உரைப்பக் கேட்ட தலைவன் “யான் வரைவொடு (மணம் செய்ய) வருதற்கு

முலைப்பரிசம் கூறுவாயாக'' என்று கேட்க ''வடுவகிர் போலும் கண்ணை உடைய தலைவியின் சிறிய இடைக்கே எல்லா உலகமும் நல்கினாலும் விலை போதாது. அப்படி இருக்கப் பெரிய முலைக்கு விலை கூறுவது எப்படி?'' என்று தோழி விலை அருமை கூறினள்.

5. அருமை கேட்டு அழிதல் [198. விசும்புற்ற]

தோழி சொன்ன அருவிலை கேட்ட தலைவன், ''தலைவியின் கொங்கை, பாம்புபோலும் இடை, எயிற்றின் கண் ஊறிய நீர், குழலோசை போலும் மொழி ஆகிய இவற்றின்கண் கிடந்த இன்பத்தையே கருதி நடுங்கித் தளர்கின்ற நெஞ்சமே! ஆகாயத்தில் உள்ள சந்திரனைத் தரும்படி அழுகின்ற குழந்தை போலக் கண்ணீருடன் பொருமிப் பொருமி இனிக் கிடந்து அலறுவாயாக'' எனத் தன் நெஞ்சொடு அழுந்திக் கூறி நின்றான்.

6. தளர்வு அறிந்து உரைத்தல் [199. மை தயங்கும்]

இங்ஙனம் தலைவன் வருந்தியதைக் கண்ட தோழி 'அவளைத் திருமணம் செய்ய இசைவு இலாதாயின் அவளை உடன் கொண்டுபோ' என்ற கருத்துத் தலைவனுக்குப் படும்படி ''தலைவி கடலை நோக்கியும், கானலை நோக்கியும், கண்ணீருடன் தன் ஆயத்தாராகிய நல்லாரை எல்லாம் புல்லிக் கொண்டாள்; அவள் கருதியது ஒன்று உண்டு போலும்; அஃது இன்னது என்று தெரியவில்லை'' என்று தலைவியின் தளர்வைத் தலைவனுக்கு உரைத்தாள்.

7. குறிப்பு உரைத்தல் [200. மாவை]

இங்ஙனம் தலைவியின் தளர்வைத் தலைவனுக்கு எடுத்துக் கூறிய தோழி ''தலைவி இன்று என்னைப் புல்லிக் கொண்டு தன் பூவையை என் கையில் தந்தாள். பின்பு பொன் தகட்டால் செய்யப்பட்ட பந்தையும் தந்தாள்; பைங்கிளியையும் தந்தாள். அவள் நினைத்த கருத்து

இன்னதென்று அறிகிலேன். நின்னுடன் செல்லப் போலும்'' என்று தலைவியின் குறிப்பைத் தலைவனுக்கு உரைத்தாள்.

8. அருமை உரைத்தல் [201. மெல்லியல்]

அங்ஙனம் தலைவியின் குறிப்பைத் தோழி சொல்ல அறிந்த தலைவன் "நல்லாய்! மெல்லியலுடைய கொங்கைகள் பெரிய, இடை நுடக்கத்தால் மின்னுக்கு நேரா உள; மெல்லிய அடிகள் பூவேபோல் இருக்கின்றன. வெம்மை உடைய காடு அவ்வடிக்குத் தகாததாய்த் தீயாய் இருக்கின்றது. அது அல்லாமல், எம்முடைய ஊர் தூரத்தில் இருக்கின்றது. அதனால் நீ கருதியது பெரிதும் அரிது. நான் எப்படித் தலைவியைக் கொண்டு நீங்குவது'' என்று தலைவன் போக்கு அருமையைத் தோழியிடம் கூறினான்.

9. ஆதரம் கூறல் [202. பிணையும்]

இங்ஙனம் போக்கு அருமை கூறின தலைவனிடம் "ஐயனே! கல் நிறைந்த சுரமும் (காடும்) உன்னுடன் வந்தால் என்னுடைய தலைவிக்குக் குளிர்ந்த மருத நிலமும் பொய்கையும் போலும் இருக்கும் அல்லவோ! நீ இவ்வாறு அந்நியமாகக் கூறுவது என்னை?'' என்று தோழி தலைவியின் ஆதரம் கூறினள்.

10. இறந்து பாடு உரைத்தல் [203. இங்கு அயல்]

இங்ஙனம் தலைவனிடம் ஆதரம் கூறித் தோழி "நீ ஒரு தாமரைப் பொய்கை, அவள் அக்குளத்தில் வாழ்கின்ற மீன், அப்படி இருக்க உன்னுடன் வருவது பற்றி அயன்மை (அயலாம் தன்மை) கூறுகின்றதென்? செங்கயலுக்கு (மீனுக்கு)த் தாமரைக் குளம் அல்லது வேறு வேண்டப்படுவது ஒன்று உண்டோ'' என்று தலைவியின் இறந்துபடுதலைத் (குளத்தில் உள்ள மீன் குளத்தை விட்டுப் பிரிந்தால் இறந்துபடும் என்பதை)

தலைவனிடம் தெரிவித்தாள். (நீ உடன் கொண்டு போகா விட்டால் அலராலும், காவல் மிகுதியாலும் உன்னைப் பார்ப்பது அரிது, ஆதலின் தடம் துறந்த கயல் போல இறந்து படுவள். என்றபடி)

11. கற்பு நலன் உரைத்தல் [204. தாயிற்சிறந்தன்று]

இவ்வாறு தலைவனைப் போக்கு உடம்படுத்திய தோழி தலைவியிடம் சென்று "மகளிர்க்குப் பழிநீக்கிப் பாது காத்தலில் நாண் தாய்போலச் சிறந்தன்று; அத்தன்மைத்தாகிய நாண் திண்ணிய கற்புப் போலச் சிறப்புடையதன்று" என்று உலகியல் கூறுபவளாய்த் தலைவி உடன் போக்குத் துணியக் கற்பு நலத்தை அவளுக்கு எடுத்துக் கூறினள்.

12. துணிந்தமை கூறல் [205. குறப்பாவை]

உலகியல் கூறுவாள் போன்று தலைவியைக் கற்பு வழியில் நிறுத்திய தோழி "குறப்பாவாய்! சென்று சென்று பிறக்க நேரிடினும் பின்னும் சென்று சேரத்தகும் தன்மையை உடைய தலைவர் உன்னுடைய கூந்தலில் இருக்கும் வேங்கைப் பூவுடன் கோங்கம் பூவையும் பாதிரிப்பூவையும் கலந்து புனைவதற்கு நினைத்துள்ளார்" என்று தலைவியிடம் கூறினள். கோங்கும் பாதிரியும் உள்ளது பாலை நிலம் ஆதலின் அந்நிலத்தில் உடன் கொண்டு போவதாக முடிவு செய்துள்ளார் என்பது கருத்து.

13. துணிவொடு வினுவல் [206. நிழல்தலை]

அவ்வாறு தோழி தலைவனுடைய நினைவைச் சொல்லக் கேட்ட தலைவி "நிழலிடம் இல்லாது தீர்ந்த வழியில் நீர் கிடையாது; கானகம் முழுதும் நரி கத்தும், அங்கு நெருப்பின் நுனிபோன்ற நுனியை உடைய பருக்கைக் கற்கள் உண்டென்று சொல்வர். அப்படிப் பட்ட வழியில் (தில்லை அம்பலத்தாரை வணங்காதவரைப்

போல) நமது தலைவர் நம்மை உடன் கொண்டு போவதற்கு யாது காரணம்?'' என்று தோழியை வினவினள்.

14. போக்கு அறிவித்தல் [207. காயமும்]

இப்பொழுது தலைவர் போகைக்குக் காரணம் என்னே? என்று கேட்ட தலைவிக்கு ''நீங்கள் இருவரும் உடம்பும் உயிரும் போல ஒருவரை ஒருவர் இன்றி அமையாத அன்பை உடையீர்; சிங்கமும் கொடிய விலங்குகளும் வழியில் உள்ளனவற்றைக் கருதி யான் தலைவரை வரவேண்டாம் என்று அவரிடம் கூறுவேன். அவ்வாறு என்சொற்படி வருதலை ஒழித்து, திருமணத்தை அவள் விருப்பினுல் கடல் சூழ்ந்த இந்நிலத்தையும் பொன் முதலாகிய எல்லாவற்றையும் பெற்ருலும் கூட உன்னை நமது தலைவருக்கு நம்மவர் கொடார். இதுதான் நீரும் மனிதரும் இல்லாத வழியிலே போதற்கு (சுரம் போக்குக்கு)க் காரணம்'' என்று தோழி தலைவனது போக்கை அறிவித்தாள்.

15. நாண் இழந்து வருந்தல் [208 மற்பாய்]

உடன் கொண்டு போகைக்குக் காரணம் அறிந்த தலைவி, ''என்னுடன் ஒக்க வளர்ந்த திருவை உடைய நாணமானது தலைவர்மீது யான் வைத்த விருப்பம் இடையே புகுந்து தள்ள, நிலை குலைந்து, கற்பாகிய கடிய காற்றினுல் பிடுங்கப்பட்டு என்னை விட்டு நீங்கப் பெற்றது. இனி ஏழு பிறப்பிலும் மகளிர் குடியிற் பிறவாதொழிக'' எனக் கூறி வருந்தினள்.

16. துணிவு எடுத்து உரைத்தல் [209. கம்பம்]

இவ்வாறு கற்பு வழியில் தலைவியை நிறுத்தித் தலைவனிடம் சென்று, ''நம்பா! நின்னேடு போதுமிடத்து நீ செல்லும் கற்சுரம் தலைவியின் செம்பஞ்சை மிதிப்பினும் நடுங்கும் மலர்போலும் சிற்றடிக்கு நல்ல

துளிராம் போலும்'' என்று தோழி தலைவனுக்குத் தலைவியின் துணிவை எடுத்துக் கூறினள்.

17. குறியிடம் கூறல் [210. முன்னோன்]

அங்ஙனம் தலைவியின் துணிவைத் தலைவனிடம் எடுத்துரைத்த தோழி ''எனது உயிர் போன்றவளுடைய பெறுதற்கரிய உயிரை ஒப்பவனே! உன்னுடைய அருளைப் பெறலாம் என்னும் ஆசையினாலே பொன் போலும் நிறைந்த நல்ல மகிழம்பூக்கள் விழ அவை விழுகின்ற ஓசையை நீ செய்யும் குறியாக அறிந்து விரும்புகின்ற மிக்க இருளில் நான் அவளைக் கொண்டு வருகின்றேன். நீ அவளைக் கொண்டு போவாயாக; நீ முன்பு வந்த அக்குறியிடத்து வந்து நில்'' என்று தலைவனுக்குக் குறியிடம் கூறினள்.

18. அடியொடு வழிநினைந்து அவன் உளம் வாடல் [211. பனிச் சந்திரன்]

அங்ஙனம் கூறின தோழி தலைவியைக் குறி இடம் கொண்டுவரப் போன பின்பு, தலைவன் ''அனிச்சம் பூப் போலும் அழகிய இத்தலைவியின் சிறிய அடிகள் ஐயோ! தீப்பழுத்த பழத்தினது சிவந்த திரள் போல உள்ள கல்லின் கூட்டங்களை உடைய காட்டை இங்கு நின்றும் போய்க் கடக்குமாயின், இனி இவளுக்கு என் காரணமாக வந்து அடையக் கூடிய துன்பம் வேறு என்ன வேண்டும்'' என்று நினைத்து உள்ளம் வாடினன்.

19. கொண்டு சென்று உய்த்தல் [212. வைவந்த]

அங்ஙனம் வாழ நின்று தலைவன் நிற்கத் தோழி தில்லையை வாழ்த்தாதார் மனம்போல இருள் நிறைந்துள்ளது. ''தில்லையை வாழ்த்துபவருடைய மனம்போலப் பொய்கைகள் தெளிந்து நிற்கின்றன, இப்பழைய ஊர் துயில்கின்றது. அதனால் வள்ளலே! உனது உள்ளத்தில் நீ கருதியதைத் தெய்வம் இப்பொழுதே உனக்குத் தரும்;

என் தோழியை(தலைவியை)க் கொண்டு வந்தேன், காண்பாயாக'' என்று தலைவியைக் கொண்டு சென்று அவனொடு அவளைக் கூட்டினள்.

20. ஓம்படுத்து உரைத்தல் [213. பறந்திருந்து]

அங்ஙனம் தலைவியைத் தலைவனிடம் கூட்டிய தோழி தலைவன் தலைவி இருவரையும் வலம் செய்து நின்று, "சிலம்பா! அறம் திருத்துதற்குக் காரணமாகிய உனது அருள் இவள் மாட்டு வேறுபடுமாயின் மறையின் திறமும் பிறமும், கடலும் வற்றிப் போகும். ஆதலால் இவளிடத்து உன் அருள் மாறுபடாமல் இவளைப் பாது காப்பாயாக'' என்று தலைவியைத் தலைவனுக்கு ஓம்படுத்து உரைத்தனள். (தலைவியைத் தலைவனுக்குக் கையடை ஆக்கினள்.)

21. வழிப்படுத்து உரைத்தல் [214. ஈண்டோல்லை]

அங்ஙனம் ஓம்படுத்து உரைத்த தோழி "ஆயமும் அன்னையும் உங்கள் பின் வராமல் இவ்விடத்தே நிறுத்தி, இவ்வூரின்கண் உண்டாகிய அலர் ஒருவாறு அடங்கப் பின்பு நான் அங்கு வந்து உங்களை விரைவில் காணக் கூடியதாகும். நீங்களும் திருவொடு சென்று தூரத்தில் உள்ள தில்லை நகரைச் சேர்வீராக'' என்று இருவரையும் வழிப்படுத்திக் கூறினள்.

22. மெல்லக் கொண்டு ஏகல் [215. பேணத்திருத்திய]

தோழி இவர்களை விட்டுப் போகத் தலைவியை உடன் கொண்டு போகா நின்ற தலைவன் தலைவியை நோக்கிப் "பெரிய ஊர்கள் நாம் போகும் வழியில் இருபக்கமும் ஒன்றுக்கொன்று நெருங்கி உள்ளன. முன்னுக உள்ள காடுகள் நாம் காணும் வண்ணம் திருந்தச் செய்யப் பட்டன போலும். நீ பைய வருவாயாக'' என்று கூறித் தலைவியை மெல்லக் கொண்டு சென்றான்.

23. அடல் எடுத்து உரைத்தல் [216. கோடித்தேர்]

அங்ஙனம் தலைவியைக் கொண்டு சென்ற தலைவன் ஆராத்தே சிலர் வருவதைக் கண்டு வருபவர் நின் ஐயன் மாராயின் அம்பலத்தாடும் சிவனுடைய திருவடியை நினையாதவரைப் போல யான் அஞ்சுவேன். ஆனால் மறவர் (வீரர்) திரளும் வெய்ய, கரி நிரையும் அனைத்தும் திரண்டுவரினும் என் கையிலுள்ள வேலின் வாய்க்கு இரை போதாது. மங்கையே! இதனை இவ்விடத்தே காண்பாயாக'' என்று தலைவியின் அச்சம் தீர தன் அடல் (வலிமையை) எடுத்து உரைத்தான்.

24. அயர்வு அகற்றல் [217. முன்னோன் அருள்]

இவ்வாறு தலைவியின் அச்சத்தைத் தீர்த்துக் கொண்டு போகா நின்ற தலைவன் (எல்லார்க்கும் முன்னவனுடைய அருளை முற்பிறப்பில் நினையாத தீவினையாளர்க்குத் துன்பம் செய்யும்) இந்தப் பாலை நிலத்தை இப்பொழுதே நாம் கடந்து, என்னை உடையான் கூத்தாடும் சிற்றம்பலத்தை இன்று சென்று காண்போம். இது அன்றோ நமக்கு வருகின்ற இன்பம். இனி நமக்கு ஒரு குறைவில்லை'' என்று தலைவியின் அயர்வு (வழி வருத்தம்) தீரக் கூறினன்.

25. நெறி விலக்கிக் கூறல் [218. விடலை உற்றோர்]

தலைவியின் அயர்வை அகற்றிக் கொண்டு சென்ற தலைவனை, ''விடலாய்! (காளைப் பருவத்தினனே) இனி நீங்கள் செல்லும் வழியில் நன்மக்கள் இல்லை. கொடிய வேடரே உள்ளார், நீ தனியை; இவளோ வழி வந்த வருத்தத்தால் வாடினாள். பொழுதும் சென்று விட்டது. இக்கொடிய சுரத்தை (பாலை நிலத்தை) இப்பொழுது கடப்பாரும் இல்லை. அதனால் இங்குத் தங்கிப் போகவும்'' என்று தலைவனிடம் அவ்விடத்து உள்ளோர் வழி விலக்கிக் கூறினர்.

26. கண்டவர் மகிழ்தல் [219. அன்பு அணைத்து]

அவ்வாறு நெறி விலக்குற்று வழி வருத்தம் தீர்ந்து தலைவனும் தலைவியும் செல்ல 'அன்பால் அணைத்து அவள் பின்னே ஆடவன் ஒருவன் செல்கின்றான். அவன் பின்னே அவள் நெடும்பொழுது செல்கின்றாள். இப்படிச் செல்வதால் இவர்கள் செயல் இப்பெரிய சுரத்தைக் கடந்து போகிறபடியாயில்லை. மருத நிலத்தில் மலரிடத்தே உள்ள குளிர்ந்த தேனை உண்ட வண்டுச் சாதிகளைப் போலே விளங்கா நின்ற நாடகமாய் இருக்கின்றது'' என்று தலைவன் தலைவி செல்வதைக் கண்டவர்கள் தம்முள் பேசி மகிழ்ந்தனர்.

27. வழிவிளையாடல் [220. கண்கள் தம்மால்]

அங்ஙனம் கண்டவர் மகிழத் தலைவியைக் கொண்டு சென்ற தலைவன் தலைவியை நோக்கி, ''வழிசெல் வருத்தத்தினால் நெகிழ்ந்த மேனியை உடைய உன்னைக் கண்டு நான் என் கண்களாற் கொண்ட பயனைக் கொண்டனன். இனி, கடம்பூர்த் தலத்தில் உள்ள குளிர்ந்த தடாகம் போல இக்கடிய காடானது தட்பம் (குளிர்ச்சி) அடையும் அளவும் உன்னுடைய பண்போலும் மெல்லிய மொழியைச் செவி நிறைய யான் பருகும் வண்ணம் இவ்விடத்து வருவாயாக''என்று கூறித் தலைவியுடன் விளையாடினன். (ஆதித்தன் வெம்மை தணியும் அளவும் நிழலில் இருந்து சில வார்த்தையை என் செவிக்கு இனிதாகச் சொல்லுவாயாக என்றபடி.)

28. நகர் அணிமை கூறல் [221. மின்தங்கு]

இவ்வாறு விளையாடித் தலைவன் தலைவியுடன் செல்வதைக் கண்டவர்கள் ''தில்லைச் சிற்றம்பலத்தை உடையவரது குன்றத்தைக் கடந்து அப்பால் சிறிது வழி நடந்தால், அழகிய தாமரைக் கிடங்கும், வள்ளைப் பாடலைப் பாடும் மகளிர் சேரும் பொய்கைகளும் சூழ்ந்த தில்லை நகர் தோன்றும். அத்துணையும் கடிது செல்வீராக'' என்று கூறினர்.

29. நகர் காட்டல் [222. மின்போல்]

நகரணிமை கூறக் கேட்டுத் தலைவியுடன் செல்லா நின்ற தலைவன், "சிவபிரானைப் போலப் பிறையை அணிந்த மாளிகைகள் அவரைப் போலச் சூலத்தவுமாய், நம்முன் தோன்றும் நல்ல பெரிய நகர்தான் (ஒளியானும் நுடக்கத்தானும் மின் போன்ற கொடிகள் வானமாகிய கடலுள் திரையைப் பரப்பப் பொன்னால் இயன்ற மதில் மேருமலையைக் காட்டப் பொலிகின்ற) புலியூர் என்னும் நம்முடைய நகராம்" என்று தன்னுடைய நகரைத் தலைவிக்குக் காட்டி 'நீ தொழுவாயாக" என்று கூறினன்.

30. பதி பரிசு உரைத்தல் [223. செய்குன்று]

தன் நகரைக் காட்டிச் சென்று அந்த நகரிடைப் புக்கு, "உவை செய் குன்றுகள், இவை நல்ல மலர் வாவிகள்; அவை சந்திரன் இளைப்பாறும் பொழில்கள்; உவ்விடம் உலகத்தில் பொய் முதலாகிய குற்றங்கள் கெட மறையவர் மறை சொல்லுமிடம், இந்திடம் அம்பலவர்க்கு இருப்பிடம்" என்று குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப்பதி இவையெல்லாம் தனித்தனி காட்டி, இதுகாண் நம்பதியாவது எனத் தலைவிக்குத் தலைவன் பதி பரிசு (பதியின் தன்மை) உரைத்தனன். ('இவை' தன்முன் உள்ளவை. 'உவை' சிறிது அப்பாலுள்ளவை. 'அவை' தூரத்திலுள்ளவை.)

31. செவிலி தேடல் [224. மயிலேன்]

தலைவனையும் தலைவியையும் வழி அனுப்பி வந்து பிரிவு ஆற்றாது கவலா நின்ற தோழியை, "மயிலெனப் பேர்ந்து, கொடிபோல் நுடங்கி, மான்போல் விழித்து, குயிலெனப் பேசும் என் பிள்ளை எங்கே? நீ இன்று வருந்தி நிற்பது என்ன காரணம்?" என்று செவிலித்தாய் (தலைவியைப் பற்றி) வினவினள்.

32. அறத்தொடு நிற்றல் [225. ஆளரி]

அங்ஙனம் வினவிய செவிலிக்கு, "திருமாலுக்கும் அரிதாய்த், தில்லை யாவருக்கும் எளிதாம் திருவடியை உடைய சிவபிரானது மலையில் எம்முடைய் தலைவி வண்டலைச் செய்யும் ஆயத்துடன் விளையாடும் பொழுது சிங்க ஏற்றுக்கு ஒப்பார் ஒருவர் நல்ல நிறமுடைய மலர் மாலை ஒன்றை ஏந்திவர, அதைத் தன் பாவைக்கு வேண்டுமென்று விருப்பத்துடன் அவருடன் வேண்டிப் பெற்றுக் கொண்டாள். இத்துணையும் அறிவேன்'' என்று தோழி தலைவியின் உடன்போக்குத் தோன்றக் கூறி, அறத்தொடு நின்றாள் (அறியாத காலத்து நிகழ்ந்ததனை அறிந்த பின்பு ஒழுக்கமாகக் கொள்கையால் நாயகியின் செய்கை கற்பினோடும் பெருமையோடும் மாறு கொள்ளாது; உலகினோடும் அச்செய்கை மாறு கொள்ளாது என்றபடி.)

(அறியாப் பருவத்து நிகழ்ந்ததனை "உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர், கொண்டார்க்கு உரியர் கொடுத்தார்'' என்பதை உட்கொண்டு அறிந்த பின் நிற்றல் அறத்தொடு நிற்றல் என்ப.)

33. கற்பு நிலைக்கு இரங்கல் [226. வடுத்தான்]

தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி "இஃது அறமாயினும் இவள் பருவத்திற்குத் தகாது ஆயினும் அன்று மடுவிலே விழுந்து அவள் வருந்தும்போது தான் இரக்கம் கொண்டு அவளை எடுக்கப் பெற்றோம் என்று மகிழ்ந்து அவளை மடுவிலிருந்து எடுத்து அணைத்துக் காத்து உதவி மகிழ்ந்தவருக்கு இனியன செய்தால் எம் அன்னைக்கு (தலைவிக்கு) நாம் இனியன செய்ததாகும். அவள் (தலைவி) சென்ற வழியில் செல்வதல்லது வேறு வழி இல்லை'' என்று தலைவியின் கற்பின் நிலைமையைச் சொல்லக் கேட்டு உணர்ந்த நற்றாய் இரங்கி வாடினள். (தலைவிக்கு) இனியன 'செய்கை 'அவளை வரைந்து கொடுத்தல். (திருமணம் செய்வித்தல்)

34. கவன்று உரைத்தல் [227. முறுவல்]

இவ்வாறு தலைவியின் கற்பு நிலைக்கு இரங்கி நற்றாயுடன் சொன்ன செவிலி அன்று உள்ளத்தில் ஒன்றை வைத்துப் புன்சிரிப்புடன் என் முலையை முத்தம் கொண்டு என்னை முழுவித் தழுவிக்கொண்டு சிறு விரகுகள் செய்தன எல்லாம் வலிய காட்டைத் தான் செல்ல வேண்டிப்போலும். அதை நான் அப்பொழுதே அறியப் பெற்றிலேன் என்று தலைவியின் நிலையை நினைந்து கவலைப்பட்டாள்.

35. அடி நினைந்து இரங்கல் [228. தாமேதமக்கு]

தலைவியின் நிலைமை நினைந்து கவலைப்பட்ட செவிலி "அனிச்சம் பூ மேல் மிதிப்பினும் ஆற்றாது பதைத்துப் பொங்கா நின்ற அடிகள் இன்று நங்கையே! எரியும் தீ மேல் பதித்த வேல் போலச் செறிந்த காட்டின்கண் வைத்து நடக்க இயலுமோ? தீவினை செய்த நான் பெற்ற என் தாயே! ஆண்டு நீ என் செய்கின்றாய்?" என்று தலைவியை நினைந்து இரங்கினள்.

36. நற்றாய்க்கு உரைத்தல் [229. தழுவினகை]

அவ்வாறு தலைவியின் அடியை நினைந்து இரங்கின செவிலி "தன்னைத் தழுவின என் கை சிறிது சோருமாயின் தான் தனியள் என்றே கருதி உள்ளம் தளர்ந்து அழும் தொழிலைச் செய்யும் பேதையின் (தலைவியின்) அறிவு இப்பொழுது என்னை மனம் வாடப் பண்ணிவிட்டது' என்று அவள் உடன்போனமை ஆற்றாது நற்றாய்க்குச் செவிலி உரைத்தாள்.

37. நற்றாய் வருந்தல் [230. யாழியல்]

உடன் போனதைக் கேட்ட நற்றாய் "மெல்லிய மொழியையும் வலிய மனத்தையும் உடைய பேதை (தலைவி) ஓர் அயலான் பின்னே தன் தோழியை விட்டு என்னையும் அதற்கு முன்னே துறந்து சத்துருக்கள்

முன்னே இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றப் போயினள். இனி எங்ஙனம் ஆற்றுவேன்'' என்று கூறிப் பிரிவாற்ருது வருந்தினள்.

38. கிளிமொழிக்கு இரங்கல் [231. கோன்னுனே]

அவ்வாறு தலைவியின் பிரிவாற்ருது வருந்திய நற்ருய் ''அக்கொடியாள் (தலைவி) மலை வழியில் எவ்வண்ணம் சென்ருள், அங்கு எவ்வண்ணம் தங்குவாள் என்று நான் கூற, ''என்னுடைய அன்னை போயினுள் அவள் எவ்விடத்து உள்ளாள்; இனி என்னைப் பருந்து கொன்று விடும்'' என்ற அக்கிளியின் சொல் தலைவியின் போக்குடன் என் நெஞ்சை அறுக்கின்றது'' எனக் கூறிக் கிளிமொழிக்கு இரங்கினள்.

39. சுடரோடு இரத்தல் [232. பெற்றேன்]

கிளிமொழி கேட்டு இரங்கிய நற்ருய் ''பெற்ற என்னுடன் தன் கிளி இருந்து வருந்த அதனையும் பிரிந்து அறிவு முதிர்ந்து தீ வீசும் காட்டில் சென்ற தலைவியின் முகத்தை, சூரிய மூர்த்தியே! (நின் கதிர்களால் வாட்டாமல்) குளிர்ந்த தாமரை போல மலர்த்துவாயாக, உன்னை யான் இரந்தேன் இதை'' என்று சுடரொடு (சூரியனை) வேண்டினுள்.

40. பருவ நினைந்து கவறல் [233. வைம்மலர்]

இங்ஙனம் சுடரொடு இரந்து வருந்திய நற்ருய் ''என்னுடைய மயில் போன்ற வாட்கண்ணி (தலைவி) ஊரற்கு (தலைவனுக்கு)த் தான் செய்ய வேண்டிய குற்றேவல்களைக் கற்பிக்கு முதுபெண்டிருமின்றித் தானே செய்ய வல்லளாமோ! ஆண்டென் செய்கின்ருள்'' என்று அவளது பருவம் நினைந்து கவலை உற்ருள்.

41. நாடத் துணிதல் [234. வேயின]

தலைவியின் பருவம் நினைந்து கவலை அடைந்த நற்ருய்க்கு ''நீ கவன்று மெலிய வேண்டா, நான்

திசையெல்லாம் போய் அவளை (நின்மகளை)த் தேடி வருவேன்'' எனக் கூறிச் செவிலி அவளை நாடத் துணிந்தாள்.

42. கொடிக்குறி பார்த்தல் [235. பணங்கள்]

செவிலி நாடத் துணியா நிற்ப, ''என் மகளும் மன்னனும் இப்பொழுதே வரும் வண்ணம், (*சிறந்த குணங்கள் ஐந்தினால் விளங்கும் சேட்டைக் குலக் கொடியே!) நீ அழைத்தால் நாங்கள் போட்ட உணவை நீ உண்ணும்பொழுது யாரும் உன்னை ஓட்டாமல், நீ பயப்படாமல் உண்ணலாம். தெய்வத்திற்குப் படைத்த நிணத்தை உடைய பலியையும் உனக்கு வைத்துத் தருவேன். ஆதலால் அவர்கள் வரும்படி நீ ஒருகால் அழைப்பாயாக'' என்று நற்றாய் கொடிக்குறி பார்த்துப் பரவினள்.

43. சோதிடம் கேட்டல் [236. முன்னும்]

இவ்வாறு கொடி நிமித்தம் பெற்று ''இம்மனையில் திருமணத்தை யாம் செய்ய எங்கள் மகளைப் பெறுமாறு உண்டாயின் நான்மறை வல்ல உத்தமரே! நீங்கள் ஆராய்ந்து குற்றந்தீரச் சொல்லுங்கள்'' என்று செவிலி சோதிடம் கேட்டனள்.

---

*சேட்டைக் குலக் கொடி: சேட்டை உறுப்பைப் புடை பெயர்த்தல்; கொடி - காக்கை.

சேட்டைக் கொடி: மூதேவியின் வாகனமாகிய காக்கை; காக்கையின் குணம் ஐந்து: 1. மறைந்து புணர்தல்; 2. கலங்காமை. 3. பொழுது இறவாது இடம் புகுதல். 4. நெடுகக் காண்டல். 5. மடியின்மை.

''காலை எழுந்திருத்தல் காணாமே லேபுணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல்-சாலவே
உற்றாரோ டுண்ணல் உறவாடல் இவ்வைந்தும்
கற்றாயோ காக்கை குணம்.'' (தனிப்பாடல்.)

44. சுவடுகண் டறிதல் [237. தெள்வன் புனல்]

சோதிடம் பெற்றுத் தலைவியைத் தேடிச் சென்ற செவிலி "முள்ளையும் வலிய பரலையும் உடைய இக்காட்டிற் கிடந்த இவை தீவினையை யுடைய யான் எடுத்து வளர்த்தவளுடைய சிறிய அடிச் சுவடாம்; அங்குள்ளவை அக்கள்வனாகிய யானை போலும் வலியை யுடையானுடைய (தலைவனுடைய) அடிச்சுவடாம் என்று உய்த்துணர்ந்து நின்றாள்.

45. சுவடு கண்டு இரங்கல் [238. பாலொத்த]

அவ்வாறு சுவடு கண்டு அறிந்து அவ்விடத்தே நின்ற செவிலி, "அழகிய படுக்கையை மிதிக்கினும் நடுங்கும் எம்மகளின் அடிகள் முன்பு கொப்புளம் கொள்ளும், அத்தன்மையை உடைய அடிமலர்கள் இன்று வேல் போலும் வெய்ய பரல உடைய காட்டின்கண் ஒரு விடலையின் பின் போதற்குத் தக்கனவாய் எவ்வாறு ஆற்றவல்ல ஆயின!" என்று அடிச்சுவடு கண்டு வருந்தி இரங்கி நின்றாள்.

46. வேட்ட மாதரைக் கேட்டல் [239. பேதைப்பருவம்]

அங்ஙனம் சுவடு கண்டு இரங்கின செவிலி அது வழியாகச் செல்லும் போது பொலிவு பெற்ற தொழிலினையும் புலிப்பல் தாலியையும் உடைய ஒரு வேட்ட மாதைக் கண்டு "வேட்ட மாதே! எம் மகளுக்குப் பேதைப் பருவம் கழிந்தது இந்தக் காட்டில் போந்த பின்னர், முன்பு அறியாப் பருவத்தினளாய் இருந்தபோது, என்னைச் சிறிது நீங்கினும் காற்றில் அகப்பட்ட கொடி போல் நடுங்கினவள் இப்பொழுது ஓர் அயலானோடு இக்காட்டு வழியே போயினாள்; அவளை நீ கண்டாயோ? அவள் எவ்வண்ணம் போயினாள்? கண்டாயாகிற் சொல்லுவாயாக" என்று அவ்வேட்ட மாதைக் கேட்டனள்.

47. புறவொடு புலத்தல் [240. புயல் அன்று]

அங்ஙனம் வேட்ட மாதைக் கேட்டு அது வழியாய்ச் சென்ற செவிலி "அயலானுமாய்த் தனியனுமாய் உள்ள ஒருவனுடைய அழகிய சொல்லே துணையாகக் கொண்டு ஒரு மாது கொடிய காட்டில் அவனுடன் சென்றால், அழகை உடைய புருவே! இது தகுதியன்று என்று நீ அவளுக்குச் சொல்லவில்லை; நீ வாழ்வாயாக" என்று புறவொடு தனது மெலிவைச் சொல்லிப் புலந்து வருந்தினள்.

48. குரவொடு வருந்தல் [241. பாயும் விடை]

இங்ஙனம் புறவொடு புலந்துபோன செவிலி "உன் பாவையும் நீயும் நின்று நிலாவும் பெருங் குரவே! என்னுடைய பாவை (என் மகள்) உன் முன்னே இக் கொதிக்கின்ற காட்டில் அசைந்து அதைக் கடந்து செல்வதை விலக்காமல் நீ அதைக் கண்டு நின் றதும் அன்றி இவ்வாறு நிகழ்ந்தது என்று எனக்கு வாய் திறந்து சொல்லவுமில்லை. இஃது உனக்குத் தகுமோ?" என்று குரவொடு வாடி உரைத்தனள்.

49. விரதியரை வினவல் [242. சுத்திய]

அவ்வாறு குரவொடு வருந்திச் செல்லா நின்ற செவிலி "பொக்கணத்தையும் (திருநீற்றுப் பையையும்), எலும்பு ஆகிய அணியையும், கட்டங்கம் (மழு) என்னும் படையையும், சூழ்ந்த சடையையும், மெய் முழுதும் மூடிய திருநீற்றின் வெண் கோலத்தையும் உடையீர்! மிக்க பத்தி உடையவர்கள் போல, பணைத்து இறுமாந்த கொங்கையை உடையாள் ஒரு பித்தி தன் பின்னே வர ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோ?" என எதிரே வந்த விரதியரை வினவினள்.

50. வேதியரை வினவல் [243. வெதிரேய்]

இவ்வாறு விரதியரை வினவி, அவ்வழியாகச் செல்லா நின்ற செவிலி "மூங்கில் தண்டு பொருந்திய

கையையும், மெல்லிய மான்தோல் பொருந்திய தோலையும், வெள்ளை நூலையும், மேக முழக்கம் போலும் மறை ஒலியையும் கொண்டவராய் இவ்வழியில் வருபவர்களே! ஒரு மான் தில்லையம்பலத்தான் கரத்தில் உள்ள மான்போல நோக்கத்தளாய், மயில்போல அசைந்த சாயலை உடையவளாய் (வருத்தும் சுரமே கண்டு துன்புற) ஒரு ஏந்தலோடு நும் எதிரே வந்தாளோ? சொல்வீராக'' என்று எதிரே வந்த வேதியரை வினவினள்.

51. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல் [244. மீண்டார் என]

இங்ஙனம் வேதியரை வினவி அவ்வழியாகச் செல்லா நின்ற செவிலி ''உங்கள் இருவரைக் கண்டு என்னால் தேடப்படுகின்றவர் மீண்டார் என்று கருதி மகிழ்ந்தேன்; அது கிடக்க, இவ்வாறு நும்மோடு ஒத்த ஒழுக்கத்தினராய் முன்னே இருவர் போகக் கண்டீரோ? சொல்லுங்கள்'' என்று கேட்க, அவர் இருவரில் ஆண்மகன் (ஆளி) சிங்கம் போன்றவனைக் கண்டேன் என்று கூறித் தன்னுடன் வந்தவளை நோக்கித் தூண்டப்படாத விளக்கினை ஒப்பவளே! அவன் அயலில் அன்னை சொல்லியது யாது? அதனை நீ அவளுக்குச் (செவிலி) சொல்லுவாயாக'' என்றனன். இது பிறர்மனை நோக்காத பேராண்மை.

52. வியந்து உரைத்தல் [245. பூங்கயிலாய]

இவ்வாறு புணர்ந்துடன் வருவோரை வினவி அது வழியாகச் செல்லா நின்ற செவிலி ''குற்றமில்லாத என் சிறியாள் நின்றது இவ்விடத்தே, தம்மை எதிர்ந்து வந்த வேங்கையின் வாயில் தலைவன் தனது பெரிய கையை மடுத்து, விழுந்து கிடந்து அலறும் வண்ணம் தன் கை வேலினால் அப்புலியைக் கொன்றது அவ்விடத்தே, ஆதலால் அவர்கள் இருவரும் போயின வழி இதுவே'' என்று கூறித் தலைவன் செய்கையை வியந்து நின்றாள்.

53. இயைபு எடுத்து உரைத்தல் [246. மின் தோத்திடு]

இவ்வாறு வேங்கை பட்டதைக் கண்டு தலைவனது ஆற்றலை வியந்து அது வழியாகச் சென்ற செவிலி தான் எதிர் வந்தவர்களைக் கண்டீரோ? எனத் தன் எதிரே வந்தவர்களை வினவ அவர்கள் "அன்னாய் நீ சொன்ன இருவரையும் குன்றத்திடைக் கண்டோம். அவ்விருவரும் ஒருவரோடு ஒருவர் அணைந்து சென்றதாலும் அவன்றன் கழலும் அவடன் சிலம்பும் அவனது வெண்பட்டும் அவளது செம்பட்டும் விளங்க ஒருவடிவை ஒத்ததாலும் அவர்களை உமையாளோடு ஒன்றும் சிவபிரான் (உமாதேவி பங்கனாகிய மகாதேவன்) என்றே கருதி நாங்கள் எல்லாரும் பெரிதும் அவ்வழகைத்தொழ நினைந்தோம். அவர்களை அங்ஙனம் கண்டதால் அந்நன்மை எத்தன்மையதோர் நன்மைதான்! சொல்லலாவது ஒன்றன்று" என்று அவர் (தலைவன், தலைவி) இயைபை எடுத்துக் கூறினார்கள்.

54. மீள உரைத்தல் [247. மீள்வது]

இவ்வாறு எதிர் வந்தவர்கள் தலைவன் தலைவியினுடைய இயைபை எடுத்துக் கூறி "மதயானையைக் கிழித்த நாயகனுடனே தலைவி இந்நெடிய காட்டைக் கடந்து ஓர் இடுக்கண் இன்றித் தில்லையின் எல்லையைச் சேர்வாள். அதனால் அன்னையே! நீ செயற்பாலது மீள்வதே செல்வதன்று" என்று தேடிச் செல்லா நின்ற செவிலி மீண்டு போம்படி கூறினார்கள்.

55. உலகு இயல்பு உரைத்தல் [248. சுரும்பிவர்]

இவ்வாறு மீளக் கூறவும் மீளாமல் கவலையுடன் நின்ற செவிலிக்குச் 'சந்தனமும், கடல் முத்தும் வெண் சங்கும் எந்தத் தேசத்திலும் தாம் பிறந்த இடங்களுக்கு யாதும் பயன்படாது, தம்மை அணிவாரிடத்தே சென்று அவர் மெய்க்கு அணியாகும். அதுபோல மகளிரும்

காக்கின்றோம். ஆதலால் நீர் வரைவு வேண்டாவிடின் எம்மைப் புனைந்துரைக்க வேண்டுவதில்லை''* என்று கூறிப் பின்னும் வரைவு தோன்றத் தோழி தங்கள் உண்மை நிலையைக் கூறினள்.

4. †ஏதங்கூறி இரவரவு விலக்கல் [253. கடந்தோறும்]

இங்ஙனம் உண்மை உரைத்து வரைவு கடாய தோழி ''சிங்கம் தனக்கு யானையாகிய உணவைத் தேடி இரவில் இருளில் காடுகள் தோறும் வருகின்ற வழியில் நீ தனியாக கைவேலே துணையாக வந்தால் அன்பனே! எம்மிடத்து உண்டாகிய உன் அருள் எங்களுக்குத் துன்பமாகத் தோன்றுகின்றது. இனி இந்த இருளில் வாரா தொழிவாய்'' என ஏதம் கூறி தலைவனை இரவுவரவு விலக்கினள்.

5. ‡பழிவரவு உரைத்துப் பகல்வரவு விலக்கல் [254. களிறுற்ற]

இவ்வாறு இருளில் வாரா தொழிக என்றது பகல் வரச் சொன்னவாறுமென வுட்கொண்டு, தலைவன் பகற் குறிச் சென்று நிற்பத், தோழி எதிர்ப்பட்டு, ''ஐயனே! நீ பகல் வந்து எமக்குச் செய்கின்ற மெய்யாகிய அருள் புறத்தார் அறிந்து வெளிப்பட்டுப் பழியாக வந்துள்ளது. அதனால் சிற்றம்பலத்தை நெஞ்சால் உருதாரைப் போல நாங்கள் இடர்ப்படுகின்றோம். இனிப் பகல் வரவு ஒழிவாயாக''என்று பழிவருதல் கூறிப் பகல் வரவு விலக்குகின்றாள்.

6. தொழுதிரந்து கூறல் [255. கழிகட்]

இங்ஙனம் பகல்வரவு விலக்கின தோழி இவன் இரவு வரவும் கூடும் என உட்கொண்டு, ''கண்ணீர் பொழிந்து மயில் போலத் துவளா நின்ற தலைவி காரணமாகச்

---

* செய்யுள் 130 பார்க்க. †. செய்யுள் 157 பார்க்க.
‡. செய்யுள் 139 பார்க்க.

பிளத்தாக்கும் ஆளிக்கும் பயப்பட்டு யானைகள் திரண்டு புடை பெயராத ஓரிடத்தே திரண்டு நிற்கும் இரவின்கண் நீ வாராது ஒழிவாயாக; நின் கழல்களைக் கையால் தொழுது ,நின்னை இரக்கின்றேன் இதனை''. என்று வரைவு தோன்றத் தலைமகனைத் தொழுது இரந்து கூறினாள்.

7. தாயறிவு கூறல் [256. விண்ணும்]

இங்ஙனம் தோழி தலைவனைத் தொழுது இரந்து கூறியும், வேட்கை மிகவால் பின்னும் தலைவன் குறியிடைச் சென்று நிற்ப, அக்குறிப்பு அறிந்து, ''நம் கானலிடத்து அரை இரவில் ஒரு மணி நெடும் தேர் வந்திருக்கக் கூடும் என உட்கொண்டு அன்னை சிறிதே கண்ணும் சிவந்து, என்னையும் பார்த்தாள். ஆதலால், இவ்வொழுக்கத்தை அறிந்தாள் போலும்'' என்று தோழி தலைமகளுக்குக் கூறுவாள் போன்று சிறைப்புறமாகத் தலைமகனுக்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறினள்.

8. மந்திமேல் வைத்து வரைவு கடாதல் [257. வான்தோய்]

சிறைப் புறமாகத் தாயறிவு கூறித் தோழி தலைவனிடம் சென்று ''பொழிலின்கண் உள்ள நல்ல மாங்கனியை ஒரு கடுவன் தேனில் தோய்த்து மந்தியின் வாய்க் கொடுத்து நுகர்வித்துத் தம்முள் இன்புறுவதைக் கண்டு இது (இந்த ஆசை) நம் காதலர்க்கு நம்மாட்டு அரிதாயிற்றே (இல்லாது போயிற்றே) என நீ வரையாமையை நினைந்து அவள் (தலைவி) ஆற்றாளாயினாள்.'' என மந்திமேல் வைத்துத் தலைவியினது வருத்தங் கூறி வரைவு கடாயினள்.

9. காவல்மேல் வைத்துக் கண்துயிலாமை கூறல் [258. நறைக்கண் மலி]

அவ்வாறு மந்திமேல் வைத்து வரைவு கடாவப்பட்ட தலைவன் இது (நேரில் காணுதல்) நம் காதலியிடத்து

நமக்கு அரிதாயிற்று எனத் தானும் ஆற்ருனாய் இரவுக் குறிச் சென்று நின்ருன். அந்நிலைமையில் அந்நகரை இராப் பொழுதின்கண் காக்கும் வேல் இளைஞரது பறைக் கண் படும்தோறும் படும்தோறும் (ஆரவாரிக்கும் தோறும்) தலைவியினுடைய கண்கள் துயிலாது கலங்கி வருந்தின. அக்காரணங் கொண்டு காவல் மிகுதியும் அவளது ஆற்ருமையும் கூறி வரைவு கடாவப்பட்டது; (இஃது இன்னுர் கூற்றென்னுது துறை கூறிய கருத்து) இதுவும் சிறைப்புறமாக வரைவு கடாதலைப் பயக்கும்.

10. பகல் உடம்பட்டாள் போன்று இரவரவு விலக்கல்
[259. கலர் ஆயினர்]

சிறைப்புறமாகக் கண் துயிலாமை கேட்ட தலைவன் ஆதரவு மிகவால் எதிர்ப்பட்டு "நீ வருகின்ற இருள் செறிந்து புலராத இரவும், மின்னி முழங்கிப் பொழிவது போன்று பொழியாத மழையும் புண்ணின்கண் நுழையும் வேலும் மலராம்படி எங்களை வருத்த நின்றன. இதற்கு ஒரு மருந்து இல்லையோ? நும் வரையிடத்து? என்று பகல் உடம்பட்டாள் போன்று இரவரவு விலக்கினள் (இரவில் வர வேண்டாம் என்று கூறினள்.]

11. இரவு உடம்பட்டாள் போன்று பகல் வரவு விலக்கல்
[260. இறவரை]

இதற்கு மருந்து இல்லையோ என்றதால் பகல்குறி உடம்பட்டாள் என்று தலைவன் உட்கொண்டு பகல் குறி செல்லா நிற்பத், தோழி எதிர்ப்பட்டு 'அவளுக்கு (தலைவிக்கு) நீ பகலில் வந்தால் உன் அருள் மிக்க அலராக நிற்கும். அதனால் நீ பகல்குறி இடத்தில் வர வேண்டாம்'' என்று கூறி பகல் வரவு விலக்கினள்

12. இரவும் பகலும் வரவு விலக்கல் [261. சுழியா]

இவ்வாறு பகல் வரவு விலக்கின தோழி, "ஐய நீ பகலில் வந்தால் அலர் (பழி) உண்டாகும். இரவில்

வருவதால் காவல் மிகுதி முதலிய காரணத்தால் உன்னை எதிர்ப்படுதல் அருமையால் சிறிதும் பயன் இல்லை. ஆதலால் நீ இருபொழுதும் வர வேண்டாம்" என்று தலைவனுடைய வரவை இரவும் பகலும் விலக்கினள். (இதன் பயன் இரவுக் குறியும் பகற்குறியும் விலக்கி வரைவு கடாதல்)

13. காலம் கூறி வரைவுகடாதல் [262. மையார் கதலி]

இவ்வாறு இருபொழுதும் வரவு விலக்கின தோழி "சிலம்பா! மதி நிரம்பா நின்றது; அம்பலத்தானுடைய மலையில் உள்ள இள வேங்கைகள் பூத்துப் பொன் மாலை போலத் தோன்றின. இனி மெய்யாக உனக்கு அரியது யாது? நினக்கு வரைவொடு வருதற்குக் காலம் இது" என்று காலம் கூறி வரைவு கடாவினள்.

14. கூறுவிக்குற்றல் [263. தேமாம் பொழில்]

(தலைவியின்) மேகலை கழலுவதைக் கண்டும் தலையளி செய்யாது நின்ற தலைவன் நம் அல்லலைக் கண்டால், நம்மால் தலையளிக்கப்படுவார். இவ்வாறு வருந்துதல் தகாது என்று தாமாக அறிகின்றிலராயின் நாம் சொல்லும் இயல்புகள் என்ன? என்று தோழி தலைவனொடு புலந்து நீயாகிலும் சென்று கூறு என்பது குறிப்பால் தலைவிக்குத் தோன்றத், தலைவன் வரைவு உடம்படாமையைத் அவளுக்குக் (தலைவிக்குக்)கூறினள்.

15. செலவு நினைந்து உரைத்தல் [264. வல்சியின்]

வரைவு உடம்படாமையால் தோழி தலைவனொடு புலந்து கூறுதலைக் கேட்டு, அக்குறிப்பு அறிந்து கல்லதரின்கண் நீர் வந்தவாறு எங்ஙனே என்று சொல்லுவாரைப் பெற்றேமாயின் (தலைவர் அங்ஙனம் சொன்னால்) மிகா நின்ற இருளிலே அவர், (தலைவர்) இருந்த வழி (இருந்த இடத்தில்) செல்லுதல் அரிதன்று. சென்றே

மாயினும் அவ்வாறு சொல்லுவாரில்லை'' என்று தலைவி தான் செல்லுதலை நினைத்துத் தோழியிடம் தலைவனுக்குக் கேட்கும்படி சிறைப்புறமாகக் கூறினள்.

16. பொலிவழி வுரைத்து வரைவு கடாதல்

[265. வாரிக் களிற்றின்]

தலைவி வருந்தா நின்றமை சிறைப்புறமாக அறிந்த தலைவன் குறியிடை வந்து நிற்பத் தோழி எதிர்ப்பட்டு 'ஐய! களிற்றின் மருப்பினின்று சிதறும் முத்துக்களை வாரி அவற்றின் அருமையைக் கருதாது தமக்கு இன்பம் தரும் வேரிக்கு (கள்ளுக்கு) முகந்து கொடுத்தாற் போல என் ஐயரது (தந்தை முதலோருடைய) காவலை விட்டு நின் வயத்தளாகிய இவளது (தலைவியின்) அருமை கருதாது நினக்கு இன்பம் செய்யும் களவொழுக்கம் காரணமாக மயில் போன்ற இவளை இகழ்ந்து மதித்தாய்; அதனால் தன் தன்மையை இழந்து இவ்வாறு பொலிவு அழிந்து இவள் இருத்தல் தகுமோ? நீயே சொல்?' என்று தோழி தலைவியின் பொலிவு அழிவதைக் கூறி வரைவு கடாவா நின்றாள்.

குறிப்பு: 'கஎ. வரைவு முடுக்கம்' என்னும் இவ்வதிகாரம் 1. வருத்தமிகுதி கூறி வரைவு கடாதல் முதலான 16 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

கஅ. வரைபொருட் பிரிதல்

தோழியால் வரைவு முடுக்கப்பட்டு வரைபொருட் பிரிதல் நிகழும். அது பின்வருமாறு:

1. முலை விலை கூறல் [266. குறைவிற்கும்]

இவ்வாறு தோழியால் வரைவு முடுக்கப்பட்ட தலைவன் தான் வரைவொடு வரும்பொருட்டுத் தோழியை

நோக்கி நீ சென்று அவள் ஐயன்மாரை முலைவிலை பாயாக என “நீ அவள் வேண்டிக் குறை உடையை யாய் நிற்றலாலும், உன் கல்வி மிகுதியாலும், செல் வாலும் (இருமுது குரவர் உன்னைக் கொண்டாடுதல்) உன் குலச் சிறப்பாலும், நீ அனுப்பவந்த பெரியோர்க ளுடைய அறிவோடு கூடிய ஒழுக்கத்தாலும், நீ அவளை அடைதற்குத் தக்க நீதி இருப்பதாலும் (நீதி - உள்ளப் பொருத்தம் உள்வழி மருது கொடுத்தல்) நின் வரவை எமர் ஏற்றுக் கொள்வர் அல்லது விலை கூறுவராயின் அவளுக்கு ஏழ் உலகும் விலை போதாது” என்று தலைவ னிடம் தோழி முலைவிலை கூறினள்.

2. **வருமது கூறி வரைவுடம் படுத்தல்** [267. வடுத்தன]

இவ்வாறு முலைவிலை கூறிய தோழி “நீ வரைவொடு வாராது இரவருள் செய்யா நின்ற இது கெர்ப்பத்துக்கு ஏதுவானால் நம் எல்லார்க்கும் பொல்லாதாம்; அது படாமல் எமரால் கேட்கப்பட்ட பொருள்கள் விரையக் கொண்டு வந்து அவளை வரைந்து கொள்வாயாக” என்று தோழி தலைவனிடம் கூறி வரைவு உடம்படுத் தினள்.

3. **வரைபொருட் பிரிவை யுரையெனக் கூறல்** [268. குன்றம்]

அவ்வாறு வரைவுடம் படுத்தின தோழிக்கு “இனி நான் குன்றத்திடை உள்ள காட்டைக் கடந்து போய் நுமர் சொல்லும் நிதியைத் தேடிக் கொண்டு வந்து நும் மிடம் சேர்வேன். நீ சென்று தலைவியை நான் வரும் வரையில் வாடாத வண்ணம் இருக்கும்படி சொல்ல வேண்டுவன சொல்லுவாயாக; யான் பிரிந்தமை கூறி அவளை ஆற்றுவித்துக் கொண்டிருப்பாயாக” எனத் தலைவன் வரை பொருட்குப் பிரிகின்றமையைக் கூறினன்.

4. **நீயே கூறென்றல்** [269. கேழேவரை]

இவ்வாறு பிரிவு அறிவிப்புக் கூறின தலைவனுக்கு “நீ இரவு வரினும் பகல் பிரிந்து போவாய்” என்று

அதனையே உட்கொண்டு 'வாழேன்' என இருக்கும் தலைவியை அவளுடைய நுதலும் தோளும் முதலாயின வற்றைத் தடவி நிமிடமளவும் நான் தாழேன்'' (தாமதிக்க மாட்டேன்) என்னும் உரையை முன்னதாகச் சொல்லி ஏகுவாயாக''என்று தோழி தலைவியின் பிரிவாற்றுமையைத் தலைவனிடம் கூறினள்.

5. சொல்லாதேகல் [270. வருட்டின்]

நீயே கூறென்று சொன்ன தோழிக்குத்''தலைவியின் நுதலும் தோளும் முதலாயினவற்றைத் தைவந்து (தடவி) ஒன்று சொல்லக் குறிப்பேனுயின் இஃது என் கருதிச் செய்கின்ருனென்று மயங்குவாள்; இன் சொல் லுடன் ஒன்று சொல்லலுறுவேனுயின், அக்குறிப் பறிந்து உள்ளம் நடுங்குவாள்; இனி வெளிப்படப் பிரிவுணர்த்திப் பொருள் தேடி முடித்துக் கடிதில் வருவேனென்று சூளுற்றுத் தெரிவிப்பேனுயின் மனம் மகிழ்ந்து தேருள் (தெளியாள்) இவ்வாருழிய அறிவிக்கும் வகை வேறில்லை. அதனுல், அவளுக்கு என் பிரிவை எவ்வண்ணம் சொல்லிப் போவேன்; ஒருவாற்ருனுமரிது; நான் வரைய வருவேன். நான் வருமளவும் தலைவியை நீ ஆற்றுவித்துக் கொண்டிருப்பாயாக'' என்று தோழியிடம் கூறித் தலைவன் தலைவியிடம் சொல்லாது பிரிந்து போயினன்.

6. பிரிந்தமை கூறல் [271. நல்லாய்]

இவ்வாறு முன்னின்று பிரிவுணர்த்த மாட்டாமையால், தலைவன் சொல்லாது பிரியா நிற்பத், தோழி தலைவியிடம் சென்று ''நல்லாய்! நம் தலைவர் நம்மவரால் கேட்கப்பட்ட எல்லா நிதியையும் ஒருங்கே கொண்டு வர வேண்டி அழல் உடைய காட்டைக் கடக்க இன்று சென்ருர். அதனுல் நமக்கு வந்ததனை யாதென்று சொல்லுவேன். கேட்டதைக் கொண்டு வரச் சென்ருராதலின் இன்பம் என்பேனே? அழற்காட்டைக் கடக்கச்

சென்றமையால் துன்பம் என்பேனோ? என்று பொதுப் படக் கூறுவாள் போன்று, வரைவு காரணமாகப் பிரிந்தா ராதலின் அது நமக்கு இன்பமே'' என்று கூறித் தலைவியை ஆற்றுவித்தாள்.

7. நெஞ்சொடு கூறல் [272. அருந்தும்]

சொல்லாது பிரிந்தமை கூறக் கேட்ட தலைவி வருந்தா நின்று ''நமக்கு ஏதம் பயக்கும் ஒழுக்கம் ஒழிந்து, குற்றமில்லாத ஒழுக்கத்தை கைப்பற்றிச் சென்ற தலைவனது நீதி நம்மைக் கெடுக்கும் என்று, மட நெஞ்சமே! நீ கருதினால் யாம் இன்புற்று வாழும் உபாயம் வேறு யாது'' என்று தன் நெஞ்சொடு கூறினள்.

8. நெஞ்சொடு வருந்தல் [273. ஏர்ப்பின்னை]

அங்ஙனம் தன் நெஞ்சொடு கூறின தலைவி ''அன்று அவரை (தலைவரை) விடாது என்னை விட்டு அவரது தேர்ப்பின் சென்ற நெஞ்சம் இன்றும் அவ்வாறு செய்யாது என்னை வருத்துகின்றது. ஏனோ அறிகிலேன்'' என்று தன் நெஞ்சொடு வருந்தினள்.

9. வருத்தங் கண்டுரைத்தல் [274. கானமர்]

தலைவி தன் நெஞ்சொடு வருந்துவதைக் கண்ட தோழி ''தமது துணையாம் மாதர்களின் கண்ணைத் தாம் எய்ய வந்த மானின் கண் நினைவுபடுத்தலால் அம்பை எய்யாத குரவர்களின் மலைக்கு உரியவர் நம் தலைவரா தலின், அவர் உனக்குத் துன்பத்தைத் தரமாட்டார். நீ வருந்தற்க அவர் தாழாது விரைய வரைவொடு வருவர்'' என்று தலைவியின் வருத்தம் தீர உரைத்தனள்.

10. வறிதொழுகி வற்புறுத்தல் [275. மதுமலர்]

இவ்வாறு தலைமகளது வருத்தம் கண்ட தோழி ''அன்று நீ அவனை (தலைவனை)ப் புதிதாகப் பார்த்த

சோலையையும் அன்று உன்னை விட்டுப் பிரியேன், பிரியின் ஆற்றேன் என்று அவர் கூறிய வஞ்சினத்தினது மெய்ம்மையையும், அன்பையும் நமக்கு மருவி வைத்துப் பின் கதுமெனவெங்கானிற்போகிய போக்கையும், போய்த் தேடு நிதியினது செய்தற்கருமையையும் நினைந்து நீ வருந்தினால் ஏந்திழாய்! அயலார் இம்மலர்ப் பாவை யன்னவளுக்கு (தலைவிக்கு) வேறுபாடு வந்தவா றென்னோ? என்று ஐயுரு நிற்பராதலால் நீ ஆற்ற வேண்டும்'' என்று தலைவியின் வழி ஒழுகி அவளைத் தெருட்டி வற்புறுத்தினள்.

11. வன்புறை யெதிரழிந்திரங்கல் [276. வந்தாய் பவர்]

அங்ஙனம் தெருட்டிய தோழியிடம் ''இளமந்தி மயிலின் முட்டையைப் பந்தாடுகின்ற மலை நாடுடைய தலைவனது பண்பு அழகாய் இருக்கின்றது. தமக்கு ஒரு பற்றுக் கோடின்றி வருந்தும் திருவினை உடையார்க்கு அவன் (தலைவன்) வரைவு மிகவும் இனிது. யான் ஆற்றேன்'' என்று தலைவி வன்புறை எதிரழிந்து இரங்கினள். (வந்தாய்பவர் தோழியாகவும், இளமந்தி தலைவனாகவும், பந்தாடுதல் தலைவியின் வருத்தம் பாராது தான் வேண்டியவாறொழுகும் அவனது (தலைவனது), ஒழுக்கமாகவும் உரைக்கலாம். இது தலைவன் வரைந்து கொள்ள நீட்டிப்ப, தலைவி மன வலிமை இழந்து வாடியது.)

12. வாய்மை கூறி வருத்தந் தணித்தல்

[277. மோய்யேன்பதே]

இவ்வாறு வரைவு நீடுதலால் மனவலிமை இழந்து வருத்திய தலைவிக்கு ''அவர் (தலைவர்) சொன்ன வார்த்தை உனக்குப் பொய் என்பதே கருத்தாயின், இவ்வுலகத்து மெய்யென்பதே சிறிதுமில்லை'' என்று தோழி தலைவனுடைய வாய்மை கூறி அவளுடைய (தலைவியினுடைய) வருத்தத்தைத் தணிவித்தாள்.

13. தேருது புலம்பல் [278. மன்செய்த]

இங்ஙனம் தலைவனது வாய்மை கூறித் தலைவியின் வருத்தத்தைத் தணியா நின்ற தோழிக்கு "நான் அவர் கூறிய மொழியின்படி மெய்ம்மை கண்டு வைத்தும் என் நெஞ்சமும் நிறையும் எனக்கு அடங்கி நிற்கின்றில. அதுவுமன்றி என் இனிய உயிரும் (தில்லையை உருதார் போல) வருத்தம் பொறுத்தல் அரிதாக இருக்கின்றது. இவ்வாருக இருக்கும் காரணம் நான் முன்செய்த தீவினையோ, அல்லது காலத்தின் கூத்தோ அறிகின்றிலேன்" என்று சொல்லித் தலைவி தன் மனம் தேருது புலம்பினள்.

14. காலமறைத்துரைத்தல் [279. கருந்தினை]

அங்ஙனம் தேருது புலம்பி நின்ற தலைவி காந்தள் கருவுறக் கண்டு இது தலைவர் வரவு குறித்த கார்காலமென்று கலங்கா நிற்பத், "தினைப்பயிர் ஓம்ப நம்முடைய ஐயன்மார் கடவுளைப் பரவ அக்கடவுள் ஆணையால் காலமன்றியும் மேகங்கள் நீரைச் சொரிந்தன. அதனை அறியாது அதனைக் கார் என்று கருதி இப்பரங்குன்றின் கண் காந்தள் மலர்கள் மலர்ந்தன. நீ அதனுல் கார் காலம் என்று அஞ்ச வேண்டாம் இது தெய்வமழை" என்று தோழி தலைவியை ஆற்றுவிக்க வேண்டிக் காலம் மறைத்துக் கூறினள்.

15. தூது வரவுரைத்தல் [280. வேன்றவர்]

அங்ஙனம் காலம் மறைத்த தோழி "ஒரு தூது வந்திருக்கின்றது. அத்தூது நம்மைப் பிரிந்து சென்றவர் அனுப்பின தூதோ, அல்லது நமக்குத் துன்பத்தைத் தரும் அயலார் அனுப்பின தூதோ அறியேன்" என்று தலைவியிடம் கூறினள்.

16. தூது கண்டழுங்கல் [281. வருவன]

தூது வரவு கேட்ட தலைவி "அயலவருக்குத்

தூதுகள் வருவன போவனவாயிருக்கின்றன. என்னிடம் இன்பக் கலவிகளை முன்செய்து பின் எனது ஆவியைத் தாம் கொண்டுபோய், என் நெஞ்சில் தம்மை இருத்தின காதலர் இன்று ஏதுசெய்யக் கருதி வாராதிருக்கின்றனர் அறிகிலேன்'' என்று ஏதிலார் தூது கண்டு அழுங்கினள்.

17. மெலிவு கண்டு செவிலி கூறல் [282. வேயின]

இவ்வண்ணம் அழுங்கி நின்ற தலைவியைச் செவிலி எதிர்ப்பட்டு அடி முதல் முடி வரை நோக்கி ''இவள் மென் தோள் மெலிந்து, ஒளிவாடி, விழி தன் இயல்பு இழந்து வேறாய், முன்பிருந்த தன்மையள் அல்லள் ஆயினாள். இவள் முருக வேளின் ஆட்சியிற் பட்டனள் போலும். அறிகிலேன்'' என்று தலைவியின் மெலிவு கண்டு கூறினாள்.

18. கட்டுவைப்பித்தல் [283. சுணங்குற்ற]

தலைவியின் மெலிவு கண்ட செவிலி ''இவளுடைய கொங்கைகள் சூதின் (சொக்கட்டான் காயின்) வடிவைப் பொருந்தின இல்லை; இவள் பேச்சு, குதலைமை நீங்கி விளங்குதலை உற்றது இல்லை; நன்மை தீமை அறியும் பருவத்தை இவள் அடைந்திலள். இவள் இளமை இவ்வாறு இருக்கின்றது. அன்னைமீர்! இவளுக்கு உற்ற நோயைத் தெளிய அறிந்து சொல்லுங்கள்'' என்று கட்டுவித்திக்கு உரைத்துக் கட்டு வைப்பியா நின்றாள்.

19. கலக்கமுற்று நிற்றல் [284. மாட்டி அன்றே]

இங்ஙனம் செவிலி கட்டு வைப்பியா நிற்ப,*''இவள் (கட்டுவித்தி) தன் உள்ளம் ஓடியவாறு முழுதையும் புலப் படுத்தி, அலர் தூற்றி அயலார் அன்று மொழியாத

---

* இவள் என்பது தலைவியாகக் கொண்டால் இச் செய்யுள் தோழியின் கூற்றாகும்.

பழியையும் வெளிப்படச் சொல்லி எம்மிடத்து உண்டாகிய பெருநாணினையும் மாள்வித்து எங்குடியினையும் குற்றப் படுத்தியல்லவோ சொல்லுவாள் போலும். இனி என் செய்வது'' என்று* தலைவி கலக்கமுற்று நின்றாள்.

20. கட்டுவித்தி கூறல் [285. குயிலிதன்றே]

இங்ஙனம் கலக்கமுற்று நிற்க, நெகுறி காட்டி இது முருகன் ஊரும் மயில், இது அவனது கொடியின் கண் உள்ள கோழி, இது அவன் சூரைத் தடிந்த வேல், இவையெல்லாம் இப்பரப்பி உள்ள நெல்லின்கண் வந்து தோன்றுகின்ற முருகன் உருவமாம் காண்க'' என்று கட்டுவித்தி சொன்னாள். [முருகன் எனவே முருகணங் கிற்றென்று கூறினாளாம். குறிக்கிலக்கணம் நெல் மூன்றும், இரண்டும் ஒன்றும் படுகை] (அஃதாவது அடியும், கொடியும் உவகையும். இதனில், அடியாவது மயில், கொடியாவது கோழி, உவகையாவது வேல் ஆதலால் முருகணங்கெனவே கூறப்பட்டது.)

21. வேலனை அழைத்தல் [286. வேலன்]

கட்டுவித்தி முருகணங்கென்று கூறக் கேட்டு ''இப் பிள்ளை (தலைவி) இக்குடியிற் பிறந்து வெறியாடுவித்த லாகிய இம்முறைமைக்கண் எம்மை நிற்பித்த பண்பால், வேலன் ஈண்டுப் புகுந்து வெறியாடுவானாக. பலியாக வெள்ளாட்டை அறுக்கவும்'' என்று தாயர் வேலனை அழைத்தனர்.

22. இன்னல் எய்தல் [287. அயர்ந்தும்]

இவ்வாறு வெறியாடுதற்குத் தாயர் வேலனை அழைப்பக் கேட்டு தலைவி ''வெறி ஆடியும், வெள்ளாட்டு மறியின் உயிரை அழித்தும், என் (விளர்ப்பு) நிறம் வேறு பட்டு ஒழியாதாயின், அயலார் என்ன சொல்லுவார்கள்;

---

* தோழி கலக்கமுற்றாள்.

வெறியாட்டால் (இவ்விளர்ப்பு) நிறம் ஒழியுமாயின் தலைவனுக்கு நாம் என்ன சொல்லக்கூடும். ஆதலால் இரண்டு காரணத்தாலும் நான் உயிர் வாழ வழி இல்லை'' என்று தன் நெஞ்சொடு கூறி வருத்தம் (இன்னல்) எய்தினள்.

23. வெறி விலக்குவிக்க நினைதல் [288. சென்றார்]

இருவாற்றாலும் உயிர் வாழ வழி இல்லை என்று கருதி வருத்தமுற்ற தலைவி ''தலைவரால் எனக்கு உண்டாகிய இந்நோயைப் பிறர் தீர்ப்பர் என்பது வெகு அழகாயிருக்கின்றது! என்னோடு ஒன்றுபட்ட தோழி யிடம் நாணினாற் சொல்ல முடியவில்லை. சொல்லா விட்டாலும் வேறு வழியால் உயிர் வாழேன். ஆதலால் என்னுடைய (மறையை) இரகசியத்தைத் தோழிக்கு உரைப்பேன்'' என்று தன் மனத்துள் ஒரு முடிவுக்கு வந்து தோழியைக் கொண்டு வெறி விலக்குவிக்க நினைத்தாள்.

24. அறத்தொடு நிற்றலை யுரைத்தல் [289. யாயும்]

நாண் துறந்தும் மறை உரைத்தும் வெறி விலக்கு விக்க நினைத்து, அறத்தொடு நிற்பாளாய்த் தோழியை நோக்கி ''தில்லை வாழ்த்துவாரைப்போல நான் தூயேன், நான் சொல்லுவதை நீ நம்பாவிட்டால் நான் கடுமை யான சூளுறவைத் தருவேன் (சத்தியம் செய்து கொடுப் பேன்) தாய் வெகுண்டாலும் சரி, அயலார் ஏசினாலும் சரி, ஊர் சிரித்தாலும் சரி, நீயும் வெகுண்டாலும் சரி நடந்ததை உண்மையாகக் கூறுவேன் கேட்பாயாக'' என்று கூறித் தோழியிடம் தலைவி அறத்தொடு நின்றாள்.

25. அறத்தொடு நிற்றல் [290. வண்டலுற்றேம்]

அறத்தொடு நிற்பாளாய் யாம் முன்பு ஒருநாள் கடற்கரையில் வண்டல் செய்து விளையாடும் பொழுது

ஒரு தோன்றல், உங்கள் வண்டல் மனைக்கு நான் விருந்து என்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது அப்புறம் சென்றாய். அப்பொழுது கீழ்க் காற்று மிருதலால் கரை மேல் ஏறும் கடல்நீர் என்மேல் வந்துற்றது. உற, யான் அஞ்சி, தோழியோ தோழியோ என்று விளித்தேன் அதுகண்டு இரங்கி அத்தோன்றல் அருளொடு வந்து தன் கையைத் தந்தான். யானும் மயக்கத்தாலே அதனை நின்கை என்று தொட்டேன். அவனும் பிறிதொன்றும் சிந்தியாது, என் உயிர்கொண்டு தந்து என்னைக் கரைக்கண் உய்த்துக் கண்டலாகிய மரம் மிக்க அச்சேரியின்கண் சென்றான். அன்று என் நாணினால் உனக்கு நான் அதைச் சொல்ல முடியவில்லை. இன்று இவ்வாறு ஆயினபின் இது கூறினேன். இனி உனக்கு அடுப்பது செய்வாயாக'' என்று தலைவனுக்குப் பழி வருங்கொல்லோ என்னும் ஐயத்தோடு நின்ற தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றாள்.

26. ஐயந்தீரக் கூறல் [291. குடிக்கலர்]

தலைவனுக்குப் பழி வருமோ என்று ஐயுற்று அறத்தொடு நின்ற தலைவியின் குறிப்பு அறிந்த தோழி ''நம்முடைய யாயும் (தாயும்) அறிவாள். அதுவன்றி ஊலருக்கு எல்லாம் அலராம். அதனால் நம் குடிக்குப் பழியினும் தலைவனுக்குப் பழி வாராமல் மறைத்துக் கூறும் வழி யாதோ'' என்று தான் தலைவியைப் பாதுகாத்தல் தோன்றத் தன் ஐயந்தீரக் கூறினள்.

27. வெறி விலக்கல் [292. விதியுடையார்]

தலைவியை ஐயந்தீர்த்து வெறிக் களத்திலே சென்று, வேலனை நோக்கி, வெறியாட்டு விழாவில் வேரி (மது) உண்பார் உண்ணட்டும் யாம் அதை விலக்கவில்லை. அன்று பரங்குன்றத்தில் பரந்த நீரில் நாங்கள் முழுகிப் போக அங்கு விரைந்து வந்த ஒருவனுடைய தோள்கள் இந்த நோய்க்குக் காரணமாக, வேறே ஒரு

உபாயத்தைக் கருதும் உன்னைப் போல அறிவுடையார் இவ்வுலகத்தில் இப்பொழுது யாரும் இல்லை போலும் தெய்வமே!'' என்று அறத்தொடு நின்ற திறத்தினில் தோழி வெறி விலக்கினாள் (நீரிடை ஒருவன் வந்து உதவினது குறிப்பினால் வெறி விலக்குதலாகும்.)

28. செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்

[293. மனக்களி]

இங்ஙனம் தோழி வெறி விலக்கி நிற்ப நீ வெறி விலக்குதற்குக் காரணம் யாது என்று கேட்ட செவிலிக்கு ''நீ போய் கயிலைக்கண் உள்ள நம்புனம் காக்கச் சொல்ல, நாங்கள் போய்த் தினைக்கிளி கடியா நின்றோம். அப்போது அவ்விடத்து ஒரு யானை வந்து நின் மகளை ஏதம் செய்யப் புக்கது. அது கண்டு அருளுடையான் ஒருவன் ஓடிவந்து அணைத்துப்பிறிதொன்றும் சிந்தியாமல் யானையைக் கடிந்து அவளது உயிர் கொடுத்துப் போயினான்; அறியாப் பருவத்து நிகழ்ந்ததனை இன்று அறியும் பருவம் ஆதலால் உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர் என்பதனை உட்கொண்டு இவ்வாறு (தலைவி) உள் மெலியா நின்றாள்; இனி அடுப்பது செய்வாயாக'' என்று தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்.

29. நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

[294. இளையாள்]

இங்ஙனம் தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி கயிலைக்கண் பயிலும் திருவாட்டியாம் இளைய ளாகிய இவளை என் சொல்லிப் புகழுவோம்; முன் எழும் இரண்டு எயிறு (பற்கள்) முளையாத இளமைப் பருவத் திலேயே அறிவு முதிர்ந்தாள் இவள்' என்று தலைவியின் கற்பு மிகுதி தோன்ற நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள்.

30. நேர்வரவுகூறல் [295. கள்ளினம்]

இங்ஙனம் நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்ப, அந்நிலையில் புள்ளினமும் கடல் திரையும், மங்கலம்

கூறும் புலவரின் கூட்டமும், வண்டுகளும், வலம்புரிச் சங்குகளும் ஆரவாரிப்பத் (தலைவனுடைய) பெருந்தேர் ஒலி வருவது கேட்ட தோழி உவகையோடு சென்று தலைவிக்குக் காதலரின் தேர் வரவு எடுத்துக் கூறினள்.

31. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்

[296. பூரண பொற்குடம்]

தலைமகளுக்குத் தோழி தேர்வரவு கூறி நின்ற அந் நிலையில் ''தில்லை போன்ற இவளுக்குத் (தலைவிக்கு) மன்றல் என்று மணமுரசு எங்கும் ஒலி செய்து நின்றது. அதனால் வாயில்கள் தோறும் நீரால் நிறைக்கப்பட்ட பொற்குடத்தை வைக்க, மணிமுத்தம், பொன் பொதிந்த தோரணம் எங்கும் ஓங்குவதாக, தூரியங்கள் (வாத்தியங்கள்) ஆர்ப்பன ஆகுக. இவ்வாறு நாம் மனையை அலங்கரிப்போம்'' என்று மனையில் உள்ளார் மகிழ்வொடு கூறி நின்றார்.

32. ஐயுற்றுக் கலங்கல் [297. அடற்களி]

அங்ஙனம் மண மனையை அலங்கரியா நிற்ப, நமது வீட்டில் முழங்குகின்ற பெரிய மணமுரசு மலையின்கண் மதத்தை உடைய களி யானையை அன்று நம்மேல் வராமல் நம்மைக் காத்தவருக்கோ, அல்லது இயைபு இல்லாத (சம்பந்தம் இல்லாத) வேறு யாவருக்கோ அறிகின்றிலேன் என்று தலைவி ஐயுற்றுக் கூறினள்.

33. நிதி வரவு கூறுநிற்றல் [298. என் கடைக் கண்]

ஐயுற்றுக் கலங்கி நின்ற தலைவிக்குத் "தமக்கு ஒரு பயன் கருதாது நமக்கு இறுதியைப் பயக்கும் யானையை அன்று கடிந்தவர் நம் கடைமுன் தோன்றும் முழுநிதியை (குறைவில்லா நிதியை) (நமர் வேண்டிய படியே) நின்னை மணந்து கொள்ளக் கொண்டுவந்து விட்டார்''. என்று தோழி மகிழ்தரு மனத்தொடு நிதி வரவைக் கூறினள்.

குறிப்பு: 'கஅ. வரைபொருட் பிரிதல்' என்னும் இவ் வதிகாரம் 1. முலைவிலைகூறல் முதலான 33 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

கக. மணம் சிறப்புரைத்தல்

மணஞ் சிறப்புரைத்தல் என்பது வரைந்த பின்னர் (மணம் ஆன பின்பு) மணஞ் சிறப்புக் கூறு நிற்றல்.

1. மணமுரசு கூறல் [299. பிரசம்]

வரை பொருட் பிரிந்து வந்த பின்னர் அருங்கலம் விடுத்தற்கு (நிதி தருதற்கு) முன்றிற்கண் நின்று தலைவனது முரசு முழங்கக் கண்டு மகிழ்வுற்ற தோழி "நம் துயர் தீர நம் இல்லின்கண் புகுந்து நின்று, (மலை போலும் யானையை நம் காரணமாக அழித்தவருடைய) முரசு விளங்குகின்றது. அதுவேயும் அன்றி, வெறி காரணமாக ஒலிக்கும் முருகியமும் நீங்கா நின்றது. இனி என்ன குறை உடையோம்" என வரைவு தோன்ற நின்று தலைவிக்கு மணமுரசு கூறினள்.

2. மகிழ்ந்துரைத்தல் [300. இருந்துதி]

மணமுரசு ஒலி கேட்ட தோழி "சிலம்பன் (தலைவன்) தந்த பெறுதற்கு அரிய தழைகள் (தீயை வலம் கொண்டு வசிட்டன் இடப் பக்கத்துத் தோன்றும்) அருந்ததியைக் காணும் அளவும் (தில்லையை வாழ்த்தினரைப் போல) வாடாது இருந்து விளங்கின" என்று தலைவியைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறினள். (தழைகளை வாடாமல் வைத்து, அத்தழையே பற்றுக் கோடாக ஆற்றி இருந்தாள் என்று தலைவியை மகிழ்ந்து கூறியவாறு தழைகள் வாடாது இருந்தன என்றது முன்னர்த் தான் அவன் (தலைவன்) தந்த தழையை ஏற்ற முகூர்த்தத்தைக் கொண்டாடியவாறு)

குறிப்பு: பாட்டு 282 முதல் இப்பாட்டு முடிய பத்தொன்பதும் அறத்தொடு நிலையினையும், அதன் பின்னர் வரைதலையும் குறித்தனவாகும். இதனுடன் அகத்திணையில் மிகத் திகழும் 'இன்பக் கலவி' 'இன்பக் களவு' முற்றிற்று. 81 ஆம் பாட்டு முதல் இப்பாட்டு (300) ஈருக தோழியால் ஆய கூட்டம்.

3. வழிபாடு கூறல் [301. சீரியல்]

மணம் செய்த பின்னர் மணமனை காண வந்த செவிலிக்கு "அன்னாய்! இத்தில்லையை வணங்கும் நம் காவலரானவர் (தலைவர்) சீர்மை இயலும் உயிரும் உடம்பும் போலஒருவரை ஒருவர் இன்றியமையாமையால் தலைவியின் கருத்தைக் கடவார்; தாமரைப் பூவைச் சேர்ந்த தேனும் சந்தன மரமும் போல இயைந்து, (இடமும் இடத்து நிகழும் பொருளுமாய்) இவளது வழி பாட்டின் கண்ணே தலைவர் நிற்கின்ருர்" என்று தலைவன் தலைவியின்வழி ஒழுகி நின்றதைத் தோழி கூறினள். [ஆவியும் தேனும் தலைவிக்கு உவமையாகவும், யாக்கையும் (உடலும்) சந்தும் (சந்தன மரமும்) தலைவனுக்கு உவமையாகவும் வந்துள.]

4. வாழ்க்கை நலம் கூறல் [302. தோண்டினம்]

மணமனை கண்ட செவிலி மகிழ்வோடு மனைக் கிழத்தியிடம் (நற்ருயிடம்) சென்று "நின் மகளுடைய இல்வாழ்க்கை நலத்திற்கு உவமை கூறின், நின்னுடைய இல்வாழ்க்கை நலமல்லது வேறு உவமை இல்லை; எப்படி என்ருல் அவளது இல்லம் நம் இல்லத்தோடு ஒக்கும்; அவள் நின்னொடு ஒக்கும், திண்தோளவன் (தலைவன்) நின் கொழுநனேடு ஒக்கும். அவளைப் பணிந்து குற்றேவல் செய்பவள் என்னேடு ஒக்கும் அவளின் அயலார் நம்முடைய அயலாரொடு ஒப்பார்" என்று தலைவியின் வாழ்க்கை நலத்தைக் கூறினள்

5 காதல் கட்டுரைத்தல் [303. பொட்டணி]

தலைவியின் இல்வாழ்க்கை நலம் கூறிய செவிலி "அவள் இல்வாழ்க்கை நலம் ஒருபுறம் இருக்க அவன்

அவள்மேல் வைத்த காதலால் அவளது பொய் போலும் இடை இறும் என்று கருதிப் பூணைப் பூட்டி அணியான். மெல்லடி நோதல் அஞ்சித் தவிசை மிதிக்கும் போதும் மலரின் அன்றி மிதிப்பவிடான்; வண்டு மொய்த்தல் அஞ்சிக் குழலில் மலரை வையான். இவை சொல்லுவானேன்! பொறையாம் (பாரமாம்) என்று நுதலில் பொட்டையும் இடான்'' என்று தலைவனுடைய காதல் மிகுதியைக் கூறினள்.

6. கற்பறிவித்தல் [304. தெய்வம்]

தலைவனுடைய காதல் மிகுதியைக் கூறின செவிலி, ''அது கிடக்க, தலைவனை ஒழிய வேறொரு தெய்வத்தைத் தலைவி பணிந்து அறியாள்; முன்னின்று திறை கொடாத பகைவர் வந்து பணியும் வண்ணம் தலைவன் வினைவயின் திறை கொள்ளச் சென்றாலும் திறை கொண்டு வந்து அவளது (தலைவியின்) இல்லத்தல்லது ஆண்டுத் தங்கி அறியான். பெருங்குலத்துப் பிறந்த தூயோரது இயல்பு இத்தன்மையது'' என்று கூறி நற்றாய்க்குத் தலைவியின் கற்பைத் தெரிவித்தனள்.

7. கற்புப் பயப்புரைத்தல் [305. சிற்பம்]

இங்ஙனம் கற்பு அறிவித்த செவிலி ''தலைவியின் கற்பு அந்திக் காலத்து உளதாகிய வடமீனையும் (அருந்ததியையும்) வெல்லும்; அதனால் தலைவன் ஊர்ந்து செல்லும் களிறும் வினைவயின் சென்றால் அவ்வினையை முடித்துக் கொடுத்து வந்து தலைவன் இல்லில் பந்தி இடத்தல்லது ஆண்டுத் தங்காது'' என்று நற்றாய்க்குத் தலைவியின் கற்புப் பயந்த அற்புதத்தை எடுத்து உரைத்தாள். (அந்திக் காலத்துக் கற்புடை மகளிரால் தொழப் படுவதால் அந்திவாய் வடமீன் என்றாள்.)

8. மருவுதல் உரைத்தல் [306. மன்னவன்]

இவ்வாறு கற்புப் பயப்பு உரைத்த செவிலி ''பெருநில மன்னனால் பகை முனைமேல் ஏவப்பட்டுச் சென்றாலும்

சிங்க ஏற்றை ஒப்பானுடைய (தலைவனுடைய) தேர் பிறிதோரிடத்துத் தங்காது; தலைவியும் தன் கணவனாகிய தெய்வத்தை அன்றிப் பிறிதொரு தெய்வத்தைத் தெய்வமாக நினையாள். இஃது இவர் காதல்'' என்று அவ்விருவர் காதலும் மருவுதலை நற்றாய்க்குக் கூறினள்.

9. கலவி இன்பம் கூறல் [307. ஆனந்த]

இருவர் காதலும் மருவுதல் கூறின செவிலி ''இவ்விருவரின் காதலும் களிப்பும் இன்ப வெள்ளத்திடை அழுந்தப் புகுகின்றதோருயிரானது ஓர் உடம்பால் துய்த்தல் ஆராமையின் இரண்டு உடம்பைக் கொண்டு அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்து திளைத்ததனோடு ஒக்கும்; அதுவேயுமன்றி அம்பலத்தைச் சேர்ந்த இன்ப வெள்ளத்தைத் தருகின்ற வீரக்கழல் ஒலிக்கும் திருவடியை உடையவனுடைய அருளைப் பெற்றவரின் இன்பம் போல இவ்வின்ப வெள்ளமும் ஒருகாலத்தும் குறைவு படாது, இவ்வணி நலமும் முதிராது [இவ்வின்ப வெள்ளம் ஒருகாலும் வற்றாது முற்றாது] என்று நாயகி பெற்ற நலத்தைப் பார்த்து மகிழ்ச்சி மிக்க தோழி தன் உள்ளத்தோடு கூறினள்.

குறிப்பு: 'கக மணஞ் சிறப்புரைத்தல்' என்னும் இவ் அதிகாரம் 1. மண முரசு கூறல் முதலான 9 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உ௦. ஓதற் பிரிவு

ஓதற்பிரிவு என்பது வரைந்து கொண்ட பின்னர்த் தலைவனுக்கு முதற்பிரிவு ஓதலாதலாற் கல்வியின் மிகுதி கூறி நீங்கா நிற்றல்.

முன்னரோதலின்றி இவளை வரைந்த பின்னர் ஓத நின்றானோவெனின், அல்லன், முன்னரிவனைப் பொரு

விறந்தா னென்று கூறப் படுதலால் ஓதி முடித்தா னென்பது, தாமோதிய அறம் பொருளின்பங்களே அன்றி பிறவிப்பயனாகக் கூறப்படுவன வேறும் உளவோ என்பதனை ஆராய வேண்டுங் கருத்தினனாதலானும் கல்வியால் தன்னில் தாழ்த்தாரைத் தனது கல்வி மிகுதி காட்டி அவர்களை அறிவித்தல் தருமநூல் விதியாத லானும் பிரியும் என்ப.

1. கல்வி நலம் கூறல் [308. சீரளவு]

திருமணம் ஆன பின்பு ஓதற்குப் பிரிய நின்ற தலைவன் தோழியை நோக்கி, 'ஏந்திழையாய்! நன்மைக்கு எல்லையில்லாது விளங்கும் கல்வியாகிய மேருமலையின் அளவில்லாத எல்லையை அடைந்தவர்கள் [தில்லைப் பெருமானுடைய திருவடிகளை உணர்ந்து நினைந்தவரைப் போல] நன்மைக்கு எல்லையில்லாத தன்மையர் ஆவர்,' என்று கல்வியின் நலத்தை எடுத்துக் கூறினான்.

[தலைவனது சிறு குறிப்பைக் கண்டு தோழி தலைவிக்குக் குறிப்பினால் கூறினாள் என்க.]

2. பிரிவு நினைவுரைத்தல் [309. வீதலுற்றார்]

இவ்வாறு கல்வி நலம் கேட்ட தோழி, அவன் (தலைவன்) பிரிதற் குறிப்பறிந்து, மிகவும் கற்றோர் நன்மைக்கு எதிரில்லாத தன்மையராவர் என்பதை உட் கொண்டு தலைவியை நோக்கிச் "செல்வீ! நின்னை மணந்த தலைவர் [பெருமான் திருவடிக்கே அன்புற்றோராது நன்மை யைக் கல்வி தரும் என்பதனைக் கருதி] கல்வியால் தம்மின் மிக்காரைக் கிட்டி எல்லா நூல்களையும் உணர்த லுற்று வரவேண்டித் துன்பம் தரும் கானிடத்துப்போகக் கருதினர்" என்று கூறினள்.

3. கலக்கம் கண்டுரைத்தல் [310. கற்பாமதில்]

இங்ஙனம் பிரிவு நினைவு உரைப்பக் கேட்ட தலைவியின் கலக்கம் கண்ட தோழி, "நம் அன்பர்

சொல்லால் இயன்றபாவாகிய நூல்களைக் கற்க விரும்பினு ரென்ற அச் சொல்லே தலைவியின் செவியில் வேல் சென்று பாய்ந்தாற் போல எய்திற்று. இனிப் பிரிவை எங்ஙனம் ஆற்றுவன்!” என்று தன் மனத்துள்ளே கூறினள்.

4. வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல் [311. பிரியாமை]

தனது கலக்கத்தைக் கண்டதோழிக்கு, “1. நம்மைப் பிரியாமையும் 2. இருவருக்கும் உயிர் ஒன்றுதலும் 3. பிரியின் பெரிதும் ஆற்றுமையும் ஒருங்கே அக்காலத்து நம் முன்னின்று தலைவர் கூறினர். ஆனுல், இப்பொழுது அவற்றுள் 1. பிரியாமை பொய்யாகக் கண்டோம். ஆதலால் 2. நம் இருவர் உயிரும் ஒன்று என்பதும் 3. பிரியின் உயிர்தரியேன் என்பதும் இப்பிரியாமை யோடு ஒக்கும். இனி நாம் சொல்வதற்கு என்ன இருக் கின்றது?” என்று தலைவி தலைவனது வாய்மொழி கூறி வருந்தினள்.

குறிப்பு: ‘உ0. ஓதற் பிரிவு’ என்னும் இவ் அதிகாரம் 1. கல்வி நலம் கூறல் முதலான 4 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உக. காவற்பிரிவு

காவற்பிரிவு என்பது எல்லா உயிர்களையும் அரசன் பாதுகாக்க என்பது அறநூல் விதி ஆதலால், அக்காவற்குப் பிரிதல்.

1. பிரிவு அறிவித்தல் [312. முப்பான்]

பின்னர் அற நூல் விதியால் நம் தலைவர் உலகத்தைப் பாதுகாக்கும் பொருட்டுப் பிரியக் கருது கின்ருர் என்று தோழி தலைவன் பிரிவைத் தலைவிக்கு அறிவித்தாள்.

2. பிரிவு கேட்டிரங்கல் [313. சிறுகண்]

இங்ஙனம் தோழி சொல்லக் கேட்ட தலைவி "முன்பு ஒரு பெரிய யானை நம்மை வருத்த வந்தபோது அந்த யானையினின்றும் நம்மை உய்வித்த அந்தத் தலைவர் இப்போது இரக்க மில்லாமல் நம்மை விட்டுப் பிரிய நினைந்திருத்தல் தகுமோ!" என்று பிரிவு கேட்ட தலைவி இரங்கி உரைத்தாள்.

குறிப்பு: 'உக. காவற் பிரிவு' என்னும் இவ் அதிகாரம்: 1. பிரிவு அறிவித்தல் முதலான 2 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உஉ. பகைதணி வினைப்பிரிவு

பகைதணி வினைப்பிரிவு என்பது தம்மிற் பகைத்த வேந்தரைப் பகையைத் தணித்து இருவரையும் பொருந்தப் பண்ணுதற்குப் பிரிவு.

1. பிரிவு கூறல் [314. மிகை தணித்தற்கு]

ஒருவர் உள்ள மிகுதியை ஒருவர் தணித்தற்கு அரிதாக நின்ற இரு வேந்தரது வெய்ய போர் நெருங்கிய பகையை மாற்றுதற்கு நமது தலைவர் போக நினைக்கின்றார் என்று தோழி தலைவன் பகை தணிக்கப் பிரிய நிற்பதைத் தலைவிக்குக் கூறினள். [இரு வேந்தர் தம்முள் பகைத்து உடன் மடியப் புகுதா நின்றாரெனக் கேட்டு, அவ் விருவரையும் அடக்க வல்ல திறலுடையராதலின், அவரைப் பகை தணித்து அவர் தம்மிலொன்றுபட வேண்டித் தலைவர் பிரியக் கருதா நின்றார் என்பது.]

2. வருத்தந் தணித்தல் [315. நெருப்புறு]

தலைவனது பிரிவு கேட்டு வருந்தி நின்ற தலைவியை நோக்கி நெருப்பை உற்ற வெண்ணெயும், நீரை உற்ற

உப்பும் போல இவ்வாறு மனம் உருகித் தனிமையுற்று வருந்தாது ஒழி.

தலைவனுடைய போக்குப் பொய் என்று கூறித் தோழி அவளது வருத்தத்தைத் தணிவித்தாள்.

குறிப்பு: 'உo. பகை தணி வினைப்பிரிவு' என்னும் இவ்வதிகாரம் 1. பிரிவு கூறல் முதலான 2 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உக. வேந்தற் குற்றுழிப் பிரிவு

வேந்தற் குற்றுழிப்பிரிவு என்பது ஒரு வேந்தனுக் கொரு வேந்தன் தொலைந்து தம்மை வந்தடைந்தால் அவனுக்குதவி செய்யத் தலைவன் பிரிவது.

1. பிரிந்தமை கூறல் [316. போது குலாய]

தம்மை வந்தடைந்த வேந்தரின் பாசறைக்கு நம் தலைவர் சென்றார். இனி அவ்வேந்தரின் பகைவரால் இடப்பட்ட மதில் இன்று யாதாய் முடியுமோ என்று தோழி தலைவியிடம் தலைவன் வேந்தற் குற்றுழிப் போந்ததைக் கூறினள்.

2. பிரிவாற்றாமை கார்மிசை வைத்தல் [317. பொன்னி]

தலைவனுடைய பிரிவைக் கேட்ட தலைவி தனது வருத்தங் கண்டு காதலர் வினைவயிற் பிரிய நீ வருந்தினால் வினை முடியுமாறென்னே என்ற தோழிக்கு, யான் அவர் பிரிந்ததற்கு வருந்துகின்றேனல்லேன்; "பகைவரைக் கிட்டிப்போன நம் தலைவருக்கு இந்தப் பெரிய முகில் பாசறைக்கண் சென்று தோன்றுமோ? அப்படித் தோன்றுமாயின் நம்மை நினைந்து ஆற்றாராய் எடுத்த வினையை முடிக்க மாட்டார் என்று அதற்கு வருந்து

கின்றேன்'' எனக் கார்மிசை வைத்துத் தனது வருத்தத்தைத் தோழிக்கு எடுத்துரைத்தாள்.

3. வானோக்கி வருந்தல் [318. கோலித்திகழ்]

இங்ஙனம் தலைவி வருந்தி நிற்க, அவளை விட்டுப் பிரிந்த தலைவன், ''பார்ப்புக்களோடு பெடைக் குருகைச் சேவல் தன் சிறகால் ஒடுக்கிப் பனியால் வரும் மிக்க குளிரினின்றும் பாதுகாக்கின்ற இரவின்கண் எனது பிரிவு அவளுக்கு (தலைவிக்கு) என்னுங் கொல்லோ'' எனத் தலைவியின் வடிவை நினைந்து வானை நோக்கி வருந்தினன்.

4. கூதிர்கண்டு கவறல் [319. கருப்பினம்]

வீழ்கின்ற பனியினால் எல்லாரும் நெருப்புத்திரளை மேவி நிற்க இந்தப் புயலினம் (மேகக் கூட்டம்) தனித்துள்ள நமக்கே அன்றித் தம்மை அடைந்தார்க்கு உதவி செய்யச் சென்றார்க்கும் (தலைவரிடமும்) சென்று பொருந்துமோ? பொருந்துமாயின் நம்மை நினைந்து ஆற்றாராய் எடுத்த வினையை முடிக்க மாட்டார் என்று தலைவி கூதிர் கண்டு கவலையுற்றாள்.

5. முன்பனிக்கு நொந்துரைத்தல் [320. சுற்றின]

மக்களே யன்றிப் புள்ளுந் தம்பெடையைச் சிறகால் ஒடுக்கிப் பிள்ளைகளையும் தழுவி இனஞ்சூழ அஞ்சாது துயில்கின்ற இந்த இருளில், இடையறாது விழுகின்ற பனியில் கிடந்து வாடித் துன்புறுக என்று என்னைப் பெற்றவளே என்னை இங்ஙனம் வருந்தும்படி பெற்றாள் என்று பெற்றவளை நோவதல்லது நான் வேறு யாரை நோவேன் என்று முன் பனிக்கு ஆற்றாது தலைவி தன் தாயை நொந்து கூறினள்.

6. பின்பனி நினைந்திரங்கல் [321. புரமன்ற]

இப் பெரிய பனி உலகெங்கும் பரந்து துவலைகளைப் பரப்பி மிக்க தனிமையை உடையவர் தம் உயிர் கவர

வெகுண்டு மழை பெய்யுமாயின் தனித்திருக்கும் அவள் (தலைவி) எவ்வாறு பொறுக்க முடியும்? அவளைச் சொல்லுகின்றதென்! எனக்கும் ஆற்றுதல் அரிது என்று தலைவன் தலைவியின் துயரை நினைந்து பின் பனிக்கு இரங்கினன்.

7. இளவேனில் கண்டின்ன லெய்தல் [322. வாழும்படி]

"மேன்மேலும் நிறம் பெற்று இருளா நின்ற இக் குயில்கள் இந்த மாம்பொழிலில் வண்டுகள் சூழப் பட்ட அரும்பிடத்தே சுற்றும் வந்து பற்றின; இனி உயிர் வாழுமாறு ஒன்றுங் கண்டிலேன்" என்று தலைவி இள வேனில் கண்டு வருத்த முற்றாள்.

[இக் கிளவி ஐந்தும் (3 - 7) காலங் காட்ட வேண்டி இத் துறையுள் கூறினு ரென்பது கருத்தாகக் கொள்க.]

8. பருவங் காட்டி வற்புறுத்தல் [323. பூண்ப தேன்றே]

தலைவன் தான் வருவதாகச் சொல்லிப் போன கார்ப் பருவம் வருதல் கண்டு கலங்கி நின்ற தலைவிக்கு, ஏந்திழையாய்! அழகிய பனி முகில்கள் வானிடத்துப் பரவா நின்றன. நம்முடைய தலைவருடைய தேர் இன்றோ நாளையோ இங்கே வரும் இனி உனக்குக் கவலை வேண் டாம் என்று தோழி கார்ப்பருவம் காட்டி வற்புறுத்தித் தலைவியைத் தெளிவித்தாள்.

9. பருவமன்றென்று கூறல் [324. தெளிதரல்]

காரும் வந்தது; காந்தளும் மலரா நின்றன; காதலர் வாரா திருந்தது என்னோ? என்று தலைவி கலங்கி நிற்க, 'சிற்றம்பலத்து ஆண்டவன் கூத்தாட முழவங்கள் முகில் போல முழங்கின; முழங்க, அவற்றை முழவம் என்று உணராது கார் என்று நினைந்து காந்தளும் அலர்ந்து பாம்பு போலும் துடுப்புகளைப் பரப்பி நின்றன. அதனல் இது கார்காலம் அன்று என்று தெளிந்து கொள்வாயாக' எனத் தோழி (தலைவன் வரவு நீட்டித்

தலால்) (தலைவியின்) கலக்கம் தீரப் பருவம் அன்று என்று கூறினள்.

10. மறுத்துக் கூறல் [325. தேன்திக்கு]

பருவம் அன்று என்று கூறிய தோழிக்கு,சிற்றம்பலத்தாருடைய குழையும், நாணும் ஆகிய பாம்பை ஒத்து இக் காந்தள் துடுப்புப்போல மலர்ந்துள்ளன. இது பொய்யோ? அதுவேயுமன்றி தோன்றியின் புதுமலர்களும் மெய்யாகத் தோன்றியுள்ளன. இதுவும் பொய்யோ! ஆதலால்; இது பருவமே என்று தோழியுடன் தலைவி மறுத்துக் கூறினள்.

11. தேர்வரவு கூறல் [326. திருமால்]

அங்ஙனம் மறுத்துக் கூறிய தலைவிக்கு மேகங்கள் எட்டுத் திசைக் கண்ணும் வாரா நின்றன. இது பருவமே. இனி உடன்ற மன்னர் தம்முள் பொருந்துதலால் நம் தலைவருடைய தேர் நமது பொன்னகரிடத்தே வந்து தோன்றும் என்று தலைவியின் கலக்கம்தீரத் தோழி தலைவனுடைய தேர் வரவு கூறினள்.

12. வினைமுற்றி நினைதல் [327. புயலோங்கு]

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைவன் வினை முற்றிய பின்னர் (மதிலை எரியாக்கிய பின்) (உயர்ந்த பெரிய யானையை உடைய வரகுணன் இமயத்தின்கண் வைத்த) கயல் போன்ற கண்ணையும், பெரிய வில்போலும் புருவத்தையும், உடையதாய் இந்திர கோபம் போலும் வாயையும் காட்டி ஒரு திருமுகம் வாரா நின்றது. இனிக் கடிது போதும் என்று தேர்ப்பாகன் கேட்பத் தலைவியின் முகத்தை நினைத்துக் கூறினன்.

[இன்று ஓர் ஆணை ஓலை அரசன் பொறி ஆகிய கயலையும் வில்லையும் உடைத்தாய் அவனது முனிவையும் காட்டி வாரா நின்றது என்று சிலேடை வகையான் பிறிதொரு பொருளும் தோன்றும்.]

13. நிலைமை நினைந்து கூறல் [328. சிறப்பில்]

வினை முற்றிய பின்னர் தலைவியின் அழகிய முகத்தை மனத்தில் கண்டு வாரா நின்ற தலைவன் "உயர்ந்த மதிலை உடைய ஊரில் தெருவின்கண் சேர்ந்து விளையாடி, மென் நடையை உடைய மாடப்புருக்கள் இறப்பின்கண் துயின்று முற்றத்தின்கண் இரை தேர்ந்து உண்ணும் அவளுடைய (தலைவியுடைய) இல்லத்திற்கு இத்தேரை நீ விரையச் செலுத்துவாயாக" என்று தலைவியின் நிலையை நினைந்து தேர்ப்பாகனுக்குக் கூறினன்.

புருக்கள் துணையோடு துயின்று முன்றிலின்கண் விளையாடுவன கண்டு இது நமக்கு அரிதாயிற்று என்று தன் நிலைமையை நினைந்து தலைவி ஆற்றகில்லாளாவள் என்று தலைவியின் நிலைமையைத் தலைவன் உணர்ந்து, விரைந்து தேர் முடுகுவதாக என்று தேர்ப்பாகனுக்குக் கூறினன்.

14. முகிலொடு கூறல் [329. அருந்தேர் (அருந்துவர்)]

[காரின் (மேகத்தின்) ஓட்டங் கண்ட தேர்ப்பாகன் விரையத் தேரை ஓட்டினன். அப்போது] முகிலே! பிரிவால் திருந்திய அழகெல்லாம் அழிந்து துன்புற்று நின்ற தலைவியின் நகரின்கண் வருகின்ற எனது தேரின் முற்பட்டுச் சென்று நீ இயங்காது ஒழிய வேண்டும், இயங்கியும் அத்தலைவியாள் கேட்ப முழங்காது ஒழிய வேண்டும் என்று தலைவன் முந்துற்றுச் செல்லா நின்ற முகிலொடு கூறினான். (எனவே, முகிலுக்கே முற்படத் தேரைக் கடாவ வேண்டும் என்பது கருத்து.)

15. வரவெடுத்துரைத்தல் [330. பணிவார்]

தலைவன் முகிலொடு வருவதைக் கண்ட தோழி, 'வணங்குவாராக உடம்பட்டவர் கொடுத்த திறையையும் பணியாது மாறுபட்டு வருவார் சின்னங்களையும் (விருதுகளையும்) தமது தேருக்கு முன்னாகக் கொண்டு வீரமுரசார்ப்ப, ஆலியா நின்ற யானை, குதிரைகள் கதிபாய

வந்து அணுகினர் நம் தலைவர், இனி நமக்கு ஒருகுறை இல்லை' என்று தலைவிக்கு அவள் பொலிவு அடையும்படி தலைவன் வரவை எடுத்துக் கூறினள்.

16. மறவாமை கூறல் [331. கருங்குவளை]

வினை முற்றி வந்து தலைவியோடு பள்ளியிடத்தானாகிய தலைவன் நீர் வினையிடத்து எம்மை மறந்தீரே என்ற தோழிக்கு, யான் பாசறைக்கண் தங்கிய இடத்தும் கண் முத்து இலங்க நின்ற இக்கிளியை ஒப்பாள் (தலைவி; வைகலும் ஒரு காலமும் என்னை விட்டு நீங்கிற்றிலள்) அதனால் பிரிவில்லை. (வினை முடிந்த பின்பு இவளை நினைத்தலே அன்றி வினை முடிவதற்கு முன்னும் இவளைக் கருதிக் கொண்டுதான் இருந்தேன் என்று தலைவன் தோழியிடம் கூறினன்.)

குறிப்பு: 'உ௩. வேந்தற்குற்றுழிப் பிரிவு' என்னும் இவ்வதிகாரம் 1. பிரிந்தமை கூறல் முதலான 16 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உ௪. பொருள் வயிற்பிரிவு

பொருள் வயிற்பிரிவு என்பது குரவர்களால் படைக்கப்பட்ட பொருள் கொண்டு இல்லறம் செய்தால் அதனால் வரும் பயன் அவர்க்கு ஆம், அத்துணையல்லது தமக்கு ஆகாமையால் தமது பொருள் கொண்டு இல்லறம் செய்தற்குப் பொருள் தேடப் பிரிவது.

1. வாட்டங் கூறல் [332. முனிவரும்]

(முனிவரும்) (துறந்தாரும்) (மன்னரும்) (அரசரும்) கருதுவனவாகிய மறுமையும் இம்மையும் பொருளால் முற்றுப்பெறும் என்று பொதுவகையால் நான் கூற அக் குறிப்பு அறிந்து தலைவியின் கண்கள் பனிவாரா நின்றன.

இவ்வாறு பனிவரும் கண்ணோடு அறிவழிந்து அவள் வருந்திய விடத்து "நீ துன்பம் அடைவது என்ன காரணத்தால் வந்தது? யான் பிரியேன் என்று கூறி நீரைத் தெளித்துத் தலையளி செய்யத் தலைவி அறிவு பெற்று அறிவழிந்த காலத்தைப் பிரிந்த காலமாகவே கருதி, நீர் நனி தாழ்த்து வரும் நாள் இதுவோ? என்று கூறி வணங்கி நின்றாள். இனி என்னால் பிரிவு உணர்த்தல் அரிது. நீ உணர்த்தும் ஆற்றால் உணர்த்துக என்று தோழிக்குத் தலைவன் தலைவியின் வாட்டங் கூறினன்.

[துறந்தார் கருதுவதாகிய மறுமையின்பமும் அரசர் கருதுவதாகிய இம்மையின்பமும் அவரிருவருங் கருது வனவாகிய இப்பொருளிரண்டினையும் பொருள் முடிக்கு மென்று பொதுவகையாற் கூறினான் எனக் கொள்க.]

2. பிரிவுநினைவுரைத்தல் [333. வறியார்]

இங்ஙனம் தலைவியின் வாட்டங் கேட்ட தோழி, "பொருளில்லாதார் இருமையின்கண் வரும் இன்பமும் அறியார் என உட்கொண்டு அருஞ்சுரம் போய் நம் தலைவர் நிலைபெறும் பெரிய பொருள் தேட நினையா நின்றார்" என்று தலைவிக்குத் தலைவனுடைய பிரிவு நிலையை உணர்த்தினள்.

3. ஆற்றாது புலம்பல் [334. சிறுவாள்]

பிரிவு நினைவுரைப்பக் கேட்ட தலைவி, "கண்ணுக்கு மை எழுதுகின்ற பொழுதும் தலைவர் கண்ணுக்குத் தெரிய மாட்டார் என்று கண்ணுக்கு மை எழுதுவதை விட்டு விட்ட என் தன்மையை அறிந்திருந்தும், சிறு உகிர் பட்டுப் படா மாத்திரையிலே பொடியாய்ப் போகிற குவளைப்பூ எறிதற்கு வாள் உறை கழித்தாற் போல அன்பர் (தலைவர்) பிரிவார் என்று கூறினள் இந்தத் தோழியாகிய கொடியவள். இதற்கு யான் கூறுவது உண்டோ?" என்று ஆற்றாது புலம்பினள்.

4. ஆற்றாமை கூறல் [335. வானக்கடிமதில்]

தலைவியின் வருத்தங் கண்ட தோழி, "தலைவர் பொருள் தேடக் காடு கடந்து செல்ல நினைக்கின்றார் என்று நான் சொல்லும்போதே தலைவியின் கொங்கைகள் பொன்னைத் தாரா நின்றன. கண்கள் முத்தத்தைப் பெருக உண்டாக்கா நின்றன, அதனால் இனித் தூரச் சென்று தேடும் பொருள் யாதுள்ளது?" என்று தலைவனுக்குத் தலைவியின் பிரிவு ஆற்றாமையைக் கூறினள்.

5. திணை பெயர்த்துரைத்தல் [336. சுருள் தரு]

இருண்ட பொழிலிடத்து இன்னுயிர் போல இனியராய் ஒன்றுபட்டு வந்து கூடி நமக்குச் சொன்ன அருளைப் புலப்படுத்தும் இனிய சொற்கள் எல்லாவற்றையும் மறந்து தாம் (காவலர்) அரும்சுரம் சென்றே தீவினையேற்குப் பொருளைத் தரத் தொடங்குகின்றது? இது தகுமோ? என்று பிரிவு நினைத்து, பாலை நிலத்தனாகிய தலைவனை மருத நிலத்தனாக்கித் தலைவி தோழிக்குப் புலந்து கூறினள்.

6. பொருத்த மறிந்துரைத்தல் [337. மூவர்நின்]

இங்ஙனம் திணை பெயர்த்துக் கூறின தலைவிக்கு, "தில்லை அம்பலத்தின் சீரைப் புகழாத தீவினையார் சென்று தங்கும் நரகம் போன்ற அழலையுடைய காட்டிற்குப் போவார் போன்று இருந்தார் நம் காதலர் (தலைவர்) இனி நாம் என்ன வார்த்தையை அவருக்குச் சொல்வது?" என்று தோழி மனம் நொந்து சொல்லாது பொருளுக்காகப் பிரிவோனும் தலைவனது கருத்தின் பொருத்தம் அறிந்து மனம் நொந்து தலைவி மருளக் கூறினள்.

[நம் மேல் காதலாய் இருந்தும் இக்காட்டிலே தலைவர் போவது ஒரு காரியத்தைக் கருதி, அக்காரியம் முடியும் அளவும் நாம் ஆற்றியிருத்தல் அன்றி வேறு என் செய்வது? காதலர் கடிது மீள்வர் என்பது கருத்து]

7. பிரிந்தமை கூறல் [338. தேன்மாத்திசை]

"பொது வகையாகப் பிரிவை உணர்த்தினுற் கூடத் தீயது காண்கிறோம் என்று கருதித் தலைவன் தலைவிக்கு உணர்த்தாது பிரியக் கண்ட தோழி, "நின்முன் நின்று பிரிவு உணர்த்தினுல் நீ மேனி ஒளிவாடுவை என உட்கொண்டு, பொருள் முடித்து, கடிதின் மீள்வாராகப் பெரிய களிறுகளோடும் (நால்வகைத் தானையோடும்) நம் தலைவர் வினை குறித்து இன்று சென்ருர்'' என்று தலைவிக்குத் தலைவன் பிரிந்தமை கூறினள்.

8. இரவுறு துயரத்திற்கு இரங்கி யுரைத்தல்

[339. ஆழி ஒன்று]

தலைவனுடைய பிரிவு கேட்ட தலைவியின் ஆற்ருமை கண்ட தோழி, "சூரியனுடைய தேருக்குக் கால் ஒன்று, பாகனுக்கு இரண்டு காலும் இல்லை, மூன்று கண்ணையுடைய தில்லைப் பெருமான் படைத்துள்ள ஐந்து பூதமும் தோன்றியவாறு ஒடுங்கும் ஊழியுடன் ஒவ்வாத பெருமையை உடைய நான்கு யாமத்தின்கண்ணும் ஏழு கடல்களையும் எட்டுத் திசைகளையும் திரிந்து இளைத்த பின்பு அல்லவா சூரியனுடைய பெருந்தேர் இங்கு வந்து தங்குவது; ஆதலால் அதன் வரவு இப்போது எங்கே? ஆற்றாமையும் இவளை (தலைவியை) எங்ஙனே ஆற்றுவிப்பது?'' என்று தன் மனம் அழிந்து வருந்திக் கூறினாள்.

[ஐம்பூதமும் ஆறுகள் ஒடுங்கும் ஏழு கடலும் என்று வாளாமல் ஐம்பூதத்தைப் பிரித்துக் கூறினர் என்றும் கொள்ளலாம். இரவும் பகலும் ஒப்பவருமாயினும் இரவிடத்தே ஆற்றுவித்தலை அரிது என்று தோழி சொன்னது.]

9. இகழ்ச்சி நினைந்தழிதல் [340. பிரியார் என]

இங்ஙனம் தோழி இரக்கமுற்றுக் கூற "முன்னர் அவர் [உலகின் மேல் வைத்து உணர்த்திய வழி]

நீட்டித்துப் பிரிவாராயினும், இப்பொழுது இவர் பிரியாரென நான் அவர் பிரிவு இகழ்ந்து இருந்தேன்; முன்நின்று பிரிவுணர்த்தின் இவள் உயிர் தரியாள் என்று அவர் உணர்த்துதலை இகழ்ந்து போயினர்; அத்தன்மை ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் என்னை அழிவிக்கின்றன'' என்று கூறித் தலைவி மனம் வாடினள்.

10. உருவு வெளிப்பட்டு நிற்றல் [341. சேணுந்திகழ்]

இவ்வாறு தலைவி இகழ்ச்சி நினைந்து அழியா நிற்ப, பார்க்கும் திசைதோறும், கண்ணாகிய கரிய கயல்களையும் வாயாகிய செய்ய கனியையும் பொன்னால் இயன்ற பூணையும் நெருங்கிய முலைகளையும் உடைத்தாய் ஒரு பூங்கொடி தோன்றுகின்றது என்று தலைவியின் உருவை நினைத்து மேற்செல்ல மாட்டாது மீளலுற்றுக் காட்டிடை நின்றான் தலைவன்.

11. நெஞ்சொடு நோதல் [342. பொன்னணி]

மீள நினைந்த தலைவன், பின்னும் பொருள் மேற்செல்லா நின்ற உள்ளத்தனாய் நின்று மீளமாட்டாது, ''பொன்திரளை ஈட்ட ஓட்டந்தரும் நெஞ்சமே! அன்ன நடை போலும் நடையுடையாளின் மின்போலும் நுண்ணிய இடைக்கோ, அல்லது மேற்கொண்ட பொருளுக்கோ, இரண்டற்கும் அல்லவோ? இந்த அழல் பொங்கும் காட்டில் போவதும் மீள்வதும் செய்யாது நிற்கின்ற இது யாதென்று சொல்வது? இப்பொழுது விரைகின்றது எதற்காக? இடைக்கு ஆகில் மீண்டு போக வேண்டும், பொருட்காகில் மேலே போக வேண்டும். இரண்டும் செய்யாது காட்டிலே நீ நிற்பது யாது பெற வேண்டி'' என்று தன் நெஞ்சொடு நொந்தனன்.

12. நெஞ்சொடு புலத்தல் [343. நாய்வயின்]

இங்ஙனம் நெஞ்சொடு நொந்து நின்ற தலைவன் நாயினிடத்துள்ள நல்ல குணமும் இல்லாத என்னை நல்ல தொண்டனாகக் கொண்ட பிரானுடைய சிற்றம்

பலைத்தை ஒத்தவளிடத்துப் (தலைவியிடத்து) பேயினிடத் நாம் செய்தலரிதாம் பிரிவை எளிதாக ஆக்குவித்துத் சுரத்திலுள்ள இந்த இடத்திற்கு வந்துள்ள நெஞ்சமே! உன் சிக்கனவு (இரக்கம் இல்லாமை) அஞ்சத்தக்கது'' என்று தன் நெஞ்சொடு புலந்து கூறுநின்றான்.

13. நெஞ்சொடு மறுத்தல் [344. தீமேவி]

இங்ஙனம் நெஞ்சொடு புலந்து கூறிப் பின்னும் பொருள் மேற்செல்லா நின்ற உள்ளத்தோடு தலைவியை நினைத்து, "நெஞ்சமே! பூவின்கண் மேவிய பொன்னை (இலக்குமி போன்ற தலைவியை) விட்டு வேறு பொன்னைத் தேட இக்காட்டில் நாம் (நானும் நெஞ்சமும்) நடப்போமாயின் நாம் ஒழிந்தோம். வஞ்சிக் கொடியை ஒத்த அழகு மேகலையை உடையாளை விட்டோ பொருள் தேடி எம்மை வாடச் செய்வது? யாம் இதற்கு உடம்படேம்'' என்று மேற் செல்வதற்கு உடம்படாது பொருள் வேண்டிய நெஞ் சொடு தலைவன் மறுத்துக் கூறினன்.

14. நாளெண்ணி வருந்தல் [345. தேண்ணீர்]

தலைவனது வரவு நீடித்தலை நினைத்து வருந்திய தலைவியின் வருத்தங் கண்ட தோழி, "இவளை (தலைவியை) [நோய் பொருந்த, கண்ணில் நீர் வர மேனி ஒளிவாட, காலம் நீட] பிரிந்தவர் (தலைவர்) பிரிந்தநாளை எண்ணும் தன்மையால் பலகால் இடு தலின் விரல் தேய்ந்தது. நிலனுங் குழிந்தது என, அவர் (தலைவர்) சென்றநாளை எண்ணி வாடினள்.''

(தலைவியின் வாட்டங்கண்டு ஆற்றுவிக்க ஒண் ணாமையாலே தோழியும் வாடினள்.)

15. ஏறுவரவு கண்டு இரங்கி உரைத்தல் [346. சுற்றம்]

மீளவுறு நின்ற தலைவன், மாலைக்காலத்து நாகொடு வாரா நின்ற ஏறுவரவு கண்டு, இச்சிறத்த

செக்கர்மாலை அவள் (தலைவி) பொறுக்குமளவு அன்று என்று இரங்கிக் கூறினன்.

16. பருவங் கண்டு இரங்கல் [347. கண்ணுழையாது]

ஏறுவரவு கண்டு இரக்கமுற்ற தலைவன், ''இம்முகில்கள் ஒன்றோடொன்று விரவுதலால், கண்சென்று நுழையமாட்டாது; மலரைஉடைய இடமெங்கும் மயிலினங்கள் திரண்டு பீலியை விரித்து நின்று ஆடாநிற்கும். இக்கார்காலத்தில் அவள் (தலைவி) என்னை நினைந்து ஆற்றாளாங் கொல்லோ'' என்று அப்பருவங் கண்டு இரங்கினான்.

17. முகிலொடு கூறல் [348. அற்படு]

பருவங்கண்டு இரங்கி, விரைவோடு வாராநின்ற தலைவன் ''இங்கு முற்பட்டாயாயினும் முகிலே! நீ முதுபெண்டிர் திரண்டு தலைவியின் துயரத்தை நீக்கும் பொருட்டு மலர்கள் தூவி நெல் விரவிய தூய பலியைக் கொடுத்து இல்லுறை கடவுட்குப் பூசனை செய்யும் பெரிய நகரத்திற்கு என்னின் முற்படாது ஒழிவாயாக'' என்று முற்பட்டு முகிலொடு செல்லா நின்றனன்.

18. தேர்வரவு கூறல் [349. பாவியை]

பொருள் வயின் பிரிந்த தலைவன் முகிலொடு வந்து புகாநிற்ப இம்முகில் தலைவியின் உயிரைச் செகுப்பான் உறுநின்ற பொழுது அம்பலத்தான் அருள் போல (போய்த் தேடிய) பெருநிதியோடு அன்பருடைய தேர் கதும்என வந்து சேர்ந்தது. அதனால் வரக்கடவதனை வெல்லுமாறில்லையே போலும்!'' என்று தலைவிக்குத், தோழி தேர் வரவு கூறினள். [தலைவன் பொருள்முடித்துக் கொண்டு விருப்பத்துடனே வாராநின்றான் என்று தோழி இனிய வார்த்தையைச் சொன்னாள்.]

19. இளையரெதிர் கோடல் [350. யாழின்]

தலைவிக்குத் தேர்வரவு தோழி கூறுநிற்ப, அந்நிலையில் தலைவியின் வளைகள் கழன்று வீழா நின்றன. மேகலை 'தன் நிலையினின்றும் போகா நின்றது. இந்நிலைமைக்கண் மெல்லியலின் (தலைவியின்) ஆவி செல்லாத முன்னே திரண்ட நிதியோடு அன்பரது (தலைவரின்) தேர் வந்து தோன்றிற்று. அதனால் சிற்றம்பலத்தரனார் "அமைக்கப்பட்ட ஊழின் வலியது ஒன்று யாது உளது?'' என்று கூறி இளைஞர்கள் தலைவனை எதிர்கொண்டார்கள்.

20. உண்மகிழ்ந்துரைத்தல் [351. மயின்மன்னு]

பொருள் முடித்து இளைஞர் எதிர்கொள்ள வந்து புகுந்த தலைவன் தலைவியுடன் பள்ளியிடத்தனாயிருந்து இம்மானைப் பிரிந்து, பொருள் தேட யான் வெய்ய சுரஞ்சென்ற துன்பம் எல்லாம் இவள் கொங்கைகள் என்னுறுப்புகளிடை மூழ்க இப்பூ அணைமேல் அணையா முன்னம் துவள்வுற்று மாய்ந்தது எனத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறினன்.

இது தலைவன் வளவிய மனைக்கிழத்தியோடே மனம் விரும்பிச் சொன்னது - (பழைய உரை.)

குறிப்பு: 'உச. பொருள் வயிற்பிரிவு' என்னும் இவ் அதிகாரம் 1. வாட்டங் கூறல் முதலான 20 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

உரு. பரத்தையிற் பிரிவு

பரத்தையிற் பிரிதல் என்பது தலைவியை வரைந்த (மணந்த) பின்னர் வைகலும் பாலே நுகர் வானொருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதன் இனிமை அறிந்தாற் போல, அவள் நுகர்ச்சியின் இனிமை அறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல்.

அல்லதூஉம், பண்ணும் பாடலும் முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் காதலித்தால் தான் எல்லார்க்கும் தலைவன் ஆகலின், அவர்க்கும் இன்பம் செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம்.

அல்லதூஉம், தலைவியை ஊடல் அறிவித்தற்குப் பிரிதல் என்றுமாம்.

இவ்வாறொழிந்து தனக்கு இன்பம் வேண்டிப் பிரிவனாயின் "கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள" என்பதனால் இவளுக்குத் தலைவி என்னும் பெயரோடு மாறுபட்டுத் தனது பெருமையோடு மாறுபடாநிற்கும்.

1. கண்டவர் கூறல் [352. உடுத்தணி]

தலைவன் பரத்தையர் சேரிக்கண் செல்லா நிற்ப, இனவளைகள் ஒலிப்ப-இளமயில் எழிலை ஒத்துக் கரிய புருவமாகிய வில்லோடு கண்மலராகிய அம்பைச் சேர்த்துப் பரத்தையர் ஒருங்கே சுற்றும் பற்றிப்போர் செய்யா நின்றமையால் இஃதிவன் காதலி மாட்டு என்னும் என அவ்விடத்துக் கண்டவர் தம்முள் கூறா நின்றனர்.

இளமைப் பருவத்து மகளிர் திக்குகள் தோறும் சூழ நின்று தலைவனைப் பிடித்துக்கொண்டார்கள்.

பரத்தையர் மனையிலே தலைவன் நீங்க அவன் தேரைத் தெருவிலே கண்டவர்கள் சொன்னது-(பழைய உரை.)

2. பொறை உவந்து உரைத்தல் [353. சுரும்புறு]

தலைவனைப் பரத்தையர் எதிர்கொண்டமை கேட்ட தலைவி நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாமல் பொறுத்தமை கண்ட தோழி தலைவன் தலைவியை விட்டு நீங்கினான் என்று கருதுதலால், "என் கண்மணியும் தாங்கு

தற்கு அரிய பாரம் ஆகா நின்றது; என் ஆவியும் தேய்ந்து அழியா நின்றது.

யான் இவ்வாறாகவும் தான் கலங்காது நின்ற தலைவியின் பெரும் பொறையை (பொறுமையை) உடையாளை யான் இன்று என்னென்று வியப்பது?'' என்று தலைவியை உவந்து கூறினள்.

3. பொதுப்படக் கூறி வாடியழுங்கல் [354. அப்புற்ற]

இங்ஙனம் தலைவியின் பொறையை உணர்ந்து உரைத்த தோழிக்கு, ''கண்ணோட்டமின்றி எழிலையுடைய நலத்தைத் தன் தலைவன் கவர்ந்து கொள்ள, அகத்தும் புறத்தும் வெப்பத்தை உற்று, வெய்தாக உயிர்த்து, வேறு துணையின்மையால் தமது மெல்லணையைத் தமக்குத் துணையாக ஆருயிர் தேயுறும் மகளிர் யான் அல்லது வேறு யார் உளர்?'' என்று பொதுப்படப் பரத்தையர்க்கு இரங்குவாள் போன்று தலைவனுடைய கொடுமை நினைந்து தலைவி வாடினள்.

4. கனவிழந்துரைத்தல் [355. தேவாசுரர்]

தலைவனுடைய கொடுமையை நினைந்து கிடந்து வாடி நின்ற தலைவி, ''அமளியின்கண் மாலையை உடைய தன் மார்பைத் தலைவன் வந்து தர நான் அதனை நனவு என்று மயங்கிப் புலந்து அவனோடு புணராது அவனைத் தழுவிற்றிலேன். அதுவேயன்றி நான் விழிப்பதும் செய்தேன். ஐயோ! கனவால் வரும் இன்பத்தையும் பாவியாகிய நான் இழந்தேன்'' என்று தலைவனைக் கனவிலே கண்டதைத் தோழிக்குக் கூறினள்.

5. விளக்கொடு வெறுத்தல் [356. செய்ம் முகம்]

இங்ஙனம் கனவு இழந்தமை கூறி வருந்திய தலைவி! நெய்யைப் பருகி, இருளைக் கிழிக்கும் நெடிய சுடரே, எம்மைக் கலந்தவருக்குப் பொய்ம்மை சேர்ந்த முகத்தைக் காட்டித் தெளிந்தாரை வஞ்சித்தல் தகுதி அன்று

என்று நீயாயினும் கூறிற்றிலையே? வேறு கூறுவார் யாவர்? என்று விளக்கொடு வெறுத்துக் கூறினள்.

உனக்கு உணவாகிய நெய்யைப் பெற்று உண்ட செருக்காலும் உனக்குப் பகை ஆகிய இருளைக் கிழித்த மேம்பாட்டாலும் என்னை உதாசீனம் பண்ணினாய் இத்தனை - என்றபடி.

6. வரம் பகர்ந்து வாயில் மறுத்து உரைத்தல்

[357. பூங்குவளை]

விளக்கொடு வெறுத்து வருந்தி நின்ற தலைவி, தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்து வாயிற்கண் நிற்ப, வண்டோரனையர் ஆடவர், பூவோரனையர் மகளிர் ஆதலால் நாமும் அவன் தலைஅளி பெற்றபொழுது ஏற்றுக் கொள்ளுவது அன்றோ நமக்குக் காரியம்; நாம் அவனோடு புலக்கற்பாலேம் அல்லேம் என்று வாயினோ வித்தார்க்குத் தலைவரின் தோளையும் மாலையையும் தம் இல்லத்து வளைத்து வைத்து அவரை வேண்டினவர் கொள்வாராக. நான் தலைவரைப் பரத்தையர்க்கு உரு வரையாக (முற்றூட்டாக) கொடுத்தேன் என்று தலைவி மறுத்துக் கூறினள்.

7. பள்ளியிடத்து ஊடல் [358. தவஞ்செய்திலாத]

வாயில் மறுத்த தலைவி ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைவனோடு, நின்னை இடைவிடாது நுகர்தற்கு முற்காலத்துத் தவத்தைச் செய்யாத தீவினையேமை நோவாது, இன்று இவ்வாறாகிய நின்னை நோவதென்னோ? அது கிடக்க, நின் காதலிமார் புறமே கற்று உனக்குப் புதிதாகச் செய்த அப் புல்லுதலை யாம் செய்ய மாட்டேம். அதனால் எம்மைத் தொடாதே; எம் கலையை விடுவாயாக'' என்று கலவி கருதிப் புலவா நின்றாள்.

இது பெருமை மிக்கி கற்பினை உடையாள் நாயகனுடனே வெறுத்து உரைத்தது. (பழைய உரை.)

8. செவ்வணி விடுக்க இல்லோர்கூறல் [359. தணியுற]

இங்ஙனம் தலைவி வருந்த, "பழைய இவளுடைய ஆயத்தார் முன்னே, அப்பரத்தையர் மனைக்கண் (செவ்வணி அணிந்து செல்கின்ற மாதர் இக் குறி அறிவிக்கச் செல்வது நமக்கு இழிவுடையதாகும் என்று செவ்வணி விடுக்க விரையா நின்ற இல்லோர்) தம்முள் கூறி நின்றனர்.

*செவ்வணி கூறும் மாதர் பரத்தையர் இடத்துச் செல்ல விரும்புதல் பொல்லா ஒழுக்கம் என்று மனையி லுள்ளார் சொல்லியது. (பழைய உரை.

9. அயலறிவுரைத்தவள் அழுக்கமெய்தல்
[360. இரவணையும்]

இல்லோர் செவ்வணி விடுக்க நினையா நிற்ப, அயலார் முன்னே இவளால் இக் குறி அறிந்த இடத்து ஒருத்தி நாயகனை நமக்குத் தர நாம் அவனை எய்தும் படி ஆயிற்று. நம்முடைய பெண் தன்மை என அயல் அறிவுரைத்துத் தலைவி அழுக்கமுற்றுக் கூறினள்.

தலைவனை அப் பரத்தையர் சேரியிலே நின்றும் ஒருத்தி இரங்கி நமக்குத் தரக் கூடும்படியான படியே பெண்மைத் தன்மை ஆயிற்று. எனத் தலைவி வருந் தினள்.

---

* இனி, செவ்வணி விடுத்தலாவது :—

"பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தா றன்றே"

என்பது பற்றி, தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்துழி அந் நிகழ்ச்சியைத் தலைவனுக் கறிவித்தற் பொருட்டு ஒரு தோழியை "செங்கோலஞ் செய்து செப்புப் பாலிகையுட் செம்பூவும் நீருங் கொண்டு சென்று பரத்தையர் சேரியிடத்தானிய தலைவன் அடியிற் பெய்து போவது என்க."

— திருக்கோவையார் பழைய உரையும் விளக்கமும், பக்கம் 574.

10. செவ்வணி கண்ட வாயிலவர் கூறல் [361. சிவந்த]

தலைவியினிடத்து நின்றும் செவ்வணி செல்லக் கண்டு நம் ஊரற்குத் (தலைவற்கு) உலகியல் உரைக்க வேண்டிச் செம்மலரும் செம்பட்டும் கட்டார் முலை மேல் செஞ்சாந்தும் நமது திருவை உடைய மனையின்கண் வந்து தோன்றின; இனித் தருமக் குறை வாராமல் தலைவற்கு ஏகல் வேண்டும். என்று பரத்தை வாயிலவர் மதித்துக் கூறினர்.

11. மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல் [362. குராப்பயில்]

செவ்வணி கண்ட தலைவன் பரத்தையிடத்தினின்றும் வந்து தடையின்றி மனைவயிற் புகுதா நிற்ப முன்பு இரவும் பகலும் தான் வாயில் பெறாது நின்று வாடும் குளிர்ச்சியையுடைய கடையை நீட்டியாது இத் துணைக் காலத்திற் கழிந்து இக் காவலையுடைய மனையின் கண் புகா நின்றான். அதனால் இவளிலும் (தலைவியினும்) மேம்பட்டு நுண்ணிய இடையை உடையார் (பரத்தையர்) புலந்து அடங்காதார் இனியாவர்! மனைக் கடன் பூண்டலால் எல்லாரும் அடங்குவர் என்று அழகிய வாயிலுள்ளார் தலைவன் தன் மனையிலே கடப்பாடு அறிந்து புகக் கண்டு ஆய்ந்து கூறினது.

(அடங்குதற்குக் காரணம், பூப்பறிவிக்கும் அளவில் கடப்பாடு அறிந்து நாயகன் விரைய வருதலும் வந்த இடத்து வாயில் மறுக்கக் கடவார் ஏற்றுக் கொள்ளுகையாலும், இருவரும் கடப்பாடறிந்து தங்களில் பொருந்துதலால் இனிப் பரத்தையர்க்கு (மிகையில்லை போலும் என்பது கருத்து.)

12. முகமலர்ச்சி கூறல் [363. வந்தான்]

பரத்தையிற் பிரிந்த தலைவன் செவ்வணி கண்டு வந்தானென்று சொல்லுமளவில் தலைவியின் சினவாள் போலும் மலர்க்கண்கள் சிவந்து தாமரைப் பூவினது செவ்

பியை அடைந்தன. அப்புலவி நோக்கிற்கு எதிராகக் காதலன் தலைவியை நோக்கத் தலைவியின் முகம் ஆகிய மடுவிற் குவளைப் பூக்கள் மலர்ந்து இருண்டு நெருங்கின. இங்ஙனம் காதலன் எதிர்நோக்கத் தலைவியின் சிவப்பாறி முகமலர்ந்தமையை அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூறினர்

13. கால நிகழ்வு உரைத்தல் [364. வில்லிகை]

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனால் ஏற்பட்ட ஆற்றாமையைத் தலைவி நீக்காதிருப்ப, "வண்டுது மல்லிகைப் போதாலும் அந்திப் பிறையாலும் கங்குற் பொழுதாலும் ஆற்றாய்த் தலைவன் புகுதா நின்றான். இனி நீ (தலைவி) புலக்கற் பாலை அல்லை என்று வாயிலோர் (உழையர்) கூறினர்.

14. எய்தல் எடுத்து உரைத்தல் [365. புலவி]

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் பூப்பு நிகழ்ந்த தலைவியின் புலவி தீர அவளுடைய சிற்றடியைத் தன் சென்னியிற் சேர்த்து அப்புலவி நீங்கக் கலவிக் கடலுள் அவளது துகிலைப் பற்றி, எயிருகிய (பற்களாகிய) ஒளி பொருந்திய முத்தின்கண் நிறைந்துள்ள நீராகிய மதுவைப் பருகி அவள் கொங்கைகளைப் பெறலாகி மகிழ்வுற்றான்.

இது நாயகன் அன்புடைமையும், நாயகி புலவிச் செவ்வி அறிந்து காமச்சுவை மதுவுண்டு அவளுள்ளத்தே மகிழ்ச்சியும் கூறினவாறு.

15. கலவி கருதிப் புலத்தல் [366. சேவ்வாய்]

புலவி தீர்த்து இன்புறப் புணரப்பட்டு மயங்கா நின்ற தலைவி, இவ்வாறு நமக்கு அருளிய அருள் ஒருஞான்று பிறர்க்கும் ஆம் என ஒன்றினை உட்கொண்டு நெட்டுயிர்ப்போடு பொருமி அழுது, பின்னும் அவனோடு கலவி கருதிப் புலவா நின்றாள்.

[இது அன்புடனே கலவியிலே களித்துப் புலவி உற்றது - பழைய உரை.]

16. குறிப்பறிந்து புலந்தமை கூறல் [367. மலரை]

இவ்வாறு கொண்ட புலவி தீர்ந்து தானும் தலைவனும் பள்ளியிடத்தாளாகிய தலைவி, பின்னும் ஒரு குறிப்பு வேறுபாடு கண்டு புலந்து மன்னன் (தலைவன்) ஒருவன், நானும் தமியன் ஆயினும் இப் பள்ளி பலரைத் தாங்காது என்று கூறிப் பள்ளியினின்று இறங்கி நின்ருள், தீய மக்களைப் பொருத சிறியவள் இந் நிலைமைக் கண் கருதியது என்னே! ஒரு காரணம் இன்றிச் சீறினுள் என்பது கருத்து.

[நாயகனுடைய முகக் குறிப்பாலே அவனுடைய நெஞ்சில் பதித்துள்ள கருத்தை முறைப்பட ஆய்ந்து தலைவி புலந்தபடி] - பழைய உரை.

17. வாயிலவர் வாழ்த்தல் [368. வில்லை]

செவ்வணி விடுக்கப் பூப்பியற் செவ்வி கெடாமல் தலைவியின் மெலிவறிந்து தலைவன் விரைவில் வந்தமையால், இத் தலைவன் மெய்யே தக்க வாய்மையன் என்று தலைவனை வாயில் நின்ருேர் வாழ்த்தினர்.

18. புனல்வர வுரைத்தல் [369. சூல் முதிர்]

இங்ஙனம் தலைவியுடன் மனைவயின் தங்கி இன்புறு நின்ற தலைவனுடைய தோள்களைப் பரத்தையர் இன்புறப் பொருந்த வேண்டிப் பொய்கையில் புதுப்புனல் வந்து பாய்ந்தது. இனிப் புனலாட்டினுல் தன் காதலியைச் சிவப்பிக்கும் போலும் (வெகுள்விக்கும் போலும்) என்று வையத்தார் தம்முள் புனல் வரவு கூறினர்.

[இவன் புதுப் புனல் ஆடிப் பரத்தையரை மகிழ்வித்துத் தன் காதலியை வெகுள்விக்கும் போலும் எனக் கண்டார் சொல்லியது.]

19. தேர் வரவு கண்டு மகிழ்ந்து கூறல் [370. சேயேஎனும்]

புனல் வரவு கேட்ட தலைவன் புனலாட்டு விழாவிற்குப் பரத்தையர் சேரிக்குச் செல்லா நிற்ப, தலைவருடைய நெடிய தேர் ஈண்டு வந்து மேவிற்று. பூவைக்கு மடியை யுடையீர்! இவரைப் புணர்தற்குத் தக்க தவத்தை முற்காலத்துச் செய்தீர்கள். வடிவு முருகவேளே யென்று சொல்லத் தக்க இத் தலைவருடைய திண்ணிய தோள் இணைகளை இனி அணைமின் என்று தேர் வரவு கண்டு பரத்தையர் தம்முள் மகிழ்ந்து கூறினர்.

20. புனல் விளையாட்டில் தம்முள் உரைத்தல்
[371. அரமங்கை]

தலைவனுடன் புனல் ஆடா நின்ற பரத்தையர் "அரமங்கையரைப் போலப் புனலாடுபவர்களே! நாம் எல்லாம் இத் தன்மையேமாக, வானர மங்கையர் என்று சொல்லும் வண்ணம் மற்றொருத்தி வந்து (இவரை அழைத்துச் செல்ல) அணுகா நின்றாள். பின்னர் வருந்தாது நாம் இவ் வழகரை (தலைவரை) முன்னுடைத்தாகக் காப்போம்." என்று தம்முள் கூறினர். (புனலாடும் மகளிர் நீர் அரமகளிர்க்கு உவமையாகும். காதல் பரத்தை வான் அரமகளிர்க்கு (தெய்வமகளிர்க்கு உவமையாகும்.]

[புனல் ஆடிடத்தே, காதற் பரத்தை வரும் கண்டு பரத்தையர் சொன்னது.]

21. தன்னை வியந்து உரைத்தல் [372. கனலூர்]

பின் வருந்தாது முன்னுறக் காப்போம் என்று பரத்தையர் தம்முள் கூறுவன கேட்டு இவனை (தலைவனை) புல்லும் பரத்தையர் மாட்டு இவன் அருள் செல்லாது விலக்கேனாயின் என் மாட்டு இவனைத் தந்து அழிகின்ற இவன் பனைக் கிழத்தி ஆகின்றேன் எனப் பரத்தையர் தலைவி தன்னை வியந்து கூறினாள்.

22. நகைத்து உரைத்தல் [373. இறுமாப்பு]

இவ்வாறு பரத்தையர் தலைவி தன்னை வியந்து கூறினாள் என்று கேட்ட தலைவி, தலைவருடைய திண்ணிய தோள்களைப் பெறுதலால் உண்டாகிய பெருமையோடும் அவனோடு உண்டாகிய பெரிய அணுக்கைப் பெற்ற (நெருங்கிய உறவைப் பெற்ற) தன்மையோடும் நான் செம்மாத்தலை ஒழிய இணைமுலைகள் ஏந்துதலை ஒழியப் புகா நின்றன. இனித் தனக்கொரு தங்கை தோன்றின் என்னுடைய எங்கையும் செம்மாத்தலை ஒழியும் அன்றோ? அதனால் வருவதை அறியாது தன்னைப் புகழ்கின்றாள் என்று பரத்தையை நோக்கி நகைத்துக் கூறினள்.

23. நாணுதல் கண்டு மிகுத்து உரைத்தல் [374. வேயாது]

தலைவனைப் பரத்தையர் வசம் புனலாட விட்டுச் சூடுவாரின்றிச் செப்பின்கண் இட்டடைத்துத் தமியேவைகும் பூப்போல்வாள் ஆகிய தலைவி, இது தலைவர்க்குத் தகாத பழியாம் எனக் கருதி நாணி அதனை மறைத்திருந்தமையைக் கண்ட தோழி, இவளது கற்பு நமக்கு நல்ல தாயாம் இயல்பை உடைத்து. (நல்ல பகுதியை உடைய) இவளது நாணம் முதலாகிய இயல்புகள் நல்ல தன்மையன என்று சிறப்பித்துக் கூறினள்.

24. பாணன் வரவு உரைத்தல் [375. விறலியும்]

நாணோடு தனியிருந்து வருந்தா நின்ற தலைவியை நோக்கி "நல்லாய்! நம்முடைய வேந்தர்க்கு (தலைவற்கு) துயில் எழும் மங்கலம் பாட விறலியும் பாணனும் யாழைக் கொண்டு வந்து நின்றார்கள். வாவல் (வௌவால்) இரை தேடுங் காலம் அன்மையால் பகற் பொழுதின்கண் உறையும் பெரிய மரம் போலும் இராப் பொழுதில் துணையில்லாதேமை அவர்கள் (விறலியும், பாணனும்) அறிந்திலர் போலும் என்று தோழி, பாணன் வரவைத் தலைவிக்கு உரைத்தனள். தலைவன்

தலைவிபை விட்டுப் பரத்தையர் மாட்டு அகன்றதை அறியாத விறலியும் பாணனும் வந்து நிற்க, தலைவி நம்மை இவர் நகையாடி வந்தார் என்று முனிந்தாளாகத், தோழி இவர்கள் தலைவன் செயலை அறிந்தார்கள் அல்லர் என்றும், தலைவர்க்கு இயல்பு நம்மிடத்து வருதலும் அவரிடத்துச் சேறலும் எனவும் இயல்பு சொல்லுதலால் தலைவியின் சிவப்பு ஆற்றுவித்தாளாம்.

25. தோழி இயற்பழித்தல் [376. திக்கின்]

பாணன் வரவுரைத்த தோழி, இவள் (தலைவி) வருந்தத் தலைவன் அயலாரிடத்துவைகுதலால் தக்கிருந்திலன் (தகுதியுடையவனாய் இருந்திலன்) என்று குறை கூறினள்.

குறிப்பு: அல்குதல் - தங்குதல். இனி அயல்வயின் நல்குதலால், அயல்வயின் அல்குதலால் என இரு வழியும் பிரியும். நல்குதலால் எனக் கொண்டால் தலைவன் நல்க வேண்டுமிடத்து நல்காமையாலும் வேண்டாத இடத்து நல்குதலாலும் தகுதியுடையவன் அல்லன் என்றபடி.

26. உழையர் இயற்பழித்தல் [377. அன்புடை]

இங்ஙனம் தோழி, தலைவனை இயற்பழித்துக் கூறக் கேட்டு "தன் பெடை நையத் தன் தகுதி கெட்டு அன்னம் சலஞ்சலத்தின்பெடை மேல் கிடந்து உறங்கும் அதுபோல் தன் மாட்டு அன்புடைய நெஞ்சத்தை உடைய இவள் (தலைவி) மயங்கப் பரத்தையர் மாட்டுச் சென்றுள்ள தலைவன் வரம்பிலன் (தகவிலன்) என்று உழையர் தலைவனை இயற் பழித்துக் கூறினர்.

[அன்புடைய தன் பெடை வருந்த அன்பில்லாத தன் மரபுக்குப் பொருந்தாத சலஞ்சலச் சங்கின் பெடை உடனே அன்னம் துயில்கின்றவாறு, தன் நாயகி வருந்த, தனக்கு அன்பில்லாதாரும் தன் மரபுக்குப் பொருந்தாதாரும் ஆகிய பரத்தையருடனே தலைவன் உறவது அவனுடைய தகுதியின்மையைக் காட்டுகின்றது என்று கண்டவர் கூறினர்.

27. இயற்பட மொழிதல் [378. அஞ்சார்]

அன்று நம் பொருட்டாக நம் புனத்தின்கண்ணே மாந்தழை ஏந்தி வந்தாராகிய அவர் (தலைவன்) இன்று நனவில்' என் நெஞ்சத்தின் கண்ணுர், யான் நடுப்பினும் என் நெஞ்சிடத்தினின்றும் நீங்கார். துயில் உண்டாயின் பஞ்சார்ந்த அமளிக்கண் எம் பயோதரத்தை (கொங்கையை)ப் பிரியாதார். இத் தன்மை உடையவரை நீங்கள் கொடுமை கூறுகின்றது என்னே? எனத் தலைவனை இயற்பழித்தவர்க்குத், தலைவி தலைவனை இயற்பட மொழிந்தாள்.

இது தலைவனது ஒழுக்கத்தை முன்பு பழித்தவர்கள் கேட்பத் தலைவி கூறியது.

28. நினைந்து வியந்துரைத்தல் [379. தேள்ளம்]

புனலாடப் பிரிந்து பரத்தையிடத்து ஒழுகா நின்ற தலைவன், யான் தன்னை (தலைவியை) நினையாது வேறொன்றின் மேல் உள்ளத்தைச் செலுத்தினும் தான் என்னை நினைந்து என் உள்ளத்தில் புகுகின்றாள். அவ்வாறன்றி நான் தன்னை (தலைவியை) நினைக்குந்தோறும் பள்ளத்துப் புகும் புனல்போல நிறுத்த நில்லாது என் மனத்தாளாகின்றாள். ஆதலால், பிரிந்து ஈண்டிருத்தல் மிகவும் அரிது என்று தலைவியை நினைத்து வியந்து கூறினன்.

(இது தன் நாயகியுடைய உண்மையான செய்தியை விரும்பிச் சொன்னது.)

29. வாயில் பெருது மகன்றிறம் நினைதல் [380. தேன்வண்டு]

பரத்தையரைப் பிரிந்து தலைவியின் நினைவோடு வந்த தலைவன் வாயில் பெருது வாயிலின்கண் நின்று வானிடத்துள்ள வளவிய இடங்களை எனக்குத் தரும் மெய்ம்மை உடையவனும் கதி பெறுவது புதல்வராலே என்கையால் குதலைச் சொல் பேசுபவனும், கடல் தந்த பெருமை உடைய அமுதத்தை ஒத்தவனும் ஆன மகன்

வந்து என்னை அணைகின்றான் இல்லை, யான் எவ்வாறு தலைவியை நண்ணுவது! என்று தலைவன் வாடி மொழிந்தான். (சந்தன குங்குமத்தாலும் மாலைகளாலும் வண்டு உறையும் கொங்கை உடையாளை நான் எத்தன்மையாலே சேர்வேன் என்றபடி), இது தோழிக்கு முன்னிலைப் புறமொழியாகத் தோழியைக் கொடுமை கூறியது.)

30. வாயிற்கண் நின்று தோழிக்கு உரைத்தல்

[381. கயல்வந்த]

வாயில் பெறாது மகன் திறத்தை நினைத்து நின்ற தலைவன் "தில்லையைச் சூழ்ந்த நல்லநாட்டில் பொலியும் மகளிர் தம் கண் இணையால் ஒரு காலைக்கொருகால் மிகுகின்ற அச்சத்தால் வந்த மயக்கத்தால் உண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ் விரதம் யாதாம் என்று வாயில் வேண்டித் தோழிக்குக் கூறினன். (தோழியை வாயில் கோடற்கு இவ்வகை சொன்னான்)

31. வாயில் வேண்டத் தோழிகூறல் [382. கூற்றாயின]

வாயில் வேண்டிய தலைவனுக்குப் பண்டு நீர் வரும் வழியில் இருக்கும் கொடிய சினத்தையுடைய ஆளிக்கு அஞ்சாமலும், செறிந்த இருளையும் பொருட்படுத்தாமலும் அவைதமை இடையூறாக நினையாமலும், கன்றை அகன்ற ஈன்ற அணிமையை உடைய பசுவைப்போல் எம்மாட்டு வந்தீர்? இப்போது எம்மோடு பொருந்தாதார் இருக்கும் தெருவிலே தேர்மேல் ஏறிப் போகின்றீர்! இதுவன்றோ எம்மாட்டு நுமது அருள்!'' எனத்தோழி தலைவனைப் பார்த்து அவன் செய்தியைக் (கொடுமையைக்) கூறினள்.

32. தோழி வாயில் வேண்டல் [383. வியந்தலை]

தலைவனுடைய செய்தியைத் தலைவிக்குக் கூறிச் சென்ற தோழி, "ஒரு குடைக் கீழ் உலகெல்லாம் வியந்து போற்ற இருந்தவரும், அன்று நம் புனத்தின்

கண்ணே வந்து யானையைக் கடிந்த விருந்தினரும ஆய தலைவர் பெருமையை நினையாது இன்று தம் வாயிற்கண் வந்து, வேட்கைப் பெருக்கம் தம்மிடத்துச் சிறப்ப நின்று ஒன்றும் வாயைத் திறக்கின்றிலர். இதற்கு நாம் என்ன செய்வது? என்று தலைவியிடம் வாயில் வேண்டினள்.

குறிப்பு: *சிற்றில் இழைத்து விளையாடும் போது தலைவர் விருந்தாய்ச் சென்று நின்றாராதலின் விருந்தினர் என்றாள். (செய்யுள் 290 பார்க்க) வாயில் பெறாமல் தலைவன் நீற்கத் தோழி சொன்னது பழைய உரை.*

33. மனையவர் மகிழ்தல் [384. தேவி அங்கண்]

தோழி வாயில் வேண்டத் தலைவி கண் சிவந்த நோக்கங் கொண்டு சித்திரம் போன்ற தலைவிக்கு உவகை (மகிழ்ச்சி) தரக்கூடிய தலைவன் வந்தான் என்ற சொற்களைச் சொல்ல வேண்டிக் காதலன் வந்து பொருந்துகின்ற இயவொலி (வாத்திய ஒலி) கேட்டனையோ என்று கண்டார் வந்து சொல்லக் கேட்டு வெய்தாக உயிர்த்து (பெருமூச்சு விட்டு) குவளைப் பூப் போலக் குளிர்ந்த கண்கள் செங்கழுநீர்ச் செவ்வியை வௌவுதல் கற்றன, (சிவந்தன). இனி என் நிகழும்?'' என்று மனையோர் தம்முள் மகிழ்ந்து கூறினர். (தலைவி கோபித்துப் பார்க்க மனையிலுள்ளார் கூறினது பழைய உரை)

34. வாயின் மறுத்து உரைத்தல் [385. உடைமணி]

மனையவர் தலைவியின் துனி (கோபம்) கண்டு மகிழா நிற்ப, தோழி வாயில்வேண்ட உடை மணியை அரையில் கட்டிச் சிறு தேரை உருட்டி உலாவும் இந்த நடை மணியை (புதல்வனை) நமக்குத் தந்தபின் நம்முடைய ஆயத்தார் முன்னே நம்முடைய வாசலைக் காதலர் (தலைவர்) இன்று கண்டார். இஃது அன்றோ நம்மாட்டு அவர் அருள் என்று, தலைவி வாயின் மறுத்து உரைத்தாள்.

குறிப்பு: 1. புதல்வனைத் தந்த பின்பு புலத்தல் முறைமை அன்றாயினும் ஆயத்தார் முன்பு வாயில் நேர்தல் பெண்மை அன்று என்று மறுத்தாள் போலும். 2. புதல்வன் உலாத்தரும் அளவும் (நடக்கும் அளவும்) புறத்து ஒழுக்கத்தே நின்றான் என்பது.

35. பாணனொடு வெகுளுதல் [386. மைகொண்ட]

தோழிக்கு வாயின் மறுத்த தலைவி வாயில் வேண்டிய பாணனோடு, அவர் எம்மிடத்து நீங்காத அருள் பெரியர் என்று நீ சொல்ல வேண்டுமோ? அது கிடக்க, கொற் சேரியில் ஊசி விற்றுப் புலையா! ஆத்தின்னி! எம் இல்லத்து நின்னுடைய நல்ல நல்ல பொய்யைப் பொருந்தி நிற்கலுற்றோ நீ போந்தது. இது சால நன்று' என வெகுண்டு கூறினள்.

யாழினையுடைய பாணன் வாயில் வேண்ட (தலைவி) கோபித்துச் சொன்னது (பழைய உரை.)

குறிப்பு:1. நீங்காத அருள் பெரியர் என்றது அவர் பரத்தையரிடத்து அன்பினால் பிரிந்தார் அல்லர், தம் காரணத்தால் அவர்கள் வருந்துகையில் அருளுடைமையால் பிரிந்தார் என்க. 2. இப்பொய் சொல்லியும் என்முன்னே நிற்பதாகவோ வந்தாய் என்கையில் கல்லும் கட்டியும் முதலாயின கொண்டு வெருவிக்கத் தொடங்கினார்கள் எனக் கொள்க. 3. எங்களுக்கு நீ தலைவருடைய செய்தியைச் சொல்வது கொற்சேரியில் ஊசி விற்பதோடு ஒக்கும்.

36. பாணன் புலந்து உரைத்தல் [387. கோல்லாண்டு]

இங்ஙனம் பாணன்மீது தலைவி வெகுண்டு உரைக்க, "அன்னாய்! நின் புருவம் நெரிய, செவ்வாய் துடிப்ப, என் மீது எறிதற்குக் கல்லை எடுக்க வேண்டாம். உன் கண்களைச் சிவப்பு ஆற்றுவாயாக (வெகுளற்க), நீ பல்லாண்டு வாழ்வாயாக. அடியேன் வேண்டிய இடத்திற்குப் போக நின் அடியை வலங்கொள்ளா நின்றேன்," என்று வாயில் பெருமையில் பாணன் புலந்து கூறினன்.

குறிப்பு: கல் எடுத்த இடத்தும் கலங்காது நின்று புகழ்ந்தும் பல்லாண்டு கூறியும் கோபும் நீக்கிக் கழன்றனன். பாணன்.

37. விருந்தொடு செல்லத் தணிந்தமை கூறல்

[388. மதத்தக்கரி]

வாயில் பெருது பாணன் புலந்து நீங்க, யாவர்க்கும் வாயில் நேராது வெகுண்டு உரைத்தலால் தழல் வேல் போல மிளிர்ந்து முத்தம் பயக்கும் இவளுடைய கண்களாகிய நீர்த்துளி ஆகிய முத்தத்தை உடைய கண்களாகிய) செங்கழுநீர் தலைவன் விருந்தொடு வந்தான் என்று சொல்லும் அளவில் பண்டை நிறமாகிய கருங்குவளையது (நீலப் பூவினது) செவ்வி பரந்து மேவின! என்ன மனையறக் கிழத்தியோ!'' என்று இல்லோர் தம்முள் கூறினர்.

38. ஊடல் தணிவித்தல் [389. கவலம்கோள்]

வந்த விருந்தை ஏற்றுக்கொண்ட தலைவியினிடம் சென்று, ''தழுவி முத்தம் கொண்டு சுவரிடத்து (தோளில்) ஏறியிருந்த நம்முடைய தோன்றலை (புதல்வனை) தமக்குத் துணை எனக் கருதித் தலைவர் வந்து தோன்றுதலால், இனிக் கவற்சி ஒழிந்து தலைவருக்கு (பணி) செய்வாயாக'' என்று தோழி தலைவியின் ஊடலைத் தணிவித்தாள்.

39. அணைந்த வழி ஊடல் [390. சேல்தான்]

தோழியால் ஊடல் தணிவிக்கப்பட்டுப் பள்ளியிடத்தாளாகிய தலைவி, ''நீ செய்கின்ற இதனை அறியின் நின் காதலிமாராகிய இளையார் நின்னை வெகுள்வர்; அது கிடக்க யாம் மேனி முழுதும் சிறுவனால் உண்டாக்கப்பட்ட பால் புலப்படும் தன்மையை உடையேம் ஆதலின் நினக்குத் தகேம். அதன்மேல் யாமும் நீ செய்கின்ற நாணின்மையோடு கூடிய கள்ளத்தை விரும்பேம்

அதனால் என் காலைத் தொடாது ஒழி; என்னைத் தொடர வேண்டாம். என் கையை விடுவாயாக'' என்று தலைவன் தன்னை அணைந்த வழி ஊடி நின்றாள்.

குறிப்பு: இளையார் வெகுள்வர் என்றது, என் வெகுளிக்கு நீ பயப்படுமாறு கண்டால் இளையவர் வெகுளிக்கும் அஞ்ச வேண்டும் என்றது.

40. புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலத்தல் [391. சேந்தார்

அணைந்த வழி ஊடாநின்ற தலைவி, ''இவர் செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம்; பலரும் அறிய ஒருத்தியைப் புனல் ஆட்டுவித்து அது செய்யாதார் போல என் மனையின்கண் இவர் வந்து நிற்கின்ற இது எனக்குப் பொறுத்தல் அரிது எனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலந்து நின்றாள்.

41. கலவி கருதிப் புலத்தல் [392. மின்துன்னிய]

புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலவாநின்ற தலைவி, ஊடல் தீர்க்க நுதலும் தோளும் முதலாயினவற்றைத் தைவந்து வருடித் தலையளி செய்த தலைவனோடு தெற்கே உள்ள பொதியிலிடத்து எமது குடி சிறியவரது குடி அதனால் எம்முடைய சிறிய இல்லின்கண் வந்து அன்று நீர் செய்த தலையளி எங்களுக்கு அன்று வேண்டுமாயினும் இன்று உமது திருவருள் எங்களுக்கு நீர் வந்த இத்துணையே போதுமானது. வேறு நீர் தலையளி செய்ய வேண்டுவதில்லை. என்று கலவி கருதிப் புலந்தனள்.

42. மிகுத்துரைத்து ஊடல் [393. செழுமிய]

கலவி கருதிப் புலந்த தலைவி, புணர்தலுற்ற தலைவனுடன், ''உலகம் ஏழினுள்ளும் சிறந்த நாட்டின்கண் சிறந்த நல்ல ஊரில் சிறந்த குடியிலுள்ளீர் எம்போல்வா

ரிடத்து இவ்வாறு புணர்தல் (விரும்புதல்) உமக்குச் சிறந்தன அல்ல போலும் என்று மிகுத்துரைத்து ஊடி நின்ருள்.

குறிப்பு: 1. நாட்டையும் ஊரையும் வீட்டையும் குறித்துத் தலைவி வெறுத்துச் சொன்னது பழைய உரை.

குறிப்பு: 2. நாடும் ஊரும் இல்லும் புகழ்ந்து நீர் இவற்றிற்குத் தக்க ஒழுக்கம் உடையீர்! அல்லீர்! எனவே கூட்டத்துக்கு உடன்பாடு இல்லாமை தோன்றினது.

43. ஊடல் நீட வாடி உரைத்தல் [394. திருந்தேன்]

இங்ஙனம் தணிக்கத் தணியாது மிகுத்து உரைத்துத் தலைவி, மேன்மேலும் ஊடா நிற்ப ஒருவாற்ருனுந் திருந்தாத நான், பிறவித் துன்பத்தில் பிழைக்க வந்து நின்ற சிற்றம்பலவரது தெற்கின்கண் உளதாகிய பொதியிலிடத்து இருந்த நான், உய்யும் வண்ணம் வந்து தன் கண்களின் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் நாளெடு கூடிய நோக்கமாகிய இனிய கடைக்கண் நோக்கத்தை முன்பு எனக்குத் தந்து பெருந்தேன் போல இனிதாய் என் நெஞ்சம் உருக என்னைப் பிடித்துத் தன் வசம் ஆக்கிய நமது பெண் வடிவை உடைய அமிழ்த மாகிய அது இது அன்று; இதுவோ வருவது ஒரு மாயம். அதனல் நீ வருந்தாது ஒழி நெஞ்சமே! என்று தன் நெஞ்சுக்குக் கூறி, ஊடல் நீடியதால் தலைவன் வாடி நின்ருன்.

44. துனி ஒழிந்து உரைத்தல் [395. இயல்மன்னும்]

இங்ஙனம் ஊடல் நீடுதலால் தலைவனது ஆற்ருமை கண்ட தலைவி, "அன்று பொதியிலிடத்து இருளின்கண் இக்குன்றிள் பக்கத்தில் தங்கும் யானைகளை ஓட்டி அவை புக்க இடம் தேடும் சிங்கமுள்ள வழியகத்துப் பொரு வேலே துணையாக வந்து இயல்பாகிய நிலைபெற்ற

அன்பை நமக்குத் தந்தவர்க்கு யான் இவ்வாறு கடப்படாது நிற்கும் இந்நிலைமை என்னையோ! இது தகாது என்று துனி ஒழிந்து தலைவனோடு புணர்ச்சிக்கு உடம்பட்டாள். (இது தலைவனுடைய அன்பு இத்துணை அளவில் அமைந்தது என்று நினைந்தது கூறி நெஞ்சு நெகிழ்ந்தது.)

45. புதல்வன் மேல் வைத்துப் புலவி தீர்த்தல்

[396. கதிர்த்து]

இவ்வாறு துனி ஒழித்துக் கூடிப் பிரிந்த வழிப் பின்னும் பரத்தை மாட்டுப் பிரிந்தானென்று கேட்டுப் புலந்து வாயில் மறுக்க, வாயிற்கண் நின்று விளையாடி நின்ற புதல்வனை எடுத்து அணைத்துத் தம்பலம் இட்டு முத்தம் கொடுத்து அது வாயிலாகக் கொண்டு தலைவன் செல்ல, அப்புதல்வனை வாங்கி அணைத்துக் கொண்டு அவன் வாயில் தம்பலம் தன் மெய்யில் படுதலால் எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டு வந்தோ புதல்வா! நீ என்னைக் கொண்டாடுவது? அது கிடக்க, இதனை நினக்குத் தந்தவாறு சொல்லுவாயாக என்று புதல்வன் மேல் வைத்துத் தலைவி புலவி தீரா நின்றாள். (வாட்டம் தவிர்ந்தாள்)

46. கலவியிடத்து ஊடல் [397. சிலைமலி]

இங்ஙனம் புதல்வனை வாயிலாகப் புக்குப் புலவி தீர்த்துப் புணர்தலுறு நின்ற தலைவனைத் தலைவி, ஒரு காரணத்தால் வெகுண்டு தலைவனுடைய மார்பகத்தில் உதைப்ப அம்மார்பகத்தை எங்கையது (என் தங்கையுடையது) என்று கருதித் தன் சென்னியைத் தந்தான் அதனால் தலைவனைப் போலக் கள்வன் இல்லை. என்று கருதித் தலைவியின் கண்கள் நீர்த் துளிகளைப் பொழிந்தன. அதனால் தலைவி புலத்தற்குக் காரணம் வேண்டுவது இல்லை போலும்.

47. முன்நிகழ்வு உரைத்து ஊடல்தீர்த்தல் [398. ஆறூர்]

இவ்வாறு கலவியிடத்து ஊடி நின்ற தலைவிக்குத் தவழ்கின்ற இளைய ஏற்றை (புதல்வனை) உடையவளே! நாம் கொடிய வழியில் சென்று சிறிய ஊரின்கண் மான் தோல் பள்ளியில் இச்செறிந்த மெல்லிய முலைகள் என் மார்பிடை வந்து அடர்க்கத் தங்கிய சிறியதுயிற்கு மாறு கண்டிலம் அதனை உள்ளியும் அறிதியோ என்று முன் நிகழ்வு உரைத்துத் தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்த்தான்.

48. பரத்தையைக் கண்டமைகூறிப் புலத்தல் [399. ஐயுறவு]

முன்நிகழ்வு உரைத்து ஊடல் தீர்த்து இன்புறப் புணரப்பட்ட தலைவி, பிறர்க்கும் நீ இவ்வாறு இன்பம் செய்தி என்று கூறி, நின்னை ஒழிய யான் வேறு ஒருத்தியையும் அறியேன் என்ற தலைவனுக்கு "நின்பரத்தை போகா நின்றவள் நம் வாயிற்கண் நின்று தேர் உருட்டி விளையாடுகின்ற மையுற்ற வாள் கண்ணை உடைய புதல்வனைக் கண்டு நின்மகன் என்று ஐயுற்றுத் தான் வந்து தழுவ அதனைக் கண்டு அவன் உன் மகனே! உறவு மெய்யாகிய உறவே, இதுவும் நினது இல்லமே, ஈண்டு வருவாயாக என்று நான் கூற, அக்காரிகை நாணிச் சென்றாள். அதனால் நான் அவளை அறியாதேனாக நீ நினைத்து மாயங் கூறவேண்டுவதில்லை என்று கூறிப் பின்னும் அவனோடு புலந்தாள்.

குறிப்பு: தலைவியைச் சிவப்பு ஆற்றுவிப்பான் கருதி நின்னின் வேறு சிலர் எனக்கு இல்லையால் நீ வெகுளற்க" என்ற தலைவனுக்குத் தலைவி இவ்வாறு கூறினாள்.

49. ஊதியம் எடுத்து உரைத்து ஊடல் தீர்த்தல் [400. காரணி]

பரத்தையைக் கண்டமை கூறிப் புலந்து வேறுபட்ட தலைவிக்குத், "தலைவன் வேண்டாதே கொடுத்தலின்

மரோடு (மேகத்தோடு) ஒப்பாவான். வேண்டக் கொடுத்தலின் அழகிய கற்பகத்தோடு ஒப்பாவான். நுண்ணிய கல்வியன் ஆகலின் கற்றவர்க்கு நல்ல உசாத் துணைவன் ஆவான். இசை உணர்வால் பாணர்க்கு அவர் சுற்றத்தோடு ஒப்பாவான். நினைத்தது கொடுத்தலின் சீரையுடைய நல்ல சிந்தாமணியோடு ஒப்பாவான். அழகிய தில்லைக்கண் சிவனது திருவடிக்கு மாலையாகி அவனால் அணியப்படும் கொன்றைப் பூவின் தன்மை உடையன் ஆவான். சான்றோர்க்குத் தொலையாத நிதியாக இருத்தலின் சங்க நிதியோடு ஒப்பாவான்; நட்டார்க்கும் பகைவர்க்கும் தப்பாது பயன் கொடுத்தலின் விதியோடு ஒப்பாவான்; சுற்றத்தார்க்கு வேண்டிய செய்ய இருத்தலின் அணித்தாகிய ஊருணியோடு ஒப்பாவான்; அதனால் வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெறும்பயன் ஆகின்றான்.

குறிப்பு: 1. தலைவன் யாவர்க்கும் ஊதியம் ஆகலின் அன்பால் அன்றி அருளால் பரத்தையர்க்கும் தலையளி செய்யுமன்றே. அதனால் புறப் பெண்டிரைப் போல யாம் அவனோடு புலக்கற்பாலேம் அல்லேம்; அவன் வரும் பொழுது எதிர் தொழுதும், போம் பொழுது புறந்தொழுதும் புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக் கடனாவது எனத் தோழி தலைமகனது ஊதியம் எடுத்துரைத்து, அவளை ஊடல் தீர்த்து அவனோடு பொருந்தப் பண்ணினாள்.

குறிப்பு: 2. இப்பாட்டு ஐவகைத் திணைக்கும் உரித்தாகலின் பொதுவகைத் தெனப்பெறும் என்பது.

குறிப்பு: ‘௨௰. பரத்தையிற் பிரிவு’ என்னும் இவ் அதிகாரம் 1. கண்டமை கூறல் முதலான 49 துறைகளைக் கொண்டு முடிகின்றது.

திருச்சிற்றம்பலம்